
58/II

# இலங்கைத் திருநாட்டின்

## இந்துக் கோயில்கள்



பிரதேச அபிவிருத்தி, இந்து கலாசார அமைச்சு வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் திருநாட்டின்
# இந்துக் கோவில்கள்

வெளியீடு:
இந்து சமயத் திணைக்களம்
பிரதேச அபிவிருத்தி அமைச்சு,
244, காலி வீதி,
த. பெ. எண் 1700,
கொழும்பு 4.
இலங்கை.
1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துரை

பிரதேச அபிவிருத்தி அமைச்சர்
மாண்புமிகு செல்லையா இராசதுரை அவர்கள்

முன்னுரை

ஆ. பாஸ்கரதாஸ்
பணிப்பாளர்
இந்து சமய இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்.

அணிந்துரை

கி. லக்ஷ்மண ஐயர், தலைவர்,
அகில உலக இந்து மாநாடு

எம்முரை

நூலாக்கக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துசமய காவலர்,
## மட்டக்களப்பு முதலாவது பாராளுமன்றப் பிரதிநிதி
## மாண்புமிகு பிரதேச அபிவிருத்தி அமைச்சர்
## செல்லையா இராசதுரை அவர்கள்,
## வழங்கிய வாழ்த்துரை

இந்து சமயத்தின் எழில் முத்து என்றும், இரத்தினத் துவீபம் என்றும், சரித்திர ஆசிரியர்களால் புகழப்பட்டது இலங்கை மணித் திருநாடு. இந்த நாட்டின் வரலாற்றுக் காலத்துக்கு முன் பிருந்து இந்துசமயம் வேரூன்றி, பல்கிப் பெருகி, வளர்ந்திருக்கிறது. இதற்கான அழியாத சாட்சியங்களும், அழிக்க முடியாத சான்று களும், நிரம்ப இருக்கின்றன. திரும்பிய திசைகளெங்கும் திருக் கோயில்கள் அருள்மணம் பரப்பிக் கொண்டிருக்கின்றன. இலங்கை ஒரு ஞானபூமி.

மேன்மைதகு ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் இந்து சமய இந்து கலாசாரத்திற்கென்று இந்து கலாசார வளர்ச்சி கருதி, ஓர் அமைச்சை நிறுவி அதன் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்.

உலகில் இந்துசமய நாடாக விளங்குவது ஒரே ஒரு நாடு இருக் கின்றது. அந்நாடு நேபாளம். நேபாள நாட்டிற்கு வெளியே உலகில் இந்துசமய இந்து கலாசார வளர்ச்சிக்கென்று ஓர் அமைச்சு உருவாக்கப்பட்டது இலங்கையிலேதான். உலகம் முழுவதும் வாழும் எண்பது கோடி இந்துக்களுக்கும் இது பெருமை தருவ தாகும்.

திருவருள் அருட்கடாட்சத்தினால் இலங்கையில் உருவாக்கப்பட்ட முதலாவது இந்துசமய அமைச்சின் அமைச்சராக வரும் பாக்கி யத்தை திருவருள் கூட்டி வைத்திருக்கின்றது. என் இதயத்தில் திருவருள் உந்துதலினால் பல எண்ணங்கள் கருக்கூட்டின. அவற் றுள் ஒன்று ''அகில உலக இந்துசமய மாநாடு'' நடத்துவதாகும். மற்றொன்று இலங்கை முழுவதிலுமுள்ள திருக்கோயில்கள் அனைத் தையும் மாவட்ட ரீதியாக நூல் வடிவில் கொண்டுவருவதும், நாடெங்கும் உள்ள இந்துக் கோயில்கள் அனைத்தினதும் விபரங்களை ஒன்று திரட்டி நூல் வடிவிற் கொண்டு வருவதும், இந்துசமய இந்து கலாசார வளர்ச்சிக்கென்ற ஓர் ஆய்வு நிலையத்தை இலங் கையில் அமைப்பதும், இந்து சமய கலைக்களஞ்சியம் ஒன்றை உரு வாக்குவதும், இன்னும் பல அரிய எண்ணங்களை திருவருள் என் மனதில் இடம்பெறச் செய்தவண்ணம் இருக்கின்றது. உலகில் மிகப் பழைமை வாய்ந்த ஈஸ்வர ஆலயங்கள் ஐந்து. ராமேஸ் வரம், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முன்னீஸ் வரம், நகுலேஸ்வரம். இவற்றுள் நான்கு ஈஸ்வர ஆலயங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இருப்பதன் மூலம் இந்நாட்டில் இந்து சமயத்தின் நிலை அறியக்கூடியதாக இருக்கின்றது.

ஸ்ரீ மகாவிஷ்ணுவின் அவதாரமாகிய ஸ்ரீ ராமபிரானின் திருப் பாதங்களும் கதிர்காமக் கந்தனின் புனித பாதங்களும் இந்த மண்ணிலே பட்டிருக்கின்றன. நாடெங்கிலும் ஆயிரக்கணக்கான இந்துக் கோயில்கள் நீண்ட நெடுங்காலமாக நிலைபெற்று நிற் கின்றன. இக்கோயில்கள் அனைத்துமடங்கிய நூல் ஒன்றினை வெளி யிட வேண்டுமென்று என்னுள்ளத்தைத் திருவருள் தூண்டியது. அதன் உருவமே இந்நூலாகும். முடிந்த அளவு கோயில்களின் விபரங்களை தொகுத்திருக்கின்றோம். ஒரு நாட்டில் உள்ள கோயில் கள் அனைத்தையும் தொகுத்து வெளியாகும் முதல் நூல் இதுவே யாகும். பகல் இரவு பாராது என் அன்புப் பணிப்பினை ஏற்று தெய்வீக திருவருளின் துணையோடு உழைத்த இந்நூல் ஆக்கக் குழுவினரின் பார்வைக்கு ஒருவேளை சில கோயில்கள் அகப்படாமல் போயிருக்கலாம். அவைகள் வேண்டுமென்று விட்ட தவறுகள் அல்ல. அப்படி விடுபட்ட கோயில்கள் நிலை கொண்டுள்ள ஊர்ப் பெருமக்கள் பெருமனது கொண்டு மன்னிப்பார்களாக. இரண் டாவது பதிப்பு வெளிவரும்போது அவ்வண்ணம் விடுபட்ட கோயில் களின் விபரங்கள் இணைக்கப்படுமென்பதை அடக்கத்தோடு அறி விக்கிறேன்.

எனது மன எண்ணங்களை பரிபூரணமாக அறிந்து செயல்படும் இந்துசமய பணிப்பாளர் ஆ. பாஸ்கரதாஸ், எனது பராட்டுதல் களுக்கு உரித்தானவர். பாடசாலை மாணவனக இருந்த காலத்தி லிருந்து அவரையும் அவர் குடும்பத்தினரையும் நான் நன்கு அறி வேன். பணிவும் அடக்கமும் கொடுத்த காரியத்தை சிறப்பாக நடத்தி முடிக்கும் அக்கறையும் ஆர்வமும் நிரம்பிய அரசாங்க ஊழியர் ஆவர். அகில உலகமும் வியக்கும் ''அகில உலக இந்து மாநாட்டை திறம்பட நடத்தியதில் அவருக்குப் பெரும் பங்கு உண்டு. இந்நூல் வெளிவர அவ்வப்போது நான் வழங்கிய ஆலோ சனைகளை பொறுமையுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் ஏற்றுக் கொண்டு, மாநாட்டின் பல வேலைகளுக்கு மத்தியில் அசுர வேகத் தில் செயல்பட்டார்''.

1982 ஏப்ரலில் மிகச் சிறப்பாக நடைபெற்று இந்துசமய வர லாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்க வேண்டிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ''அகில உலக இந்துசமய மாநாட்டின் போது'' இந்நூலை வெளியிட முன்வந்தோம். ஆனல் அது கைகூட வில்லை. காலம் கடந்தாகிலும் இந்நூல் வெளிவருவது மனதுக்கு ஆறுதலையும் மகிழ்ச்சியையும் தருகிறது. இந்துசமயப் பேருலகம் பெருமையோடு இந்நூலை ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் வெளிக்கொணர்வதற்கு உற்சாகத்தோடும், ஆர்வத்தோடும் தங்கள் சொந்த நலன்களைக்கூட மறந்து, நாடெங்கும் சென்று, கஷ்டங்கள் பலவற்றை ஏற்று, தொகுத்து எழுதி உதவிய திருவாளர்கள் சோ. குஹானந்த சர்மா, சீ. ஹரிஹர சர்மா, பொன். பாலசுந்தரம் ஆகியோருக்கு என் மனம் நிறைந்த நன்றி உணர்வுகளை வழங்குகிறேன். அவர்களது பெரு முயற்சியும், எனது அமைச்சு ஊழியர்களின் சோர்வற்ற உழைப்பும், இந்நூல் சிறப்பாக வெளிவருவதற்கு காரணமாக அமைந்துள்ளன. இந்நூலில் இடம்பெறும் படங்களை புகைப்படக் கலைஞர் திரு. ஞெட்றிக்கோ எடுத்து தந்து உதவினுர். இவர்களெல்லோருக்கும் என்னுடைய இதயம் நிறைந்த நன்றியினை வழங்குகிறேன்.

இன்னும் பல நூல்கள் இதுபோன்று வெளிவர வேண்டும். இந்து சமயப் பேரறிஞர்கள் எழுதி நூல் வடிவில் வெளியிட முடியாதிருக்கும் அரிய இந்துசமய கருவூல பொக்கிஷங்களை வெளியிடுவதற்கு திருவருள் கருணை புரிய வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

இந்து சமயப் பெருமக்கள் ஒவ்வொருவருடைய இல்லங்களிலும் இந்நூல் இருக்க வேண்டுமென்று ஆசை கொள்கிறேன். இந்து சமயப் பெருமக்கள் இந்நூலைப் படித்து தம் சமயத்தின் பெருமைகளை இன்னும் அறிந்து பயன்பெற வேண்டுமென்று திருவருளின் திருப்பாத கமலங்களை வணங்கி நிற்கின்றேன்.

"நன்றி"

செல்லையா இராசதுரை,
பிரதேச அபிவிருத்தி, இந்து சமய இந்து கலாசார
தமிழ் அலுவல்கள் அமைச்சர்.

244, காலி வீதி,
கொழும்பு 4.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமய இந்து கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் வழங்கிய முன்னுரை

பிரதேச அபிவிருத்தி, இந்துசமய, இந்து கலாசார தமிழ் அலுவல்கள் அமைச்சின் ஒரு பிரிவாக இந்து சமயத் திணைக்களம் இயங்கி வருகின்றது. இந்தத் திணைக்களத்தின் சார்பிலே அவ்வப் போது சந்தர்ப்பங்களையொட்டி பல நூல்கள் வெளியிடப்பட்டு வந்தன. ஆனால் நீண்ட காலமாக இந்துப் பெருமக்களின் மனதிலே இலங்கையிலுள்ள தலங்களின் வரலாறுகள் முறையாகத் தொகுக் கப்பட்ட நூலொன்று இல்லை என்ற குறைபாடு இருந்து வந்தது. இந்த மனக்குறையைப் பெரிதும் நீக்குவதற்கு இந்நூல் துணை செய்கிறது, என்பதில் ஐயமில்ல. இத்தகையதொரு நூல் வெளி வரக் காரணமாகவும், தூண்டுதலாகவும் இருந்தவர்கள் திருவாளர் கள்;

1. சி. ஹரிஹர சர்மா.
2. சோ. குஹானந்த சர்மா.
3. பொன். பாலசுந்தரம்.

ஆகியோராவர். அவர்கள் இந்நூலை அயராது உழைத்து கடும் உழைப்பினுலே சிறப்பான முறையிலே தந்திருக்கிறுர்கள்.

அவர்கள் திணைக்களத்துக்கு வெளியே பணியாற்றிய உத்தியோ கத்தர்களாக இருந்தபோதிலும் கூட இந்து சமயத்தின் பாற்பட்ட ஆர்வத்தின் காரணமாக இதை ஒரு தெய்வீகப் பணியாகக் கருதி சிறப்புற நிறைவேற்றியிருக்கிறுர்கள். அவர்களுக்கு எமது திணைக் களத்தின் சார்பில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்நூல் சிறப்பான முறையில் வெளிவருவதற்கு மூல காரணமாக இருந்து இத்தெய்வீகப் பணியில் எம்மையெல்லாம் ஊக்குவித்த பிரதேச அபிவிருத்தி அமைச்சர் அவர்களுக்கு இந்து சமய உலகின் பாராட்டும், வாழ்த்தும் என்றும் உரியதாகும். இந்து சமயப் பெருமக்கள் இதைப் படித்துப் பயன்பெற வேண்டும் என்று பணி வன்புடன் வேண்டுகின்றேன்.

ஆ. பாஸ்கரதாஸ்,
பணிப்பாளர்
இந்து சமய இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

கி. லக்ஷ்மண ஐயர்
தலைவர்
செயலூக்கக் குழு
அகில உலக இந்து மாநாடு

''இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோவில்கள்'' எனும் பெயரில் இலங்கையிலுள்ள இந்து ஆலயங்களின் விவரங்கள் அடங்கிய நூலொன்று வெளியிடப்படுவது மகிழ்ச்சிக்குரியது. வரலாற்று முக்கியத்துவம் பெற்ற அகில உலக இந்து மாநாட்டை நடத்துவதற்குத் திட்டமிட்டு அதன் முக்கிய அம்சங்களுள் ஒன்றாக இந்நூல் உருவாவதற்கு வழிகோலிய அமைச்சர் மாண்புமிகு செ. இராசதுரை அவர்கள் பராட்டுக்குரியவராவர்.

இந்து சமயத்துறையிலும், சமூகத்துறையிலும் ஆக்க பூர்வமான பல நலன்கள் ஏற்படுவதற்கு இந்த நூல் நல்ல அத்திவாரமாக அமையும் என்பது நிச்சயம்.

சில ஆண்டுகளுக்கு முன் இலங்கை வானொலியிலே இலங்கையின் இந்துசமய பாரம்பரியம்பற்றிப் பேச நேர்ந்தபொழுது இலங்கையிலுள்ள இந்து ஆலயங்கள் பற்றிக் குறிப்பிட வேண்டியிருந்தது. அச்சந்தர்ப்பத்தில்தான் இலங்கையிலுள்ள ஆலயங்கள் பற்றிய விவரங்கள் தொகுத்துவைக்கப்படாத குறையை உணரக் கூடியதாய் இருந்தது. அக்குறையை இந்நூல் பெரிதும் நிவர்த்தி செய்யுமென நம்புகின்றேன்.

ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள ஆலயங்கள் கிராம மக்களின் ஆன்மீக வாழ்வுக்கு மட்டுமன்றி, சமூகம், கவின் கலைகள் ஆகியன சம்பந்தமான வாழ்வுக்கும் கேந்திரமாக அமைந்துள்ளன. எனவே, இவ்வாலயங்களின் வரலாற்றிலும், விருத்தியிலுமே கிராம மக்களின் வரலாறும் விருத்தியும் தங்கியிருந்தது.

இந்த ஆலயங்களுட் பல நீண்ட வரலாறுகளையுடையவை; மூர்த்தி, தல, தீர்த்த விசேடங்களையுடையவை, சில ஆலயங்களிலுள்ள மூலமூர்த்திகளும் ஏனைய விக்கிரகங்களும் நல்ல கலையுள்ளவை. மிகவும் அழகானவை. சில ஆலயங்கள் தல புராணங்களுடையவை. பிள்ளைத்தமிழ், உலா போன்ற பாடல்கள் பாடப்பெற்ற சிறப்பையும் உடையவை.

இந்த ஆலயங்களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து ஒரு நூலை உருவாக்கி வெளியிடுவது இந்த நாட்டு இந்துசமய வரலாற்றிலேயே முக்கியமான நிகழ்ச்சியாகும். இந்த நூல் அகில உலக இந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநாட்டின் ஓர் அம்சமாக வெளியிடப்படவிருந்தபோதும் அச்சிடுகையில் ஏற்பட்ட காலதாமதத்தின் காரணமாக தற்போது வெளிவரத் திருவருள் பாலித்துள்ளது.

பல வகையிலும் நன்கு பயன்படவல்ல இந்த நூலை ஆக்கிய திருவாளர்கள்:— சி. ஹரிஹர சர்மா, சோ. குகானந்த சர்மா, பொன். பாலசுந்தரம் ஆகியவர்களும் இது உருவாவதற்கு உதவிய ஏனைய அனைவரும் பாராட்டுக்கும், நன்றிக்கும் உரியவராவர்.

கி. லக்ஷ்மண ஐயர்
தலைவர்
செயலூக்கக் குழு
அகில உலக இந்து மாநாடு

*1982. 04. 21.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோவில்கள் நூலாக்கற் குழு வழங்கிய எம்முரை

அகில உலக இந்து மாநாட்டில் இலங்கையில் உள்ள இந்துக் கோவில்களின் விவரங்களைக் கொண்ட தொகுப்பு நூல் ஒன்று வெளிவர வேண்டுமென்ற தமது விருப்பத்தை பிரதேச அபிவிருத்தி, இந்துசமய, இந்துகலாசார, தமிழ்மொழி அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு செல்லையா இராசதுரை அவர்கள் எம்மிடம் அன்போடு தெரிவித்தார். அகில உலக இந்து மாநாட்டின்போது இத்தகைய ஒரு தொகுப்பு நூல் இலங்கையில் வெளிவருவது மிக மிகப் பொருத்மானதாகும். ஆனல் மாநாட்டு வேளையில் இந்நூல் வெளியிட முடியாமல் போய்விட்டது. தற்போது இந்நூல் வெளிவரத் திருவருள் பாலித்துள்ளது. எனவே, இன்றும், என்றும் இந்நூல் ஒரு பொக்கிஷமாக அமையும்.

ஆலயங்களின் விவரங்களைக் கோரி இந்து சமயத் திணைக்களம் விளம்பரஞ் செய்திருந்தது. அத்தோடு, பல ஆலயங்கள் இந்து சமயத் திணைக்களத்திலே பதிவில் உள்ளன. இவை இரண்டையும் ஆதாரமாகக் கொண்டே இந்த நூல் உருவாயிற்று. இன்னும் பல கோவில்கள் இடம் பெற வேண்டும் என்பதை நாமறிவோம். அவைகளின் விவரங்கள் தற்பொழுதும் வந்த வண்ணம் உள்ளன. மிக விரைவாக இந்நூலை அச்சுவாகனமேற்ற வேண்டியுள்ளமையால், இந்நூலில் இடம்பெறுத ஆலயங்களின் விவரங்களை இரண்டாம் பதிப்பில் வெளியிடப் பிரதேச அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளமையை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேம்.

இலங்கையிற் பாடல் பெற்ற புராதன ஆலயமான ஸ்ரீ கௌரி அம்பிகா சமேத கேதீஸ்வரநாத சுவாமியை நாம் வழிபட்டு, இலங்கையை வலம் வந்து, சிலாபம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாத சுவாமியைப் பிரார்த்தித்து எமது 'இலங்கைத் தல யாத்திரையை' நிறைவு செய்கின்றேம்.

ஈழத்துக் கோவில்களின் விவரங்களைத் தயாரித்து எழுதிய வேளையில் மாண்புமிகு அமைச்சர் செல்லையா இராசதுரை அவர்களும், இந்துசமய, இந்து கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் திரு. ஆ. பாஸ்கரதாஸ் அவர்களும், உதவிப் பணிப்பாளர் திரு. வி. செ. தங்கவேலு அவர்களும் அகில உலக இந்து மாநாட்டுச் செயலூக்கக் குழுத் தலைவர் திரு. கி. லக்ஷ்மண ஐயர் அவர்களும், அகில உலக இந்து மாநாட்டுச் செயலூக்கக் குழு உறுப்பினர் திரு. எஸ். டி. சிவநாயகம் அவர்களும் எமக்குப் பல வழிகளிலும் ஆலோசனைகளையும், உதவிகளையும் நல்கி எமக்கு ஊக்கமளித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மோடு ஒருவராகவிருந்து இந்நூலாக்கத்திற்கு உதவியவர் இந்து சமயத் திணைக்கள எழுதுவினைஞர் திரு. கு. நாகேந்திரன் அவர்கள். அவரோடு இத்திணைக்கள எழுதுவினைஞர் திரு. ச. ஜெயபாலசந்திரனும், எமது கூற்றுக்களைச் சுருக்கெழுத்தில் எழுதிய செல்வி. சரோஜினி கார்த்திகேசுவும், எமது கையெழுத்துப் பிரதிகளைத் தட்டச்சுப் பொறித்த அலுவலர்களும் இந்த அமைச்சின் ஏனைய அலுவலர்களும் பலதுறைகளிலும் எமக்கு உதவியுள்ளனர்.

இம்மலரிலே இலங்கைக் கோவில்களின் படங்கள் இடம் பெறுகின்றன. திருக்கேதீஸ்வர ஆலய புனருத்தாரண சபைச் செயலாளரும் வழக்கறிஞருமான திரு. ஆர். நமசிவாயம் அவர்களும், இந்து சமயத் திணைக்கள எழுதுவினைஞர் திரு. ந. கருணானந்தராசா அவர்களும், குறிப்பாகப் புகைப்படக் கலைஞர் திரு. ஹென்றி றெட்றிகோ அவர்களும் இலங்கை இந்து ஆலயப் புகைப் படங்களை எடுத்துப் பெருமுதவியைச் செய்துள்ளனர்.

இவர்கள் அனைவருக்கும் எமது நன்றி என்றும் உரித்தாகுக.

இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோவில்களின் தொகுப்பு நூலினை உங்கள் கைகளில் சமர்ப்பிக்கின்றோம். இஃது ஒரு கன்னி முயற்சியாகும். உங்கள் அபிப்பிராயங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம். அவற்றை அன்புடன் ஏற்று மறுபதிப்பிற் சேர்த்துக் கொள்வோம். நன்றி.

வணக்கம்.

சி. ஹரிஹர சர்மா.
சோ. குஹானந்த சர்மா.
பொன். பாலசுந்தரம்.

அகில உலக இந்து மாநாட்டுச் செயலகம்,
பிரதேச அபிவிருத்தி, இந்துசமய, இந்து கலாசார,
தமிழ்மொழி அலுவல்கள் அமைச்சு,
244, காலி வீதி,
த. பெ. இல: — 1700,
கொழும்பு — 4.
1984. 01. 15.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | மன்னார் மாவட்டம் | 3 |
| 2. | யாழ்ப்பாண மாவட்டம் | 17 |
| 3. | முல்லைத்தீவு மாவட்டம் | 189 |
| 4. | வவுனியா மாவட்டம் | 201 |
| 5. | அனுராதபுர மாவட்டம் | 217 |
| 6. | பொலனறுவை மாவட்டம் | 221 |
| 7. | திருகோணமலை மாவட்டம் | 225 |
| 8. | மட்டக்களப்பு மாவட்டம் | 259 |
| 9. | அம்பாறை மாவட்டம் | 357 |
| 10. | மொனறுகலை மாவட்டம் | 387 |
| 11. | பதுளை மாவட்டம் | 395 |
| 12. | நுவரெலியா மாவட்டம் | 401 |
| 13. | கண்டி மாவட்டம் | 407 |
| 14. | மாத்தளை மாவட்டம் | 421 |
| 15. | குருநாகல் மாவட்டம் | 429 |
| 16. | கேகாலை மாவட்டம் | 433 |
| 17. | இரத்தினபுரி மாவட்டம் | 437 |
| 18. | மாத்தறை மாவட்டம் | 441 |
| 19. | காலி மாவட்டம் | 445 |
| 20. | களுத்துறை மாவட்டம் | 451 |
| 21. | கொழும்பு மாவட்டம் | 455 |
| 22. | கம்பஹா மாவட்டம் | 479 |
| 23. | புத்தளம் மாவட்டம் | 483 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மன்னார் மாவட்டம்

இம்மாவட்டம், கொழும்பில் இருந்து 194 மைல் தொலைவில் உள்ளது. கொழும்பு — தலைமன்னார் இரவுத் தபாற் புகையிரத மூலம் இங்கு செல்ல முடியும். அத்தோடு கொழும்பு — காங்கேசன்துறைப் புகையிரத மூலமும் சென்று, மதவாச்சிப் புகையிரத நிலையத்தில் இறங்கி அங்கிருந்து புகையிரத மூலமும், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேரூந்து, தனியார் பேரூந்து ஆகியனவற்றிலும் பிரயாணஞ் செய்யலாம். கொழும்புப் புறக் கோட்டையில் இருந்தும் பேரூந்துகள் தலைமன்னாருக்கு உள.

இந்தியாவில் இருந்து இராமேஸ்வரம் — தலைமன்னார் வழியாக வரும் யாத்திரீகர்கள், இலங்கைக் கரையை அடைந்ததும் மன்னார் மாவட்டத்துத் திருத்தலங்களைத் தரிசிக்க முடியும்.

இம்மாவட்டத்தில் பாடல்பெற்ற சிவத்தலமான திருக்கேதீஸ்வர ஆலயம் உள்ளது.

மன்னார்ப் பட்டினத்தில் இருந்து இம்மாவட்டத்திலுள்ள ஆலயங்களைத் தரிசிக்கப் பேரூந்து உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மன்னார்,
மாந்தை.

## திருக்கேதீஸ்வரம்

இலங்கையின் வடபால் உள்ள மிகப் புராதனமான சிவத்தலம் திருக்கேதிஸ்வரம். சைவர்களின் இருவிழிகளுள் ஒன்றாக விளங்கும் திருக்கேதீஸ்வரப் பெருமானைத் திருஞானசம்பந்தப் பெருமானும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பண்ணார்ந்த திருப்பதிகம் பாடிப் பரவி ஏத்தினர். தக்ஷிணகைலாச மான்மியம் திருக்கேதீஸ்வரத் தலவரலாற்றுச் சிறப்பினைச் சிறப்புறக் கூறுகின்றது. மஹாவம்சம், யாழ்ப்பாண வைபவமாலை ஆகிய நூல்களில் இச்சிவாலயத்தைப் பற்றிய குறிப்புக்கள் உள.

நாயன்மாரின் பதிகங்களில் மாதோட்டம் என வர்ணிக்கப்படும் இப்பழம்பெரும் பெருநகர், காலகதியில் பெயர் மருவி, இப்போது ''மாந்தை'' என அழைக்கப்படுகின்றது. இந்நகரைப் பாலாவி ஆறு தழுவிச் செல்கின்றது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியன ஒருங்கிணைந்த இப்புனித ஸ்தலத்தில் ஸ்ரீ கௌரி அம்பாளோடு கேதீஸ்வரநாதர் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார். நவக்கிரகங்களுள் ஒன்றாகிய கேது வழிபட்ட தலம் இது ஆதலின் 'கேதீஸ்வரம்' என்ற சிறப்புப் பெயரைக் கொண்டு மிளிர்கின்றது. பதினோராம் நூற்றாண்டுத் தொடக்கத்திலே இராசேந்திரச் சோழனால் புனருத்தாரணம் செய்யப்பெற்ற கேதீஸ்வரம், பதினாறும் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை அந்நியர் ஆதிக்கத்தால் சீரும் சிறப்பும் அற்று அழிவின் கைகளிலே சிக்குண்டது.

இப்புராதன சிவாலயம் 1560 ஆம் ஆண்டளவில் போர்த்துக்கீசரால் இடிக்கப்பட்டது. நாவலர் பெருமான் திருக்கேதீஸ்வரத்தின் பழம்பெருமையையும் அதனை மீண்டும் சைவசமயிகள் புனருத்தாரணம் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். 1893 ஆம் ஆண்டளவில் திருவாளர்கள் பழனியப்பச் செட்டியார், பசுபதிச் செட்டியார் ஆகியோரால் மீண்டும் சிறு தலமாக அமைக்கப்பட்டுப் பின்னர் 1903 ஆம் ஆண்டில் கற்கோவில் கட்டப்பட்டுக் கும்பாபிஷேகம் நன்கு நடந்தேறியது. சைவப்பெரு மக்களுக்கு அவர்கள் காலத்தாற் செய்த நன்றி ஞாலத்தின் மாணப்பெரிது.

1948 இல் திருக்கேதீஸ்வர ஆலய புனருத்தாரண சபை சேர். கந்தையா வைத்தியநாதன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுத் திருப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகள் பல காலகத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்டன. பண்டைப் பெருமைக்கும் சிறப்புக்கும் ஏற்பப் பெரிய கோயிலாகக் கட்டியெழுப்பி 1976 இல் மகாகும்பாபிஷேகம் வெகுசிறப்பாக நடைபெற்றது.

ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்குப் பின் திருக்கேதீஸ்வரத் திருத்தலத்தில் அருளாட்சி புரிந்தருளும் பஞ்சமூர்த்திகளும், புதிய ஐந்து தேர்களில் பவனி வந்த கண்கொள்ளாக் காட்சி 17.5.81 இல் தேர்த் திருவிழான்று இடம்பெற்றது.

இந்த ஆலயத்திற்குச் சேர, சோழ, பல்லவ காலச் சிறப்புக்கள் உண்டு. கண்டெடுக்கப்பட்ட பழைய சேமாஸ்கந்தர் விக்கிரகம் சோழர் காலத்து மரபில் வந்தது. சுமார் ஆயிரம் வருடப் பழமை வாய்ந்தது. அதே ரீதியில் இப்போது புதிய சோமாஸ்கந்த விக்கிரகம் வார்க்கப்பட்டிருக்கின்றது. உலகிலேயே இதுவே மிகப்பெரிய சோமாஸ்கந்த மூர்த்தி எனக் கருதப்படுகிறது. அதேபோல, கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர், சந்திரசேகரர் ஆகிய மூர்த்திகளின் திருவுருவச் சிறப்பும் அளப்பரியது.

ஆலயத்தைச் சுற்றிவர மடங்கள் அமைந்துள்ளன. நித்திய, நைமித்திய பூசைகள் தவறுது கிரமமாக நடைபெற்று வருகின்றன. வைகாசி விசாகத் தினத்தன்று தீர்த்தோற்சவம் இடம்பெறக் கூடியதாகப் பத்து நாட்களுக்கு மகோற்சவம் நடைபெறும். மகா சிவராத்திரி சிறப்பாக உரிய முறைப்படி பெருவிழாவாக இங்கு அனுஷ்டிக்கப்படுகிறது. தினமும் காலையில் ''கோ'' பூசை நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- மன்னர்,
மன்னர்.

## ஸ்ரீ இராஜேஸ்வரி அம்பாள் கோவில்
## திருவாலைக்கூடம், உப்புக்குளம்

தினமும் மூன்று காலப் பூசை உண்டு. ஊஞ்சற் பாடல்கள் உள. தை மாதத்தில் 12 நாள் அலங்காரத் திருவிழா சிறப்பானது. பிள்ளையார் கதை, திருவெம்பாவை, சதுர்த்தி போன்ற முக்கிய நாட்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. மன்னர் இந்து சமய வளர்ச்சிக் கழகம் இவ்வாலயத்தில் சமயப் பணி புரிந்துவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மன்னார்,
மன்னார்.

ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
திருவானைக்கூடம், உப்புக்குளம்

தினமும் மூன்று காலப் பூசை. ஊஞ்சற் பாடல்கள் உண்டு. தை மாதத்தில் 12 நாள் அலங்காரத் திருவிழா நடைபெறுகின்றது. சிவன், அம்பாள், நவக்கிரகம், படியளக்கும் பெருமாள் ஆகிய இதர மூர்த்திகளும் ஆலயத்தில் உளர். பிள்ளையார் கதைப் படிப்பும் இங்கு நடைபெறும்.

மாவட்டம்:- மன்னார்,
மன்னார்.

ஸ்ரீ முத்து விநாயகர் கோவில்
சவுத்பார், மன்னார்

மூலவர் முத்து விநாயகர். பரிவாரத்தில் வைரவர் உள்ளார். தினமும் இரு காலப் பூசை உண்டு. வருடம் ஒரு முறை திருவிழா நடைபெறுகின்றது.

மாவட்டம்:- மன்னார்,
அடம்பன்.

ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
பெரியமடு, மாந்தை

தினமும் ஒரு காலப் பூசை உண்டு. ஆவணி மாதத்தில் வருடாந்தத் திருவிழா நடைபெறுகின்றது.

மாவட்டம்:- மன்னார்,
நானாட்டான்.

பிள்ளையார் கோவில்
சாளம்பன், நானாட்டான்

வாரத்தில் இரு நாட்களுக்குப் பூசை உண்டு. ஆண்டுக்கொரு முறை பொங்கல் விழா சிறப்பாக நடைபெறுகிறது. இவ்வாலயம் ஏறத்தாள நூறு ஆண்டுகளாக இருந்து வருகின்து. தலவிருட்சம் விழாமரம். விவசாயிகளினால் விவசாய மேம்பாட்டுக்காக அவ்வப்போது பொங்கல், வழிபாடுகள் செய்யப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மன்னார்,
மன்னார்.

## ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
## பாலம்பிட்டி

வாரத்தில் ஒரு நாட் பூசை உண்டு. சதுர்த்தி, கந்தசஷ்டி, திருவெம்பாவைக் காலங்களில் விசேட பூசை சிறப்பாக நடைபெறு கிறது.

மாவட்டம்:- மன்னார்,
அடம்பன்.

## கற்பகப் பிள்ளையார் கோவில்
## கோவிற்குளம்

நித்திய பூசை நடைபெறுகிறது. ஆவணி மாதத்தில் மகோற் சவம் நடைபெறும். விசேட காலங்களில் விசேட வழிபாடுகள் உண்டு.

மாவட்டம்:- மன்னார்,
நானாட்டான்.

## சிறுகண்டல் பிள்ளையார் கோவில்
## முருங்கன்

இங்கு வாரத்தில் ஒரு நாள் பூசை நடைபெறும்.

மாவட்டம்:- மன்னார்,
மன்னார்.

## ஸ்ரீ முருகன் கோவில்
## புங்கன்தாழ்வு, உயிலங்குளம்

இங்கு முருகன், பிள்ளையார், அம்மன், வைரவர் ஆகிய மூர்த்தி கள் உளர். நித்திய பூசையோடு விசேட தினங்களில் விசேட பூசை, உற்சவம் ஆகியன நடைபெறும். தினமும் ஆறு காலப் பூசை உளது.

மாவட்டம்:- மன்னார்,
மன்னார்.

## ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
## பிரதான வீதி, பேசாலை

தேவிமாருடன் கூடிய முருகனும், வைரவரும் இங்கு உளர். தினமும் மூன்று காலப் பூசை உண்டு. அலங்கார உற்சவம் ஆவணி மூல நட்சத்திரம் முதல் பத்துத் தினங்களுக்கு நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மன்னார்,
நானாட்டான்.

ஸ்ரீ முருகன் கோவில்
பிரதான வீதி, முருங்கன்

நித்திய பூசை உண்டு. சித்திரா பூரணையன்று திருவிழா நடைபெறும். தொண்டர் படையினரின் உதவியால் சமயப் பிரசங்கங்கள் இடம்பெறுகின்றன.

மாவட்டம்:- மன்னார்,
நானாட்டான்.

ஸ்ரீ முருகன் கோவில்
வெள்ளாளகட்டு, நானாட்டான்

வாரத்திற்கொரு முறை பூசை நடைபெறுகிறது. வருடாந்தப் பொங்கல், விசேட பூசையுடன் கொண்டாடப்படுகிறது.

மாவட்டம்:- மன்னார்,
அடம்பன்.

ஸ்ரீ முருகன் கோவில்
தச்சணாமருதமடு, பாலம்பிட்டி

தினமும் மூன்று காலப் பூசை உண்டு. விசேட தினங்களில் விசேட பூசையும் உளது.

மாவட்டம்:- மன்னார்,
மன்னார்.

ஸ்ரீ யோகானந்த வைரவர் கோவில்
உயிலங்குளம்

தினமும் விளக்கேற்றி, பூமாலை சாற்றி வழிபாடு நடைபெற்று, வருகிறது. தைப்பொங்கல், புதிர்ப்பொங்கல், விஜயதசமிப் பொங்கல் ஆகியன சிறப்புற நடைபெறுகின்றன. ஸ்ரீ யோகானந்த வைரவர் இந்து வளர்ச்சிச் சங்கத்தின் பணி இங்கு மேலோங்கி வளர்ந்து வருகின்றது.

மாவட்டம்:- மன்னார்,
அடம்பன்.

நொங்குவெட்டி ஐயனார் கோவில்
புதுக்குளம், விடத்தல் தீவு

வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெறும். ஆனி மாதத்தில் இரண்டு நாட்களுக்குத் திருவிழா நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மன்னர்,
முசலி.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### சிலாவத்துறை, முசலி, மன்னர்

வெள்ளிதோறும் பிற்பகலில் பூசை உண்டு. பஜனையும் நடைபெறும். பரிவார மூர்த்திகளாக விநாயகர், வைரவர் நாகதம்பிரான் ஆகியோர் உளர்.

மாவட்டம்: மன்னர்,
மாந்தை.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### பாலம்பிட்டி, விடத்தல்தீவு,
### வவுனியாப் பாதை, மன்னர்

மூலவர் முத்துமாரி அம்பாள். பரிவாரத்தில் காத்தவராயர், கம்பகாளி, நாகதம்பிரான் ஆகிய மூர்த்திகள் உளர். திங்கள், வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெறும். வைகாசிப் பூரணை முதல் ஐந்து தினங்களுக்குத் திருவிழா இடம்பெறும். பிள்ளையார் கதை படிக்கப்பட்டு, உற்சவமும் நடைபெறும்.

மாவட்டம்:- மன்னர்,
நானட்டான்.

### ஸ்ரீ மாரியம்மன் கோவில்
### அச்சங்குளம், நானட்டான் மேற்கு

வாரத்திற்கொரு தடவை பூசை நடைபெறுகிறது. ஆலயத்தில் விநாயகர், வேல், வைரவர், சூலம் ஆகிய மூர்த்திகள் உளர்.

மாவட்டம்:- மன்னர்,
நானட்டான்.

### ஸ்ரீ மாரியம்மன் கோவில், பெரிய கட்டைக்காடு
### நானட்டான் மேற்கு

தல விருட்ச வழிபாடு நடைபெற்று வருகிறது. தல விருட்சம் வேம்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மன்னார்,
நானாட்டான்.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### செம்மண்தீவு, முருங்கன்

நித்திய பூசை உண்டு. ஆடி மாத அபரபட்சப் பிரதமை தொடங்கிப் பத்து நாட்களுக்கு அலங்காரத் திருவிழா நடைபெறு கின்றது. மாணவர்க்கு சைவசமய நூல் இலவசமாக வழங்கப்படு கிறது.

மாவட்டம்:- மன்னார்,
நானாட்டான்.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### சிறுக்கண்டல், முருங்கன்

நித்திய பூசை நடைபெறுகிறது. மாசிமகத்தை இறுதி நாளாகக் கொண்டு பத்து நாட்களுக்கு அலங்காரத் திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- மன்னார்,
நானாட்டான்.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### இரட்டைக்குளம், புளியடி இறக்கம், முருங்கன்

நித்திய பூசை உண்டு. ஆடி மாதத்தில் திருவிழா நடைபெறு கிறது. பிள்ளையார், வைரவர், முருகன் ஆகிய மூர்த்திகளும் ஆல யத்தில் உளர்.

மாவட்டம்:- மன்னார்,
நானாட்டான்,

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### பரிகாரி கண்டல், முருங்கன்

நித்திய பூசை உண்டு. மாசி மகத்தன்று திருவிழா நடைபெறு கிறது. ஆலயத்தில் வேல், ஐயனார் ஆகிய மூர்த்திகள் உளர். கதிர் காமத் தீர்த்தம், சிவராத்திரி மற்றும் விசேட நாட்களில் சிவப் பணிகள், வழிபாடுகள் சிறப்பாக உண்டு. இந்து இளைஞர் மன்றத் தொண்டர் படையினரால் சமயப் பிரசங்கங்கள் ஒழுங்கு செய்யப் படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மன்னார்,
நானாட்டான்.

### ஸ்ரீ செல்வ முத்துமாரியம்மன் கோவில்
### மோட்டைக் கடைக்கிராமம், நானாட்டான்

தினமும் மூன்று காலப்பூசை. ஆனி மாதப் புனர்பூச நட்சத்திரத்தை இறுதி நாளாகக் கொண்டு பத்து நாட்களுக்கு அலங்காரத் திருவிழா நடைபெறுகிறது. ஆலயத்தில் விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், நாகதம்பிரான், ஆகிய மூர்த்திகள் உள்ளனர். கூட்டுப் பிரார்த்தனை, சமயச் சொற்பொழிவுகள் ஆகியனவும் நடைபெறும். கடைசியாக 1981 ஆம் ஆண்டு பங்குனிமாதம் சம்புரோக்ஷண மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

மாவட்டம்:- மன்னார்,
மன்னார்.

### ஸ்ரீதேவி முத்துமாரியம்மன் கோவில்
### தலைமன்னார்

மூலமூர்த்தி ஸ்ரீதேவி முத்துமாரி அம்மன். பரிவாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், வைரவர் ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் இருகாலப் பூசை நடைபெறும். ஆவணிப் பூராட நட்சத்திரத்தில் வருடாந்தத் திருவிழா இடம்பெறும். கப்பல் மூலம் இந்தியா செல்லும் பிரயாணிகளுக்குத் தங்குமிடம் வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

மாவட்டம்:- மன்னார்,
மன்னார்.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### தாயிலாங்குடியிருப்பு, பேசாலை

வெள்ளிக்கிழமை தோறும் பூசை இடம்பெறும். வைகாசியில் திருவிழாவும் வருடாந்தக் குளிர்த்தியும் நடைபெறும்.

மாவட்டம்:- மன்னார்,
மன்னார்.


### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### கல்மோட்டை, உயிலங்குளம்

மாரியம்மன், வைரவர் ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் மூன்று காலப்பூசை. விசேட தினங்களில் விசேட பூசைகள், திருவிழா ஆகியன உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மாவட்டக் கோவில் படங்கள்



மன் /திருக்கேதீஸ்வர ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் புராதன மஹாலிங்கம் (அகழ்வின்போது கண்டெடுக்கப்பட்டது).




மன் /திருக்கேதீஸ்வர ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மன் /திருக்கேதீஸ்வர ஆலயத்திலுள்ள திருமறை /திருமுறை ஏடுகளைக் கொண்ட கோவில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன் /திருக்கேதீஸ்வர ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் பிக்ஷடனமூர்த்தி




மன் / திருக்கேதீஸ்வர ஆலயத்திலுள்ள கேது விக்கிரகம், கேதுவழி பட்டு விமோசனம் பெற்ற தலம் திருக்கேதீஸ்வரம் ஆகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன் / திருக்கேதீஸ்வர ஆலயத்திலுள்ள பள்ளியறை



மன் /திருக்கேதீஸ்வர ஆலயத்தின வெளிப்புறத் தோற்றம்

மன் /முழங்காவில் பிள்ளையார் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# யாழ்ப்பாண மாவட்டம்

கொழும்பில் இருந்து 246 மைல் தொலைவில் உள்ளது. கொழும்பு — காங்கேசன்துறைப் புகையிரத மூலமும், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்து மூலமும், தனியார் பேருந்துகள் மூலமும் இம்மாவட்டத்துக்குச் செல்லமுடியும். இராமேஸ்வரம் — தலைமன்னார் வழியாக வரும் யாத்திரீகர்கள் தலைமன்னார் — கொழும்புப் புகைவண்டியில் பிரயாணஞ் செய்து மதவாச்சிப் புகையிரத நிலையத்தில் இறங்கி அங்கிருந்து கொழும்பில் இருந்து வரும் காங்கேசன்துறைக்கான புகையிரதத்தில் ஏறி யாழ்ப்பாணஞ் செல்லவேண்டும். தலைமன்னார் / மன்னார் — யாழ்ப்பாணத்துக்கான இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் உண்டு. இவைகளிலும் பிரயாணஞ் செய்யலாம்.

யாழ்ப்பாணத்தில் சிவன், அம்பாள், பிள்ளையார், சுப்பிரமணியர், வைரவர், துர்க்கை, விஷ்ணு, ஆலயங்கள் பல உள. இம்மாவட்டத்திற் கந்தபுராணம், திருச்செந்தூர்ப் புராணம், பெரிய புராணம், திருவாதவூரடிகள் புராணம், கண்ணகி புராணம் ஆகிய புராண படனங்கள் பல்லாண்டு காலமாக உள்ளமை குறிப்பிடப் படவேண்டியதொன்றாகும். யாழ்ப்பாணத்தில் திருவிழாக்கள் மிகச் சிறந்தவை. நாதஸ்வர, தவில், இன்னிசைக் கச்சேரிகள், கோபுரம் போன்ற சிகர அமைப்புக்கள், காவடி ஆட்டங்கள், சப்பரங்கள் முதலானவை திருவிழாக்களில் முக்கிய அம்சங்களாக விளங்குகின்றன. இங்கு வருடாந்தப் பொங்கலும் சிறப்புமிக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
யாழ்ப்பாணம்.

### வண்ணை வைத்தீஸ்வரன் கோவில்
### (பட்டினம் சிவன் கோவில்)
### காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

இந்த ஆலயம் கி.பி. 1790 ஆம் ஆண்டு வைத்தியலிங்கச் செட்டியாரால் ஸ்தாபிக்கப்பட்டது. நித்திய நைமித்தியம் சிறப்புற நடைபெற நிபந்தனைகள் அமைக்கப்பட்டன. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக ஞானசம்பந்த பராமாசாரிய சுவாமிகள் ஆகியோர் முதன்முதல் இந்த ஸ்தலத்திலேயே பிரசங்கம் செய்தார்கள். பங்குனி உத்தரத்தை அந்தமாகக்கொண்டு இருபத்தொரு நாள் சிவன் திருவிழாவும், ஆடிப்பூரத்தை அந்தமாகக்கொண்டு அம்பாள் உற்சவமும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. யாழ்ப்பாணப் பட்டினத்தில் பஞ்சரதங்களில் பஞ்ச மூர்த்திகளும் தேர்த் திருவிழாவன்று வீதிகளில் பவனிவரும் காட்சி பன்னெடுங்காலமாக இடம்பெற்றுவருகிறது. தினமும் ஆறுகாலப்பூசை உண்டு. நித்திய நைமித்திய வழிபாடுகள் தென்னகத்து வைத்தீஸ்வரன் கோவில் முறைகளை அனுசரித்து கிரமமாக நடைபெற்றுவருகின்றன. அம்பாள் நாமம் ஸ்ரீ பாலாம்பிகா தேவி நால்வர் உட்படப் பிரதான மூர்த்திகள் அனைவரும் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றனர். தலவிருட்சம் வன்னி தீர்த்தம் சித்தாமிர்த புட்கரணி. தற்பொழுது, இராஜகோபுரமும் நிருமாணிக்கப்பட்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
யாழ்ப்பாணம்.

## ஸ்ரீ நடேசர் கோவில்
## நீராவியடி, கடைச்சாமி ஒழுங்கை, வண்ணார்பண்ணை

ஈழத்தில் ஞான குருபரம்பரையை ஏற்படுத்திய கடையிற் சுவாமி யாரால் ''இது சிதம்பரமடா'' என்று முன்மொழிந்த இடத்தில் சிதம்பர பாணியில் 1920 இல் இவ்வாலயம் ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் பூசித்த விநாயகரும் இக் கோவிலின் மூலஸ்தானத்தில் உள்ளார். மூலமூர்த்தி சிவகாம சுந்தரி சமேத நடேசப் பெருமான். பரிவார மூர்த்திகள் — விநாயகர், வைரவர், ஆகியோர். தினமும் இரு காலப்பூசைகள் நடைபெறுகின்றன. நடேசப் பெருமானுக்கு உரிய ஆறு அபிஷேகங்களும் விசேடமாக நடைபெற்று வருவதுடன், சிவராத்திரி, நாயன்மார் குருபூசை, என்பனவும் விசேட வழிபாட்டுக்குரிய தினங்களாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

மாவட்டம்: யாழ்ப்பாணம்,
யாழ்ப்பாணம்.

## வில்லூன்றி, ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோவில்
## வில்லூன்றி

இராமபிரான் தனது வில்லை ஊன்றி ஏற்படுத்திய நன்னீர் ஊற்றினை உடையமையால் இப்பதி வில்லூன்றி எனப் பெயர் பெற்றது. இராமபிரான் சிவபூசை செய்த இடமாதலால் பூர்வ தனுஷ்கோடி எனக் கருதப்படுகிறது. முற்காலத்திலே சிவாலயம் ஒன்று இருந்ததாக ஐதீகம். பின்னர் 19 ஆம் நூற்றுண்டின் முற் பகுதியில் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட விநாயகர் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டார். நூறு வருடப் பழமை வாய்ந்த கல்வெட்டுக்கள், சாசனங்கள், திருவூஞ்சற் பாடல்கள் இங்கு உள்ளன. மூலமூர்த்தி வீரகத்தி விநாயகர். தினமும் ஆறுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. வைகாசி அமாவாசையை இறுதி நாளாகக் கொண்டு பத்துத் தினங்களுக்கு வருடாந்த மகோற்சவம் நடைபெறுகிறது. மூர்த்தி, தலம், தீர்த்தம், ஆகிய மூன்றையும் கொண்ட பெருமைபெற்ற ஓர் ஆலயம் இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
யாழ்ப்பாணம்.

ஞானசெல்வ விநாயகர் கோவில்
கொய்யாத்தோட்டம், சுண்டிக்குளி

1760 இல் ஸ்தாபிக்கப்பட்டது. ஊஞ்சற் பாடல்களும் உள. மூலமூர்த்தி விநாயகர். பரிவார மூர்த்திகள் — சிவன், வைரவர், அம்பாள். பன்னிரண்டு தினங்களுக்கு உற்சவம் நடைபெறுகிறது. சித்திரைச் சித்திரை, ஆவணிச் சதுர்த்தி ஆகியன விசேட பூசைக்குரிய தினங்களாகும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
யாழ்ப்பாணம்.

அரசடி விநாயகர் கோவில்
மணிக்கூட்டு வீதி, வண்ணார்பண்ணை தென்கிழக்கு,
யாழ்ப்பாணம்

இஃது ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகள் பழமை வாய்ந்தது. அரசும், வேம்பும் ஒன்றாக வளர்ந்த அடிமரத்தில் இந்த விநாயகரை வைத்து வணங்கி வருகின்றனர். தினமும் நான்கு காலப்பூசை நடைபெறுகிறது. ஆவணித் திருவோணத்தை அந்தமாகக்கொண்டு பத்து நாட்கள் அலங்காரத் திருவிழா நடைபெறுகிறது. நவராத்திரி, சதுர்த்தி, கந்தசட்டி, திருவெம்பாவை, பிள்ளையார் கதை ஆகிய விசேட நாட்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. தலவிருட்சம் அரசு. ஸ்தல மான்மியமும், ஊஞ்சற் பாடல்களும் இங்கு உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
யாழ்ப்பாணம்.

சரப்பிரான் பிள்ளையார் கோவில்
ஆனைக்கோட்டை

இக்கோவில் சுமார் நூறு வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டது. இப்பகுதியிலுள்ள விவசாயிகளின் வழிபாட்டுக்காக இவ்வாலயம் அமைக்கப்பட்டது. ஆலயத் திருப்பணி வேலைகளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தினமும் இரு காலப்பூசைகள் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
யாழ்ப்பாணம்.

## ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோவில்
## அத்தியடி, யாழ்ப்பாணம்

ஆரம்பத்தில் இருந்த பிள்ளையார் விக்கிரகத்திற்குப் பதிலாக சிதம்பர யாத்திரையின்போது அங்கிருந்து கொண்டுவரப்பட்ட நர்த்தன தோற்றமுடைய விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். ''சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார்'' எனப் பெயர் வர இதுவே காரணம். புதுப்பித்து அமைக்கப்பட்ட கோவிலில், முதலில் 1926 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. பின்னர் 1975 ஆம் ஆண்டில் புனருத்தாரண வேலைகள் நடைபெற்று அதே ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. பரிவார மூர்த்திகளாக அம்மன், விநாயகர், நவக்கிரகம், வைரவர், ஆகியோர் உளர். தலவிருட்சம் பழமைவாய்ந்த வன்னிமரம். தீர்த்தம் இதற்கு அருகாமையில் உள்ளது. தினமும் மூன்று காலப் பூசைகள் நடைபெறுகின்றன. பங்குனி மாதத்தில் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி சித்திரை வருடப் பிறப்பன்று தேர்த் திருவிழா நடைபெறும். ஊஞ்சற் பாடல்களும் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
யாழ்ப்பாணம்.

## ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் கோவில்
## 264, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

இங்கு காசியில் உள்ளமை போன்று விநாயகர், சிவலிங்கம், அம்பாள், வேல், சூலம் ஆகிய மூர்த்திகள் ஒரே சபையில் உளர். நித்திய பூசை இங்கு நடைபெற்று வருகின்றது. வருடாவருடம் கார்த்திகை மாத ரேவதி நட்சத்திரத்தன்று மணவாளக் கோல விழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
யாழ்ப்பாணம்.

### ஸ்ரீ கதிரேசன் கோவில்
### (ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில்)
### திருவண்ணைநகர் (வண்ணார்பண்ணை)

1876 ஆம் ஆண்டு அளவில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்த நாட்டுக்கோட்டை நகரத்தார் தாங்கள் வழிபடுவதற்கென ஆரம்பித்த கோவில் ஆகும். 1931 ஆம் ஆண்டில் கருங்கல்லால் கட்டிக் குடமுழுக்குச் செய்யப்பட்டது. 1979 ஆம் ஆண்டுவரை மூல மூர்த்தி வேல். தற்போது மூலமூர்த்தி அருள்மிகு செந்தில் கதிர் வேலாயுத சுவாமி. பரிவார மூர்த்திகள் — ஸ்ரீ வள்ளிதேவசேனு சமேத சுப்பிரமணியர், விநாயகர், தண்டாயுதபாணி, மகாவிஷ்ணு, வைரவர். தினமும் ஐந்து காலப் பூசைகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
யாழ்ப்பாணம்.

### ஸ்ரீ பழனி ஆண்டவர் கோவில்
### கொழும்புத்துறை

பழனியில் இருந்து கொண்டுவரப்பட்ட பழனி ஆண்டவர் விக்கிரகம் மூலஸ்தானத்தில் வீற்றிருக்கிருர். தேவியருடன் முத்துக் குமாரசுவாமி விக்கிரகமும் இங்கு உளது. தினமும் மூன்றுகாலப் பூசை இடம்பெறுகிறது. ஆனி உத்தரத்தன்று மணவாளக் கோல விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. கந்தபுராண படனமும் இங்கு நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
யாழ்ப்பாணம்.

### ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில்
### வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

இவ்வாலயம் ஒல்லாந்தர் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. தினமும் ஆறுகாலப் பூசை நடைபெறும், புரட்டாதியில் திருவோண நட்சத்திரத்தை அந்தமாகக் கொண்டு பத்துத் தினங்கள் மகோற்சவம் நடைபெறுகிறது. சிற்ப வேலைப்பாடுகளும், பூசை முறைகளும் திருப்பதி முறைப்படி மேற்கொள்ளப்படுகின்றன. ஆலய வாசலில் ஏழு மாடங்களைக் கொண்ட ராஜகோபுரம் அமைந்துள்ளது. தல விருட்சம் இருநூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த பலாவாகும். கிருஷ்ண ஜெயந்தி, புரட்டாதிச் சனி, ஏகாதசி தினங்கள் இங்கு சிறப்பான விசேட தினங்களாகும். நவராத்திரி முடிய வரும் பௌர்ணமியன்று சுமங்கலிப் பிரார்த்தனை தீபபூசை, என்பன சிறப்பாக நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவில்
அம்மன் வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்**

மூலமூர்த்தி — தான்தோன்றி அம்பாள். தினமும் மூன்று காலப் பூசை. பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், முருகன், வீரபத்திரர், நாகதம்பிரான், வைரவர். வைகாசி மாதம் கொடியேற்ற விழாவுடன் உற்சவம் நடைபெற்று வருகிறது. நவராத்திரி, திருக்கார்த்திகை, திருவெம்பாவை, திருவாதிரை, தைப்பொங்கல் போன்ற விசேஷ தினங்களில் விசேஷ பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
யாழ்ப்பாணம்.

**கோட்டை முனீசுவரர் கோவில்
(முனியப்பர் கோவில்)
முற்றவெளி, யாழ்ப்பாணம்**

இவ்வாலயத்தைக் கோட்டை முனியப்பர் ஆலயம் எனவும் அழைப்பர். யாழ்ப்பாணம் முற்றவெளியில் டச்சுக் கோட்டைக்குக் கிழக்கே அமைந்திருக்கின்றது. சுமார் 200 ஆண்டுகள் பழமை வாய்ந்த இவ்வாலயம் ஒல்லாந்தர் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. தினமும் மூன்றுகாலப் பூசை உளது. வருடாவருடம் அலங்கார உற்சவமும் நடைபெற்றுவருகின்றது. தலவிருட்சம் அரச மரம். யாழ்ப்பாண வர்த்தகர்களும், அரச உத்தியோகத்தர்களும், ஏனையோரும் பயபக்தியுடன் வழிபடும் தலம் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

## நல்லைநாத சுவாமி கோவில்
## பருத்தித்துறை வீதி, நல்லூர்

யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த தமிழ் மன்னர்களுடைய கோவில். விஜய கூழங்கைச் சக்கரவர்த்தியால் ஸ்தாபிக்கப்பட்ட தென்பது வரலாறு. போர்த்துக்கேயர் காலத்தில் இடிக்கப்பட்ட இக்கோயிலின் கற்களைக் கொண்டு யாழ்ப்பாணக் கோட்டை கட்டப் பட்டதாகச் சரித்திரம் கூறுகிறது. நல்லூரைத் தலைநகரமாகக் கொண்டிருந்தபடியால் நல்லைநாதர் ஆலயம் என்று பெயரிடப் பட்டது. அம்பாளை ''நல்லைநாயகி'' என்றழைக்கிறார்கள். பழைய இராசதானியில் அமைந்த கோவிலாகையால் அதற்கமைய அரண் மனையும் (சங்கிலித் தோப்பு) அமைந்தது.

''சட்டநாத சிவன் கோவில்'' எனவும் அழைப்பதுண்டு. மூல மூர்த்தி பரமேஸ்வரன். அம்பாள் நல்லைநாயகி. பரிவார மூர்த்தி கள் — விநாயகர், நாகதம்பிரான், பஞ்சலிங்கங்கள், சுப்பிரமணி யர், மகாலக்ஷ்மி, சனீஸ்வரன், சண்டேஸ்வரர், நவக்கிரகம், வைரவர், சூரிய சந்திரர், தக்ஷணாமூர்த்தி, லிங்கோற்பவர், துர்க்கை, பஞ்சமுகலிங்கம். குருபூசைகள் கிரமமாக நடைபெற்று வருகின்றன. தினமும் ஐந்து காலப் பூசை நடைபெறுகிறது.

வருடத்துக்கு இருமுறை கொடியேற்றத் திருவிழா. பங்குனி உத்தரத்திற்கு சிவன் வாசல் பத்து நாட் திருவிழா. ஆடிப்பூரத் தன்று தீர்த்தம் நடைபெறக் கூடியவாறு அம்பாள் வாசல் பத்து நாட் திருவிழா நடைபெற்று வருகிறது. மற்றும் விசேட உற்சவங் களும் நடைபெற்று வருகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

### ஸ்ரீ கமலாம்பிகா சமேத கைலாசநாத சுவாமி கோவில்
### (நல்லூர், சிவன் கோவில்)
### பருத்தித்துறை வீதி, நல்லூர்

ஆலய வரலாறு கைலாயநாத புராணத்தில் இடம்பெறுகிறது. நவராத்திரி 9 நாட்களும் சங்கு சக்கரக் கொடியுடன் விசேட நவராத்திரி பூசையும் நடைபெறும். இலங்கையில் இந்த ஆலயத்தில் யம சங்காரம் ஐப்பசிக் கடைசி வெள்ளிக்கிழமையில் மிகச் சிறப்பாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. 1916 ஆம் ஆண்டு ஆனி மாதம் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

### சிவன் கோவில்
### நீர்நொச்சியந்தாழ்வு, அரியாலை

1880 ஆம் ஆண்டில் காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட சிவலிங்கம் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. 1881 ஆம் ஆண்டில் சிவன்கோவில் ஒன்றை ஸ்தாபிக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் கைகூடாமல் போக இந்தச் சிவலிங்கம் சித்திவிநாயகராலய கொடித்தம்ப மண்டபத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 1955 ஆம் ஆண்டில் முன்னர் சிவன்கோவிலமைக்க முற்பட்ட இடத்தில் கோவிலமைக்கப்பட்டு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இங்குள்ள சிவலிங்கம் கங்கா நதியால் உருவாக்கப்பட்டதென்பது கர்ண பரம்பரைக் கதையாகவிருக்கிறது. மிகவும் மிருதுவாகவும், பிரகாசமுடையதாகவும், லிங்கம் உள்ளது. பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், நவக்கிரகாதியோர். தினமும் மூன்று காலப் பூசை. பங்குனி மாதத்தில் பதினொரு தினங்களுக்கு அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
யாழ்ப்பாணம்.

### சிவகாமி அம்மன் கோவில்
### இணுவில் வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்

நூற்றிருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த ஆலயம், பேச்சியம்மன் என அழைக்கப்பட்டு வந்தது. வைகாசி விசாக தினத்தை முன்னிட்டுப் பெரும் பொங்கல் நடை பெற்று வருகின்றது. தினமும் காலை, மாலைப் பூசைகள் நடைபெறு கின்றன. 1962 ஆம் ஆண்டு ஆலய திருப்பணி வேலைகள் ஆரம்ப மாகி 1965 ஆம் ஆண்டு ஆனி மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் அம்பாளுக்கு நடைபெற்றது. 1969 ஆம் ஆண்டு மணிக்கூட்டுக் கோபுரம், சிங்கம் பலிபீடம், வசந்த மண்டபம், வைரவர் கோவில் புனருத்தாரண வேலைகள் முடிந்து கும்பாபிஷேகம் நடைபெற்றது. 03.06:1976 இல் முதல் கொடியேற்ற உற்சவம் நடைபெற்று 11.06.1976 இல் தீர்த்தோற் சவமும் நடைபெற்றது. ஆலய முன்வாசலில் ஸ்தல விருட்சமாக ஆலும், அரசும் ஒன்ருக இருப்பது, சிவன் — சக்தியை ஞாபகப் படுத்தி வருகிறது.

மூலமூர்த்தி — சிவகாமி அம்பாள். பரிவார மூர்த்திகள் — விநாயகர், முருகன், வைரவர், ஆகியோர். தினமும் மூன்றுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், சித்திரை வருடப் பிறப்பு, ஆனி உத்தரம், ஆடி அமாவாசை, நவராத்திரி, திருவெம்பாவை போன்ற விசேட தினங்களில் விசேட பூசைவழிபாடுகள் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

### ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோவில்
### (நாச்சிமார் கோவில்)
### வண்ணார்பண்ணை, குளக்கரை மருதடி, யாழ்ப்பாணம்

ஆரம்பத்தில் மருதமரத்தடியில் நாச்சிமார் வழிபாடு நடை பெற்று வந்தது. பின்னர் இப்பகுதி மக்கள் விக்கிரக வழிபாட்டை ஆரம்பித்தார்கள். 1870 ஆம் ஆண்டில் கற் கட்டிடமாக அவ் வாலயத்தை அமைத்தனர். தலவிருட்சம் மருது. இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட காஞ்சிகாமாட்சி அம்பாளின் அம்சமாகக் கொண்ட விக்கிரகம் ஒன்று மூலமூர்த்தியாகப் பிரதிஷ்டை செய்யப் பட்டது. 1898 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண அரசாங்க அதிபரால் தயாரிக்கப்பட்ட கோயில்கள் பற்றிய இடாப்பில் இவ்வாலயமும் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1887, 1926,1967 ஆகிய ஆண்டு களில் மகா கும்பாபிஷேகங்கள் நடைபெற்றன. தினமும் ஐந்து காலப்பூசை. சித்திரா பௌர்ணமி தினத்தன்று தீர்த்தோற்சவம் நடைபெறக்கூடியவாறு 15 தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது. மாதாந்தம் பௌர்ணமி தினங்களில் திருவிளக்குப் பூசையும் கிழமை தோறும் சுக்கிரவார விழாவும், புரட்டாதி மாதத்தில் நவராத்திரி வசந்தோற்சவமும், மார்கழியில் திருவெம்பாவையும், புராண படனமும்,ஆடிப் பூரத்தை முன்னிட்டு வருடாவருடம் 20 நாட்களுக்கு இலட்சார்ச்சனையும் ஆடிப் பூரத் தன்று சங்காபிஷேகமும் பூர்வ கர்ம விழாவும் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

### இராஜராஜேஸ்வரி (பேச்சியம்பாள்) கோவில்
### நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்

மூலமூர்த்தி — அம்பாள், பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், முருகன், வைரவர் ஆகியோர். தினமும் இரண்டுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆடிப்பூரத்தன்று தீர்த்தம் நடைபெறக்கூடிய வாறு பத்துத் தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

## கற்புலத்து மனோன்மணி அம்பாள் கோவில்
## நந்தாவில், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலுடன் தொடர்புகளை உடையது. ஒல்லாந்தர் காலத்திலேயே கோயிலாக இருந்ததாக கர்ணபரம்பரைக் கதையும் உள்ளது. மூலமூர்த்தி — மனோன்மணி அம்பாள். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியர், வைரவர். தினமும் மூன்றுகாலப் பூசை. ஆனி மாதப் பௌர்ணமிக்குத் தீர்த்தம் நடைபெற, 11 நாள் வருடாந்த உற்சவம், சமயப் பிரசங்கங்கள், அன்னதானம், குருபூசை ஆகியவைகளும் நடைபெற்று வருகின்றன. வாசிகசாலையும் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

## கைலாய பிள்ளையார் கோவில்
## நல்லூர், யாழ்ப்பாணம்

நல்லூர் ராஜதானியாக இருந்தகாலத்தில் தெற்கே இவ்வாலயம் அமைக்கப்பட்டது. வடக்கே சட்டநாதர் கோவிலும், கிழக்கே வெயிலுகந்த பிள்ளையார் கோவிலும், தெற்கே கைலாய பிள்ளையார் கோயிலும், மேற்கே வீரமாகாளி அம்மன் கோவிலும் காவல் தெய்வங்களாக அமைக்கப்பட்டன. போர்த்துக்கேயர் நல்லூர் இராஜதானியைக் கைப்பற்றிய காலத்தில் இக்கோயில் இடிக்கப்பட்டது. அப்போது மூலஸ்தானத்தில் இருந்த பெருமானையும், கைலாயநாத பெருமானையும், அம்பாள், பிள்ளையாரையும் மறைத்து வைத்துக் காப்பாற்றினர். பின்னர் ஆலயம் புதுப்பிக்கப்பட்டு மூன்று மண்டபங்களுடன் கோட்டை வாசல்கள் உள்ள புதிய கோயிலாக அமைக்கப்பட்டது. மூலமூர்த்தி விநாயகர். பரிவார மூர்த்திகள் — பஞ்சவக்ர விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், சண்டேஸ்வரர், நவக்கிரகம். தினமும் நான்கு காலப் பூசை. சித்திரை மாத பௌர்ணமித் தீர்த்தம் நடைபெறுவதற்கு அமைய பத்துநாள் உற்சவம், தொடர்ந்து குசலாம்பிகை அம்பாளுக்கும் கைலாயநாத பெருமானுக்கும் திருக்கலியாணம் ஆகியன நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

### அரியாலை, ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
### நீர்நொச்சித்தாழ்வு, அரியாலை,
### யாழ்ப்பாணம்

கச்சிக் கணேசய்யரால் சுமார் 100 ஆண்டுகட்கு முன் ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாறு. சித்திவிநாயகர் விக்கிரகம் இந்தியாவிலிருந்து தொண்டை நாட்டைச் சேர்ந்த யாழ்ப்பாடியின் காலத்தில் அவரின் முதல் அமைச்சர் சேதிராயரின் வேண்டுகோளின்படி கச்சிக் கணேசய்யர் என்னும் அந்தணரினால் கொண்டு வரப்பட்டு இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவ்விவரத்தை யாழ்ப்பாண சரித்திர நூல் ஆசிரியர் ஸ்ரீமான் ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை யாழ்ப்பாண சரித்திரத்தில் (பக்கம் 11) கூறியுள்ளார். இது சேதுராயரால் கட்டப்பட்டது. மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — கொடித்தம்பப் பிள்ளையார், பஞ்சமுக விநாயகர், கந்தசாமியார், சனீஸ்வரன். நான்கு காலப்பூசை நடைபெறுகிறது. ஆனி மாதத்தில் 11 நாட்களுக்கு மகோற்சவம் நடைபெறும். 10 ஆம் நாள் தேரும், 11 ஆம் நாள் தீர்த்தமும் நடைபெற்று மகோற்சவம் முடிவுறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

### ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் கோவில்
### பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

1880 ஆம் ஆண்டு கோண்டாவில் கிழக்குச் சந்தியில் இருந்த மடத்தில் ஆரம்பமாகிப் பின்னர் ஆலயமாக ஸ்தாபிக்கப்பட்டது. மடம் இருந்த இடத்தில் கந்தபுராணப் படிப்பு நடைபெற்று வந்தது. வேல் ஒன்று வைத்துப் பூசை செய்யப்பட்டதாக வரலாறு உண்டு. 1965 ஆம் ஆண்டில் இந்த மடம் இருந்த இடத்தில் ஆலயம் ஒன்று அமைக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு, அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் 1972 ஆம் ஆண்டு புனருத்தாரணம் செய்யப்பட்டு அரசடிப் பிள்ளையார் என்றும், ஆசிமட விநாயகர் என்றும் அழைக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது மூலமூர்த்தி — விநாயகர். தினமும் காலை, மாலைப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆவணிச் சதுர்த்தியில் முடிவடையும் வண்ணம் அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது. கார்த்திகையில் இருபத்தொரு நாட்களுக்கு பெருங்கதையும், தொடர்ந்து அபிஷேகமும் நடைபெற்று வருகின்றது. கந்தையா சுவாமிகள் (குடைச் சாமியார்) குருபூசை கார்த்திகை நட்சத்திரத்தில் நடைபெற்று வருவதுடன் நல்லூர்க் கந்தனின் உற்சவ காலங்களில் தண்ணீர்ப்பந்தல் அமைத்து தாகசாந்தியும் வழங்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

### ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோவில்
### கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்

மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்தி — சந்தான கோபாலர். 1973 ஆம் ஆண்டு வைகாசி மாதம் சுவாதி நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. தல விருட்சம் வில்வமரம். சிவயோக சுவாமிகள் இந்த ஆலயத்தில் முன்னரெல்லாம் தங்கிச் செல்வது உண்டு. வைகாசி மாதத்து சுவாதி நட்சத்திரத்தை இறுதியாகக் கொண்டு 12 நாள் அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது. திருவூஞ்சல், பஞ்சமுக அர்ச்சனை ஆகியனவும் நடைபெறுகின்றன. பிள்ளையார்கதை, திருவெம்பாவை அந்தந்தக் காலங்களில் படிக்கப்பட்டு வருகின்றன. ஐப்பசி வெள்ளி, கந்தசஷ்டி, திருவாதிரை, மாசிமகம், ஆகிய விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெறும். இந்தக் கோவில் செகராஜசேகரனால் தாபிக்கப்பட்டது எனத் தெரிய வருகின்றது. கோயிலுக்கான பாடல்களும் உண்டு. தினமும் இருகாலப் பூசை நடைபெற்று வருகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

### நீராவியடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோவில்
### பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்,

சுமார் 200 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. தினமும் மூன்று காலப் பூசை நடைபெறுகின்றது. ஊஞ்சல் பாடல்கள் உண்டு. 1974 ஆம் ஆண்டு புதிதாகக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. கோவிலுக்கென மேற்கு வீதியில் தீர்த்தக் கேணியும் உண்டு. ஸ்ரீ சேனாதிராய முதலியார் இயற்றிய ''நீராவியடிப்பிள்ளையார் கலிவெண்பா'' வும் இங்கு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

## ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
## அருளம்பல வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்

சுமார் இருநூறு ஆண்டுகள் பழமை வாய்ந்தது. ஆரம்பத்தில் செங்கற் கட்டிடமாக இருந்த கோவில் 1900 ஆம் ஆண்டளவில் கற்களால் கட்டப்பட்டது. ஊஞ்சற் பாடல்களும் உண்டு. ஆவணிப் பௌர்ணமியைத் தீர்த்தமாகக் கொண்டு பதினொரு தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது. 1973 ஆம் ஆண்டு ஐந்து நிலைகளைக் கொண்ட இராசகோபுரம் கட்டப்பட்டது. தினமும் நான்கு காலப் பூசையுடன் சகல நைமித்திய கிரியைகளும் நடைபெற்றுவருகின்றன. 1954 ஆம் ஆண்டு சிவன், அம்மன் விக்கிரகப் பிரதிஷ்டை நடைபெற்றது. பங்குனியில் விசேடமாக அலங்கார உற்சவம் நடைபெற்றுவருகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

## மடத்துப்பிட்டி பிள்ளையார் கோவில்
## நல்லூர்

1910 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. வெள்ளிக்கிழமை, திங்கட்கிழமைகளில் ஒரு காலப்பூசை நடைபெறும். ஆனிப் பௌர்ணமிக்குப் பொங்கல் விசேடமாக உண்டு. அம்மன், வைரவர், சுப்பிரமணியர் ஆகிய மூர்த்திகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றனர்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

## மருதவளவு ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
## பண்டாரக்குளம், அரசவிதி, நல்லூர்

இரண்டு காலப்பூசை. ஆனி மாதப் பௌர்ணமிக்குத் தீர்த்தம் வரக்கூடியதாகப் பத்துநாள் உற்சவம். பழைய புவிராச பண்டாரம் என்பவர் வெட்டுவித்த பண்டாரக்குளம் கோவிலின் பிற்பக்கத்தில் அமைந்துள்ளது. வைரவர், நாகதம்பிரான், சண்டேஸ்வரர், உற்சவமூர்த்தி விக்கிரகங்கள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

ஸ்ரீ மூர்த்த விநாயகர் கோவில்

ச்சேரி, நல்லூர் வீதி, நல்லூர்

*100 வருடங்களுக்கு முற்பட்டது. 1968 இல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்தி — வைரவர். மூன்றுகாலப் பூசை. விநாயக புராணம் (21 நாள்), திருவாதவூரடிகள் புராணம் (10 நாள்), சித்திரபுத்திர நாயனார் புராணம், சிவராத்திரி புராணம் ஆகிய புராண படனங்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஆனி உத்தரத்தில் இருந்து பத்து நாட்களுக்கு வருடாந்த அலங்கார உற்சவம் உளது. நவராத்திரி, சிவராத்திரி, திருவெம்பாவை, சதுர்த்தி ஆகியவைகள் விசேட உற்சவ தினங்கள்.*

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
கந்தர் மடம், யாழ்ப்பாணம்

*180 வருடங்களுக்கு முற்பட்ட ஆலயம் என்பது வரலாறு. சித்தி விநாயகர் ஊஞ்சல் பாட்டு உண்டு. மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — ராஜராஜேஸ்வரி, வைரவர். காலை மாலை பூசைகள். ஆனி மாதத்தில் வருடாந்த அலங்காரத் திருவிழா, ஆனி மாத பௌர்ணமி முடிந்து வரும் உத்திராட நட்சத்திரத்தில் கொடியேறி, 12 நாட்களுக்கு உற்சவம் நடைபெற்று தீர்த்தத் திருவிழாவுடன் முடிவுறும். ஆவணிச் சதுர்த்தி, திருவாதிரை, பிள்ளையார் பெருங்கதை விசேட தினங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

## நல்லூர்க் கந்தசுவாமி கோவில்
## நல்லூர், யாழ்ப்பாணம்

கி.பி. 1450 ஆம் ஆண்டளவில் நல்லூர் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக இருந்தபோது செண்பகப் பெருமான் என்னும் ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு ஒரு முருகன் ஆலயத்தை அமைத்தானென "கைலாயமாலை" போன்ற பழைய நூல்களிற் கூறப்பட்டுள்ளன. போர்த்துக்கீசர் கோவிலைத் தரைமட்டமாக்கியதும் கி.பி. 1734 ஆம் ஆண்டில் "தொன்ஜுவான் இரகுநாத மாப்பாண முதலியார்" ஒரு நிலத்தை வாங்கி வேற் பெருமானை வைத்து வழிபாட்டை ஆரம்பித்தார். பின்னர் முருகனுக்கோர் கோவிலையும் அமைத்தார். நல்லூர்க் கந்தசுவாமி கோவில் இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது.

கிழக்கு வாசலிலும், தெற்கு வாசலிலும் பெரிய கோபுரங்கள் ஆலயத்தைச் சிறப்பித்து நிற்கின்றன. மணிக்கூட்டுக் கோபுரங்கள் ஆறு அங்கு அழகுறக் காட்சியளிக்கின்றன. தீர்த்தக் கேணியின் நான்கு புறமும் மண்டபம் உண்டு. நித்திய நைமித்திய பூசைகள் சிறப்பாக நடைபெறும். நித்தியாக்னி, நித்தியோற்சவம் இடம் பெற்று வருகிறது. சிற்ப வேலைப்பாடமைந்த மஞ்சம், கைலாச வாகனம், மற்றும் வெள்ளி வாகனங்கள் இங்கு பிரசித்தமானவை.

ஆவணி அமாவாசையைத் தீர்த்த தினமாகக் கொண்டு இருபத்தைந்து நாட்களுக்கு மகோற்சவம் சிறப்பாக நடைபெறும். நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஏராளமான மக்கள் இந்நாட்களில் வந்து வழிபடுவர். புராணபடனம் உரிய முறையில் நடைபெற்று வருகிறது. வருடந்தோறும் கோவிலில் திருப்பணி வேலைகள் இடம் பெற்று வருவதும், கோவிற் பூசைகள், விழாக்கள் நேரத்திற்கு நடைபெறுவதும் குறிப்பிடத்தக்க அம்சங்கள். நல்லூர்த் தேரடியில் வாழ்ந்து பெரும் பேறுபெற்றவர்களுள் கடையிற் சாமியார், யோகர் சுவாமிகள் ஆகியோர் முக்கியமானவர்கள். கோவிலைச் சூழப் பல மடங்கள் உண்டு.

நல்லூர்க் கந்தன் பேரில் பல புலவர்கள் பாமாலைகளும், பதிகங்களும், அந்தாதிகளும், தனிப்பாடல்களும் பாடியுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்.
நல்லூர்.

## வள்ளி, தேவசேனு சமேத ஸ்ரீ ஷண்முகநாதசுவாமி கோவில்
## நல்லை, திருஞானசம்பந்தர் ஆதீனம், பருத்தித்துறை வீதி, நல்லூர்

இவ்வாலயம், பரிபூரணம் அடைந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளால், திருஞானசம்பந்தர் ஆதீனம் ஆரம்பிக்கப்பட்டபோது ஸ்தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தியாகச் ஸ்ரீ ஷண்முகர் வீற்றிருக்க, பரிவார மூர்த்திகளாக விநாயகர், சிவன், அம்மன், மீனுட்சி சுந்தரேஸ்வரர், தண்டாயுதபாணி, சுவாமிநாதர், ராஜராஜேஸ்வரி, புவனேஸ்வரி, அபிராமி, பத்திரகாளி, வைரவர், சண்டேஸ்வரர், சேக்கிழார் ஆகியோர் உளர். நித்திய பூசை நான்கு காலங்களுக்கு நடைபெறுகின்றது.

வார உற்சவமாகச் சுக்கிரவார உற்சவம் உளது. சுக்கிரவாரத்திலும் பௌர்ணமியிலும் சக்தி பூசை இங்கு சிறப்புற நடைபெறுகின்றது. மாத உற்சவமாகப் பிரதோஷம், கார்த்திகை, திருவாதிரை, பௌர்ணமி ஆகியன உண்டு. வருடாந்த அலங்கார உற்சவம் பத்துத் தினங்களுக்குச் சிறப்புற இடம்பெறுகின்றது.

இங்கு வருடந்தோறும் திருநெறிய தெய்வீக மாநாடும், திருஞானசம்பந்தர் விழாவும் விமரிசையாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. சமஸ்கிருதக் கல்வி, பண்ணிசை வகுப்பு, புராண படன வகுப்புக்களும் உள.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

## மஞ்சவனப்பகுதி முருகன் கோவில்
## கொக்குவில் மேற்கு, கொக்குவில்

இங்கு மூலமூர்த்தியாக ஸ்ரீ முருகன் வீற்றிருக்கிறுர். பரிவார மூர்த்திகளாக பிள்ளையார், தேவியருடன் சுப்பிரமணியர், சிவன், அம்மன் சந்தானகோபாலர், வைரவர், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகள் உளர். நித்திய பூசை இங்கு சிறப்பாக நடைபெறுகிறது. ஆவணி மாதத்தில் மகோற்சவத்தின்போது தேர், தீர்த்தம், பூங்காவனம் ஆகியன நடைபெற்று திருவிழா முடிவுறுகின்றது. இங்கு உள்ள மிகப் பிரமாண்டமான தேர் சித்திரவேலைப்பாடுகளைக் கொண்டமைந்தது. சூரன்போர், பிள்ளையார் கதை, திருவெம்பாவை போன்ற தினங்களில் விசேட பூசைகள் நடைபெறுகின்றன. கந்தபுராணப் படிப்பு, திருவாதவூரடிகள் புராணப் படிப்பு ஆகியன இடம்பெறுகின்றன. பண்டுதொட்டுக் கதாப்பிரசங்கங்கள் இவ்வாலயத்தில் வழுவாது இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

### கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
### இந்துக் கல்லூரி வீதி, கொக்குவில்

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் உள்ளது. மூல மூர்த்தி — வள்ளி, தெய்வயானை, சமேதரான சுப்பிரமணியர். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், கோபாலர், வைரவர், தண்டாயுத பாணி, ஆறுமுகசுவாமி, சண்டேஸ்வரர். நான்கு காலப்பூசை உண்டு. வைகாசிப் பட்சத்தில் பத்து நாட்கள் வருடாந்த உற்சவம். ஆவணிச் சதுர்த்தி, நவராத்திரி, கந்தசஷ்டி, திருக்கார்த்திகை, திருவெம்பாவை, சிவராத்திரி காலங்களில் விசேஷ உற்சவங்களும் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

### அருணகிரிநாத சுப்பிரமணிய சுவாமி கோவில்
### இணுவில் கிழக்கு, இணுவில்

மூலமூர்த்தி — ஐம்பொன்னாலான வேல். பரிவார மூர்த்தி — பிள்ளையார், வைரவர். தினமும் காலை, மாலைப் பூசை உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

### ஸ்ரீ வல்லிபுரநாதர் கோவில்
### கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

200 வருடங்கள் பழமை வாய்ந்தது. மூலமூர்த்தி — ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ வரதராஜர். மூன்று காலப் பூசை. 1981 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்த ஆலயத்தில் பரந்தாமருக்குக் குடை பிடித்த கதையை ஞாபகப்படுத்தும் வகையில் நாகபாம்பு ஒன்று இருந்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

### நல்லூர் வண்ணை ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோவில்
### 140, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

சங்கிலி மன்னனால் தாபிக்கப்பட்ட பழைய ஆலயங்களில் இதுவும் ஒன்று. தினமும் மூன்று காலப்பூசை நடைபெற்று வருகிறது. மகோற்சவம் 25 நாட்களுக்கு நடைபெறுகின்றது. ஊஞ்சல் பாடல் உண்டு. நித்திய நைமித்தியப் பூசைகள் கிரமமாக நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

**அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவில்**
**அம்மன் வீதி, திருநெல்வேலி**

*மூலமூர்த்தி — அம்பாள். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், முத்துக்குமாரசுவாமி, வைரவர். தினமும் மூன்று காலப் பூசைகள் நடைபெறுகின்றன. வைகாசி புனர்பூசத்தன்று கொடியேறி பத்துத் தினங்களுக்கு உற்சவம் நடைபெற்று வைகாசி விசாகத்தன்று தீர்த்தோற்சவத்துடன் விழாக்கள் முடிவடைகின்றன.*

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

**ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்**
**திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி**

*தமிழ் அரசர் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம் என்பது நம்பிக்கை. மூலமூர்த்தி — முத்துமாரியம்மன். பரிவார மூர்த்திகள் → பிள்ளையார், சுப்பிரமணியர், வைரவர். தினமும் மூன்று காலப் பூசை உளது. ஆனி மாதம் பத்து நாள் மகோற்சவம் நடைபெற்று தீர்த்தத் திருவிழாவுடன் முடிவுறும்.*

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நல்லூர்.

**கலட்டி, எச்சாட்டி மகாமாரியம்மன் கோவில்**
**வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம்**

*தினமும் மூன்று காலப் பூசை நடைபெறுகிறது. ஊஞ்சற் பாடல்கள் உண்டு. ஆடிப்பூரத்திற்குத் தீர்த்தம் அமையக்கூடியதாக முதற் பதினைந்து நாட்களுக்கு மகோற்சவம் நடைபெறும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

## சிவன் கோவில்
## ஊரைதீவு பாணாவிடை, புங்குடுதீவு

கடலில் கண்டெடுக்கப்பட்ட கல்லொன்று சிவலிங்கமாக வளர்ந்திருப்பதாகக் கூறப்படுகிறது. மூலமூர்த்தி — ஸ்ரீபர்வதவர்த்தனி அம்பாள் சமேத இராமலிங்கேஸ்வரப் பெருமான். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், முருகன், சண்டேஸ்வரர், நவக்கிரகம், வைரவர், அம்மன் ஆகியோர். 68 ஆண்டுகளாகத் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை, தொடர்ந்து கொண்டாடப்பட்டு வருகிறது. தினமும் மூன்று காலப் பூசை. சித்திரைச் சதய நட்சத்திரத்தில் தீர்த்தத் திருவிழா நடைபெறக்கூடியவாறு பதினொரு தினங்கள் உற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

## பாலாவோடை சிவன் கோவில்
## ஊரைதீவு

மூலமூர்த்தி—சிவலிங்கம். பரிவார மூர்த்திகள்—பிள்ளையார், முருகன், அம்மன், ஐயனார், நடேசர், நவக்கிரகம். தினமும் மூன்று காலப் பூசை. சித்திரையில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசையன்று தீர்த்தத் திருவிழா நடக்கக் கூடியதாகப் பத்து நாட்களுக்குத் திருவிழா நடைபெறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

## தில்லேஸ்வரம் கோவில்
## 6 ஆம் வட்டாரம், மண்டைதீவு

மூலமூர்த்தி — சிவலிங்கம். பரிவார மூர்த்திகள் — வைரவர், சண்டேஸ்வரர், நவக்கிரகம் ஆகியன. தினமும் மூன்று காலப் பூசை. ஆனி மாதத்தில் அலங்காரத் திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

## காசி விஸ்வநாதர் கோவில்
## வேலணை மேற்கு, வேலணை

1944 இல் ஸ்தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி — ஸ்ரீ நடராசப் பெருமான். தினமும் மூன்று காலப் பூசை. ஆனி உத்தரம், மார்கழித் திருவாதிரை ஆகிய தினங்களில் ரதபவனி நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

## சிவகாமி அம்மன் கோவில்
### 4 ஆம் கட்டையடி, மண்கும்பான், அல்லைப்பிட்டி

மூலமூர்த்தி — அம்பாள். பரிவாரமூர்த்தி — வைரவர். தினமும் ஒரு காலப் பூசை. வைகாசியில் கும்பாபிஷேக தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

## ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்
### நயினாதீவு வடக்கு, நயினாதீவு

இலங்கையின் புராதன அம்பாள் ஆலயங்களுள் இவ்வாலயமும் ஒன்று. போர்த்துக்கீசரால் இடிக்கப்பட்ட ஆலயம் மீண்டும் 1700 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. ஆலயத்தின் புராதன வரலாற்றில் குறிப்பிடப்படும் ''பாம்பு சுற்றிய கல்'' இன்றும் ஆலயத்தின் வடக்கேயுள்ள கடலில் காணப்படுகிறது.

ஐந்து தலை நாகம் படம் எடுத்தாட நடுவிலே சிவலிங்கம் உள்ள தோற்றமே மூலமூர்த்தியாகும். பரிவாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், நவக்கிரகம், சூரியர், சந்திரர், வைரவர், சண்டிகேஸ்வரி, ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் நான்கு காலப் பூசைகள் உள. ஆனியிலே மகோற்சவம் பதினாறு தினங்களுக்குச் சிறப்பாக நடைபெறுகின்றது. ஆனிப் பூரணை தினத்தன்று தீர்த்தம் நடைபெறும். இவ்வாலயத்தில் உள்ள அம்பாள் மிக மூர்த்திகரமானது. நாக சாபம் இருப்பவர்கள் இங்கு சென்று நேர்த்திக் கடனை நிறைவு செய்து அம்பாள் அருள் பெற்றிருக்கின்றார்கள். இந்த அம்பாள் பேரில் பல பிரபந்தங்கள் எழுந்துள்ளன. 64 சக்தி பீடங்களுள் இதுவும் ஒன்று.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

## ஸ்ரீ மதுரைமீனாட்சி அம்மன் கோவில்
### பெருங்குளம், நயினாதீவு மேற்கு

தினமும் ஒரு காலப் பூசை. வெள்ளிக்கிழமைகளிலும், விசேட தினங்களிலும் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. சமய சம்பந்தமான கூட்டங்களும் இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

## ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோவில்
## செம்மணத்தம்புலம், நயினாதீவு

ஸ்ரீ வீரகத்தி விநாயகர் மூலமூர்த்தியின் நாமம். முற்கால அரசாங்கப் பதிவேடான தோம்பில் ஆலயம் பற்றிய குறிப்புண்டு. இந்தியாவில் வேதாரணியம் வீரட்டானேஸ்வரர் ஆலயத்திற்கும் இதற்கும் தொடர்புண்டு. லிங்கம் 500 வருடங்களுக்கு முந்தியது என்பது வரலாறு. கனவில் தோன்றியபடி இடையன் ஒருவன் உண்மையாக இந்த லிங்கத்தைக் கொண்டுவந்து கொடுத்ததாக வும், பின்னர் அங்கிருந்து நெல் ஏற்றி வந்த மரக்கலத்தில் இங்கு கொண்டுவந்து சேர்த்ததாகவும் கூறப்படுகிறது. பலமுறை இடம் பெயர்ந்த இந்த லிங்கத்துக்கு, பின்னர் ஓர் ஆலயம் அமைத்தனர்.

1918 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றதைத் தொடர்ந்து 1950 இலும் மகாகும்பாபிஷேகம் நடந்தேறியது. புது வருடப் பிறப்பன்று தேர் வரக்கூடியவாறு மகோற்சவம் நடை பெறுகின்றது. தினமும் மூன்று காலப் பூசை. ஊஞ்சல் பாடலும் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

## ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோவில்
## பெரியபுலம்

போர்த்துக்கீசர் காலத்துக்கு முற்பட்டது இவ்வாலயம். வேதா ரணியத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட விநாயகர் மூலவராக வீற்றிருக்கின்றார். முன்னைய மூர்த்தி நெடுந்தீவில் இருந்து கொண்டு வரப்பட்டது. பரிவார மூர்த்திகளாக ஸ்ரீ நடராஜர், முருகன், வைரவர், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் மூன்று காலப் பூசை உண்டு.

மகோற்சவம் வைகாசியில் நடைபெறுகின்றது. மாத உற்சவம் சதுர்த்தித் திதியில் மாதாமாதம் நடைபெறும். நடேசர் அபிஷேகம் ஆறும் இடம்பெறும். பிள்ளையார் பெருங்கதையும் படிக்கப்பட்டு விசேட பூசைகள் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

## பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையார் கோவில்
## புளியங்கூடல், வேலணை

300 வருடங்களுக்கு முற்பட்டது. மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் சந்தான கோபாலர், வைரவர். தினமும் மூன்று காலப் பூசை. பத்து நாட்கள் திருவிழா நடைபெற்று வைகாசிப் பூரணைக்குத் தீர்த்தம் இடம்பெறும். பிள்ளையார் பெருங் கதை போன்ற விசேட தினங்களில் விசேட பூசைகள் உள.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

## ஶ்ரீ சித்தி விநாயகர் கோவில்
## பெருங்காடு, புங்குடுதீவு.

மூலமூர்த்தி—பிள்ளையார். பரிவார மூர்த்திகள்—கிருஷ்ணர், வைர வர், பத்திரகாளி, முருகன், சந்தானகோபாலர் ஆகியோர். காலை, மாலை பூசை. சித்திரை வருடப் பிறப்பன்று தேர் நடைபெறக் கூடியவாறு பத்து நாட்களுக்குத் திருவிழா. விசேட தினங்களில் விசேட பூசைகள். மாணவர்களுக்குச் சமயக் கல்வியும் போதிக்கப் படுகின்றது. மாதச் சதுர்த்தியிலும், ஆவணிச் சதுர்த்தியிலும் திருவிழா சிறப்புற நடைபெறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

## ஶ்ரீ சித்தி விநாயகர் கோவில்
## இலந்தைக்காடு வேலணை கிழக்கு, வேலணை - 5.

மூலமூர்த்தி — ஶ்ரீ சித்திவிநாயகர். பரிவாரமூர்த்திகள் — வைர வர், லட்சுமி, நவக்கிரகம், முருகன். தினமும் நான்கு காலப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆவணிமாதப் பூர்வபட்சத்தில் கொடியேற்றத் திருவிழா நடந்து 10, 11 ஆம் நாட்களில் முறையே தேர், தீர்த்தத் திருவிழாக்கள் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

### வெள்ளைப்புற்றடி விநாயகர் கோவில்
### மண்கும்பான், அல்லைப்பிட்டி

மூலவரோடு, பரிவார மூர்த்திகளாக வைரவர், நாகதம்பிரான் ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் மூன்று காலப் பூசை. பங்குனியில் மகோற்சவம் பத்துத் தினங்களுக்கு நடைபெற்று, சித்திரை வருடப்பிறப்பன்று தேர்த்திருவிழாவும் அதனை அடுத்துத் தீர்த்தமும் இடம்பெறுகின்றது. பிள்ளையார் கதை படிக்கப்பட்டு அத்தினங்களில் விசேட பூசைகளும் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

### திருவெண்காடு சித்திவிநாயகர் கோவில்
### மண்டைதீவு.

இங்கு மூலவர் ஸ்ரீ சித்தி விக்நேஸ்வரப் பெருமான் ஆவர். சிவகாம சுந்தரியுடன் ஸ்ரீ நடராஜர், பாலசுப்பிரமணியர், சனீஸ்வரன், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகளும் இங்கு உளர். தினமும் மூன்று காலப் பூசை நடைபெறுகின்றது. இவ்வாலயத்தின் மகோற்சவம் ஆவணிப் பூர்வபக்க சஷ்டித்திதியில் ஆரம்பித்துப் பௌர்ணமியில் தீர்த்தோற்சவத்துடன் முடிவுறும். ஆனி உத்தரம், மார்கழித் திருவாதிரை ஆகியன இங்கு மிகமுக்கிய தினங்கள் ஆகும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

### ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோவில்
### அரியநாயகன்புலம் புங்குடுதீவு - 6.

மூலமூர்த்தியான பிள்ளையாரோடு முருகனும், சண்டேஸ்வரரும் இங்கு உளர். தினமும் மூன்று காலப் பூசைகள் உண்டு. தைப்பூசத்தைத் தீர்த்தமாகக் கொண்டு, முன்னைய ஒன்பது தினங்களும் மகோற்சவம் நடைபெறுகின்றது. விநாயகர் விரத காலங்களில் இலட்சார்ச்சனை இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

### சங்கரமூர்த்தி முருகமூர்த்தி கோவில்
### 12 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

மூலவர் – விநாயகர். வைரவர், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகள் பரிவாரத்திலே உளர். தினமும் மூன்று காலப் பூசை. மாசி மகத்தைத் தீர்த்த தினமாகக் கொண்டு முதற் பத்துத் தினங்களும் மகோற்சவம் நடைபெறும். சமய வகுப்பு, சமய அறிவுப் போட்டி, என்பவற்றில் சித்தியடைந்தவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

### கிராஞ்சியம்பதி, கந்தசுவாமியார் கோவில்
### பெருங்காடு, புங்குடுதீவு

ஆலயம் 300 வருடங்களுக்கு மேற்பட்டதாகக் கூறப்படுகிறது. மூலமூர்த்தி—தேவிகள் சகிதமான முருகன். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், வைரவர், சனீஸ்வரன். தினமும் மூன்று காலப் பூசை உளது. வைகாசி விசாகத்திலே தேர்த்திருவிழா வரக்கூடியதாகப் பதினொரு நாட்களுக்கு மகோற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

### ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோவில்
### தாழையம்பதி, வேலணைதெற்கு

மூலமூர்த்தி — வேல். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், வைரவர். தினமும் காலைப் பூசை. கதிர்காமத் தீர்த்தோற்சவத்தன்று மட்டும் அலங்காரத் திருவிழா. தைப்பூசம், சிவராத்திரி, நவராத்திரி, கந்தசஷ்டி, திருவெம்பாவை, திருக்கார்த்திகை முதலிய தினங்களில் விசேட பூசைகள் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

### காட்டுக் கந்தசுவாமி கோவில்
### 5 ஆம் வட்டாரம், நயினாதீவு

மூலமூர்த்தி — வேல். பரிவாரமூர்த்திகள் — சிவலிங்கம், ஆறுமுகசாமி, வள்ளி, தெய்வயானை சமேதரான முத்துக்குமாரசுவாமி. காலை, மாலை பூசை. கந்தசஷ்டி, ஆடிப் பௌர்ணமி, திருவெம்பாவை, தைப்பூசம், வருடப் பிறப்புத் தினங்களில் விசேட பூசை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

## சிற்பனை, முருகமூர்த்தி கோவில்
## வேலணை மேற்கு, வேலணை

சுமார் 250 வருடப் புராதன ஆலயம் என வரலாறு. ஊஞ்சல் பதிகம் உண்டு. மூலமூர்த்தி – பஞ்சலோகத்திலான வேல். பரிவார மூர்த்திகள் – தேவிமாருடன் கூடிய முத்துக்குமாரசுவாமி, விநாயகர், வீரபத்திரர், நாகதம்பிரான், வைரவர். தினமும் மூன்று காலப் பூசை உளது. விசேட தினங்களில் உற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

## முருகமூர்த்தி கோவில்
## மண்கும்பான் மேற்கு, அல்லைப்பிட்டி

மூலமூர்த்தி – வள்ளி தெய்வானை, சமேத சுப்பிரமணியர். பரிவாரமூர்த்திகள் பிள்ளையார், வைரவர். தினமும் இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆனி மாதத்தில் கும்பாபிஷேக தினம் விசேடமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. திருவெம்பாவைத் தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

## அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி கோவில்
## பள்ளம்புலம், சரவணை கிழக்கு,

ஆலயம் சுமார் 200 ஆண்டுகள் தொன்மை வாய்ந்தது. ஆனி மாதத்தில் 10 நாள் அலங்காரத் திருவிழா. தலவிருட்சம் நாவல். ஊஞ்சற் பாடல்கள் உண்டு. ஆறுமுகசுவாமி, வைரவர், வேல், சண்டேஸ்வரர் போன்ற இதர மூர்த்திகளும் உளர்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

## வங்களாவடி, ஸ்ரீ முருகன் கோவில்
## நொச்சிக்காடு, வேலணை

முன்னர் ஞானவைரவர் கோவில் என்றழைக்கப்பட்டது. மூலமூர்த்தி – தேவிகள் சகிதம் முருகன். பரிவாரமூர்த்திகள் – விநாயகர், வைரவர். தினமும் மூன்று காலப் பூசை. ஆடி அமாவாசையைக் கடைசி நாளாகக் கொண்டு பத்து நாட்களுக்கு அலங்காரத் திருவிழா நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

**ஸ்ரீ வழித்துணை வைரவசுவாமி கோவில்
கிழக்குக்காடு, நயினாதீவு 2**

*இது 1920 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட கோவில். மூல மூர்த்தி — வைரவர். சாயரட்சைப் பூசை நடைபெறும். பங்குனி உத்தரத்தன்று பொங்கல்.*

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

**கோட்டான்காடு ஸ்ரீ ஞானவைரவர் கோவில்
சரவணை, வேலணை**

*சுமார் நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆலயம் இது. ஆனி மாதத்தில் பத்து நாட்களுக்கு அலங்கார உற்சவம் நடைபெறுகிறது. நித்திய நைமித்திய பூசைகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

## ஸ்ரீ வீரபத்திர சுவாமி கோவில்
## தம்பகைப்பதி, நயினதீவு வடக்கு, நயினதீவு

இங்கு முன்னர் பெரிய சிவன்கோவில் ஒன்று இருந்ததாகவும், ஒல்லாந்தர் ஆட்சியில் அது அழிக்கப்பட்டபோது அதிலிருந்து காப்பாற்றப்பட்ட வீரபத்திரர் விக்கிரகம்தான் இப்போது மூல மூர்த்தியாக இருக்கிறார். என்பதும் வரலாறு. ஆலயத்தோடு சம் பந்தப்பட்ட வீரவாகு தேவர் பதிகம் இருக்கிறது. பரிவாரமூர்த்தி கள் — அம்பாள், பிள்ளையார், பாலசுப்பிரமணியர், வைரவர் ஆகி யோர். தினமும் ஒரு காலப் பூசை நடைபெறுகிறது. விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும். நவராத் திரி, திருவெம்பாவை, சித்திரா பௌர்ணமி போன்ற தினங் களில் விசேட உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. வைகாசியில் கந்தபுராண படனமும், விசாகத்தில் வேல்பூசையும் அன்னதான மும் நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

## பத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீ வீரபத்திரசுவாமி கோவில்
## 4 ஆம் வட்டாரம், நயினதீவு

சுமார் முன்னூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த கோவில். மூல மூர்த்தி — வீரபத்திரர். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், கந்த சுவாமியார், அம்மன், வைரவர். காலை, மாலை பூசைகள் நடை பெறுகின்றன. சித்திரா பௌர்ணமியில் பொங்கல், வைகாசி மாதத்தில் பெரும் பூசை நடைபெறுகிறது. புரட்டாதி மாதத்தில் மானம்பு விழாவும், மார்கழி மாதத்தில் திருவெம்பாவையும் விசேட உற்சவங்கள்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

## காளியம்மன் கோவில்
## நயினதீவு 5

மூலமூர்த்தி — திரிசூலம். பரிவாரமூர்த்தி — காளியம்மன். நித்தியபூசை. நவராத்திரி; வைகாசி விசாகத் தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. வெள்ளிக்கிழமை களில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

அரிகர புத்திர ஐயனார் கோவில்
வேலணை மேற்கு, வேலணை

காவல் தெய்வமாக இருந்துவரும் ஐயனாருக்கு 1979 இல் மண்டபங்கள் அமைக்கப்பட்டன. வெடியரசன் பூதத்தம்பி, பீமன், காமன் போன்ற சரித்திர நாயகர்களுடன் தொடர்புடைய ஆலயம் என்று கருதப்படுகிறது. இதற்குச் சான்றாக கோவிலிலுள்ள கந்த புராண ஏடு பாதுகாக்கப்பட்டு வருகிறது. மூலமூர்த்தி — ஐயனார், சிலாவிக்கிரகம். வெள்ளிக்கவசம் உண்டு. பரிவாரமூர்த்திகள் — பிள்ளையார், வைரவர். தினமும் மூன்றுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. பங்குனி உத்தரத்தில் அலங்காரத் திருவிழா ஆரம்பமாகிப் பத்துத் தினங்கள் நடைபெறும். சமய அறிவு வளர்க்க கூட்டுப் பிரார்த்தனைகளும் வீதிகளில் பஜனைகள், சமய அறிவுப் போட்டிகள் போன்றவைகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

அருள்மிகு ஐயனார் கோவில்
சரவணை கிழக்கு, வேலணை

இங்கு ஸ்ரீ ஐயனார் இரு தேவியருடனும் வீற்றிருக்கின்றார். தினமும் இரு காலப் பூசைஉண்டு. ஆனி ஒன்பதாம் நாள் அலங்கார உற்சவம் ஆரம்பமாகி ஒன்பது தினங்களுக்கு விழா தொடர்ந்து நடைபெறும். இறுதித் தினத்தில் பொங்கல் விமரிசையாக இடம் பெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

ஸ்ரீ நாகதம்பிரான் கோவில்
வல்லன், புங்குடுதீவு கிழக்கு

இவ்வாலயம் பெரியதம்பிரான் கோவில் எனவும் அழைக்கப்படுகின்றது. இங்கு நாகதம்பிரான், அம்பாள், விநாயகர், பால சுப்பிரமணியர், பெரியதம்பிரான், வைரவர் ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் இருகாலப் பூசை. ஆனியில் அலங்கார உற்சவம் பத்து நாட்களுக்குச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

''கண்ணகை அம்மன் கோவில்''
என வழங்கப்படும்
ஸ்ரீ இராஜராஜேஸ்வரியம்மன் கோவில்
இத்தியடிப்புலம், புங்குடுதீவு

இது சுமார் 130 வருடங்கள் பழமையான ஆலயம். இரை தேடப் போன கால்நடைகள் திரும்பாதபோது அவைகளைத் தேடிச் சென்ற போது அவை ஒரு பேழையைச் சுற்றிப் படுத்திருந்ததாகவும், அதைத் திறந்து பார்த்தபோது அதற்குள்ளிருந்து இந்தக் கண்ணகி சிலை கண்டெடுக்கப்பட்டதாகவும் வரலாறு உளது. மூலமூர்த்தி கண்ணகி. பரிவார மூர்த்திகள் இராஜஇராஜேஸ்வரி, பிள்ளையார், முருகன், பத்திரகாளி, நடராஜர், வைரவர், ஆகியோர் உளர். தினமும் நான்கு காலப்பூசை. விசேட தினங்களில் விசேட பூசையும் உண்டு. ஆடிப்பூரம் இங்கு மிக விசேடமானது.

வருடாந்த உற்சவம் சித்திரை மாதத்தில் 15 நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறும். சித்திரை மாதப் பூரணை தினத்தன்று தேர்த்திருவிழா. வைகாசி விசாகப் பொங்கலும் இங்கு விசேடம். கடற்கரையில் அமைந்துள்ள இந்த ஆலயத்திற்கு அண்மைக் காலத்தில் பெரிய இராஜகோபுரம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வேலணை.

கண்ணகை அம்மன் கோவில்
1 ஆம் வட்டாரம், மண்டைதீவு

ஆலயம் 1942 இல் ஸ்தாபிக்கப்பட்டது. நேர் காவியமும் கண்ணகி நேர் காவியமும், கண்ணகி தோத்திரப் பாடல்களும் உள்ளன. மூலமூர்த்தி—கண்ணகை அம்மன். பரிவார மூர்த்திகள்—பிள்ளையார், முருகன், வைரவர், காத்தவராயர். வருடந்தோறும் ஆனிப் பௌர்ணமி முதல் கிரியைகள் ஆரம்பமாகி காவிய ஏடு வாசித்தல், பொங்கல், தீக்குளித்தல் நடைபெற்று எட்டாம் நாளில் திருவிழா முடிவடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்:காவற்றுறை.

## ஈழத்துச் சிதம்பரம்
## (காரைநகர்ச் சிவன் கோவில்)
## காரைநகர்

ஆலயம் சுமார் 160 ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டது. தமிழகத்திலுள்ள சிதம்பர நடராஜர் ஆலயம் போன்று இங்கு ஈழத்துச் சிதம்பரம் அமைந்துள்ளது. சிதம்பரத்தைப் போலவே இங்கு விழாக்களும், வழிபாடுகளும் நடைபெறுகின்றன. ''ஈழத்துச் சிதம்பர புராணம்'' புலவர்மணி இளமுருகனாரால் பாடப்பட்டுள்ளது. திருவெம்பாவை விழா தில்லையில் நடைபெறுவதை ஞாபகமூட்டும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் ஒன்பதாம் நாளில் நடைபெறும் தேர்த் திருவிழாவில் ஐந்து தேர்கள் வீதி வலம் வருகின்றன. தினமும் நான்கு காலப்பூசை உண்டு. சிவன் திருவிழா பங்குனி உத்தரத்திற்கும் அம்மன் திருவிழா ஆடிப்பூரத்திற்கும் முறையே பத்து நாட்களுக்கு நடைபெறும். மார்கழித் திருவாதிரை அபிஷேகம் மிகச் சிறப்பு வாய்ந்தது. இங்கு நடேசர், தத்துவார்த்தப் பிரகாரம் அமைந்துள்ளார். ஆலயத்திற்கு மூன்று பிரகாரங்கள் உண்டு.

இந்த ஆலயத்திலுள்ள ஐயனார் மிகக் கீர்த்தி வாய்ந்த மூர்த்தியாகும். மூலமூர்த்தி — ஸ்ரீ சுந்தரேசர், அம்பாள் — சௌந்தராம்பிகை. தைப்பூசம், மாசிமக விழா, ஆடிப்பூரம், ஆவணிச் சதுர்த்தி, நவராத்திரி, கார்த்திகைத் திருவிழாக்கள் விசேடமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. ஆலய மூர்த்தி மீது எழுந்துள்ள நூல்களுள் ''ஈழத்துச் சிதம்பர புராணம்'', ''திண்ணபுர அந்தாதி'' ''திண்ணபுர வெண்பா'', ''திண்ணபுரப்பதிகம்'', ''ஈழத்துச் சிதம்பரம்'', ''திண்ணபுர திருச்சதகம்'', ''திண்ணபுர ஊஞ்சல்'' என்பன சில. தலவிருட்சங்கள் வன்னி, அரசு, இலுப்பை. ஆண்டுதோறும் மணிவாசகர் விழா மார்கழி மாதத்தில் நடைபெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

## புளியந்தீவு ஸ்ரீ நாகேஸ்வரன் கோவில்
## அனலைதீவு

ஒல்லாந்தர் காலத்திற்கு முற்பட்டது. இவ்வாலயத்திலிருந்து நயினாதீவு நாகபூசணி அம்மனுக்கு நாகம் பூக்கொண்டு போனதாக வரலாறுகள் கூறுகின்றன. மூலஸ்தான லிங்கம் நாகேஸ்வரன் என்னும் நாமத்தால் அழைக்கப்படுகிறது: பிள்ளையார், சந்திர சேகரர், சோமாஸ்கந்தமூர்த்தி, நடேசர், சிவகாமியம்பாள், சனீஸ் வரபகவான், வைரவர் ஆகியோர் பரிவாரமூர்த்திகள். தினமும் மூன்று காலப்பூசை. திருவெம்பாவை பத்து நாட்களும், அலங்கார உற்சவங்கள் நடைபெற்றுவருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

## கணபதீஸ்வரம் சிவன் கோவில்
## சுருவில் வீதி, ஊர்காவற்றுறை

மூலமூர்த்தி – சிவன். பரிவாரமூர்த்திகள் – பிள்ளையார், முருகன் மகாவிஷ்ணு, லட்சுமி, வைரவர், நவக்கிரகம். தினமும் ஐந்து காலப் பூசை. வருடாவருடம் ஆனி மாதம் பதினைந்து நாட் களுக்குத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. சிவனுக்குரிய தினங் களில் விசேட பூசைகள் நடைபெறும். சித்திர வேலைப்பாடுடைய தேரும் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

## ஸ்ரீ கும்பநாயகி அம்மன் கோவில்
## மணற்காடு, காரைநகர்

இவ்வாலயம் குளக்கோட்டு அரசனால் கட்டப்பட்டதாக வரலாறு உண்டு. தினமும் ஆறுகாலப் பூசை. பங்குனி அமாவாசைக்குத் தீர்த்தம் வரக்கூடியதாகப் பதினைந்து நாட் திருவிழா நடைபெறு கின்றது. மாதாமாதம் பூரணை விழாக்கள், விசேட பூசை வழி பாடுகள் நடைபெறுகின்றன. அபிராமிப்பட்டர் விழாவும் நடை பெற்றுவருகிறது. கோவில் பற்றிய பாடல்கள் உள்ளன. ஈழத்துச் சிதம்பர புராணத்தில் வரலாறுகள் உண்டு. மூலமூர்த்தி—அம்பாள். பரிவார மூர்த்திகள் – பிள்ளையார், முருகன். தினமும் அபிராமி அந்தாதி படிக்கப்பட்டும் வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

**ஸ்ரீ கௌரியம்பாள் கோவில்**
**துறைமுகம், அனலைதீவு**

போர்த்துக்கீசர் காலத்தில் அழிக்கப்பட்ட ஆலயங்களில் இதுவு மொன்ருகக் கருதப்படுகிறது. தினமும் சாயரட்சைப் பூசை நடை பெற்று வருகிறது. வருடாந்தப் பொங்கல், சித்திரைக்கஞ்சி ஆகிய காலங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும். கூட்டுப் பிரார்த்தனை, குடிநீர் விநியோகம் போன்ற சேவைகளும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

**ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் கோவில்**
**பலகாடு, காரைநகர்**

மூலமூர்த்தியாகிய அம்பாளோடு பிள்ளையார், வேல், வைரவர் ஆகிய மூர்த்திகளும் ஆலயத்தில் உள. தினமும் இருகாலப் பூசை. ஆடிப் பூரத்தை இறுதியாகக் கொண்டு முதற் பத்துத் தினங்களும் அலங்கார உற்சவம் நடைபெறுகின்றது. இவ்வாலயம் போர்த்துக் கேயர் காலத்தில் அழிவுற்றுப் பின்னர் புனரமைப்புச் செய்யப் பட்டது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

**ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் கோவில்**
**அனலைதீவு 4**

அம்பாள் தான்தோன்றி மூர்த்தி. தினமும் மூன்றுகாலப் பூசை. புரட்டாதி மாதம் அலங்காரத் திருவிழா பத்து நாட்களுக்கு நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

**ஸ்ரீ எழுமங்கை நாச்சிமார் அம்பாள் கோவில்**
**6 ஆம் வட்டாரம், அனலைதீவு**

அம்பாள் தான்தோன்றி மூர்த்தி. மனோன்மணியம்பாள் என்றும் அழைப்பர். தினமும் இருகாலப் பூசை. நவராத்திரி விழா நாட் களில் அலங்கார உற்சவம். கேதார கௌரி விரதம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

## மருதடி, ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோவில்
## காரைநகர் வடக்கு

*1750 இல் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூலமூர்த்தி மூலஸ்தானத்திலே வீற்றிருக்கின்றார். சுப்பிரமணியர், நாகேஸ்வரி, சந்தானகோபாலர், வைரவர் ஆகிய பரிவாரமூர்த்திகள் இங்கு உளர். இங்கு தினமும் இரண்டு காலப்பூசை நடைபெறுகின்றது. தல விருட்சம் மருதமரம். வருடப்பிறப்பு, ஆவணிச்சதுர்த்தி, விநாயகர்சஷ்டி, மணவாளக்கோலவிழா ஆகிய நாட்களில் உற்சவங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. பெரியபுராணம், திருவாதவூரடிகள் புராணம் ஆகியன இங்கு படிக்கப்பட்டு வருகின்றன.*

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

## கரப்பிட்டியங்களை, விக்நேஸ்வரர் கோவில்
## களபூமி, காரைநகர்

*மூலமூர்த்தி — விநாயகர். காலையும் மாலையும் பூசை நடைபெறும். சித்திரை மாதத்தில் மணவாளக் கோலத் திருவிழா. ஆவணி மாதத்தில் பெருங்கதையும், சித்திரை மாதத்தில் சித்திரைக் கதையும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.*

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

## சித்திரகூட ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
## துறைமுகம், காரைநகர்

*ஆலயம் பழமை வாய்ந்தது. துறைமுக சித்திரகூட சித்திவிநாயகர் என்றும் அழைப்பதுண்டு. மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — சனீஸ்வரன், வைரவர். தினமும் இருகாலப் பூசை. ஆனி உத்தரத்துக்குத் தீர்த்தம் நடைபெறக் கூடியவாறு பத்துத் தினங்களுக்கு உற்சவம் உளது. தைப்பொங்கல், நவராத்திரி, சிவராத்திரி, திருவெம்பாவை, சதுர்த்தித் திருவிழாக்கள் விசேடமாக நடைபெற்று வருகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

### ஸ்ரீ முத்து விநாயகர் கோவில்
### இந்தன், நாரந்தனை, ஊர்காவற்றுறை

பாடல்களும், ஊஞ்சற் பதிகமும் உண்டு. மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்தி — வைரவர். தினமும் மூன்று காலப் பூசை உண்டு. சித்திரா பௌர்ணமி கழிந்த ஆறும் நாள் கொடியேறி, உற்சவம் நடைபெற்று அமாவாசையன்று தீர்த்தோற்சவம் நடைபெறும். தேவார வகுப்புக்களும் சமய அறிவுப் போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

### ஸ்ரீ சங்கரநாதர் கணபதிப்பிள்ளையார் கோவில்
### அரசன்புலம், அனலைதீவு

மூலமூர்த்தி — பிள்ளையார். தினமும் மூன்றுகாலப் பூசை. வருடாந்த மகோற்சவம் ஆனி உத்தரத்தன்று தீர்த்தோற்சவம் நடக்கக் கூடியதாக பத்து நாட்களுக்கு நடைபெறும். பெருங்கதை, சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

### ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில்
### கர்ணந் தோட்டம், நாரந்தனை,
### சரவணை

ஏறத்தாழ 250 வருடங்களுக்கு முற்பட்டது. பிள்ளையார், வைரவர், மனோன்மணி, சந்திரசேகரர் ஆகியோர் ஏனைய மூர்த்திகள். தினமும் மூன்று காலப் பூசை. வைகாசிப் பூரணைக்குத் தீர்த்தம் நடைபெறக் கூடியதாகப் பன்னிரண்டு நாட்களுக்குத் திருவிழா நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

### பயிரிக்கூடல் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில்
### பயிரிக்கூடல், காரைநகர்

நித்திய பூசை உண்டு. ஆலயம் மிகவும் பழமை வாய்ந்தது. விசேட தினங்களில் விசேட பூசைகள் உண்டு. தலவிருட்சம் நாவல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

## வேரப்பிட்டி முருகமூர்த்தி கோவில்
ஊர்காவற்றுறை

மூலமூர்த்தி — முருகன். பரிவாரமூர்த்திகள் — விநாயகர், வைரவர், அம்பாள். தினமும் காலை மாலைப் பூசை உண்டு. ஆடி மாதத்தில் வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

## ஸ்ரீ முருகமூர்த்தி கோவில்
கரம்பன் மேற்கு

1800 ஆம் ஆண்டளவில் ஸ்தாபிக்கப்பட்டது. மூலஸ்தானத்தில் ''வேல்''. பரிவார மூர்த்திகள் — ஆறுமுகசுவாமி, முருகன், வைரவர், பிள்ளையார். தினமும் நான்கு காலப் பூசை. ஆடி அமாவாசைக்குத் தீர்த்தத் திருவிழா நடைபெறக்கூடியதாகப் பன்னிரண்டு நாட்களுக்கு முன்னர் கொடியேற்றம் நடைபெற்றுத் தீர்த்தோற்சவத்துடன் மகோற்சவம் முடிவுறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

## ஸ்ரீ கதிரேசன் கோவில்
பருத்தியடைப்பு, ஊர்காவற்றுறை

மூலமூர்த்தி — வேல். பரிவாரமூர்த்திகள் — அம்பாள் சகிதம் சுப்பிரமணியர், பிள்ளையார், வைரவர், சனீஸ்வரன். தினமும் மூன்று காலப் பூசை. ஆடி மாதத்தில் அலங்காரத் திருவிழா பத்து நாட்களுக்கு நடைபெறும். நவராத்திரி, சிவராத்திரி, கந்தசஷ்டி, திருவெம்பாவை ஆகிய விசேட தினங்களில் விசேட பூசைகள் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

## அருள்மிகு ஸ்ரீ முருகன் கோவில்
## முத்தன்காடு, எழுவைதீவு

மூலமூர்த்தி — வேல். பரிவாரமூர்த்திகள் — ஆறுமுகசுவாமி, விநாயகர், வைரவர், சண்டேஸ்வரர். தினமும் மூன்று காலப் பூசை, பங்குனி உத்தரத்தன்று அலங்கார உற்சவம். வைகாசி விசாகத்தன்று சங்காபிஷேகம். நவராத்திரி, சிவராத்திரி, பொங்கல், கந்தசஷ்டி, திருவெம்பாவை போன்ற தினங்களில் விசேட பூசை. கூட்டுப் பிரார்த்தனையும் சமயச் சொற்பொழிவுகளும் நடத்தப்பட்டு வருகின்றன. வைகாசி விசாகத்தன்று சங்காபிஷேகமும் ஊஞ்சலும் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

## ஸ்ரீ சங்கரநாதர் முருகமூர்த்தி கோவில்
## 6 ஆம் வட்டாரம், அனலைதீவு

மூலவரோடு இவ்வாலயத்தில் பிள்ளையார், முத்துக்குமார சுவாமி, தண்டாயுதபாணி, வைரவர் ஆகிய மூர்த்திகளும் உள. தினமும் மூன்று காலப் பூசை. வருடாவருடம் கந்தசஷ்டித் திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

## ஸ்ரீ சிவஞான வைரவர் கோவில்
## மாத்தோட்டை, இமையாணன் வடக்கு,
## உடுப்பிட்டி

200 வருடங்களுக்கு முன்னர் திருவானைக்காவிலிருந்து கொண்டு வரப்பட்ட மூலமூர்த்தி சிவஞானவைரவர். பரிவாரமூர்த்திகள் — விநாயகர், சுப்பிரமணியர், நாகதம்பிரான், காளியம்மன். தினமும் இரு காலப் பூசை. சித்திரையிற் பத்து நாட்கள் அலங்கார உற்சவம். இவை பௌர்ணமியில் தீர்த்தத்துடன் முடிவடையும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

### ஸ்ரீ தான்தோன்றி வைரவர் கோவில்
### சரவணை மேற்கு, சரவணை

மூலமூர்த்தி – சூலம். தினமும் காலையில் ஒரு நேரப் பூசை. திருவெம்பாவை, நவராத்திரி விழா, ஐப்பசி வெள்ளி, தைப் பொங்கல் ஆகிய காலங்களில் விசேட பூசைகள் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

### சிதம்பர மூர்த்தி கேணி வைரவர் கோவில்
### காரைநகர்

1913 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. 1916 ஆம் ஆண்டில் தேவஸ்தான திருப்பணி நடைபெற்றது. பின்னரும் காலத்துக்குக் காலம் திருப்பணி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. 1976 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து தினமும் சாயரட்சைப் பூசை நடைபெற்று வருகிறது. ஓணத்தின் போதும் திருவெம்பாவைக் காலத்திலும் விசேட பூசைகள் நடை பெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

### கடைவைரவர் கோவில்
### 2 ஆம் வட்டாரம், எழுவைதீவு

மூலமூர்த்தி – சூலம். தினமும் மாலையில் பூசை நடைபெறும். வைகாசி விசாக தினத்திற் பொங்கல் இடம்பெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

### ஆலவிருட்சம் ஸ்ரீ ஞானவீரபத்திரர் கோவில்
### 2 ஆம் வட்டாரம், எழுவைதீவு

மூலமூர்த்தி – ஸ்ரீ வீரபத்திரரும், சூலமும். தினமும் மாலையில் ஒரு காலப் பூசை. சித்திரா பூரணை, திருவெம்பாவை முதலிய நாட்களில் விசேட அபிஷேகங்கள் நடைபெறும். வைகாசி முதற் திங்களில் வருடாந்தப் பொங்கல். மார்கழித் திருவெம்பாவைத் தினங்களில் விசேட அபிஷேகம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

### ஸ்ரீ ஐயனார் கோவில்
### சுருவில், ஊர்காவற்றுறை

மூலமூர்த்தி — பூரணை, புஷ்கலை சமேத ஐயனார். பரிவார மூர்த்திகள் — நடேசர், பிள்ளையார், சுப்பிரமணியர், வைரவர் ஆகியோர். தினமும் நான்கு காலப் பூசை. ஆனி மாதம் கொடி யேறிப் பத்து நாட்களுக்குத் திருவிழா நடைபெறும். குருபூசைகள், கூட்டுப் பிரார்த்தனை, தேவார வகுப்புகள் நடத்தப்பட்டு வரு கின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

### ஐயனார் கோவில்
### 5 ஆம் வட்டாரம், அனலைதீவு

தினமும் மூன்று காலப் பூசை. வருடாவருடம் ஆடிப்பூரத்தில் கொடியேற்றம் நடைபெற்று, ஆடிப் பௌர்ணமிக்கு தேர், தீர்த் தோற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

### வியாவில் ஐயனார் கோவில்
### வியாவில், காரைநகர்

மூலமூர்த்தி - ஐயனார். பரிவாரமூர்த்திகளும் உளர். ஆனி மாதத்தில் சுவாதி நட்சத்திரத்தை அந்தமாகக் கொண்டு மகோற் சவம் நடைபெறுகிறது. தல விருட்சம் வாகை. குளக்கோட்டு மன்னன் காலத்தையது. ஈழத்துச் சிதம்பர புராணத்தில் இக் கோவிலைப் பற்றிய பாக்கள் உள.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

### ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோவில்
### அனலைதீவு 2

50 வருடங்களுக்கு முற்பட்ட ஆலயமெனக் கூறப்படுகிறது. காலை, மாலை இருகாலப் பூசை. விசேட நாட்களில் விசேட பூசைகள் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

### ஸ்ரீ மகாமாரியம்மன் கோவில்
### புளியங்கூடல், ஊர்காவற்றுறை

இவ்வாலயம் நூறு வருடங்களுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டது. தினமும் ஐந்து காலப் பூசை. வருடாவருடம் வைகாசி மாதம் இறுதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் உற்சவம் ஆரம்பமாகிப் பத்து நாட்களுக்கு நடைபெறும். மூலமூர்த்தி — மகாமாரியம்மன். பரிவாரமூர்த்திகள் — விநாயகர், சுப்பிரமணியர், நவக்கிரகம், வைரவர். சமய அறிவுப் போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
ஊர்காவற்றுறை.

### கண்ணகை அம்மன் கோவில்
### வலந்தலை, காரைநகர்

1725 ஆம் ஆண்டளவில் ஸ்தாபிக்கப்பட்டது. பழம் பெருமை வாய்ந்தது. ஏட்டுச் சுவடிகளும், ஆவணங்களும் உண்டு. மூலமூர்த்தி சந்தன மரத்திலான கண்ணகை அம்மன். வைரவரும் உண்டு. தினமும் இருகாலப் பூசை நடைபெற்று வருகிறது. வருடாவருடம் சித்திரை வருடப்பிறப்பை அடுத்து வரும் முதல் வெள்ளிக்கிழமை கும்பம் வைத்து விளக்கேற்றி ஒன்பதாம் நாட் திருவிழா நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நெடுந்தீவு.

### நெழுவினி சித்திவிநாயகர் கோவில்
### நெடுந்தீவு மேற்கு, நயினாதீவு

போர்த்துக்கீசர் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்து குடியேறிய மக்களால் மூலமூர்த்தி கொண்டுவரப்பட்டு ஆலயம் தாபிக்கப்பட்டதாக வரலாறு. அக்காலத்திலிருந்தே பெரியதுறை என்ற துறைமுகத்துடன் தொடர்புடையதாக இருந்துவந்திருக்கிறது. இத்துறைமுகத்திலிருந்து இந்தியாவின் இராமேஸ்வரம் போன்ற புனிதத்தலங்களுக்குப் பூவும், பாலும் அனுப்பப்பட்டு வந்ததாக வரலாறு உண்டு. இத்தொடர்புடைய மக்கள் இந்தியாவிலிருந்து இலிங்கத்தைக் கொண்டுவந்து வழிபட்டதாகவும், போர்த்துக்கீசர் காலத்தில் ஏற்பட்ட கலவரங்களின்போது மறைத்து வைத்ததாகவும் அறியக்கூடியதாக இருக்கிறது. இவ்வாலயத்தில் ஐநூறு ஆண்டுகளுக்கு மேலாக உற்சவம் மகோற்சவம் நடைபெற்று வருகிறது. கல்வெட்டுக்கள், சாசனப் பாடல்கள் ஆகியனவும் உள்ளன. விநாயகருக்கு என்று எழுதப் பட்ட உறுதிகள், ஊஞ்சல் பாடல்கள் என்பனவும் உண்டு. மூலமூர்த்தி — விநாயகர். பரிவாரமூர்த்திகள் — வைரவர், சுப்பிரமணியர், சண்டேசுவரர். நாயன்மாருடைய விக்கிரகங்களும் பூசைக்கு வைக்கப்பட்டுள்ளன. தினமும் மூன்றுகாலப் பூசை நடைபெறும். ஆவணிச் சதுர்த்தி போன்ற தினங்களில் அபிஷேகங்களும் அன்னதானமும் நடைபெறும். மாதச் சதுர்த்தி, சிவராத்திரி போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்றுவருகின்றன. பங்குனி இருபத்திரண்டாந் திகதி கொடியேறி சித்திரை வருடப்பிறப்பன்று தீர்த்தோற்சவததுடன் திருவிழா முடிவுறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நெடுந்தீவு.

### பெருக்கடி ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
### 9 ஆம் வட்டாரம், நெடுந்தீவு மத்தி,
### நெடுந்தீவு

இவ்வாலயத்தின் மூலமூர்த்தி இந்தியாவில் வேதாரணியத் திருப்பதியிலிருந்து தருவிக்கப்பட்டவர் ஆவர். தினமும் ஒரு காலப் பூசை நடைபெறுகிறது. விநாயகசஷ்டி, திருவாதிரை, சிவராத்திரி, போன்ற விசேட தினங்களில் கூட்டுப் பிரார்த்தனையும், புராண படனமும் நடைபெற்று வருகின்றது. மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — வேல், வைரவர். நாவலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்களால் பாடப்பட்ட திருவூஞ்சல் பாக்களும் இங்கு உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நெடுந்தீவு.

### ஸ்ரீ வீரபத்திரப் பிள்ளையார் கோவில்
### மாவலித்துறை, நெடுந்தீவு கிழக்கு

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற் பழமை வாய்ந்த ஆலயம். நெடுந்தீவை ஒரு காலத்தில் ஆண்ட சிற்றரசன் வீகாமன் என்பவரால் இவ்வாலயம் அமைக்கப்பட்டதாகச் சரித்திரம் கூறுகிறது. மூலமூர்த்தி — விநாயகர். நித்திய பூசை உண்டு. திருவெம்பாவைக் காலத்தில் கொடியேறி தேர்தீர்த்தத் திருவிழாவோடு உற்சவம் முடிவடையும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நெடுந்தீவு.

### கரமத்தைக் கந்தசுவாமி கோவில்
### கரமத்தை 4 ஆம் வட்டாரம், நெடுந்தீவு

மூலமூர்த்தி — வேல். பரிவாரமூர்த்திகள் — பிள்ளையார், முத்துக்குமாரசுவாமி, ஆறுமுகசுவாமி, வைரவர், நவக்கிரகங்கள். தினமும் மூன்று காலப் பூசை உண்டு. வருடாந்த உற்சவம் மாசி மகத்தையொட்டி நடைபெறும். திருக்கார்த்திகை, கந்தசஷ்டி, நவராத்திரி போன்ற காலங்களில் விசேட பூசைகள் நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நெடுந்தீவு.

### ஸ்ரீ முத்துமாரியம்பாள் கோவில்
### 5 ஆம் வட்டாரம், நெடுந்தீவு

மூலமூர்த்தி — அம்பாள். பரிவாரமூர்த்தி — வைரவர். நித்திய பூசை உண்டு. ஆனியிற் பொங்கல்விழா நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நெடுந்தீவு.

### ஸ்ரீ காளிஅம்பாள் கோவில்
### மெலிஞ்சியம்பதி, 4 ஆம் வட்டாரம், நெடுந்தீவு

மூலமூர்த்தி — அம்பாள். பரிவாரமூர்த்திகள் — பிள்ளையார், அம்பாள். தினமும் இருகாலப் பூசை உண்டு. ஆடி அமாவாசையன்று தீர்த்தம் நடைபெறும். சிவராத்திரி, நவராத்திரி ஆகிய தினங்களில் விசேட வழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன. வெள்ளி தோறும் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
நெடுந்தீவு.

ஸ்ரீ பிடாரி அம்மன் கோவில்
திருக்கோயிலுக்காடு, 1 ஆம் வட்டாரம், நெடுந்தீவு

மூலமூர்த்தி — அம்பாள். பரிவார மூர்த்தி — வைரவர். நித்திய பூசை உண்டு. நவராத்திரி, திருவெம்பாவை, சித்திரா பூரணை போன்ற நாட்களில் இங்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

ஸ்ரீ விசாலாட்சி சமேத காசிவிஸ்வநாதர் கோவில்
வட்டுக்கோட்டை

தினமும் ஆறு காலப் பூசைகள் நடைபெறுகின்றன. காசியிலிருந்து கொண்டு வரப்பட்ட பாணலிங்கம் மூலமூர்த்தியாக இருக்கிறார். ஆனி உத்தரத்தையொட்டி மகோற்சவம் நடைபெறுகிறது. பரிவாரமூர்த்திகளும் பஞ்சலிங்கம், தட்சணாமூர்த்தி மற்றும் கோஷ்டவிக்கிரங்களும் இடம்பெற்றுள்ளன. விசேட தினங்களைத் தவிர மார்கழி மாத விசேட உற்சவங்களும் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

ஓடையம்பதி, வாலாம்பிகா சமேத
வைத்தீஸ்வரசுவாமி கோவில்

மூலமூர்த்தி — வாலாம்பிகா சமேத.வைத்தீஸ்வர சுவாமி. பரிவாரமூர்த்திகள் — வைரவர், விநாயகர். தினமும் இருகாலப் பூசை. சித்திரைக் கும்பாபிஷேக தினம், மார்கழித் திருவெம்பாவை ஆகிய காலங்களில் உற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

ஸ்ரீ கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் கோவில்
வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை

மூலமூர்த்தி — சிவன். அம்பாள் பெயர் — கண்ணகாம்பிகை அம்பாள், பரிவாரமூர்த்திகள் — பிள்ளையார், நடேசர். தினமும் இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆனி மாதத்தில் கொடியேறித் திருவிழாக்கள் பத்துத் தினங்களுக்கு நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### ஸ்ரீ மங்களாம்பிகா சமேத மகாலிங்கேசுவர சுவாமி கோவில், தெக்கணப்பாய், சங்கானை

மூலமூர்த்தி — பிள்ளையார், சிவன், அம்பாள், பரிராமூர்த்திகள் — நடராசர். நவக்கிரகம். தினமும் மூன்று காலப் பூசைகள் உண்டு. நடேசர் உற்சவம், ஸ்ரீ சக்ரபூசை, பிரதோஷ பூசை ஆகியன சிறப்பாக நடைபெறுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### ஸ்ரீ ராஜேஸ்வரி அம்பாள் கோவில் கம்பனை, சுழிபுரம்

தினமும் இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. நவராத்திரி, மார்கழித் திருவெம்பாவை, மணவாளக்கோல விழா போன்றவை விசேடமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### ஸ்ரீ வாலையம்பாள் கோவில் அராலி கிழக்கு, அராலி

மூலமூர்த்தி — அம்பாள். பரிவாரமூர்த்திகள் — வைரவர், காத்தவராயர் ஆகியோர். தினமும் இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. தைப்பொங்கல், மகாசிவராத்திரி, சித்திராபூரணை, திருவெம்பாவை ஆகிய தினங்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### ஆகாயக்குளம் பிள்ளையார் கோவில்
### அராலி தெற்கு, அராலி

இது மிகப் பழமை வாய்ந்த கோவில். ஆகாயன் என்ற அரசன் இக்கோவிலின் பக்கத்தில் ஒரு குளத்தைக் கட்டினான். அவனது பெயரை நினைவூட்டும் வகையில் ஆகாயக் குளம் என்ற பெயர் இடப்பட்டதாகவும் ஆலயத்திற்கும் அதே பெயரை வைத்து அழைத்ததாகவும் கர்ண பரம்பரைக் கதை உண்டு. டச்சுக்காரர் காலத்தில் அழிவுறாமல் தவிர்க்கப்பட்ட ஆலயங்களில் இதுவும் ஒன்று எனக் கூறப்படுகிறது. மாதாவின் கோவில் எனவும் அழைக் கப்பட்டு வருகிறது. இப்பெயர் இன்றும் கிராமத்தவர் மத்தியில் பிரபல்யமாக இருந்து வருகிறது. நித்திய நைமித்திய பூசைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சித்திரா பௌர்ணமி அன்று தீர்த்த உற்சவத்துடன் மகோற்சவம் முடிவடைகிறது. திருவெம் பாவை, சிவராத்திரி, நவராத்திரி, கந்தசஷ்டி, பிள்ளையார் கதை போன்றவை விசேட தினங்களாகும். புராணம் படிக்கும் வழக்கம் இன்றும் இங்கு இருந்து வருகிறது. விநாயகர் புராணம், திருச் செந்தூர்ப் புராணம் படிக்கப்பட்டு வருகின்றன. கந்த புராணப் படிப்பு தைப்பொங்கல் தினத்தன்று ஆரம்பமாகி பங்குனி உத் தரத்தன்று பூர்த்தியாகும்.

சமய குரவர்களதும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரதும் குருபூசைகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### பருளாய், ஈஸ்வர விநாயகர் கோவில்
### உக்காலை, சுழிபுரம், சங்கானை

தினமும் இரண்டு காலப் பூசைகள் நடைபெறுகின்றன. பரிவார மூர்த்திகள் — ஐந்துமுகப்பிள்ளையார், இராஜராஜேஸ்வரி, வைரவர், சண்டேஸ்வரர் ஆகியோர், ஆனி மாதத்தில் வருடாந்த உற்சவம் பன்னிரண்டு தினங்கள் நடைபெறும். ஆனி உத்தரத்தன்று தீர்த்தம். விநாயகர் பேரில் ''பருளை விநாயகர் பள்ளு'' பாடல்கள் உள்ளன. சித்திரத்தேரும் உளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

## துணவி அரசடி விநாயகர் கோவில்
சங்கானை

மூலமூர்த்தி — விநாயகர். பரிவாரமூர்த்திகள் — வைரவர், சனீஸ்வரன், சுப்பிரமணியர் ஆகியோர். தினமும் மூன்று காலப்பூசை உளது. ஆனி மாதத்தில் வருடாந்த உற்சவம் நடைபெறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

## அத்தியடி விநாயகர் கோவில்
சங்கானை

மூலமூர்த்தி — விநாயகர். பரிவாரமூர்த்தி — வைரவர். நித்திய பூசையும், விசேட தினங்களில் விசேட பூசைகளும் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

## ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் கோவில்
உதருன், அராலி தெற்கு, அராலி

மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்தி — நாக இராஜ இராஜேஸ்வரி. தினமும் இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. வைகாசி மாதத்தில் பத்துத் தினங்களுக்கு அலங்கார உற்சவம் நடைபெற்று வருகிறது. திருவெம்பாவை, தைப்பொங்கல் போன்ற விசேட தினங்களில் விசேட பூசைகள் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

## நொச்சியம்பதி விநாயகர் கோவில்
வலிகாமம் மேற்கு, சங்கானை,

தினமும் மூன்றுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. பரிவார மூர்த்திகள் — வைரவர், முருகன் ஆகியோர். சுமார் இருநூறு வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. பிள்ளையார் கதை, திருவெம்பாவை, விநாயக சதுர்த்தி மற்றும் விநாயகருக்கு விசேடமான தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
### வதிரன்புலோ, மூளாய் வடக்கு, சங்கானை

தினமும் மூன்றுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. பரிவார மூர்த்தி – வைரவர். சித்திரா பௌர்ணமியில் தீர்த்தம் நடைபெறக் கூடியவாறு பதின்மூன்று நாட்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெறுகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோவில்
### அராலி வடக்கு, வட்டுக்கோட்டை

இங்கு பிள்ளையார், வேலாயுதர், நாகதம்பிரான், வைரவர் ஆகிய மூர்த்திகள் உள. தினமும் இருகாலப் பூசை நடைபெறுகின்றது. சித்திரை மாதம் மணவாளக்கோல விழாவும் மாதச் சதுர்த்தி, ஆவணிச் சதுர்த்தி என்பனவும் விசேடமாக நடைபெறுகின்றன.

மாவட்டம்:, யாழ்ப்பாணம்,
சங்கானை.

### சின்னக் கதிர்காமம்
### வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை

மூலவர் – ஆறுமுகசுவாமி. பரிவாரமூர்த்திகள் – பிள்ளையார், வைரவர், நவக்கிரகம். தினமும் இருகாலப் பூசை. வைகாசி விசாகத்தன்று தீர்த்தத் திருவிழா இடம்பெறும். ஆடி மாதத்தில் கதிர்காமத் தீர்த்தத் தினத்தன்று விசேட பூசைகளுடன் கடைக் கஞ்சியும் இடம்பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### அடைக்கலந்தோட்டக் கந்தசுவாமி கோவில்
### வட்டுக்கோட்டை மேற்கு, சங்கானை

மூலமூர்த்தி – வள்ளிதேவசேனு சமேத சுப்பிரமணியர். தினமும் நான்குகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. பரிவார மூர்த்திகள் – விநாயகர், சிதம்பரேஸ்வரர், சனீஸ்வரன், சண்டேஸ்வரர். கார்த்திகை உற்சவம், கந்தசஷ்டி, திருவெம்பாவை, தைப்பூசம், சித்திரை மஞ்சம், பங்குனி உத்தரம், தண்டாயுதபாணி அபிஷேகம், வைகாசி விசாகம், ஆனி அனுஷம், மணவாளக்கோலம், சங்கிராந்தித் தீர்த்தம் ஆகிய உற்சவங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. அடைக்கலக்கோவை, திருவூஞ்சற் பதிகம், கந்தரேசல் ஆகிய பாடல்கள் உள்ளன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### மடத்துப் பிள்ளையார் சுப்பிரமணிய சுவாமி கோவில்
### தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்

இங்கு பிள்ளையார், வேல், வைரவர் ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் இருகாலப் பூசை உண்டு. ஆவணிச் சதுர்த்தியில் தேர் அமையக்கூடியதாக முதற் பத்துத் தினங்களும் மகோற்சவம் நடைபெறும். தைப்பூசத்தன்று அன்னதானம் வழங்கப்படும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### சுரந்தைக்குளவத்தை முருகமூர்த்தி கோவில்
### சங்கரத்தை, வட்டுக்கோட்டை

1800 ஆம் ஆண்டில் வடலிக்கூடலில் காவோலைக்குள் தான் தோன்றீஸ்வரராய்த் தோன்றியவர் மூலவர். சேதுபேரனுர் என்னும் புலவரால் ஊஞ்சற்கவி பாடப்பட்டது. மூலமூர்த்தி – வேல். பரிவார மூர்த்திகள் – பிள்ளையார், ஆறுமுகசுவாமி, வைரவர், முத்துக்குமாரசுவாமி ஆகியோர். தினமும் இருகாலப் பூசைகள் உள. ஆனிமாதத்தில் பத்து நாட்கள் அலங்காரத் திருவிழா நடைபெறும். வசந்த மண்டபத்திற்கு வெளிவாயிலில் பழமை வாய்ந்த தேத்தா மரமும், ஆஞ்சனேயர் கோவிலும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### கந்தசுவாமி கோவில், மயிலற்புலம்
### அராலி வடக்கு, வட்டுக்கோட்டை

மூலமூர்த்தி — தேவியருடன் கூடிய சுப்பிரமணியர். பரிவார மூர்த்திகள் — விநாயகர், அம்பாள், வீரபத்திரர், வைரவர். தினமும் இருகாலப் பூசைகள் உள. வருடாந்த மகோற்சவம் ஆனித் திருவோண நட்சத்திரத்தன்று தீர்த்தம் வரக்கூடியதாகப் பதினொரு தினங்களுக்கு உண்டு. ஆவணியிற் சங்காபிஷேகமும், தை மாதத்தில் குளிர்த்தியும் மார்கழியில் திருமஞ்சனத் தீர்த்தமும் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
### பறாளை, சுழிபுரம்

தினமும் மூன்று காலப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. வைகாசி விசாகத்தன்று தேர்த் திருவிழா இடம்பெறும் வகையில் பன்னிரண்டு நாட்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெறும். பறாளை விநாயகர் பள்ளு, பறாளை முருகன் தோத்திரக் கீர்த்தனங்கள் பாடப்பெற்றுள்ளன. பரிவார மூர்த்திகள் — விநாயகர், வைரவர்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### முருகமூர்த்தி கோவில்
### அராலி வடக்கு, வட்டுக்கோட்டை

மூலமூர்த்தி — இரு தேவியருடனும் கூடிய முருகன். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், அம்பாள், ஆறுமுகசுவாமி, வைரவர் ஆகியோர். தினமும் மூன்று காலப் பூசைகள் உள. வைகாசி விசாக தினத்தன்று தீர்த்த உற்சவம் வரக்கூடியதாக முதற் பதினொரு தினங்களும் மகோற்சவம் நடைபெறும். தை மாதத்தில் அம்பாள் குளிர்த்தியும் வைகாசி, ஆனியில் பொங்கலும்நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### பங்குரு கந்தசுவாமி கோவில்
### வட்டுக்கோட்டை

மூலமூர்த்தி சுப்பிரமணியர். பரிவார மூர்த்திகள் விநாயகர், நாகதம்பிரான். தினமும் இருகாலப் பூசை. வைகாசி மாதத்தில் வருடாந்த உற்சவம் நடைபெறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### விசவத்தனை, முருகமூர்த்தி கோவில்
### பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்

மூலமூர்த்தி — சுப்பிரமணியர். பரிவார மூர்த்திகள் — விநாயகர், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் மூன்று காலப் பூசைகள் நடைபெறுகின்றன. மாதோற்சவமாக மாதக் கார்த்திகையும், மகோற்சவமாகப் பங்குனி உத்திரத் தீர்த்தத்தை இறுதியாகக் கொண்டு முதற் பத்துத் தினங்களுந் திருவிழா நாட்களாகும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில்
### சுளிபுரம் மேற்கு, சுழிபுரம்

இவ்வாலயம் பெரிய தம்பிரான் கோவில் எனவும் அழைக்கப் படும். மூலமூர்த்தியாக வேல் உளது. நடேசப்பெருமானும் ஆலயத் தில் வீற்றிருக்கிறார். தினமும் இருகாலப் பூசைகள் உண்டு. கந்த புராணப் படிப்பு ஐப்பசி மாதம் ஆரம்பமாகி மாசிமாதம் முடிவுறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### ஸ்ரீ வீரபத்திர சுவாமி கோவில்
### உலக்கப்பள்ளிச்சி, வட்டுக்கோட்டை, சங்கானை

தினமும் இரண்டு காலப் பூசைகள் நடைபெறுகின்றன. அலங் கார உற்சவமும் நடைபெற்று வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

செம்பித்தோட்ட ஞானவைரவர் கோவில்
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை

மூலமூர்த்தியாகச் சூலம் உளது. காளியம்பாள் பெரிய புளிய மரத்தடியில் உள்ளார். வெள்ளிக்கிழமைகளிலும் மார்கழி மாதத்திலும் இருகாலப் பூசைகள் உண்டு. ஆனி மாதத்தில் பொங்கல் சிறப்பாக நடைபெறுகின்றது. மாணவர்களிடையே சமய அறிவுப் போட்டி வைத்துப் பரிசுகளும் வருடாவருடம் வழங்கப்படுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

ஆதி வைரவர் பெருமான் கோவில்
வட்டுக்கோட்டை கிழக்கு

மூலவர் — திரிசூலம். எழுந்தருளி விக்கிரகமும் உளது. தினமும் இருகாலப் பூசைகள் உண்டு. திருவெம்பாவைக் காலங்களில் விழா நடைபெறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

முருகஞான வைரவ மூர்த்தி கோவில்
வைரவர் கோவிலடி, வட்டுமேற்கு வட்டுக்கோட்டை

தினமும் இரண்டு காலப்பூசை. வைகாசியிற் பொங்கலும் அன்ன தானமும் சிறப்புற நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

## பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில்
## பொன்னாலை

போர்த்துக்கீசர் காலத்திற்கு முற்பட்டது. மூலமூர்த்தி வரத ராஜப் பெருமாள். பரிவார மூர்த்திகள் — கருடாழ்வார், நாக தம்பிரான், மகாலக்ஷ்மி, இராமலக்குமணர், சீதை, ஆஞ்சனேயர், சனீஸ்வரன், நவக்கிரகம், அனந்தசயனமூர்த்தி. தினமும் ஐந்து காலப் பூசைகள் உள.

ஆவணியில் மகோற்சவம் ஆரம்பமாகி, 17 ஆம் நாள் தேர் 18 ஆம் நாள் தீர்த்தம், 19 ஆம் நாள் திருக்கல்யாணம் ஆகியன நடைபெற்று முடிவுறும்.

மார்கழி மாதத்தில் சொர்க்கவாசல் ஏகாதசியை முன்னிட்டு கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகி 9 ஆம் நாள் தேர், 10 ஆம் நாள் தீர்த்தம் ஆகியன நடைபெற்று முடிவுறும்.

மாசி மாதத்தில் பத்துத் தினங்களுக்கு லக்ஷார்ச்சனை சிறப்புற நடைபெறும். ஆனியில் மணவாளக் கோலவிழா, நடைபெறுகின்றது. இலங்கையின் வரலாற்றுப் புகழ் கொண்ட புராதன விஷ்ணு ஆலயங்களுள் இதுவும் ஒன்று

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

## சாட்குண்ணிய மூர்த்தி ஞானியார் சந்நிதானம்
## அராலி மேற்கு, வட்டுக்கோட்டை

இவ்வாலயத்தை கந்தஞானியார் ஆலயம் எனவும் அழைப்பர். சிவலிங்கம், நடேசர், சந்திரசேகரர், அம்பாள் ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. அலங்கார உற்சவம் ஆனி உத்தரத்தையொட்டிப் பத்து நாட்களுக்கு நடைபெறும். பிள்ளையார் கதைப்படிப்பும் இங்கு உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

## ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில்
## தச்சன்புலோ, சுழிபுரம்

நூற்றைம்பது வருடங்களுக்கு முற்பட்ட வரலாறு உண்டு. மூலமூர்த்தி — பத்திரகாளி, வீரபத்திரர். பரிவார மூர்த்திகள் — எழுந்தருளிய நிலையில் பத்திரகாளி, திரிசூலம், நாகதம்பிரான் ஆகியோர். தினமும் மூன்று காலப் பூசைகள் நடைபெறுகின்றன. சித்திரை அத்தத்தில் சங்காபிஷேகம் நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### பத்திரகாளி கோவில்
### சங்கரத்தை, வட்டுக்கோட்டை

மூலமூர்த்தி – பத்திரகாளி சமேத வீரபத்திரர். பரிவார மூர்த்திகள் – விநாயகர், வைரவர். தினமும் மூன்றுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. பங்குனி உத்திர நட்சத்திரத்தன்று தேர்த் திருவிழா நடைபெறக் கூடியவாறு உற்சவம் நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### வழக்கம்பரை மாரியம்மன் கோவில்
### தொல்புரம், சுழிபுரம்

மாரியம்பாளோடு பிள்ளையார். நடேசர், முருகன், வைரவர், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் மூன்றுகாலப் பூசை. ஆனிப் பூரணைக்குத் தீர்த்தம் நடைபெறக்கூடியதாகப் பதினொரு தினங்களும் மகோற்சவம் நடைபெறும். கார்த்திகை முழுவதும் காசி காண்டப் படிப்பு நடைபெறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### ஸ்ரீ முத்துமாரியம்பாள் கோவில்
### பனிப்புலம், சுழிபுரம் சங்கானை

தினமும் இரண்டு காலப் பூசைகள் நடைபெறுகின்றன. வைகாசி விசாகத்தையடுத்துப் பத்து நாட் திருவிழா நடைபெறுகிறது. நவராத்திரி, சிவராத்திரி விரத நாட்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

### துறட்டிப்பனை முத்துமாரியம்பாள் ஆலயம்
### வட்டுக்கோட்டை

மூலமூர்த்தி – அம்பிகை. பரிவாரமூர்த்திகள் – விநாயகர், வைரவர். தினமும் மூன்றுகாலப் பூசை. ஆனி மாதத்தில் வருடாந்த உற்சவம் நடைபெறுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### ஆவரசம்பிட்டி மகாமுத்துமாரியம்பாள் கோவில்
### அராலி கிழக்கு, அராலி

தினமும் மூன்றுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. வைகாசி விசாகத்துக்கு முதல் வெள்ளிக்கிழமை கொடியேறி ஒன்பது தினங்கள் உற்சவம் நடைபெறுகிறது. சனிக்கிழமை பெரும் பொங்கல் நடைபெற்று கொடி இறக்கப்படும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### ஸ்ரீ வள்ளியம்மன் கோவில்
### குடியிருப்பு, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்

மூலமூர்த்தி — இந்தியாவில் வேதாரண்யம் என்னும் பகுதியிலுள்ள ஒரு சாமியார் கொடுத்த வள்ளியம்மன் விக்கிரகம். பரிவாரமூர்த்திகள் — நடேசர், வேல். தினமும் காலை மாலைப் பூசைகள் நடைபெறுகின்றன. கும்பாபிஷேகம் நடைபெற்ற தினத்தில் அபிஷேகம் நடைபெறும். நூறு வருடங்களுக்கு முற்பட்டது இவ்வாலயம்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### ஸ்ரீ ஐயனார் கோவில்
### அராலி தெற்கு, அராலி

மூலமூர்த்தி — ஐயனார். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், காத்தவராயர், வைரவர். திருநாவுக்கரசநாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகியோரும் பூசையில் வைக்கப்பட்டுள்ளனர். தினமும் அபிஷேகம், சித்திரைக்கதை, திருவெம்பாவை போன்ற தினங்களில் குளிர்த்தி, சிவராத்திரி, ஆனிப்பொங்கல், ஆவணியிற் சங்காபிஷேகம், சித்திரைக்கதை திருவெம்பாவை போன்ற தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சங்கானை.

### பேச்சியம்பாள் கோவில்
### குளத்தடி ஒழுங்கை, சங்கானை கிழக்கு, சங்கானை

வெள்ளிக்கிழமைதோறும் பூசைகள் நடைபெறுகின்றன. தைப்பூசம், ஆனிப்பொங்கல், நவராத்திரி தினங்கள் விசேடமாகக் கொண்டாடப்படுகின்றன. பரிவாரமூர்த்தி — வைரவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

### ஸ்ரீ விசாலாட்சி சமேத விஸ்வநாதீஸ்வரர் கோவில்
### சோதிவேம்படி, அட்டகிரி, நவாலி வடக்கு,
### மானிப்பாய்

மூலமூர்த்தியாக ஸ்ரீ விஸ்வநாதப்பெருமான் வீற்றிருக்கிறார். இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆலயம். பரிவார மூர்த்தி களாக பிள்ளையார், சனீஸ்வரன், வைரவர் ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் இருகாலப் பூசை நடைபெற்று வருகிறது. அலங்கார உற்சவம் பங்குனியில் பத்துத் தினங்களுக்கு நடைபெறுகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

### ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவில்
### மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய்

இவ்வாலயம் குளக்கோட்டு மன்னன், கயவாகு மன்னன் காலத்துடன் தொடர்புடையது. தினமும் இருகாலப் பூசை உளது. ஆடிப்பௌர்ணமியில் தீர்த்தம் வரக்கூடியதாகப் பதினொரு தினங்களுக்கு மகோற்சவம் நடைபெறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

### பேச்சியம்மன் கோவில்
### மாதகல்

1948 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி அம்பாள். பரிவார மூர்த்திகள் பிள்ளையார், முருகன், வைரவர். தினமும் மூன்று காலப் பூசை. வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் சாயரட்சைப் பூசையும் நடைபெற்று வருகிறது. தைப்பொங்கல், நவராத்திரி, ஆகிய நாட்களில் விசேட உற்சவங்கள். ஆனி, ஐப்பசி மாதங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

## மருதடி விநாயகர் கோவில்
## மானிப்பாய்

இவ்வாலயத்தை மருதடிப் பிள்ளையார் கோவில் எனவும் வழங்குவர். மருத மரத்தில் விநாயகர் தாஞகத் தோன்றியதாக ஐதீகம். தினமும் நான்கு காலப் பூசை. சித்திரை வருடப் பிறப்பன்று தேர் அமையக்கூடியதாக 18 நாட்கள் மகோற்சவம் நடைபெறுகிறது. கைலாய வாகனம், 10 ஆம் திருவிழா மஞ்சம், 16 ஆம் திருவிழா சப்பறம் ஆகியன விசேட திருவிழாத் தினங்களாகும். இருகோபுரங்கள் கிழக்கிலும், மேற்கிலுமாக அமைந்திருக்கின்றன. சிவன், அம்பாள், நடேசர், சுப்பிரமணியர் ஆகிய மூர்த்திகள் இங்குள்ளனர்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

## வேலக்கைப் பிள்ளையார் கோவில்
## மானிப்பாய்

வேலினைத் தாங்கி உள்ள பிள்ளையாதலின் வேலக்கைப் பிள்ளையார் என இவ்வாலய மூர்த்தி அழைக்கப்படுகிருர். மூலமூர்த்தி தேவியர் சகிதம் சுப்பிரமணியர், நவக்கிரகம், வைரவர், முதலான மூர்த்திகளும் உளர். நித்திய பூசை, உற்சவங்கள் நன்கு நடைபெறுகின்றன. இவ்வாலயத்தில் தேர், மஞ்சம், ஆகியன உண்டு. கந்தசஷ்டி பெரு விழாவாக நடைபெறுகின்றது. சித்திரா பௌர்ணமிக்கு 12 நாட்களுக்கு முன் கொடியேறி, உற்சவம் நடைபெற்று பூங்காவனத்துடன் மகோற்சவம் முடிவுறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

## கட்டுடை, அரசடி விநாயகர் கோவில்
## மானிப்பாய்

தினமும் மூன்று காலப் பூசை நடைபெற்று வருகிறது. வருடாந்த மகோற்சவம் பங்குனி உத்தரத்திற்கு முதற் பத்துத் தினங்களுக்கு நடைபெற்று உத்தர தினத்தன்று தீர்த்தத் திருவிழா நடைபெறும். மாதாந்த உற்சவமாக சதுர்த்தித் திருவிழா நடைபெறுகிறது. கார்த்திகை, மார்கழி மாதங்களில் பிள்ளையார் கதை படிக்கப்பட்டு விசேஷ பூசையும் நடைபெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

வடசேப்பிள்ளையார் கோவில்
பெரியவிளான், பண்டத்தரிப்பு

மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவாரமூர்த்திகள் — முருகன், வைரவர், நாகதம்பிரான். தினமும் மூன்று காலப் பூசை. சித்திரா பௌர்ணமியை இறுதியாகக் கொண்டு முதற் பத்துத் தினங்களும் மகோற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

அரசடி, ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
மாதகல்

ஒல்லாந்தர் காலத்திலிருந்து கோவில் பேணப்பட்டு வருகிறது. தினமும் இருகாலப் பூசை. வைகாசி அமாவாசையன்று கொடியேறி பௌர்ணமியன்று தேர், தீர்த்தம் நடைபெறும். சுப்பிரமணியர், வைரவர், நாகதம்பிரான், சிவன் ஆகியோர் இங்குள்ள இதர பரிவார மூர்த்திகள்.

மாவட்டம்;- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

குளக்கரைப் பிள்ளையார் கோவில்
மாசியப்பிட்டி

இங்கு உச்சிக் காலப் பூசை நடைபெறுகிறது. வருடாந்த உற்சவம் திருவெம்பாவைக் காலத்தில் நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

கூத்துமாலைப் பிள்ளையார் கோவில்
பெரியவிளாங்குளம், இளவாலை

மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகளாக கந்தசுவாமியார், நாகதம்பிரான், வைரவர் ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் இருகாலப் பூசை உளது. வருடாந்த அலங்காரத் திருவிழா வைகாசித் திருவோண நட்சத்திரத்தன்று ஆரம்பமாகி 11 தினங்களுக்கு நடைபெற்று வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

### புதரானை, ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
### வடலியடைப்பு, பண்டத்தரிப்பு

மூலமூர்த்தியான விநாயகரோடு முருகன், வைரவர், நாகதம்பிரான் ஆகிய பரிவார மூர்த்திகளும் உளர். தினமும் மூன்றுகாலப் பூசை இடம்பெறுகிறது. வருடாந்த மகோற்சவம் ஆவணிப் பௌர்ணமியைத் தீர்த்த நாளாகக் கொண்டு பத்துத் தினங்கள் நடைபெறுகிறது. இங்கு ஆவணிச் சதுர்த்தி, மாதச் சதுர்த்தி, கந்த சஷ்டி, நவராத்திரி ஆகியவை விசேடமானவை.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

### ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்
### கல்வளை மத்தி, கல்வளை

மூலமூர்த்தியான கற்பக விநாயகரோடு முருகன், வைரவர் ஆகிய மூர்த்திகளும் உளர். தினமும் மூன்றுகாலப் பூசை நடைபெறுகிறது. ஆனி மாதத்தில் வருடாந்த உற்சவம் நடைபெறுகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

### பிள்ளையார் கோவில்
### சங்கானை வடக்கு, சங்கானை

மகோற்சவம் ஆவணி அமாவாசையின் ஆறும் நாள் ஆரம்பித்துப் பூரணையில் முடிவுறுகின்றது. தினமும் மூன்று காலப்பூசை உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

### ஆலங்குழாய், ஸ்ரீ முருகமூர்த்தி கோவில்

மூலமூர்த்தியாக வள்ளி தெய்வயானையோடு சுப்பிரமணியப் பெருமான் வீற்றிருக்கிறுர். 300 வருடங்களுக்கு முன்பு இவ்விக்கிரகம் தமிழகத்திலிருந்து கொண்டு வரப்பட்டது. இங்கு பரிவார மூர்த்திகளாகப் பிள்ளையார், நாகதம்பிரான், சூரியன், வைரவர், சண்டேசுவரர் உளர். தினமும் நான்கு காலப் பூசை நடைபெறுகின்றது. வருடாந்த மகோற்சவம் வைகாசிப் புனர்பூச நட்சத்திரத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, வைகாசிச் சதயத்திலன்று தேர்த் திருவிழாவும், வைகாசி விசாகத் தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெறுகின்றது. வருடாவருடம் கந்த புராணப் படிப்பு, திருவாதவூரடிகள் புராணப் படிப்பு, பிள்ளையார் கதைப் படிப்பு ஆகியன இடம்பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

## முருகமூர்த்தி கோவில்
### மாதகல்

மூலமூர்த்தியாக முருகமூர்த்தியும், பரிவார மூர்த்திகளாக பிள்ளையார், வைரவர், நாகதம்பிரான், ஆகிய மூர்த்திகளும் உளர். தினமும் மூன்றுகாலப் பூசை உளது. மகோற்சவம் சித்திரா பௌர்ணமிக்கு முன்னைய 12 தினங்களும் நடைபெற்றுத் தேர் தீர்த்தத்துடன் முடிவுறுகின்றது. தல விருட்சமாகக் கடம்பு மரம் உளது. ஒல்லாந்தர் காலத்தையது இவ்வாலயம்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

## கலப்பிராகிரி, முருகமூர்த்தி கோவில்
### மாரீசங்கூடல், இளவாலை

மூலமூர்த்தியாக முருகப் பெருமான் உள்ளார். பரிவார மூர்த்திகளாக பிள்ளையார், நாகதம்பிரான், தேவியருடன் கூடிய ஆறுமுக சுவாமி, சண்டேசுவரர் ஆகியோர் உள்ளனர். கொடிமரத்திற்கு வெள்ளிக் கவசமுள்ளது. தினமும் மூன்று காலப் பூசை நடைபெற்று வருகிறது. ஆவணி மாதப் பூரணை தினத்தைத் தீர்த்த நாளாகக் கொண்டு முதல் 15 தினங்களுக்கு மகோற்சவம் நடைபெறுகிறது. மாதாமாதம் கார்த்திகை நட்சத்திரத்திற்கு மாத உற்சவம் இடம் பெறுகிறது. பிள்ளையார் கதை, சித்திரைக்கதை ஆகியன படிக்கப் படுகிறன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

## ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்தநயினர் கோவில்
### நவாலி வீதி, ஆனைக்கோட்டை

மூலமூர்த்தி வள்ளி, தேவசேனு சமேத சுப்பிரமணியர். தினமும் நான்குகாலப் பூசை. ஆனிமாத அமாவாசையைப் பட்சமாகக் கொண்டு 15 நாட்கள் மகோற்சவம் நடைபெற்று வருகிறது. நடேசர் அபிஷேகங்களும், பங்குனி மாதத்தில் மாரியம்மன் குளிர்த்தியும், நித்திய நைமித்திய விழாக்களும், கிரமமாக நடைபெற்று வருகின்றன. இஃது ஒரு புராதன ஆலயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

### முருகமூர்த்தி கோவில்
### பிராம்பற்று, பணடத்தரிப்பு

பரிவாரத்தில் பிள்ளையார், வைரவர் வீற்றிருக்க மூலமூர்த்தியாக முருகப் பெருமான் எழுந்தருளி உள்ளார். தினமும் மூன்று காலப் பூசை நடைபெறுகிறது. வருடாந்த மகோற்சவம் ஆவணி மாத அமாவாசையை அடுத்த ஆறும்நாள் ஆரம்பமாகிப் பௌர்ணமி தினத்தன்று தீர்த்த உற்சவத்துடன் முடிவடைகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

### அட்டகிரி, கந்தசுவாமி கோவில்
### சோதிவேம்படி, அட்டகிரி வீதி,
### மானிப்பாய்

நவாலியூர் சோமசுந்தரப் புலவர் போற்றிப் பாமாலை சூட்டிய தலம் இது. மிகப் புராதனமானது. பிள்ளையார், ஆறுமுகர், கிருஷ்ணர், லக்ஷ்மி, சரஸ்வதி, முத்துலிங்கர், நவக்கிரகம், வைரவர், சண்டேஸ்வரர் ஆகியோர் பரிவார மூர்த்திகளாக உளர். மூன்றுகாலப் பூசை உளது. ஆனியில் பன்னிரண்டு நாள் மகோற்சவம் உண்டு. மாதக்கார்த்திகை, திருக்கார்த்திகை உற்சவங்களும் உள. கந்தசஷ்டி சிறப்புத் திருவிழாவாகக் கொண்டாடப் படுகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

### முருகமூர்த்தி கோவில்
### நவாலி தெற்கு, நவாலி

தினமும் மூன்றுகாலப் பூசை உளது. ஆவணிப் பூரணைக்குத் தேர், தீர்த்தம் வரக்கூடியதாக மகோற்சவம் நடைபெறுகின்றது. பூங்காவனமும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

### ஞானவைரவர் கோவில்
### சித்திரைவேழி, இளவாலை

இங்கு மூலமூர்த்தி வைரவர். பரிவாரமூர்த்திகளாக பிள்ளையார், கந்தசுவாமியார், நாகதம்பிரான் ஆகிய மூர்த்திகள் உளர். வருடாந்த அலங்கார உற்சவம் ஆவணி ரோகினி நட்சத்திரத்தில் ஆரம்பமாகிப் பத்துத் தினங்களுக்கு நடைபெறுகின்றது. கந்தபுராணப் படிப்பும் நடைபெறும். மாணிக்கவாசகர் விழா ஊர்வலத்துடன் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சைவசமய வகுப்புக்கள், சமயப் பிரசங்கங்கள் ஆகியன நடைபெறுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

### சண்டிலிப்பாய், ஈச்சடி வைரவசுவாமி கோவில்
### சுதுமலை வடக்கு, சுதுமலை

தினமும் மூன்றுகாலப் பூசை. ஆடிப் பிறப்பன்று தேர் அமையக் கூடியதாகப் பத்து நாட்கள் அலங்காரத் திருவிழா நடைபெறும். இதர நைமித்திய விழாக்களும் இடம்பெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

### பாரந்தனை, ஐயனார் கோவில்
### வடலியடைப்பு, பண்டத்தரிப்பு

பங்குனி உத்தரத்திற்கு அலங்காரத் திருவிழா உண்டு. தினமும் இருகாலப் பூசை உளது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

### ஸ்ரீ வீரபத்திர காளியம்மன் கோவில்
### சண்டிலிப்பாய்

மூலமூர்த்தியாக ஸ்ரீ பத்திரகாளியம்பாள் வீற்றிருக்க விநாயகர், முருகன், நாகதம்பிரான், வைரவர் ஆகிய மூர்த்திகள் பரிவார மூர்த்திகளாக வீற்றிருக்கின்றனர். தினமும் மாலையில் ஒரு காலப் பூசை நடைபெறுகிறது. விசேட தினங்களில் விசேட பூசைகள் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

### கண்ணகை அம்மன் கோவில்
### அங்கணுக்கடவை, சண்டிலிப்பாய்

கண்ணகி கதைப்படிப்பு இங்கு சிறப்பாக நடைபெறுகின்றது. பொங்கல், குளிர்த்தி ஆகியனவும் உள. வைகாசி விசாகப் பொங்கல் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. தினமும் இருகாலப் பூசை உளது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

### கலையோடை, கண்ணகை அம்மன் கோவில்
### நவாலி தெற்கு, நவாலி

தினமும் இருகாலப் பூசை உண்டு. விசேட தினங்களில் விசேட உற்சவங்களும் உள்ளன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

### பாணுவெட்டி, கண்ணகை அம்மன் கோவில்
### மாதகல்

பிள்ளையார், வைரவர், நாகதம்பிரான் ஆகிய பரிவார மூர்த்திகளோடு மூலவர் எழுந்தருளியுள்ளார். இருகாலப் பூசை தினமும் உளது. பங்குனி உத்தரத்தன்று தேர், தீர்த்தம். அதற்கு முந்திய 11 தினங்களும் மகோற்சவ நாட்களாகும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சண்டிலிப்பாய்.

### நாச்சிமார் கோவில்
### நவாலி வடக்கு, மானிப்பாய்

மூலமூர்த்தி — முருகன். அருகில் நாச்சிமார் உள்ளார். நித்திய பூசை உண்டு. வருடாந்தப் பொங்கல் சிறப்புற நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
உடுவில்.

### கதிரமலைச் சிவன் கோவில்
### புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்

சுன்னாகம் — புன்னாலைக்கட்டுவன் வீதியில், சுன்னாகம் தபாற் கந்தோருக்கு முன்பாக இந்த ஆலயம் உள்ளது. கந்தரோடை இராஜ தானியாக இருந்த காலத்தில் வழிபாட்டு இடமாக இவ்வாலயமும் இருந்துள்ளது. சிவனது மகோற்சவம் சித்திரை அமாவாசையை அந்தமாகக் கொண்டு முதற் பத்துநாட்களுக்கு நடைபெறுகின்றது. ஆடிப்பூரத்தை அந்தமாகக்கொண்டு அம்பாள் உற்சவம் பத்துத் தினங்களுக்கு நடைபெறுகின்றது. நவக்கிரகத்திற்கான கோவில், தேர் அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது. தலவிருட்சம் வில்வமரம் ஆகும்.

புராண படனங்களாகப் பெரியபுராணம், கந்தபுராணம் முதலியன இடம்பெறுகின்றன. இங்கு பூசைத் தினங்களில் அந்தணரை உபசரித்து அமுது கொடுத்து ஆசிபெறும் வழக்கம் இன்றும் உள்ளது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
உடுவில்.

### ஸ்ரீ விசாலாக்ஷி சமேத
### விஸ்வநாத சுவாமி கோவில்
### மயிலணி, சுன்னாகம்

மயிலணிச் சிவன் கோவில் எனவும் அழைக்கப்படுவதுண்டு. இருகாலப் பூசை. சுமார் 150 வருடம் பழமை வாய்ந்த ஆலயம். வைகாசி விசாகத்தைத் தீர்த்தமாகக் கொண்டு பத்துத் தினங்களுக்கு மகோற்சவம் நடைபெறுகிறது. மூலமூர்த்தி — சிவலிங்கத்தோடு நடராஜப் பெருமானும் சிவகாமி அம்பாளும். மூலஸ்தானம் சிதம்பர அமைப்பைக் கொண்டது. தல விருட்சம் வில்வம். திருவெம்பாவையொட்டி ஒன்பதாம் நாட் தேரும், திருவாதிரையன்று தீர்த்தமும் நடைபெறும். சிவராத்திரி, நவராத்திரி, சோமவாரம், போன்ற விசேஷ தினங்களில் விசேஷ பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
உடுவில்.

### புங்கடி, ஏழாலே, அம்பலவாணேசுவரர் கோவில்

மூலமூர்த்தி — சிவன். பரிவாரமூர்த்திகளாக விநாயகர், சொர்ணும்பிகை, சுப்பிரமணியர், சனீஸ்வரன், நவக்கிரகம், வைரவர், சண்டிகேசுவரர் ஆகிய மூர்த்திகள் வீற்றிருக்கின்றனர். தினமும் மூன்றுகாலப் பூசை நடைபெறுகிறது. வருடாந்த உற்சவம் இடம் பெற்று தேர், தீர்த்தம், பூங்காவனம் ஆகியனவும் நடைபெறுகின்றன. புராண படனமும் இவ்வாலயத்தில் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
உடுவில்.

### விசாலாட்சி சமேத விஸ்வநாதசுவாமி கோவில்
### கந்தரோடை, சுன்ஞகம்

சிவன் அம்பாளோடு பிள்ளையார், சுப்பிரமணியர், வைரவர் ஆகிய மூர்த்திகளும் இங்கு உள்ளனர். தினமும் இருகாலப் பூசை நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
உடுவில்.

### இராஜராஜேஸ்வரி அம்பாள் கோவில்
### புன்னுலைக்கட்டுவன் வடக்கு,
### புன்னுலைக்கட்டுவன்

மூலவர் — இராஜராஜேஸ்வரி அம்பாள். பரிவாரமூர்த்திகள் — விநாயகர், முருகன், கிருஷ்ணர், நவக்கிரகம். தினமும் இருகாலப் பூசை. ஆனி மாதத்தில் பத்துத் தினங்களுக்கு அலங்காரத் திருவிழா உண்டு. ஞாயிற்றுக்கிழமைகளில் சமய பாட வகுப்புக்கள் உள.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
உடுவில்.

### அருள்மிகு மீனுட்சியம்பாள் கோவில்
### ஈவினை, புன்னுலைக்கட்டுவன்

மூலமூர்த்தியாக ஸ்ரீ மீனுட்சியம்பாள் உள்ளார். பரிவாரத்திலே பிள்ளையார், வேல், துர்க்கை ஆகியோர் உளர். தினமும் இருகாலப் பூசை. பங்குனி உத்தரத்தை இறுதியாகக் கொண்டு முதற் பத்துத் தினங்களுக்கும் அலங்கார உற்சவம் நடைபெறுகின்றது. வருடாவருடம் சமய அறிவுப்போட்டி நடைபெற்றுப் பரிசுகளும் மாணர்வகளுக்கு வழங்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாவட்டம்:- யாழ்ப்பாணம்,**
**உடுவில்.**

## ஸ்ரீ அம்பாள் கோவில்
## மல்வம், உடுவில்

நித்திய பூசை உண்டு. வருடாந்தப் பொங்கலும் இடம்பெறுகின்றது. விசேட நாட்களில் விசேட பூசை நடைபெறும்.

**மாவட்டம்:- யாழ்ப்பாணம்,**
**உடுவில்.**

## ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில்
## மடத்துவாசல், இணுவில் தெற்கு, இணுவில்

யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசன் பரராஜசேகரனால் வணங்கப் கப்பட்ட சிறப்பையுடையது இவ்வாலயம். இங்கு மூலமூர்த்தியாக விநாயகர் வீற்றிருக்க பஞ்சமுக விநாயகர், லட்சுமிதேவி, சுப்பிரமணியர், வைரவர், நவக்கிரகம், சண்டேஸ்வரர் ஆகியோர் பரிவார மூர்த்திகளாக எழுந்தருளி உள்ளனர். இங்குள்ள கண்ணன் விக்கிரகம் காலிங்கநர்த்தன வடிவம் கொண்டது. வைகாசிச்சதய நட்சத்திரத்திற் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தேர்த்திரு விழா திருவாதிரை நட்சத்திரத்தில் இடம்பெறும். தீர்த்த உற்சவத் துடன் மகோற்சவம் முடிவடைகின்றது. இங்கு மூன்று தேர்கள் இழுக்கப்படுகின்றன. ஆலயத்திற் சிற்ப ஓவிய வேலைப்பாடுகள் சிறப்பாகக் காணப்படுகின்றன.

**மாவட்டம்:- யாழ்ப்பாணம்,**
**உடுவில்.**

## செகராசசேகரப் பிள்ளையார் கோவில்
## இணுவில்

யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னன் பரராஜசேகரனது தம்பி செகராசசேகரனால் கி.பி. 1475 இல் இவ்வாலயம் அமைக்கப் பட்டது. சிவஸ்ரீ வேதாரணியக் குருக்கள் அவர்களின் பரம்பரையினரே அன்று முதல் இன்றும் கோவிற் பூசைகளைச் செய்து வருகின்றார்கள். மூலமூர்த்தியாகப் பிள்ளையார் வீற்றிருக்கின்றார். பரிவார மூர்த்திகள்—உற்சவ விநாயகர், வேல், சந்தான கோபாலர், வைரவர், சண்டேஸ்வரர் ஆகியோர். தினமும் மூன்றுகாலப் பூசை. சித்திரைப் பூரணை அன்று தேர் நடைபெற அதற்கு, முந்திய பதினொரு தினங்களும் மகோற்சவம் நடைபெறும். வருடாவருடம் திருச்செந்தூர்ப் புராணம், பிள்ளையார் கதை ஆகியன படிக்கப் படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
உடுவில்.

## ஆயாக்கடவைச் சித்திவிநாயகர் கோவில்
## புன்னாலைக்கட்டுவன்

மூலமூர்த்தி — விநாயகர். பரிவாரமூர்த்திகளாக நாகதம்பிரான், தேவியருடன் சுப்பிரமணியர், நவக்கிரகம், வைரவர், சண்டேஸ்வரர் ஆகியோர் உளர். தினமும் இருகாலப் பூசை உண்டு. மாதச் சதுர்த்தி உற்சவம். எல்லாப் பிரதான சமய வைபவ தினங்களிலும் விசேட அபிடேக பூசைகள் நடைபெறும். ஆனியில் பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெற்று பிள்ளையார், சண்டேஸ்வரர், ஆகியோர் சித்திர இரதத்தில் வீதியுலா வந்து ஆனிப் பூரணைத் தீர்த்தத்துடன் மகோற்சவம் முடிவுறுகின்றது. மறுநாட் பூங்காவனம் சிறப்பாக இடம்பெறும். இங்கு உள்ள வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியரும் இவர்களுக்கான பெரிய திருவாசியும் இந்தியாவில் இருந்து வருவிக்கப்பட்டவை. கண்டாமணி இங்கிலாந்தில் இருந்து வருவிக்கப்பட்டது. தை முதல் பங்குனி வரை கந்தபுராணப் படிப்பு நடைபெறும். இப்புராணப் படிப்புக்காக அகிலேசர் ஞாபக புராணப் படிப்பு நிதி உளது. கந்தசஷ்டி காலத்தில் திருச்செந்தூர்ப் புராணமும், பிள்ளையார் கதைக் காலத்தில் பிள்ளையார் கதையும், மார்கழியில் திருவாதவூரடிகள் புராணமும் படிக்கப்பட்டு வருகின்றது. மகாவித்வான் கணேச ஐயர் அவர்களின் ஊஞ்சற்பாக்கள் ஆனியில் துவஜ அவரோகணத்தின் முன்பும், மணவாளக் கோல விழாவின்போதும் பாடப்படுகின்றன. தேர்த்திருவிழாவன்று இந்து இளைஞர் சங்கத்தினரால் சமய பாட்டப் போட்டிப் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
உடுவில்.

## கப்பனைப் பிள்ளையார் கோவில்
## இணுவில் கிழக்கு,
## இணுவில்

இதனை அரசோலைப் பிள்ளையார் எனவும் அழைப்பர். பரிவார மூர்த்திகளாகப் பிள்ளையாருடன் சுப்பிரமணியர், மாரியம்மன் ஆகியோரும் உளர். இக்கோவிலுக்கு அண்மைத்தாக ஸ்ரீ அருணகிரி நாதசுவாமி கோவிலும் உளது. இங்கு நித்திய பூசைகளோடு, வருடாந்த உற்சவமும் நடைபெற்று வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
உடுவில்.

ஆலங்கட்டை, விக்நேஸ்வரர் கோவில்
ஏழாலை வடக்கு

மூலமூர்த்தி விக்நேஸ்வரர். பரிவாரமூர்த்திகள் — முருகன், வைரவர், சனீஸ்வரன், சண்டேஸ்வரர். தினமும் இருகாலப் பூசை நடைபெறும். விசேட தினங்களில் விசேட பூசைகள் உண்டு. மாணவரிடையே சமய அறிவுப் போட்டி வருடாந்தம் நடத்தி, வெற்றி பெற்றவர்களுக்கு மார்கழித் திருவாதிரைத் தினத்தன்று பரிசுகள் வழங்கப்படுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
உடுவில்.

ஈவினை, கற்பக விநாயகர் கோவில்
ஈவினை, புன்னாலைக்கட்டுவன்,
சுன்னாகம்

மூலமூர்த்தி — விக்நேஸ்வரர். பரிவார மூர்த்திகள் — சிவன், அம்பாள் முருகன், சந்தானகோபாலர், நவக்கிரகம், வைரவர், நாக தம்பிரான், சண்டேசுவரர் ஆகியோர் உளர். தினமும் இருகாலப் பூசை இடம்பெறுகின்றது. வருடாந்த மகோற்சவம் ஆவணிப் பூரணை தினத்தை தீர்த்த உற்சவமாக கொண்டு நடைபெறும். வருடாவருடம் கந்தபுராணப் படிப்பு நடைபெற்று வருகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
உடுவில்.

ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் கோவில்
மானிப்பாய் வீதி, உடுவில், சுன்னாகம்

மூலமூர்த்தி பணிக்கர் காலத்தையது. ஆறுமுகசுவாமி, நடேசர், பிள்ளையார் ஆகிய மூர்த்திகளும் உளர். தினமும் இரண்டு காலப் பூசை உண்டு. வருடாந்த மகோற்சவம் ஆனிப் பௌர்ணமிக்கு தீர்த்தம் வரக்கூடியதாக நடைபெறுகிறது. ஆவணிச் சதுர்த்தி, கார்த்திகை உற்சவம் சிறப்புற இடம்பெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
உடுவில்.

வேதவிநாயகர் கோவில்
தாவடி, கொக்குவில்

விநாயகப் பெருமானோடு லக்ஷ்மி, சுப்பிரமணியர், நவக்கிரகம் ஆகிய மூர்த்திகளும் உளர். தினமும் நான்கு காலப் பூசை. சித்திரை மாதத்தில் வருடாந்த உற்சவம் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
உடுவில்.

### இணுவில், கந்தசுவாமி கோவில்

இவ்வாலயம் ஒல்லாந்தர் காலத்தையது. ஆதியில் மூலமூர்த்தியாக வேல் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. பின்னர் வள்ளி, தெய்வயானை சமேத சுப்பிரமணியரும் பிரதிஷ்டை செய்யப்பட்டார். பரிவார மூர்த்திகளாக கல்யாண வேலவர், சிவலிங்கம், ஸ்ரீ நடராஜ மூர்த்தி, சந்திரசேகரர், முத்துக்குமாரசுவாமி, சந்தானகோபாலர், தண்டாயுதபாணி, உற்சவ வைரவமூர்த்தி, வைரவர் ஆகிய மூர்த்திகள் வீற்றிருக்கின்றனர். தினம் ஐந்து காலப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆனி அமாவாசையைத் தீர்த்த தினமாகக் கொண்டு முதல் இருபத்தைந்து நாட்களுக்கும் மகோற்சவம் நடைபெறும். திருக்கல்யாண விழாவையடுத்து, பூங்காவனத் திருவிழாவும் நடைபெற்று வருகின்றது. இந்தியக் கலைஞர்களால் நிர்மாணிக்கப்பட்ட மிகப் பழைய மஞ்சம் இவ்வாலயத்தில் உண்டு. வருடாவருடம் கந்தபுராணம் படிக்கப்பட்டு வருகின்றது. மாணவரிடையே சமய அறிவுப் போட்டி வைத்து சிறந்த மாணவருக்கு பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
உடுவில்.

### கந்தசுவாமி கோவில்
### மயிலணி, சுன்னாகம்

மூலமூர்த்தியாக தேவியர் இருவருடனும் ஸ்ரீ சுப்பிரமணியர் வீற்றிருக்கின்றார். பரிவாரத்திலே சிவன், மகாலக்ஷ்மி, ஆறுமுக சுவாமி, விஷ்ணு, வைரவர், சண்டேஸ்வரர் உளர். தினமும் இரு காலப் பூசை. ஆனியில் மகோற்சவம் நடைபெற்று ஆனி உத்தரத்தன்று தீர்த்தத் திருவிழா இடம்பெறும். கிருஷ்ண ஜயந்தி, கந்தசஷ்டிக் காலங்களில் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறும். இது ஒரு புராதன ஆலயமாகும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
உடுவில்.

### ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோவில்
### தாவடி, கொக்குவில்

மூலமூர்த்தி – வேல். பரிவாரமூர்த்திகள் – பிள்ளையார், ஆறுமுக சுவாமி, முத்துக் குமாரசுவாமி, வேல், வைரவர். தினமும் இரு காலப் பூசைகள் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
உடுவில்.

ஞானவைரவர் கோவில்
குப்பிளான், ஏழாலை

தினமும் இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. விசேட தினங்களில் விசேட பூசைகள். நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
உடுவில்.

பல்லப்ப வைரவர் கோவில்
மருதனுமடம், சுன்னுகம்

நித்திய பூசை உளது. வருடாவருடம் அலங்காரத் திருவிழா பங்குனி — சித்திரை மாதத்தில் பன்னிரண்டு தினங்களுக்கு நடைபெறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
உடுவில்.

சிவபூதராயர் கோவில்
சுன்னுகம் தெற்கு

இவ்வாலய மூலமூர்த்தியின் வலது கையில் ஒரு விசிறியும், இடது கையில் தண்டாயுதமும், காலில் மிதியடியும், தலையில் சடா முடியும் காட்சியளிக்கின்றன. பரிவார மூர்த்திகளாக விநாயகர், வைரவர், நாகதம்பிரான் ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் இரு காலப் பூசை நடைபெற்று வருகிறது. வருடாந்த அலங்கார உற்சவம் ஆவணி உத்தர நட்சத்திரத்தையொட்டி முன்னைய ஒன்பது நாட்களும் மாலை 6 மணிமுதல் நடைபெறும். இறுதி உற்சவ தினத்தன்று பகல் சங்காபிஷேகம், மாலையிற் திருவூஞ்சல் நடைபெறுகிறது. வைகாசி மாதத்தில் வருடாந்த புராண படனமும் பொங்கலும் இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
உடுவில்.

## பூதராயர் கோவில்
## ஏழாலை மேற்கு, சுன்னாகம்

இங்கு சிவன், வேல், வைரவர் ஆகிய மூர்த்திகளும் உளர். தினமும் இரண்டு காலப்பூசை நடைபெறுகின்றது. ஆவணியில் வருடாந்த அலங்கார உற்சவம் சிறப்பாக இடம்பெறுகின்றது. தலவிருட்சம் அரச மரம்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
உடுவில்.

## ஐயனார் கோவில்
## புன்னாலைக்கட்டுவன் வடக்கு, சுன்னாகம்

முன்னூறு வருடங்களுக்கு முற்பட்டது. இக்கோவில் டச்சுக் காரரால் முற்றிலும் தரைமட்டமாக்கப்பட்டது. இப்போது புனரமைப்பு வேலைகள் துரிதமாக இடம்பெறுகின்றன. தினமும் இரு காலப் பூசை சிறப்புற நடைபெற்று வருகின்றது. பௌர்ணமி தினத்தில் விசேட அபிஷேகம், பூசை இடம்பெற்று வருகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
உடுவில்.

## ஐயனார் கோவில்
## சுன்னாகம்

மருதும், தாளையும் சூழ்ந்த இடத்திலே இவ்வாலயம் உளது. முன்னூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்டது. நித்திய பூசை சிறப்புற நடைபெறுகின்றது. பங்குனி உத்தரத்திலே தீர்த்த உற்சவம் வரக்கூடியதாகப் பதினொரு தினங்களுக்கு மகோற்சவம் நடைபெற்று வருகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
உடுவில்.

## அருள்மிகு கண்ணகியம்மன் கோவில்
## ஏழாலை மத்தி, ஏழாலை

மூலமூர்த்தியாகக் கண்ணகியம்மன் வீற்றிருக்கிறார். ஆலயத்தில் விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோர் உளர். தினமும் காலை மாலை பூசை நடைபெறுகின்றது. திங்கள், வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசைகள். வைகாசி மாத விசாகப் பொங்கல் இங்கு சிறப்பாக நடைபெறும். பங்குனி மாதக் கடைசித் திங்களில் குளிர்த்தி இடம் பெறுகிறது. கிராம மக்களிடையே சமய அறிவுப் போட்டி வைத்துப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பழை.

## ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி கோவில்
## (கீரிமலைச் சிவன் கோவில்)
## கீரிமலை

புராதன காலத்தில் திருத்தம்பலேஸ்வரம் என்றும், பின்னர் நகுலேசுரம் எனவும் அழைக்கப்படும் இக்கோவில் யாழ்ப்பாணத்தின் வடபாகத்தில் சாகர சங்கம தீர்த்தக்கரையிலே அமைந்திருக்கிறது. இது மூர்த்தி, தீர்த்தம், தலம் என்னும் மூன்றிலும் விசேடம் பெற்றது. நகுலகிரிக்கு மேற்குப்பக்கத்திலே தெற்கிலூறுகின்ற சுத்த நீரும், வடக்கிலுள்ள உப்பு நீரும் கலந்து கிழக்கு நோக்கிய சிவ ரூபமும் சக்தி ரூபமும் ஆக இருக்கின்ற இயல்பினுலே ''கங்கா சமுத்திர சங்கமம்'' என்றும் ''கண்ட தீர்த்தம்'' என்றும் அழைக்க கப்படும். அளவில்லாத அன்பர்கள் இங்கு சென்று விதிப்படி ஸ்நானம் செய்து பயன் பெற்று வருகிருர்கள். கீரிமலையை நகுலகிரி என்றுங் கூறுவர். நகுல முனிவர் அங்கு வதம் செய்து தமது கீரி முகம் மாறப் பெற்றமையினுல் கீரிமலைக்கு நகுலமலை என்ற பெயரும் இறைவனுக்கு நகுலேஸ்வரர் என்ற நாமமும் இறைவிக்கு நகுலாம்பிகை என்ற நாமமும் ஏற்படலாயிற்று.

நகுலேஸ்வராலயம் போர்த்துக்கீசர் காலத்தில் இடிக்கப்பட்டது. பின்னர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், மற்றும் அன்பர்கள், அந்தணர்கள் ஆகியோரின் முயற்சியினுல் 1895 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் முதன் முதலாக நடைபெற்றது.

சிவராத்திரி தீர்த்தத்தை இறுதியாகவுடைய மாசி மகோற்சவம் பதினைந்து நாட்களுக்கு நடைபெறுகின்றது. தேவி மகோற்சவம் சித்திரா பூரணையை இறுதியாகக் கொண்டு பன்னிரண்டு நாட்களுக்கு நடைபெறுகின்றது. நித்திய நைமித்தியக்கிரியைகள் ஒழுங்காக இடம்பெற்று வருகின்றன. தொன்றுதொட்டு மரபுநிலை வழுவாது புராணபடனம் நடைபெற்று வருகிறது. தலமகாத்மியம் பற்றிப் பல நூல்கள் உண்டு. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை நகுலாசல மான்மியம், நகுலகிரிப்புராணம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பழை.

## ஸ்ரீ இரேணுகேஸ்வரர் கோவில்
## காங்கேசன்துறை

1887 இல் ஸ்ரீ பரமகுரு சுவாமிகளால் ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாறு. 1890 இல் பஞ்சகர்த்தாக்களினால் எழுதப்பட்ட செப்பேடும் உண்டு. மூலமூர்த்தி – லிங்கோற்பவர். அகஸ்தியர், மாணிக்கவாசகர், சாந்தலிங்கஸ்வாமிகள் ஆகியோரின் திருவுருவங்களும் உண்டு. நித்திய பூசை உளது. மாசியில் உற்சவமும் மாசி மகநட்சத்திரத்தில் தீர்த்த உற்சவமும் நடைபெறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பழை.

## குருந்தடி ராஜராஜேஸ்வரி அம்பாள் கோவில்
## தெல்லிப்பழை

மூலமூர்த்தி — ராஜராஜேஸ்வரி அம்பாள். பரிவாரமூர்த்திகள் — பிள்ளையார், வைரவர். தினமும் இருகாலப் பூசை. சித்திரை மாதப் புனர்பூச நட்சத்திரத்தில் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி 12 தினங்கள் நடைபெற்று வருகின்றன. பன்னிரண்டாவது தினம் அம்பாள் மீது பாடப்பட்ட ஊஞ்சல் பாட்டுடன் முடிவடையும். தலவிருட்சம் அரசு. திருவாதவூரடிகள் புராணம், சித்திர புத்திரனார் கதை, என்பன படிக்கப்படும். திருவெம்பாவை, நவராத்திரி, சிவராத்திரி, விசேட தினங்கள் வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பழை.

## கூடலூர், ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் கோவில்
## குமார கோவில் வீதி, காங்கேசன்துறை

தான்தோன்றீஸ்வரியாக உள்ள மூர்த்தி என்பது வரலாறு. மூலமூர்த்தி — ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், முருகன், வைரவர், வீரபத்திரர், அனுமார். தினமும் சாயரட்சைப் பூசை நடைபெறுகிறது. ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் பற்றிய பாமாலையும் இவ்வாலயத்தில் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

## ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் கோவில்
## (பலாலி அம்மன் கோவில்)
## பலாலி

நித்திய பூசை உண்டு. விசேட நாட்களில் விசேட பூசை, வழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன. வருடாந்த உற்சவம் சிறப்புற இடம்பெற்றுவருகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

## அருள்மிகு துர்க்காதேவி ஆலயம்
## தெல்லிப்பளை

ஏறக்குறைய இருநூறு வருடங்களுக்குமுன் தெல்லிப்பளையைச் சேர்ந்த கதிர்காமர் என்பவர் இந்தியாவிற்குத் தல யாத்திரை சென்று திரும்புகையில் துர்க்கா இயந்திரம் ஒன்றும் திருமுகக் கொடியொன்றும் கொண்டு வந்து உழுகுடைப் பதியில் தாபனஞ் செய்தார். இக்கோவில், ஆரம்பத்தில் சிறிய கோவிலாக இருந்து பின்னர் பெரிய ஆலயமாகக் கட்டப்பட்டுள்ளது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலோடு இவ்வாலயத்துக்கும் புராதன தொடர்புண்டு என்பதைப் பழைய ஏட்டுப் பிரதிகள் குறிப்பிடுகின்றன. 1815 இல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்னர் பக்தர்களின் பெரு முயற்சியினுல் 1965 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து 1981 ஆம் ஆண்டிலும் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்த ஆலயம் மிகக் குறுகிய காலத்தில் பிரபல்யம் அமைந்துள்ளது. 1978 ஆம் ஆண்டில் புதிய சித்திரத் தேர் ஒன்று நிர்ணிக்கப்பட்டது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமை, செவ்வாய்க்கிழமைகளிலும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அங்கு சென்று வழிபாடாற்றி நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் கன்னிப் பெண்கள், இளைஞர், முதியோர்களின் எண்ணிக்கை அளவிடற்கரிது. நித்திய நைமித்திய பூசைகள் சிறப்பாக ஆகம முறைப்படி நடைபெற்று வருகின்றன.

ஆவணி ஓணத் தினத்தன்று தீர்த்தம் நடைபெறக் கூடியதாக 12 நாட்களுக்கு மகோற்சவம் நடைபெறும். தற்பொழுது வானளாவிய இராஜகோபுரம் ஒன்றும் சிறப்பாக நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. திருமுறை மடத்தில் நாயன்மார் குருபூசையும், அன்னதான மடத்தில் அன்னதானமும், குருகுல பாடசாலையுங் கிரமமாக நடைபெற்று வருகின்றன. தற்பொழுது தீர்த்தக் கேணியும் கட்டப்பட்டுள்ளது. அடியார்கள் அமைதியாக நின்று அம்பாளைத் தரிசித்து நிற்கும் காட்சி குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

## கும்பழாவளைப் பிள்ளையார் கோவில்
## கும்பழாவளை, அளவெட்டி

மாருதப்புரவீகவல்லியால் கட்டப்பட்டது என்று வரலாறு உண்டு. போர்த்துக்கேயரால் இடிக்கப்பட்டது. ஆங்கிலேயர் காலத்தில் பழைய ஆதிமூல சிலாவிக்கிரகத்துடன் மேற்படி இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. கும்பழாவளைப் பிள்ளையார் கோவிலுக்குக் கோபுரங்கள் மூன்று. மூலமூர்த்தி — மாருதப் புரவீகவல்லியால் ஸ்தாபிக்கப்பட்ட பிள்ளையார் விக்கிரகம். பரிவாரமூர்த்திகள் — பார்வதி, பரமேஸ்வரர், சுப்பிரமணியர், சோமாஸ்கந்தர், நால்வர். தினமும் நான்குகாலப் பூசை. வைகாசியில் கொடியேறி பதினொரு தினங்களுக்கு உற்சவம் நடைபெற்றுப் பூரணைக்குத் தீர்த்தத் திருவிழா நடைபெறுகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

## அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோவில்
## கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை

சோழ ராசகுமாரியாகிய மாருதப்புரவீகவல்லியின் குதிரை முகம் பிறர் பார்வைக்கு மாறியும், சொந்தப் பார்வைக்கு மாறாமலும் இருந்ததைச் சிந்தித்து உணர்ந்து ஏழு இடங்களில் விநாயகர் கோவில்களை ஸ்தாபிப்பதாக நேர்த்திக்கடன் செய்து முதலாவதாக இந்த ஆலயத்தை நிர்மாணித்தாரென்று வரலாறு தெரிவிக்கின்றது. வைகாசிப் பௌர்ணமியைத் தீர்த்தமாகக் கொண்டு முந்திய பதினைந்து நாட்களுக்கு மகோற்சவம் நடைபெறுகிறது. திருவூஞ்சற் பாடல்களும் உண்டு. விநாயகர் கதை இருபத்தொரு நாளும், விசேட அபிடேக பூசையும், இருபதாம் நாள் கஜமுக சங்காரமும் இருபத்தோராம் நாள் பெருங்கதைப் படிப்பும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

### ஆனைவிழுந்தான் விக்நேஸ்வரர் இளவாலை
### இளவாலை வடக்கு, இளவாளை

மாருதப்புரவீகவல்லி தான் அமைத்த விநாயகர் ஆலயங்களைத் தரிசிக்கச் செல்லும்போது அவருடைய யானை இந்த ஆலயத்தில் விழுந்து வணங்கிய தலமாகையால் இந்தப் பெயர்பெற்றது. தல விருட்சங்கள் — அரசமரம், ஆலமரம். மூலமூர்த்தி — சுயம்புலிங்க வடிவுடன்கூடிய விநாயகர். பரிவாரமூர்த்திகள் — சண்டேசுவரர், நாகதம்பிரான், கோபாலர், வீரபத்திரர். ஆவணி உத்தரட்டாதி யில் பன்னிரண்டு நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறும். 1976 ஆம் ஆண்டு ஆனி உத்தரட்டாதியில் கும்பாபிஷேகம் நிறைவேறியது. புராணபடனமும் கோவிலில் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

### ஸ்ரீ விநாயகர் கோவில்
### அளகொல்லை, அளவெட்டி

மாருதப்புரவீகவல்லியால் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம். 1845 ஆம் ஆண்டில் இது பெருங்கோவிலாகியது. இதற்கான தோம்பும் உண்டு. இந்தியாவிலிருந்து இலங்கை வந்து கீரிமலையில் தீர்த்தமாடி தனது குதிரைமுகம் நீங்கப்பெற்ற மாருதப்புரவீகவல்லி மாவிட்ட புரத்தில் முருகப் பெருமானுக்கு கோவில் அமைத்த பின் ஸ்தாபித்த ஏழு விநாயகர் ஆலயங்களுள் அளகொல்லை விநாயகர் ஆலயமும் ஒன்று என வரலாறு கூறுகின்றது. மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்தி — வைரவர். தினமும் மூன்றுகாலப் பூசை. சித்திரை வரு டத்திற்குத் தேர்த்திருவிழா, பத்துத் தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெறும். விநாயகர் திருப்பதிகம், கூட்டுப் பிரார்த் தனைத் திருப்பாடல் ஆகியனவும் இவ்வாலயத்தில் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாவட்டம்:- யாழ்ப்பாணம்,**
**தெல்லிப்பளை.**

**ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்**
**பெருமாக்கடவை, அளவெட்டி**

சோழ அரசகுமாரி மாருதப்புரவீகவல்லி தனது சாபம் நீங்கத் தரிசித்த ஏழுவிநாயகர் கோவில்களுள் இவ்வாலயமும் ஒன்று. 1842 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இங்கு மூலவர் ஸ்ரீ சித்தி விநாயகர். பரிவாரத்திலே தேவியருடன் ஸ்ரீ சண்முகர், சந்தான கோபாலர், வைரவர், சண்டேஸ்வரர் உளர். நித்திய பூசை மூன்று காலம் நடைபெறுகின்றது. ஆனி மாதத்தில் மகோற்சவம் தேர், தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவேறுகின்றது. மாதச் சதுர்த்தி ஸ்கந்தசஷ்டி ஆகியவை இங்கு விசேட தினங்களாகும். ஆலயத்திற்கு முன் 10,000 சதுர அடி விஸ்தீரணமான தாமரைத் தடாகம் ஒன்று இங்கு உள்ளமை குறிப்பிடப்பட வேண்டியதொன்று. வித்தியாதரிசி, முகாந்திரம் சதாசிவ ஐயர் இயற்றிய அளவை – பெருமார் கடவை, விநாயகர் திருவூஞ்சற் பாவும் இங்கு உண்டு. யாழ்ப்பாண வைபவமாலையில் இப்பாடல் தொடர்பான குறிப்புக்கள் காணப்படுகின்றன.

**மாவட்டம்:- யாழ்ப்பாணம்,**
**தெல்லிப்பளை.**

**காயாத்துறை, ஆனந்தப் பிள்ளையார் கோவில்**
**பிரதான வீதி, காங்கேசன்துறை**

தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காங்கேசன்துறை வெளிச்ச வீட்டிலிருந்து தெற்கே $\frac{1}{8}$ மைல் தூரத்தில் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பு இவ்வாலயம் அமைந்துள்ளது.

இவ்வாலயம் பற்றிய வரலாறு தெட்சண கைலாய மான்மியம், யாழ்ப்பாண வைபவ மாலை ஆகிய நூல்களில் காணப்படுகின்றது.

ஆலய மூலஸ்தானத்தை சுயம்பு லிங்கமாகத் தோன்றிய பிள்ளையார் சிலை அலங்கரிக்கின்றது. திரிபுரசுந்தரி, ஸ்ரீ கதிரவேற்குமாரன் ஆகிய மூர்த்திகளும் இடம்பெற்றுள்ளனர்.

தினமும் இருகாலப் பூசை நடைபெற்று வரும் இவ்வாலயத்தில் வருடாவருடம் வைகாசி மாதத்தில் பூர்வபக்க மிருகசீரிட நட்சத்திரத்தில் திருவிழா ஆரம்பமாகின்றது. விநாயகர் சதுர்த்தி, வருடப் பிறப்பு, தைப்பூசம், மகாசிவராத்திரி முதலியனவும் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன. பண்ணிசை வகுப்பும் இங்கு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பழை.

## நீலியம்பனைப் பிள்ளையார் கோவில்
## நீலியம்பனை, மல்லாகம்

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் நீலி என்ற ஒரு வயதான அம்மையார் பனை மரத்தடியில் விநாயகரை வைத்துப் பூசித்து வந்ததாகவும், அற்புதங்கள் பல அங்கு நிகழ்ந்தமையால் பழங்குடி மக்கள் அங்கு கோவில் அமைத்து நீலியம்பனைப் பிள்ளையார் என்று நாமம் சூட்டியதாகவும் கர்ண பரம்பரைக் கதையுண்டு. சுமார் 100 வருடங்களுக்கு முன்னர் மல்லாகம் திரு. இ. நமசிவாயப் புலவர் அவர்களால் இயற்றப்பட்ட ஊஞ்சல் பாடல் வழக்கில் உள்ளது. ஆண்டு தோறும் ஆவணிச் சதுர்த்தியில் கொடியேறி உற்சவம் நடைபெற்று வருகின்றது. சதுர்த்தி, விநாயகர் சஷ்டி, சித்திரையில் சங்காபிஷேகம் ஆகியவை இங்கு ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. தலவிருட்சம் வில்வம். வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுப் பிரார்த்தனைகள், சொற்பொழிவுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பழை.

## காசி விநாயகர் கோவில் (காசிப் பிள்ளையார்)
## வீணைக்கடவை, தெல்லிப்பழை

1920 ஆம் ஆண்டுக்கு முன்னர் அமைக்கப்பட்ட ஆலயம். இதற்குத் திருவூஞ்சல் பாவும் உண்டு. காசியில் தீர்த்தமாடி விநாயகப் பெருமானின் விக்கிரகம் ஒன்றைக்கொண்டு வந்து இந்த ஆலயத்தில் வைத்து ஓர் அன்பர் பூசை செய்து வந்ததாகக் கூறப்படுகிறது.

1973 இல் கொடிஸ்தம்பம் அமைக்கப்பட்டபின் கொடியேற்ற விழா நடைபெறுகின்றது. சித்திரைச்சதயத்தை தீர்த்த தினமாகக் கொண்டு பத்து நாட்கள் மகோற்சவம் நடைபெறும். மூலமூர்த்தி — விநாயகர். பரிவாரமூர்த்திகள் — பழைய லிங்கம், எழுந்தருளி, விநாயகர், நாகதம்பிரான். மாதச் சதுர்த்தித் திருவிழா சிறப்புற நடைபெறும். சிறுவருக்குச் சமயக் கல்வி, பண்ணிசை வகுப்பு, இசை வகுப்பு ஆகியனவும் இங்கு நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

### சோழங்கராயர், விக்கினவிநாயகர் கோவில்
### கட்டுவன், தெல்லிப்பளை

மகாவித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்களால் பாடப் பெற்ற திருவூஞ்சற் பதிகம் உள்ளது. மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — நாகதம்பிரான், வைரவர். தினமும் இரு காலப் பூசை. தைத் திங்கள் அத்த நட்சத்திரத்தில் திருவிழா ஆரம்பித்து பதினோராம் நாள் அன்னதானத்துடன் முடிவடைகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

### ஸ்ரீ பிள்ளையார் கோவில்
### மானம்பராய், வசாவிளான், தெல்லிப்பளை

நூற்றியெழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப் பட்ட ஆலயம் இது. ஆரம்பத்தில் பிராய் மரத்தின்கீழ் வைத்து வணங்கப்பட்ட பிள்ளையாரை பின்னர் கொடித் தம்பப் பிள்ளை யாராக பிரதிஷ்டை செய்தனர். பல வருடங்களாக நடைபெற்ற வேலைகளின் பின்னர் 1971 இல் கும்பாபிஷேகம் நிறைவேற்றப் பட்டது. 1977 ஆம் ஆண்டிலிருந்து சித்திரை மாதத்தில் கொடி யேற்றத் திருவிழா ஆரம்பிக்கப்பட்டு தேர், தீர்த்த உற்சவங்களு டன் முற்றுப்பெறுகிறது. ஆனி உத்தரம், சிவராத்திரி, தைப்பூசம், விநாயகர் பெருங்கதை, ஆவணிச் சதுர்த்தி, சூரசங்காரம் போன்ற விழாக்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பழை.

**குருக்கள் கிணற்றடி விநாயகர் கோவில்**
**கணேஸ்வரம், அளவெட்டி**

பல வருடங்களுக்கு முன்னர் சம்பந்தஞானி என்ற இளவரசர் சமாதியடைந்த இடம். அந்தக் காலத்தில் குருக்கள் ஒருவர் கிணறு ஒன்றைச் தோண்டியதாகவும், அதிலிருந்து பிள்ளையாருடைய விக்கிரகம் கண்டெடுக்கப்பட்டதாகவும், கூறப்பட்டு வருகிறது. அதனல் குருக்கள் கிணற்று ஆலயம் என்ற பெயர் வழங்கப்பட்டது. மூலமூர்த்தி — விநாயகர், செப்பினலான அங்கி உண்டு. பரிவார மூர்த்திகள் — சிவன், அம்மன், முருகன். தினமும் மூன்று காலப் பூசை. ஸ்தல விருட்சமாக ஆல், அரசு, வேம்பு மூன்றும் ஆலயத்திற்கு முன்னல் இணைந்துள்ளன. காவல் தெய்வம் வைரவர். 1978 இல் குடமுழுக்கு விழா நடைபெற்றது. வருடாந்த மகோற்சவம், தேர், தீர்த்தத்துடன் முடிவுறுகின்றது. மாதச் சதுர்த்தியும் இந்துசமய விழாக்களும் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பழை.

**கற்பக விநாயகர் கோவில்**
**வரத்தலம், பன்னலை, தெல்லிப்பழை**

மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவாரமூர்த்திகள் — நவக்கிரகம், விஷ்ணு, வைரவர். காலையும் மாலையும் பூசை. ஆவணி அமாவாசையை அந்தமாகக் கொண்டு பன்னிரண்டு நாட்கள் மகோற்சவம் உளது. விநாயக விரதமும் அனுஷ்டிக்கப்படுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பழை.

**தீர்த்தக்கரைப் பிள்ளையார் கோவில்**
**கீரிமலை**

மூலமூர்த்தி — சித்திவிநாயகர். பரிவார மூர்த்திகள் — பால முருகன், நாகதம்பிரான், வைரவர். மூன்று காலப் பூசை. ஆவணிச் சதுர்த்திக்கு முன்னைய பத்து நாட்களுக்கு அலங்காரத் திருவிழா இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

### கொல்லன்கலட்டி, பிள்ளையார் கோவில்
### பலாலி வடக்கு, காங்கேசன்துறை

மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவாரமூர்த்திகள் — வைரவர், முருகன், சண்டேசுவரர். மூன்றுகாலப் பூசை. ஆவணித் திருவோணத்தில் கொடியேறிப் பத்துத் தினங்களுக்குத் திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

### தையிட்டி, அரசடி சித்திவிநாயகர் கோவில்
### தையிட்டி, காங்கேசன்துறை

300 ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டாம் ராஜேந்திர சோழ மன்னரின் மந்திரி, வரராசசிங்கன் இந்தியாவிலிருந்து கொண்டு வந்த லிங்கத்தை அரசமரத்தின் கீழ் வைத்து வணங்கி வந்தார் என்பதாக வரலாறு. சங்கிலி மன்னன் இவ்வாலயத்தைக் கட்ட எடுக்கப்பட்ட நடவடிக்கை அவனது வீழ்ச்சியால் கைவிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. மூலமூர்த்தி — லிங்கம். பரிவார மூர்த்தி — வைரவர். தினமும் காலைப் பூசை உண்டு. ஆவணிச் சதுர்த்தி, தைப்பொங்கல், வருடப்பிறப்பு போன்ற விசேட தினங்களில் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

### மாவிட்டபுரம், ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
### மாவிட்டபுரம், தெல்லிப்பளை

ஏழாம் நூற்றூண்டில், தென்னகத்து இளவரசி மாருதப்புரவீக வல்லி தனது குன்ம நோயையும் குதிரைமுகத்தையும் நீக்கக் கீரிமலைப் புண்ணிய தீர்த்தத்திலே நீராடி, மாவிட்டபுரத்தில் கோவில் கொண்டருளியிருக்கும் முருகப்பெருமானை வழிபட்டுத் தனது குன்ம நோயையும், தனக்கேற்பட்ட பெருங்குறையையும் நீக்கிய திருத்தலமே மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலாகும். ஆதலால் இவ்விடத்திற்குத் ''துரகானன விமோசனபுரி'' என்ற பெயர் ஏற்பட்டது. இதுவே தமிழில் மா விட்ட புரம் ஆகும்.

இவ்வாலயம் சிறந்தமுறையிற் கட்டப்பட்டு, இதற்கான விக்கிரகங்கள் சிதம்பரத்திலே தில்லைமூவாயிரவருள் ஒருவரான பெரிய மனத்துள்ளார் அவர்களால் இலங்கைக்கு வருவிக்கப்பட்டது. ''காங்கேயன்'' விக்கிரகம் வந்திறங்கியமையால் ''காங்கேசன் துறை'' என்ற காரணப்பெயரும் துறைமுகத்துக்கு ஏற்படலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரகங்கள் உரிய முறையில் பிரதிஷ்டை செய்யப்பட்டு கி.பி. 795 ஆம் ஆண்டு, ஆனி உத்தர நட்சத்திரத்தில் மகாகும்பாபிஷேகம் சிறப்புற இடம்பெற்றது. இத்தீக்ஷிதர் பரம்பரையினரே இன்றும் இவ்வாலயத்தின் சகல கருமங்களேயும் செய்து வருகின்றனர்.

மாவிட்டபுரம், கந்தசுவாமி கோவிலில் தைப்பூசத்தை இறுதியாகக் கொண்டு லக்ஷசார்ச்சனை நடைபெறுகின்றது. காலேயில் நடைபெறும் அர்ச்சனையின்போது கல்லூரி மாணவர்கள் திருப்புகழ் அஞ்சலி செய்கின்றனர். மாலேயில் அர்ச்சனேயின்போது நாதாஞ்சலி இடம்பெறுகின்றது. இறுதிநாள் அன்று சகஸ்ர சங்காபிஷேகமும், ஷண்முகர் நடனமும் இடம்பெற்று, தேவியருடன் ஸ்ரீ ஷண்முகர் தேர் மீதமர்ந்து பவனி வருவார். மகோற்சவம் ஆடி அமாவாசையை அந்தமாகக்கொண்டு இருபத்தைந்து தினங்களுக்கு இடம்பெறுகின்றது. இதிலே ஐந்தாம் திருவிழா ஸ்ரீ ஷண்முகர் நடனமும், சப்பரத் திருவிழாவிலே பிரமாண்டமான சப்பறமும் தேர்த்திருவிழாவிலே ஐந்து தேர்களில் சுவாமி வீதிவலம் வருதலும் கண்கொள்ளாக்காட்சியாக அமைவது குறிப்பிடத் கூடியதொன்று. கந்தசஷ்டி யாகத்துடன் கூடியது. சூரன் போரிலே ஸ்ரீ ஷண்முகரும், சூரனும் தத்தம் தேர் மீதமர்ந்து போர் புரியுங்காட்சி மிகச் சிறப்பானது.

இங்கு நித்திய பூசைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. சுக்கிர வார உற்சவம், மாத உற்சீவம், ஆகியனவும் உண்டு. கொடித்தம்பம் வெள்ளியிலுலானது. கந்தபுராணத்திற் கூறப்படும் ''இந்திர மயில்'' இங்கு வாகனமாக உள்ளது. தலவிருட்சம் ''காஞ்சிமா'' ஆகும். ஆலயத்தின் மேற்குக் கோபுர வாசலில் புராதன ராஜகோபுரம் வானளாவி நிற்கின்றது. இங்கு மூன்று வீதிகள் உள. புராணபடனம் ஆண்டுதோறும் சிறப்பாக இடம்பெற்று வருகிறது.

**மாவட்டம்:- யாழ்ப்பாணம்,**
**தெல்லிப்பளே.**

### ஸ்ரீ முருகன் கோவில்
### மார்பு நோய் வைத்தியசாலே, காங்கேசன்துறை

மூலமூர்த்தி — வேல். பரிவார மூர்த்திகள் — பிள்ளேயார், வைரவர். தினசரி சாயரட்சைப் பூசை நடைபெறும். வெள்ளிக்கிழமை தோறும் உதய காலப் பூசை உண்டு. தைப்பொங்கல், வருடப் பிறப்பு, நவராத்திரி, திருவெம்பாவை போன்ற விசேட தினங்களில் விசேட பூசை. ஆலயம் 1952 இல் ஆரம்பிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

### ஸ்ரீ முருகன் கோவில்
### மயிலிட்டிக்கரை, மயிலிட்டி

சுமார் 180 ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டது. ஊஞ்சல் பாடலுண்டு. முருகையன் கோவில் என்றும் வழங்கப்படுகிறது. மூலமூர்த்தி — வள்ளி தெய்வயானை சமேத முருகப் பெருமான். பரிவாரமூர்த்திகள் — விக்நேஸ்வரர், வைரவர். காலை, மாலை பூசைகள். வைகாசி விசாகப் பொங்கல் நடைபெறும். பதினொரு நாட்களுக்கு அலங்கார உற்சவம் நடைபெற்று வைகாசிப் பௌர்ணமி தினத்தன்று தீர்த்தத்துடன் முடிவடையும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

### கவுணவத்தை வைரவர் கோவில்
### கருகம்பானை

மூலமூர்த்தி — வைரவர். பரிவார மூர்த்திகள் — காளி, நாகதம்பிரான், வைரவர். தினமும் உச்சிக் காலப் பூசை. தை மாதத்தில் அலங்காரத் திருவிழா. வைகாசி விசாகத்தன்று பொங்கல் நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

### நாவலடி வைரவர் கோவில்
### காடிவளை, இளவாலை

நாவல் மரத்தடியில் தோன்றிய மூர்த்தி. மூலமூர்த்தி — திரிசூலம். பரிவார மூர்த்திகள் — சந்தானகோபாலர், நாகதம்பிரான். நித்திய பூசை நடைபெறுகின்றது. வருடாந்தப் பொங்கலும் இங்கு உளது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

### ஒல்லுடை ஞானவைரவர் கோவில்
### காடிவளை, இளவாலை

ஆவரச மரத்தடியில் உற்பத்தியாகிக் கோவில் கொண்டார் இவ்வாலய மூலவர். மூலமூர்த்தி—வைரவர். பரிவார மூர்த்திகள் — விநாயகர், நாகதம்பிரான். தினசரி ஒரு காலப் பூசை. ஆனி அவிட்டத்திலிருந்து பத்து நாட்களுக்கு அலங்கார உற்சவம். சித்திரைக் கதை, திருவெம்பாவை தினங்களில் விசேட பூசை உளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

**''ரிஷிஈஸ்வரம்'' பாலசுப்பிரமணியர் கோவில்**
**பன்னாலை, தெல்லிப்பளை**

''முத்து ரிஷி'' யால் 1916 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. தென்னிந்தியாவிலிருந்து அவரது குருவின் அஸ்தி கொண்டு வரப்பட்டு அவரது ஞாபகார்த்தமாக இவ்வாலயம் ஸ்தாபிக்கப்பட்டது. வரலாற்றுடன் கூடிய ஊஞ்சற் பாடலுண்டு. மூலமூர்த்தி — வள்ளி தேவசேனா சமேத பால சுப்பிரமணியர். மூன்று காலப் பூசை உண்டு. கந்தசஷ்டி ஆரம்ப தினத்தை முதல் தினமாகக் கொண்டு கொடியேறி ஆறும் நாள் தேர்த் திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

**ஞானவைரவ சுவாமி கோவில்**
**பொற்கலம்தம்பை, தெல்லிப்பளை தென்மேற்கு**

1740 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாறு. போர்த்துக்கேயர் காலத்துக்கு முந்தியது எனக் கருதப்படுகிறது. சுன்னாகம் குமாரசாமிப் புலவர் பாடிய ஞானவைரவர் ஊஞ்சற் பாட்டுண்டு. மூலமூர்த்தி—வைரவர். பரிவார மூர்த்திகள்—பிள்ளையார், முருகன். விசேட தினங்களில் திருவிழா. 1886 ஆம் ஆண்டு கோவிற் பதிவேட்டில் பொற்கலம் ஞானவைரவர் எனப் பதியப்பட்டுள்ளது.

மாவட்டம்:- யாழ்ப்பர்ணம்,
தெல்லிப்பளை.

**ஸ்ரீமந் நாராயணசுவாமி கோவில்**
**கீரிமலை, காங்கேசன்துறை**

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் அமைந்துள்ள இந்தச் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயம் கீரிமலையில் அமைந்திருக்கிறது. அலங்கார உற்சவம் ஆவணி மாதத்தில் பன்னிரண்டு நாட்களுக்கு நடைபெறும். ஆலயத்தில் உள்ள விக்கிரகம், அசரீரி பெற்று தோண்டியெடுக்கப்பட்ட மிகப் பழைய விக்கிரகம். ஆலயத்திற்கு அண்மையில் மாருதப்புரவீகவல்லி தீர்த்தமாடி குதிரை முகம் மாறிய தீர்த்தக் குன்றும், குகை, பன்னீர் மரம் முதலியனவும் பிரசித்தி பெற்று விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

### ஸ்ரீ காளியம்மன் கோவில்
### ஊரியவத்தை, மடத்தடி, மாவிட்டபுரம், தெல்லிப்பளை

மூலமூர்த்தி — ஸ்ரீ காளியம்பாள். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், வைரவர். தினசரி இருகாலப் பூசை. வைகாசி மாதத்தில் பதினைந்து நாட்கள் அலங்காரத் திருவிழா நடைபெறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

### ஸ்ரீ காளியம்மன் கோவில்
### கொல்லன்சீமா, தெல்லிப்பளை

மூலமூர்த்தி — சிவனோடு சக்தி ஸ்ரீ காளியம்பாள். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், வைரவர், வீரபத்திரர், பத்திரகாளி. தினசரி இரண்டு காலப் பூசை. வருடத்திற்கு ஒரு முறை அலங்காரத் திருவிழா நடைபெறுகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### கடற்கரை வீதி, கீரிமலை

மூலமூர்த்தி — முத்துமாரி அம்மன், பரிவாரமூர்த்திகள் — விநாயகர், காத்தவராயர், முருகன், வைரவர். நித்திய பூசை உண்டு. மாசி மகத்தன்று தீர்த்த உற்சவம் நடைபெறக் கூடியதாக பன்னிரண்டு நாட்களுக்கு உற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

### கண்ணகியம்மன் கோவில்
### வீரமாணிக்கதேவந்துறை, மயிலிட்டி

மயில்வாகன ஐயரால் பாடப்பெற்ற ஊஞ்சற் கவிதைகள் இவ்வாலயத்திலே உள்ளன. மூலமூர்த்தி — பல்லவ காலத்துச் சிலா விக்கிரகமான கண்ணகி. பரிவார மூர்த்திகள் — சிவன், அம்மன், வைரவர். தினமும் மூன்றுகாலப் பூசை. பதினைந்து நாட்களுக்கு அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது. கண்ணகி வரலாறு சிற்பவடிவில் ராஜகோபுரத்தை அலங்கரிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

**கண்ணகை அம்மன் கோவில்**
**குருந்து வீதி, தையிட்டி தெற்கு, காங்கேசன்துறை**

இவ்வாலயம் போர்த்துக்கீசர் ஆக்கிரமிப்பின்போது இடிக்கப்பட்டது. பின்பு கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்களை வைத்து ஊர் மக்கள் கண்ணகை ஆலயம் என்று பெயர் சூட்டி வழிபாடு செய்தனர். தினமும் ஒருகாலப் பூசை. திருவெம்பாவை, நவராத்திரி, சிவராத்திரி போன்ற விசேட காலங்களில் விசேட வழிபாடுகள் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
தெல்லிப்பளை.

**தூதுலிடைக் கண்ணகியம்மன் கோவில்**
**தையிட்டி, காங்கேசன்துறை**

1825 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாறு. மூலமூர்த்தி — கண்ணகை அம்மன். பரிவாரமூர்த்திகள் — பிள்ளையார், நாகதம்பிரான், வைரவர். நித்திய பூசை உண்டு. விசேட தினங்களில் விசேட உற்சவங்கள் நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

**பருத்தித்துறைச் சிவன்கோவில் (பசுபதீஸ்வரர் கோவில்)**
**புலோலி கிழக்கு, பருத்தித்துறை**

தினமும் ஐந்துகாலப் பூசை. ஆனியில் சிவன் மகோற்சவம். மூலமூர்த்தி — பசுபதீஸ்வரர். பரிவார மூர்த்திகள் — தக்ஷிணாமூர்த்தி, பத்திரகாளி, பஞ்சலிங்கம், சந்தானகோபாலர். 1782 இல் கட்டத் தொடங்கி 1814 இல் கட்டிட வேலை முடிவுற்றது. திருவூஞ்சற் பாடல்கள் உள.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி—பருத்தித்துறை

சிவன் கோவில்
காங்கேசன்துறை—பருத்தித்துறை வீதி,
வல்வெட்டித்துறை

இங்கு பிள்ளையார், முருகன், விஷ்ணு, சோமாஸ்கந்தர், நடேசர் தண்டாயுதபாணி, வைரவர் ஆகிய பரிவார மூர்த்திகள் உளர். தினமும் ஆறுகாலப் பூசையும் பங்குனியில் சிவன் திருவிழா 18 நாட்களுக்கும், அம்மன் திருவிழா ஆடியில் 10 நாட்களுக்கும் நடைபெறும். இலங்கையின் புராதன சிவாலயங்களுள் இதுவும் ஒன்று.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

முச்சம்புலவு சிவன்கோவில்
வல்லிபுரக்குறிச்சி

காலையும் மாலையும் பூசை நடைபெறும். வல்லிபுர ஆழ்வார் கோவில் திருவிழா உற்சவ காலத்தில் அடியார்களுக்கு மூன்று நாட்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

மருதடி தான்தோன்றீஸ்வரர் கோவில்
வல்லிபுரக்குறிச்சி

காலையும், மாலையும் பூசை நடைபெறுகிறது. சித்திரை மாதத்தில் சிவன் திருவிழாவும், வைகாசி மாதத்தில் அம்மன் திருவிழாவும் நடைபெறுகிறது. மாசி மாதம் மாமாங்கத் தீர்த்தம் நடைபெறுகிறது. விசேட காலங்களில் விசேட திருவிழாக்கள் உண்டு. கந்த சஷ்டி, திருவெம்பாவை, பிள்ளையார் கதைக் காலங்களில் விசேட பூசைகள் உள்ளன. புராண படனமும் உளது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

ஸ்ரீ முதலியம்பாள் கோவில்
புலோலி தெற்கு

மூலமூர்த்தியாக ஸ்ரீ முதலியம்பாள் வீற்றிருக்க விநாயகர், முருகன், வைரவர் ஆகிய மூர்த்திகள் பரிவாரத்தில் உள்ளனர். தினமும் இருகாலப் பூசை உளது. மாசிமகத்தை இறுதியாகக் கொண்டு முதற் 19 நாட்களுக்கும் மகோற்சவம் நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

காளிவயல் வீரகத்திப் பிள்ளையார் கோவில்
சூடத்தனை மேற்கு, காளிவயல், பருத்தித்துறை

தினமும் இரண்டுகாலப் பூசை. சிவராத்திரி, கந்தசஷ்டி உற்சவங்கள் சிறப்பானவை. பரிவாரமூர்த்திகள் — முருகன், வைரவர், முத்துமாரியம்மன். பெருங்கதைப் படிப்பும் இங்கு உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோவில்
அம்பன், பருத்தித்துறை

தினமும் ஒருகாலப் பூசை. ஆவணிச் சதுர்த்தி, பிள்ளையார் பெருங்கதை சிறப்பான உற்சவ நாட்கள்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவில்
நெடியகாடு, வல்வெட்டித்துறை

1824 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. திருவூஞ்சல் பாட்டுக்கள் உண்டு. தினமும் நான்குகாலப் பூசை. ஆவணியில் மகோற்சவம் நடைபெறுகிறது. பரிவாரமூர்த்திகள் — முருகன், நாகதம்பிரான், வைரவர்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

அருள்மிகு விநாயகர் கோவில்
மந்திகை வைத்தியசாலை, பருத்தித்துறை

11.09.80 இல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. தினமும் பூசை நடைபெறுவதுடன் விசேட காலங்களில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

அத்தியடிப் பிள்ளையார் கோவில்
அத்தியடி, பருத்தித்துறை

தினமும் இரண்டுகாலப் பூசை. அலங்கார உற்சவம் 10 நாள். வைகாசி விசாகத்தன்று தீர்த்தம். பரிவார மூர்த்திகள் — முருகன், வைரவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### குளக்கோட்டு விநாயகர் கோவில்
### நுணுவில், துன்னாலை தெற்கு

தினமும் மூன்றுகாலப் பூசை. வைகாசி மாதத்தில் கொடியேறி பௌர்ணமியன்று தீர்த்தம் நடைபெறும். மாதங்களில் வரும் விசேட தினங்களுக்கு விசேட திருவிழாக்கள் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### குருக்கட்டுப் பிள்ளையார் கோவில்
### வல்லிபுரக்குறிச்சி

காலை, மாலை பூசை நடைபெறுகிறது. கந்தசஷ்டி, பிள்ளையார் கதை, திருவெம்பாவை போன்ற காலங்களில் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறும். புராண படனமும் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோவில்
### ஆத்தியவத்தை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை

இருகாலப் பூசை. மூலமூர்த்தி – முருகன். பரிவாரமூர்த்திகள் – வைரவர், நாகதம்பிரான்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### கணக்கிலாவத்தை ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
### தும்பளை, பருத்தித்துறை

நூறு வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டது. பங்குனி மாதத்தில் திருவிழா நடைபெறுகிறது. விசேட காலங்களில் விசேட பூசை வழிபாடுகள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
### உப்புக்கிணற்றடி, பொலிகண்டி, பருத்தித்துறை

மூலமூர்த்தி — சித்திவிநாயகர். தினமும் மூன்றுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆவணி மாதப் பூரணையை இறுதியாகக் கொண்டு பத்து நாட்கள் வருடாந்த உற்சவம் நடைபெறுகிறது. அலங்கார உற்சவமும் வருடாவருடம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### ஆலடிப் பிள்ளையார் கோவில்
### கல்லூரி வீதி, பருத்தித்துறை

தினமும் மூன்றுகாலப் பூசை. வருடாவருடம் பத்து நாட்களுக்குத் திருவிழா நடைபெற்று ஆடிப் பூரத்தன்று இரதோற்சவமும், தீர்த்தோற்சவமும் நடைபெறுகின்றன. பரிவாரமூர்த்திகள் — சுப்பிரமணியர், வைரவர், நாகதம்பிரான், நவக்கிரகங்கள் ஆகியோராவர்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### வல்லியானந்தப் பிள்ளையார் கோவில்
### துன்னாலை வடக்கு

விநாயகப் பெருமானுக்குத் தினமும் மூன்றுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. பங்குனி அமாவாசைத் திதியில் தீர்த்தம் நடைபெற முதற் பத்து நாட்களும் மகோற்சவங்கள் உள. 1870 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### கனகராவளவுப் பிள்ளையார் கோவில்
### சாவகச்சேரி வீதி

மூலமூர்த்தி — பரமானந்தக் கணபதி. தினமும் மூன்றுகாலப் பூசைகள் உள. மணவாளக்கோல விழா ஆவணி மூலத்தில் சிறப்புற நடைபெற்று வருகின்றது. புராண படனம் ஆனியில் ஆரம்பமாகி ஆவணியில் முடிவுறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### ஆயிலடிப் பிள்ளையார் கோவில்
### குடத்தனை மேற்கு, குடத்தனை

திங்கள், வெள்ளி நாட்களில் பூசை நடைபெறும். சித்திரா பௌர்ணமியன்று பொங்கலும் விசேட பூசையும் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### பெரியவளவு, ஸ்ரீ வரதவிநாயகர் கோவில்
### தும்பளை மேற்கு, பருத்தித்துறை

தினமும் இருகாலப் பூசை. மணவாளக் கோலவிழா வைகாசியில் உளது. ஆவணிச் சதுர்த்தி, விநாயகர் சஷ்டி காலங்களில் திரு விழாக்கள் நடைபெறும். திருவூஞ்சற் பதிகமும் இங்கு உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### மாயக்கைப் பிள்ளையார் கோவில்
### அல்வாய் வடக்கு, அல்வாய்

தினமும் மூன்றுகாலப் பூசை. ஆவணியில் பௌர்ணமியன்று தீர்த்தம் வரக்கூடியதாக பத்து நாட்களுக்குத் திருவிழா நடை பெறும். முருகன், நாகதம்பிரான், வைரவர் ஆகியோர் பரிவார மூர்த்திகள்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### நெடியகாடு பிள்ளையார் கோவில்
### பருத்தித்துறை

தினமும் நான்கு காலப் பூசை. ஆவணிப் பூரணையன்று தீர்த்தம் வரக்கூடியதாகப் பத்துத் தினங்களுக்குத் திருவிழா உளது. மாதச் சதுர்த்தி, கார்த்திகைத் திருநாள், திருவெம்பாவை, பிள்ளையார் கதை, என்பன சிறப்பான தினங்களாகும். பரிவாரமூர்த்திகள் — முருகன், நடேசர், வைரவர், சண்டேஸ்வரர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

## ஸ்ரீ தெணிப்பிள்ளையார் கோவில்
## 2 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை

தினமும் இரண்டு காலப்பூசை. மூலமூர்த்தி பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — முருகன், வைரவர். தைப்பூசத்தில் தொடங்கி அலங்கார உற்சவம் பத்து நாட்களுக்குச் சிறப்புற நடைபெறு கின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

## கப்பலுடையவர் (விநாயகர்) கோவில்
## கப்பலுடையவர் ஆலய வீதி,
## வல்வெட்டித்துறை, பருத்தித்துறை

நித்திய பூசை நான்கு காலங்களுக்கு உளது. ஆடி அமாவாசை யில் தீர்த்தம் வரக் கூடியதாகப் பத்துத் தினங்களுக்குத் திருவிழா நடைபெறுகின்றது. தீர்த்தம் நடைபெற்று, இரண்டாம் நாள் தெப்போற்சவம் சமுத்திரத்தில் நடைபெறுகின்றது. மாதச் சதுர்த்தி, ஆவணிச் சதுர்த்தி சிறப்பானவை.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

## தச்சன் கொல்லைப் பிள்ளையார் கோவில்
## பிரதான வீதி, தொண்டைமாறு

தினமும் மூன்று காலப் பூசை. புரட்டாதி அமாவாசை கழிந்த ஆறுவது நாள் கொடியேறிப் பத்து நாட்கள் திருவிழா நடைபெறும். வீரபத்திரர், வைரவர் ஆகியோர் பரிவார மூர்த்திகள். இங்கு விசேட உற்சவங்களும் சிறப்புற நடைபெறுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

## கொட்டடிச் சித்தி விநாயகர் கோவில்
## பிரதான வீதி, பருத்தித்துறை

தினமும் ஐந்து காலப் பூசை உளது. சிவராத்திரி தினத்தன்று தேர்த் திருவிழா நடக்கக்கூடியதாக பத்துத் தினங்களுக்கு உற் சவம் நடைபெறுகின்றது. பரிவார மூர்த்திகளாக முருகன், சிதம் பர நடேசர், நவக்கிரகம், வைரவர் ஆகிய மூர்த்திகள் உளர். பெரிய புராண, கந்த புராண விரிவுரைகள் திருவிழாக் காலங்களில் உளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

**சின்னப் பிள்ளையார் கோவில்**
**வி. மு. வீதி, பருத்தித்துறை**

தினமும் மூன்றுகாலப் பூசை உண்டு. அலங்கார உற்சவம் பத்து நாட்களுக்கு நடைபெறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

**தம்புருவளை ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்**
**தும்பளை, பருத்தித்துறை**

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் இந்த ஆலயம் கட்டப்பட்டது. தலவிருட்சம் ஆலமரம். இந்த மரத்தின் கீழ் கொட்டிலில் விநாயகரை வைத்து ஆதியில் வழிபட்டனர். இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட பெரிய விநாயகர் விக்கிரகம் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. கடைசியாக 1972 ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. ஆலயத்திற்கென கந்தபுராண ஏடு, விநாயக புராண ஏடு என்பன உண்டு. அந்தந்தக் காலங்களில் மகாமகத் தீர்த்தமும், அர்த்தோதயத் தீர்த்தமும், மகோதயத் தீர்த்தமும் நடைபெற்றுள்ளன. திருவிழாக்கள், அபிஷேகங்கள், புராணபடனம் ஒழுங்குமுறைப்படி நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

**ஸ்ரீ பிள்ளையார் கோவில்**
**கரையூர் வீதி, குடத்தனை**

ஸ்ரீ பிள்ளையார் ஆலயத்தில் நித்திய பூசைகளும் விசேட தினங்களில் விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

செல்வச் சந்நிதி, ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
செல்வச் சந்நிதி, தொண்டமாறு

தினமும் மூன்றுகாலப் பூசையும் வெள்ளிக்கிழமைகளில் நான்கு காலப் பூசைகளும் உள. ஆவணியில் பூர்வ பக்கப் பிரதமைத் திதியில் உற்சவம் ஆரம்பமாகி ஆவணிப் பௌர்ணமியில் முடிவுறுகின்றது. மூலஸ்தானத்தில் வேலும், பரிவாரத்தில் பிள்ளையார், வள்ளியம்மன், நாகதம்பிரான் முதலிய மூர்த்திகளும் உளர். பரதகுல வம்சத்தவர்களால் மௌன (வாய்கட்டி) முறையில் பூசைகள் நடைபெறுகின்றன. மூர்த்திகரமும், தவப்பெருமையும் கொண்ட இவ்வாலயத்தை தொண்டமாறு (தீர்த்தம்) தழுவிச் செல்கிறது. பல அன்னதான மடங்களைக் கொண்டது. தினமும் அன்னதானம் நடைபெறுவதால் 'அன்னதானக் கந்தன்' என்ற சிறப்புப் பெயரையும் கொண்டது இவ்வாலயம். செல்வச் சந்நிதி முருகன் திருப்பள்ளியெழுச்சி, பிள்ளைத்தமிழ், திருவூஞ்சல், அகவல், எச்சரிக்கை, பராக்கு மங்களம் முதலிய திருப்பதிகங்கள் முருகன்பால் பாடப்பட்டு உள்ளன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

முருகையா கோவில்,
புலோலி தெற்கு,

தினமும் மூன்றுகாலப் பூசை. பரணிப் பூசை விசேடமாக நடைபெறுகிறது. பிள்ளையார், வைரவர் பரிவார மூர்த்திகளாக உளர்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

கந்தவனம், சுப்பிரமணிய சுவாமி கோவில்
பொலிகண்டி, வல்வெட்டித்துறை

மூலமூர்த்தி — வள்ளி தெய்வானை சமேத ஆறுமுகசுவாமி. பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், நாகதம்பிரான், சந்தான கோபாலர், நால்வர், கிருஷ்ணர். ஐந்துகாலப் பூசைகள் தினமும் நடைபெறுகின்றன. ஆனி மாதத்தில் வரும் அமாவாசையில் கொடியேறி பதினைந்து நாட்கள் உற்சவம் நடைபெற்று பௌர்ணமியன்று தீர்த்தத் திருவிழா இடம்பெறுகின்றது. ஐப்பசிக் கந்த சஷ்டியின்போது ஏழு நாட்கள் திருவிழா நடைபெற்று தீர்த்தத்துடன் முடிவடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

முருகையன் கோவில்
நாகர் கோவில் வடக்கு, குடத்தனை

மூலமூர்த்தி — வேல். தினமும் மூன்றுகாலப் பூசை. கந்தசஷ்டி உற்சவம் இங்கு சிறப்பானது. பிள்ளையார், ஐயனார், வைரவர் ஆகியோர் பரிவார மூர்த்திகளாக உள்ளனர்.

மாவட்டம்:- யாழப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

இணவொல்லை ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
துன்னாலை வடக்கு, துன்னாலை

தினமும் காலையில் பூசை நடைபெறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
அம்பன், பருத்தித்துறை

தினமும் ஒருகாலப் பூசை ஆனி மாதத்தில் கந்தபுராணத் திருவிழா வெகு விமரிசையாக நடைபெறுகிறது. கந்தபுராண படனம் இங்கு உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

ஸ்ரீ முருகையன் கோவில்
வல்வெட்டி, வல்வெட்டித்துறை,
பருத்தித்துறை

தினமும் மூன்றுகாலப் பூசை. வைகாசி மாதத்தில் பத்து நாள் திருவிழா உண்டு. 200 ஆண்டு காலப் பழமை வாய்ந்த தலம் இது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

மருதடி ஞானவைரவர் கோவில்
பிரதான வீதி, பருத்தித்துறை

நித்திய பூசையோடு வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### ஆதி வைரவர் கோவில்
### ஆதிகோவிலடி,
### வல்வெட்டித்துறை

தினமும் இரண்டு காலப் பூசைகள் உள்ளன. வைரவர் பொங்கல் வருடாவருடம் சிறப்பாக நடைபெறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### நெற்கொழு வைரவர் கோவில்
### கெருடாவில் கிழக்கு, கொம்மந்துறை

தினமும் மூன்றுகாலப் பூசை. ஆடி அமாவாசை வந்து ஐந்தாம் நாள் கொடியேறிப் பத்து நாட் திருவிழா நடைபெறும். காளி அம்மன் பரிவார மூர்த்தி. விசேட காலங்களில் திருவிழாக்கள் உண்டு. தோட்டங்களின் காவல் தெய்வமாக வைரவர் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### ஸ்ரீ சந்திரசேகர வீரபத்திர சுவாமி கோவில்
### உடுப்பிட்டி

இவ்வாலயம் சந்திரசேகர மாப்பாண முதலியினால் ஸ்தாபிக்கப்பட்டது. தினமும், மூன்றுகாலப் பூசை உளது. ஆனிப் பௌர்ணமியைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு வருடாந்த உற்சவம், பொங்கல் ஆகியன நடைபெறுகின்றன. சின்னத்தம்பிப் புலவரின் ஊஞ்சற்பா இங்கு உளது. பிள்ளையார் கதை படிக்கப்படுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### வீரபத்திரர் கோவில்
### கந்தவனச் சந்தி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை

மூலமூர்த்தி — வீரபத்திரர். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், காத்தவராயர். தினமும் இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. மாசி அமாவாசையின் பின் ஐந்தாம் நாள் கொடியேற்ற விழா ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் (வல்லிபுரக் கோவில்)
### வல்லிபுரக்குறிச்சி, துன்னாலை, வடக்கு

இவ்வாலய வரலாறு பற்றி ஸ்கந்தபுராண தக்ஷிணகைலாய மான்மியத்தில் ''வல்லிபுர வைபவ'' அத்தியாயத்திற் குறிப்புக்கள் உள.

சமுத்திரத்தை அடுத்துள்ள இவ்வாலயம் வெள்ளைமணற் சூழலில் உள்ளது. மூலஸ்தான, பரிவாரமூர்த்திகளுக்கான மண்டபங்கள் யாவும் கண்கவர் சிற்ப வேலைப்பாடமைந்தவை.

மஹாவிஷ்ணுவின் படைக்கலமான ''சக்கரம்'' மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. பரிவாரமூர்த்திகளாக விநாயகர், நாகதம்பிரான், நாச்சிமார், ஆஞ்சனேயர், நவக்கிரகம் ஆகியோர் வீற்றிருக்கின்றார்கள். தினமும் ஆறுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. மாதாமாதம் ஏகாதசி சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. வருடாந்த உற்சவங்களில் கும்பாபிஷேக தினம் கிருஷ்ண ஜயந்தி, சூரன்போர், வைகுண்ட ஏகாதசி முதலியன சிறப்பான உற்சவ தினங்கள் ஆகும்.

வல்லிபுர ஆழ்வாரின் மகோற்சவமானது புரட்டாதி மாத அமாவாசையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. மிக முக்கிய திருவிழாக்களாக 8 ஆம் திருவிழா குருக்கட்டு விநாயகர் தரிசனம், 9 ஆம் திருவிழா வெண்ணெய், 10 ஆம் திருவிழா துயில், 11 ஆம் திருவிழா பாம்பு, 12 ஆம் திருவிழா கஞ்சன், 13 ஆம் திருவிழா வேட்டை, 14 ஆம் திருவிழா சப்பரம், 15 ஆம் திருவிழா தேர், 16 ஆம் திருவிழா சமுத்திர தீர்த்தம் 17 ஆம் திருவிழா கேணித் தீர்த்தம் ஆகியன நடைபெற்று வருகின்றன.

திருவூஞ்சற் பாவும் இங்கு உள்ளது. ஈழத்தின் மிகப் புராதன விஷ்ணு ஆலயங்களுள் இதுவும் ஒன்று.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### நெல்லண்டை, ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவில்
### நெல்லண்டை வீதி, தும்பளை, பருத்தித்துறை

தினமும் மூன்றுகாலப் பூசை. ஆவணி மாதத்து ரேவதி நட்சத்திரத்தில் விசேட உற்சவம், மணவாளக்கோலத் திருவிழா ஆகியன சிறப்புற நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில்
### பருத்தித்துறை

தினமும் மூன்றுகாலப் பூசை. தலவிருட்சம் வேம்பு. விசேட பொங்கல் பூசைகளுடன் விசேட தினங்களில் விசேஷ பூசை வழி பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### தும்பளை பத்திரகாளியம்மன் கோவில்
### பிள்ளையார் கோவில் வீதி, தும்பளை, பருத்தித்துறை

நித்திய பூசையோடு வருடாந்த பொங்கலும் விசேடமாக நடை பெற்று வருகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### சுட்டிபுரம் அம்மன் கோவில்
### சுட்டிபுரம், வரணி

இவ்வாலயத்தில் மூலமூர்த்தியோடு ஏனைய பரிவார மூர்த்தி களும் உளர். தினமும் நித்திய பூசைகளும் உண்டு. வருடாந்த திருவிழா வைகாசி விசாகத்தில் ஆரம்பித்து 14 நாட்கள் நடை பெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### கோட்டடி அம்மன் கோவில்

தினமும் ஐந்துகாலப் பூசை. 10 நாள் அலங்கார உற்சவம். சித்திரா பௌர்ணமியன்று தீர்த்தம். பரிவாரமூர்த்திகள் — விக்கி னேஸ்வரர், முருகன், நவக்கிரகம், நாகதம்பிரான்

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை,

### வேவிலந்தை, ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### அல்வாய் வடக்கு, அல்வாய்

தினமும் மூன்றுகாலப் பூசை. ஆடி அமாவாசையில் கொடி யேறி பௌர்ணமியில் தேர்த் திருவிழா நடைபெறும். நூறு வருடங் களுக்கு மேல் பழமை வாய்ந்த இந்த ஆலயம் ஆதியில் சிறு கொட்டி லாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### கண்ணகி அம்மன் கோவில்
### பருத்தித்துறை அரசினர்
### வைத்தியசாலைக்கு அருகாமையில்

தினமும் மூன்றுகாலப் பூசை. தை மாத உத்தர நட்சத்திரத்தில் ஆரம்பித்து 15 நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறும். ஆலயத்தில் விநாயகர், முருகன் ஆகிய மூர்த்திகளும் உள்ளனர்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவில்
### குடத்தனை, பருத்தித்துறை

நித்திய பூசை உண்டு. ஆனி உத்தரத்தில் கொடியேற்றம் நடைபெற்றுப் பத்து நாட்களுக்குத் திருவிழா நடைபெறுகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### காங்கேசன்துறை, பருத்தித்துறை வீதி,
### வல்வெட்டித்துறை

தினமும் நான்குகாலப் பூசை. சித்திரையில் பௌர்ணமியை இறுதியாகக் கொண்டு முதற் 15 நாட்களும் உற்சவம் நடைபெறும். இங்கு முத்துமாரியம்பாளுடன் விநாயகர், முருகன், சண்டேஸ்வர் ஆகிய மூர்த்திகள் பரிவாரத்தில் உள்ளனர்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### கெருடாவில்

இருநூறு வருடங்களுக்கு முந்திய ஆலயம். தினமும் இருகாலப் பூசை. சித்திரா பௌர்ணமியில் தீர்த்தம் அமையக் கூடியதாகப் பத்து நாட்களுக்கு அலங்கார உற்சவம் நன்கு நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### கண்ணகை அம்மன் கோவில்
### நாகர்கோயில்

மிகப் புராதன ஆலயம். தலவிருட்சம் ஆல். பழமை வாய்ந்த கோவலன் கண்ணகி கதை ஏடு ஒன்றும் உண்டு. 1978 ஆம் ஆண்டு சித்திரை மாதம் கோவில் கல்லினுல் அமைக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. பங்குனித் திங்கட் கிழமைகளில் விசேட பூசை, அன்னதானம் நடைபெறும். வைகாசி விசாகத்திற்கு முன் எட்டு நாட்களுக்குத் திருவிழா நடைபெறும். இந்நாட்களில் கண்ணகி கதை பாகம் பாகமாகப் படிக்கப்படுகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### தேவரையாளி கண்ணகை அம்மன் கோவில்
### அல்வாய் மேற்கு, அல்வாய்

தினமும் ஒருகாலப் பூசை. 150 ஆண்டுகள் தொன்மைவாய்ந்த ஆலயம் இது. விநாயகர், முருகன், இராஜராஜேஸ்வரி ஆகிய மூர்த்திகளும் ஆலயத்தில் உள்ளனர். பத்து நாட் திருவிழா வருடா வருடம் நடைபெறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
வடமராட்சி - பருத்தித்துறை.

### ஸ்ரீ நாகதம்பிரான் கோவில்
### நாகர் கோயில் தரவை, குடத்தனை

தினமும் மூன்றுகாலப் பூசை. புரட்டாதி மாத அபரபக்கப் பௌர்ணமியையொட்டி அலங்கார உற்சவங்கள் நடைபெறும். நாகர், இயக்கர் காலத்துப் பூர்வீக தலம். பண்டைய காலத்தில் அந்நியர் வந்து அங்குள்ள ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி செய்த போது பாம்பு அவர்களைத் தாக்கியது தொடர்பான வரலாற்று அற்புதங்களை விளக்கும் கப்பல் திருவிழா இன்றும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. சிவலிங்கத்தை உள்ளடக்கிய நாகபடத்துடன் கூடிய மூர்த்தி கர்ப்பக் கிரகத்தில் உண்டு. கந்தபுராணம், பெரியபுராணம், பிள்ளையார்கதை, திருவாதவூரடிகள் புராணம், சிவராத்திரி புராணம் முதலிய புராணங்கள் படிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

### கருப்பையடி, அம்மன் கோவில்
### கரணவாய் தெற்கு, கரவெட்டி

மூலமூர்த்தி — அம்பாள். பரிவாரமூர்த்திகள் — பிள்ளையார், வைரவர். ஒருகாலப் பூசை மட்டும். விசேட தினங்களில் விசேட பூசைகள் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

### வீரகத்திப் பிள்ளையார் கோவில்
### கப்புதூர், கரவெட்டி

முந்நூறு வருடங்கள் பழமையானதென்பது வரலாறு. கோவிற் புராணமும், ஊஞ்சற் பாட்டும் உண்டு. மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகளுடன் நாயன்மார்களும் பூசையில் வைக்கப்பட்டுள்ளனர். தினமும் ஒருகாலப் பூசை நடைபெறுகிறது. ஆண்டுக்கொருமுறை மூன்று மாதங்கள் தொடர்ந்து புராண படனமும், விசேட இருகாலப் பூசையும் நடைபெற்று வருகின்றன. சமயப் பிரசங்கங்கள், கூட்டுப் பிரார்த்தனைகள், சமய வகுப்பு, தீட்சை வைத்தல் போன்றவைகளும் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

### மாலைசந்தி, ஸ்ரீ வரதராயவிநாயகர் கோவில்
### அல்வாய் தெற்கு, அல்வாய்

200 வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி — விநாயகர். பரிவாரமூர்த்திகள் — சுப்பிரமணியர், வைரவர். ஐந்து காலப் பூசை நடைபெற்றுவருகிறது. ஆடிமாத சங்கிராந்தியில் தீர்த்தம் நடைபெறக் கூடியவாறு பத்துத் தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது. வெள்ளிதோறும் பஜனையும், தேவாரப் போட்டிகளும் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

### ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோவில்
### கரவெட்டி கிழக்கு, கரவெட்டி

தோம்புக் காலத்துக்கு முந்திய கோவில். இதற்கான நாட்டுப் பாடல்கள் உள்ளன. மூலமூர்த்தி — விநாயகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

## வெல்லம் விநாயகர் கோவில்
## கரவெட்டி மேற்கு, கரவெட்டி

சுமார் நூற்றைம்பது வருடங்களுக்கு முற்பட்ட கோவில். 1879 ஆம் ஆண்டில் இந்த ஆலயத்தில் நடந்த தீ விபத்தைத் தொடர்ந்து வாயில்கள் எல்லாம் பெரிதாக அமைக்கப்பட்டன. இதற்கு முன்னர் பழைய காலச் சம்பிரதாயங்களுக்கு அமைய வாயில்கள் மிகவும் சிறிதாகவே அமைக்கப்பட்டிருந்தன. ஆரம்பத்தில் ஒரேயொரு வாயிலையுடைய இந்த ஆலயம் பின்னர் புதுப்பிக்கப்பட்டு பக்தர்கள் இலகுவில் உள்ளே சென்று வெளிவரத்தக்கதாக அமைக்கப்பட்டது. ஐம்பது வருடங்களுக்கு முன்னர் திரு ச. இளையதம்பி அவர்களால் இயற்றப்பட்ட பாமாலையும் ஊஞ்சற் பாடலும் உண்டு. மூல மூர்த்தி — வீரகத்தி விநாயகர். பரிவாரமூர்த்திகள் — முருகன் வைரவர், சிவன், நாகதம்பிரான், வேல். தினமும் மூன்றுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. சித்திரை மாதத்துப் பூரணையில் தீர்த்தம் நடைபெறும் வகையில் பதினொரு தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகின்றது. மூன்று பிரகாரங்கள். பெரிய புராண, கந்தபுராண படிப்பும், சிறுவர் தேவாரபாராயண வகுப்பும் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

## புதுக்குளம், கூரைப் பிள்ளையார் கோவில்
## அல்வாய் தெற்கு, அல்வாய்

நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாறு உண்டு. மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — சுப்பிரமணியர், வைரவர். தினமும் இரண்டு காலப்பூசைகள் நடைபெறுகின்றன. ஐப்பசி புனர்பூசத்தில் அலங்காரத் திருவிழா ஆரம்பமாகிப் பத்து நாட்களுக்கு நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

## தச்சன்தோப்பு சிந்தாமணிப் பிள்ளையார் கோவில்
## தச்சன்தோப்பு, கரவெட்டி

1856 ஆம் ஆண்டளவில் ''கொற்றர் பரமர் புண்ணிய மடம்'' என்ற பெயருடன் இருந்த மடம் ஒன்றில் வணங்கப்பட்டு வந்த பிள்ளையாருக்கு பின்னர் 1861 ஆம் ஆண்டளவில் கோவிலமைத்ததாக வரலாறு. நான்கு மண்டபங்களுடனுன இக்கோயிலில் காசியிலிருந்து கொண்டு வரப்பட்ட பிள்ளையார் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். 1928 இல் மறுபடியும் ஆலயத்திற் திருப்பணிகள் நடத்தப்பட்டு, இராஜகோபுரம் அமைக்கப்பட்டது. தேர்த் திருப்பணியும் நிறைவெய்தியது. இப்போது மூன்றுகாலப் பூசை நடைபெறுகிறது. வருடாந்த உற்சவம் ஆனிமாதப் பூர்வபக்கச் சஷ்டியில் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து, பூரணையில் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுறும்.

விநாயக சதுர்த்தி, விநாயகர் சஷ்டி, திருவெம்பாவை விசேட நாட்கள். கந்தபுராண படனம் நடைபெறுவதுண்டு. ''தச்சைச் சிலேடை வெண்பாவும், ஊஞ்சல் பாடலும் உண்டு.

மூலமூர்த்தி — சிந்தாமணிப் பிள்ளையார். பரிவாரமூர்த்திகள் — கணபதி சுப்பிரமணியர், நவக்கிரகம், வைரவர், சண்டேஸ்வரர்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

## ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
## உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலைச் சந்தி
## உடுப்பிட்டி

இந்த ஆலயத்தை வல்லைவெளிப் பிள்ளையார் கோவில் எனவும் அழைப்பர். இது தொன்மையான ஒரு ஆலயம். தினமும் இரு காலப் பூசை. சித்திரைமாத உத்தர நட்சத்திரத்திற் தொடங்கி 10 நாட்கள் அலங்கார உற்சவம், 11 ஆம் நாள் அன்னதானமும், அதையடுத்து குளிர்த்தியும் நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

## மாணிக்கப் பிள்ளையார் கோவில்
## வதிரி, கரவெட்டி வடக்கு, கரவெட்டி

மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவாரமூர்த்தி — முருகன். உச்சிக் காலப் பூசை உண்டு. திருவெம்பாவை, சிவராத்திரி காலங்களில் விசேட பூசைகள் உண்டு. இக்கோவிலின் பெயரில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் இரண்டு செயற்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

**அல்வாயூர், அரசடி விநாயகர் கோவில்**
**அல்வாய் வடக்கு, அல்வாய்**

பழமை வாய்ந்த இந்த ஆலயத்தின் மூலமூர்த்தி – விக்நேஸ்வரப் பெருமான். பரிவார மூர்த்திகள் – முருகன், அம்மன், நாகதம்பி ரான், வைரவர். தினமும் இரண்டு காலப் பூசை. மகாசிவராத்திரி, ஆனி உத்தரம், ஆவணிச் சதுர்த்தி, நவராத்திரி, கந்தசஷ்டி, விநாயகர் விரதம், திருவெம்பாவை ஆகியவை விசேட உற்சவங்கள். மகுடாசுரசம்ஹாரம், சூரசம்ஹாரம், கயமுகசம்ஹாரம் உட்பட கடற் தீர்த்தமும் நடைபெறுவதுண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

**கும்பவாளி வீரகத்தி விநாயகர் கோவில்**
**இமையாணன், உடுப்பிட்டி**

மூலமூர்த்தி – பிள்ளையார். பரிவார மூர்த்திகள் – சுப்பிரமணி யர், நாகதம்பிரான், வைரவர், ஐயனார். தினமும் இருகாலப்பூசை. வெள்ளிக்கிழமை தோறும் மூன்றுகாலப் பூசை. தை மாத அமா வாசைத் தினத்தன்று வருடாந்த உற்சவம் ஆரம்பமாகிப் பௌர் ணமியன்று தீர்த்த உற்சவம் நடைபெற்றுவருகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

**கற்பக விநாயகர் கோவில்**
**சமரபாகுதேவன் குறிச்சி, உடுப்பிட்டி**

நூறு வருடங்கள் பழமை வாய்ந்தது. அறுபது வருடங்களுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட விநாயகர் மூல மூர்த்தியாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறார். பரிவாரமூர்த்தி கள் – நாகதம்பிரான், சனீஸ்வரன், வைரவர், காளி. தினமும் இரண்டு காலப் பூசைகள் நடைபெறுகின்றன. வெள்ளிக்கிழமை களிலும் மார்கழி மாதத்திலும் மூன்றுகாலப் பூசைகள் நடைபெறு கின்றன. தை மாதத்தில் வரும் அத்த நட்சத்திரத்தில் திருவிழா ஆரம்பமாகி பத்தாம் நாள் தீர்த்தோற்சவம் முடிவுறும். சைவ சமய விரிவுரைகள், காலத்துக்குக்காலம் நடத்தப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

### பூவர்க்கரைப் பிள்ளையார் கோவில்
### வதிரி, அல்வாய் தெற்கு, அல்வாய்

கோவில் நூறு வருடங்களுக்கு முந்தியது. மூலமூர்த்தி — விநாயகர். பரிவாரமூர்த்திகள் — முருகன், நாகதம்பிரான், சிவன், பார்வதி, வைரவர். தினமும் காலை, மாலைப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆனி உத்தரத்தன்று அலங்காரத் திருவிழா நடைபெறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

### வெற்றிகாட்டுப் பிள்ளையார் கோவில்
### முள்ளிப்பகுதி, கரணவாய் தெற்கு, கரவெட்டி

கோவிலுக்கான ஊஞ்சற் பாட்டு உண்டு. மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — வைரவர், கந்தசுவாமியார், நாகதம்பிரான். இருகாலப் பூசை. ஆனி அமாவாசையின் ஆறும் நாள் கொடியேற்றத் திருவிழா நடந்து பௌர்ணமியன்று தீர்த்தம் நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:, யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

### மாடந்தை வீரகத்தி விநாயகர் கோவில்
### வல்வெட்டி, வல்வெட்டித்துறை

மூலமூர்த்தி — தான்தோன்றீஸ்வரப் பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — வைரவர், நாகதம்பிரான் ஆகியோர். தினமும் காலை, மாலைப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆடி மாதத்தில் அலங்காரத் திருவிழா நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

### வல்லியானந்தப் பிள்ளையார் கோவில்
### துன்னாலை வடக்கு, கரவெட்டி

*19* ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆயில்நின்றொல்லை விநாயகர் ஆலயம் என்றும் அழைப்பதுண்டு. மூலமூர்த்தி — விநாயகர். பரிவாரமூர்த்தி — வைரவர். மூன்று காலப் பூசை. பங்குனி உத்தரத்துடன் தீர்த்தோற்சவம் நடைபெறக் கூடியவாறு பத்து நாட்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

## வதிரி, கனகரத்தினப் பிள்ளையார் கோவில்
## வதிரி, கரவெட்டி

மடத்துப் பிள்ளையார் கோவில் என்றும் அழைப்பதுண்டு. மூல மூர்த்தி — பிள்ளையார், பரிவார மூர்த்தி — வைரவர். காலை, மாலை பூசை. வருடாந்த உற்சவம் மார்கழி ரேவதி நட்சத்திரத்தில் ஆரம்பமாகிப் பத்து நாட்களுக்கு நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

## குமிழடி விநாயகர் கோவில்
## அல்வாய் தெற்கு, அல்வாய்

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — சுப்பிரமணியர், வைரவர், தினமும் காலையும் மாலையும் பூசைகள் நடைபெறுகின்றன. மாசி மாதத்தில் பத்து நாட்களுக்கு அலங்காரத் திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

## தில்லையம்பலப் பிள்ளையார் கோவில்
## அல்வாய் தெற்கு, அல்வாய்

இலங்கையில், குறிப்பாக வட மாகாணத்தில், மிகவும் பிரசித்தி வாய்ந்த ஆலயம் இது. மாட்டுப் பண்ணையில் ஏற்படும் மாட்டு நோய்களை நீக்கத் தில்லையம்பலப் பிள்ளையாருக்கு நேர்ந்து வழிபாடுகள் செய்தால் மாடுகளின் நோய்கள் நீங்குகின்றன.

பசு, கன்று ஈனும்போது கஷ்டப்பட்டால், அல்லது பால் இல்லாதிருந்தால், கன்று ஈன்ற பின் பசுவுக்கும் கன்றுக்கும் நோய் ஏற்பட்டால் தில்லையம்பலப் பிள்ளையாருக்கு நேர்த்திக்கடன் செய்யப்படுவது வழக்கம். இதனுல் இவ்வாலயத்தில் அநேக பசுக்களைக் காண முடிகின்றது. இங்கு தினமும் குடம்குடமாகப் பால் அபிஷேகம் நடைபெறுகின்றது. நெய்க்கு இங்கு குறைவே இல்லை. மோதகம், சர்க்கரைப் பொங்கல் ஆகியன இங்குள்ள மடங்களில் தயாரிக்கப்பட்டுப் பிள்ளையாருக்கு நிவேதிக்கப்படுகின்றன.

இங்கு மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — சுப்பிரமணியர், நாகதம்பிரான், வைரவர். நித்திய பூசை இருகாலங்களுக்கு நடைபெறுகின்றது. சித்திரை மாதத்தில் அலங்கார உற்சவம் சிறப்புற நடைபெற்று வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

### சித்திவிநாயகர் கோவில்
### வல்லைவெளி, உடுப்பிட்டி

சிவசம்புப் புலவரால் பாடப்பெற்ற ஊஞ்சற் பாட்டு உண்டு. மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவாரமூர்த்தி — வைரவர். தினமும் இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. மார்கழி மாதத்தில் மூன்று காலப் பூசைகள் நடைபெறும். சித்திரை உத்தரத்திலிருந்து பத்துத் தினங்களுக்கு அலங்கார உற்சவம் நடைபெற்றுப் பதினோராம் நாள் அன்னதானம் வழங்கப்படும். ஆவணிச் சதுர்த்தியிலும் விசேட திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

### விநாயகர் கோவில்
### கிழவி தோட்டம், கரவெட்டி கிழக்கு

மூலமூர்த்தி — விநாயகர். விசேட தினங்களில் விசேட பூசைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. தலவிருட்சம் கொன்றைமரம்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

### கலட்டிப் பிள்ளையார் கோவில்
### கரணவாய் தெற்கு, கரவெட்டி

மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — சிவன், அம்மன், நவக்கிரகம். தினமும் மூன்று காலப் பூசைகள் நடைபெறுகின்றன. வைகாசி மாதத்தில் பத்துத் தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெற்றுவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

### ஸ்ரீ சிவசுப்பிரமணியர் கோவில்
### அல்லையம்பதி, துன்னாலை வடக்கு

நாகர் பரம்பரையினர் இந்த ஆலயத்துக்குக் காணிகளைத் தர்ம சாதனம் செய்திருக்கும் தோம்புகள் உண்டு. பல நூற்றாண்டுகளுக்கு முன் மகிழமர நிழலில் தோன்றிய ஆலயம். ஆரம்பத்தில் பெரிய தம்பிரான் கோயில் என வழிபடப்பட்டுவந்தது. இங்கு கந்த புராண விரிவுரைகள் இடம் பெறுகின்றன. *1919* ஆம் ஆண்டில் கற்றிருப்பணி வேலைகள் ஆரம்பமாயின. *1949* ஆம் ஆண்டில் மூன்றாவது மகாகும்பாபிஷேகத்தோடு மூன்று காலப் பூசை முறை ஆரம்பமாகியது. சூரசம்ஹாரம், தைப்பூசம், திருவெம்பாவை ஆகிய உற்சவங்கள் விசேடமாக நடைபெற்றுவருகின்றன. வைகாசி விசாகப் பெருநாளில் தேர்த்திருவிழா நடைபெறும் வண்ணம் பத்துத் தினங்கட்கு உற்சவம் நடைபெற்று வருகிறது. கந்த புராண படனம், திருவாதவூரடிகள் புராண படனம், தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

### உபய கதிர்காமக் கோவில்
### புலோலி தெற்கு, புலோலி

ஸ்ரீ சண்முகப்பெருமான் தான்தோன்றியாக சக்கர யந்திர அட்சர உருவினராய் சுயம்புவாய் எழுந்தருளி, பக்தர்களுக்கு அருள்பாலித்து வரும் புண்ணிய திருத்தலம் உபய கதிர்காமம் ஆகும். வெண் கற்பாறையின் நடுப்பகுதியில் ஸ்ரீ சண்முகப் பெருமானின் யந்திரம் அமைந்துள்ளது. சக்கரத்தின் வலப் பாகத்திலே உள்ள முனைகளை அடுத்து விநாயகர், சிவன் ஆகிய மூர்த்திகளுக்கான அட்சரங்கள் காணப்படுகின்றன. இதனால் இங்கு எல்லா மூர்த்திகளும் வீற்றிருக்கின்றனர். இக்கோவிலுக்கு அண்மையில் விளாத்தி மரம் தலவிருட்சமாக உள்ளது. ஆதலால் இவ்வாலய மூர்த்தியை ''விளாத்தியான்'', ''விளாத்தீஸ்வரன்'' எனவும் பக்தர்கள் அழைப்பது வழக்கம்.

நித்திய பூசை மூன்று காலங்களுக்குச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஸ்ரீ சண்முகப்பெருமானின் யந்திரம் கண்டு பிடிக்கப்பட்ட தினமான வைகாசி விசாகத்தன்று அபிஷேகமும், பூசைகளும் ஸ்ரீ சண்முகார்ச்சனையும் சிறப்பாக நடைபெறுகின்றன. கதிர்காமக் கந்தனின் தீர்த்தத்தை அடுத்து திருவோண நட்சத்திரத்தில் இங்கு தீர்த்தத் திருவிழா நடைபெறுகின்றது. திருக்கார்த்திகையின்போது கார்த்திகை கர்ப்பூரத்திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

## நுணுக்கம்பாவனைக் கந்தசுவாமி கோவில்
### கரவெட்டி

ஒல்லாந்தர் காலத்தில் குளத்துக்குள் பாதுகாப்பாகப் புதைத்து வைக்கப்பட்ட விக்கிரகங்கள் குளம் புனரமைப்புச் செய்யப்பட்ட சமயம் கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் ஆலயம் அமைத்து பிரதிஷ்டை செய்யப்பட்டதாக வரலாறு உண்டு. மூலமூர்த்தி — வள்ளி, தெய்வயானை சமேதரான ஸ்ரீ சுப்பிரமணியர். பரிவாரமூர்த்திகள் — நாகதம்பிரான், கண்ணகிஅம்பாள், பாதாள வைரவர். தினமும் மூன்றுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. வைகாசி மாத அமாவாசை கழிந்த ஆறும் நாளிலிருந்து பத்து நாட்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

## தென்கருணையூர் அருள்மிகு முருகையா கோவில்
### தச்சன்தோட்டம், கரணவாய் தெற்கு, கரவெட்டி

இது எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம். மூலமூர்த்தி — முருகன். பரிவாரமூர்த்திகள் — வைரவர், பிள்ளையார். தினமும் பூசை நடைபெறுகிறது. வெள்ளிக்கிழமைகளில் மாலையில் விசேட பூசை நடைபெறும். அன்று சிறுவர்களுக்கு சைவ சமய பாடபோதனையும் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

## முதலைக்குழி கந்தசுவாமி கோவில்
### கரணவாய் தெற்கு, கரவெட்டி

மூலமூர்த்தி — வள்ளி தெய்வயானை சகிதமான சுப்பிரமணியர். பரிவாரமூர்த்திகள் — விநாயகர், பழனியாண்டவர். தினமும் காலை, மாலைப் பூசைகள் நடைபெறுகின்றன. பங்குனி மாதத்தில் அலங்கார உற்சவம் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

நுங்கோடை, முருகன் கோவில்
கரவெட்டி மேற்கு, கரவெட்டி

மூலமூர்த்தி — முருகன். காலை, மாலை பூசை நடைபெறும். சுந்தர மூர்த்தி நாயனுர் குருபூசை விசேடமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆனி உத்தரத்தில் தீர்த்தம் நடைபெறுமாறு வருடாந்த உற்சவம் நடைபெறும். தேவாரப் பண்ணிசை வகுப்பும் நடத்தப்படுகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

அந்திரான், முருகமூர்த்தி கோவில்
கன்பொல்லை வீதி, கரவெட்டி

மூலமூர்த்தி — வேல். தினமும் இரண்டு காலப் பூசை. திருவெம்பாவை சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

முத்துக்குமாரசுவாமி கோவில்
காளையந்தோட்டம், வதிரி, கரவெட்டி

மூலமூர்த்தி — வேல். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், வைரவர். காலை, மாலை பூசை நடைபெறும். கந்தசஷ்டி, நவராத்திரி, திருவெம்பாவை, ஆனி உத்தரம் ஆகிய தினங்களில் விசேட பூசைகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கோவில்
துன்னலை தெற்கு, கலிகை, கரவெட்டி

1900 ஆம் ஆண்டு வரையில் கதிர்காம யாத்திரிகர் ஒருவரினல் ஆரம்பிக்கப்பட்டதாக வரலாறு. மூலமூர்த்தி — வேல். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், சிவன், உமாதேவி, வைரவர், விஷ்ணு. தினமும் இரண்டுகாலப் பூசை நடைபெறுகின்றது. சித்திரா பௌர்ணமியன்று தீர்த்தோற்சவம் நடைபெறக்கூடியவாறு பத்துத் தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

### ஸ்ரீ முருகமூர்த்தி, காளியம்மன் கோவில்
### மத்திய மகா வித்தியாலய வீதி,
### நெல்லியடி, கரவெட்டி

மூலமூர்த்திகள்—முருகன், காளியம்மன். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், கிருஷ்ணர், வைரவர். காலை, மாலை பூசை உண்டு. கந்தசஷ்டி, திருவெம்பாவை, நவராத்திரி காலங்களில் விசேட பூசைகள் நிகழும். ஆவணி மாத அச்சுவினி நட்சத்திரத்தில் வேல் விழா நடைபெற்று வருகிறது.

மாவட்டம்;- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

### வெள்ளெருவை ஞானவைரவர் கோவில்
### அல்வாய் தெற்கு, அல்வாய்

மூலமூர்த்தி — வைரவர். பரிவார மூர்த்திகள் — அம்பாள், பிள்ளையார். தினமும் ஒருகாலப் பூசை நடைபெறுகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

### சொக்கற்கலட்டி முத்துமாரியம்பாள் கோவில்
### வாணக்குடியிருப்பு, சொக்கற்கலட்டி, புலோலி மேற்கு,
### பருத்தித்துறை

நூற்றிருபது வருடங்களுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாறு உண்டு. வேப்பமரத்தடியில் தோன்றிய அம்பாளுக்கு ஆலயம் பின்னர் அமைக்கப்பட்டது. மூலமூர்த்தி — அம்பாள். பரிவார மூர்த்திகள் — வேல், விநாயகர். தினமும் இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. பங்குனி மாதத்தில் விசேட பொங்கல் நடைபெறும். வருடப்பிறப்பு, தைப்பொங்கல் ஆகிய தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

### ஸ்ரீ வீரபத்திர பத்திரகாளி அம்மன் கோவில்
### தல்லையப்புலம், கரவெட்டி

ஆலயம் தோம்புக் காலத்துக்கு முற்பட்டது. வழிபாட்டுப் பாடல்களும், நாட்டு மக்கள் பாடல்களும் உள்ளன. மூலமூர்த்தி — வீரபத்திர பத்திரகாளி. பரிவாரமூர்த்திகள் — மகாகணபதிப் பிள்ளையார், வெளிக்காளி. தினமும் மூன்றுகாலப் பூசை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கரவெட்டி.

### ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில்
### கரவெட்டி கிழக்கு, கரவெட்டி

1700 ஆம் ஆண்டுக்கு முற்பட்டதென்று கருதப்பட்டு வருகிறது. தோம்புச் சாசனமும் உண்டு. மூலமூர்த்தி பத்திரகாளி சமேதரான வீரபத்திரர். பரிவார மூர்த்திகள் — முருகன், வைரவர், காளி. ஒருகாலப் பூசை. சிவராத்திரி, கந்தசஷ்டி, திருவெம்பாவை, நவராத்திரி நாட்களில் விசேட உற்சவங்கள். மணவாளக் கோல அபிடேகமும் விசேடமாக நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

### சிவன் கோவில்
### செட்டியார் தோட்டம், உரும்பராய்

காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட இலிங்கம் கோவிலில் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கிறது. பரிவார மூர்த்திகள் — நடேசர், அம்பாள், பிள்ளையார், வேல், நாகதம்பிரான் ஆகியோர். தினமும் இரண்டு காலப்பூசை உண்டு. ஆவணி மாதத்தில் அலங்காரத் திருவிழா நடைபெறும். நடேசர் அபிடேகங்கள் அந்தந்த நாட்களில் நடைபெற்று வருகின்றன. விசேட தினங்களில் விசேட வழிபாடுகள் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

### ஸ்ரீ நடராஜ ராமலிங்க சுவாமி கோவில்
### புத்தூர் மேற்கு, புத்தூர்

மூலமூர்த்தியான சிவலிங்கம் காசியில் இருந்து கொண்டு வரப்பட்டது. பர்வதவர்த்தனியம்பாள், நடராஜர், தட்சணாமூர்த்தி, விநாயகர், முருகன், சந்தான பரமேஸ்வரர், சந்தான கோபாலர், வைரவர், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகள் உளர். இரு கொடித்தம்பமும், இரு நந்தி பலிபீடமும் உள. தினமும் மூன்று காலப் பூசை. சிவன், அம்பாள் மகோற்சவம் முறையே ஆனி உத்தரத்திலும் ஆடிப்பூரத்திலும் நடைபெறுகின்றது. புராண படனமும் இங்கு நடைபெற்றுவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

### ஸ்ரீ வாலாம்பிகா தேவி சமேத வைத்தீஸ்வரசுவாமி கோவில்
### இருபாலை, கோப்பாய்

1866 ஆம் ஆண்டு காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட சிவலிங்கம் குளத்திற்குத் தெற்குப் பக்கத்தில் முதலில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அடியார்கள் வணங்கி வரும் காலத்தில் இடவசதிக் குறைவினால் 1943 ஆம் ஆண்டு தற்போது குடிகொண்டிருக்கும் நெடுங்கேணி என்று அழைக்கப்படும் நிலப்பரப்பில் திரும்பவும் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 1948 ஆம் ஆண்டு திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. 1967 ஆம் ஆண்டு அம்பாள் விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டு 1976 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

### ஸ்ரீ பறுவதபத்தினியம்மன் கோவில்
### உரும்பராய் மேற்கு, உரும்பராய்

இலங்கையை ஒல்லாந்தர் அரசு புரிந்த காலத்திலும் இவ்வாலயம் இருந்து வந்துள்ளதாக அறிய முடிகின்றது. நடேசர், சிவகாமி அம்மன், கிருஷ்ணர், வைரவர், சண்டேஸ்வரர் ஆகியோர் பரிவாரமூர்த்திகளாக விளங்குகின்றனர். இவ்வாலயத்தில் தினமும் மூன்று காலப் பூசைகள் நடைபெறுகின்றன. வைகாசிப் பௌர்ணமிக்குப் பத்து நாட்களுக்கு முன் கொடியேற்றத் திருவிழா நடைபெற்றுப் பௌர்ணமிக்குத் தீர்த்தோற்சவம் நடைபெறும். கும்பாபிஷேக தினம் பங்குனித் திங்கள்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

### சிவகாமி அம்மன் கோவில்
### வல்லயப்புலம், சிறுப்பிட்டி மத்தி,
### நீர்வேலி

சுமார் 1800 ஆம் ஆண்டளவில் மண் கட்டடத்தில் கோவில் ஸ்தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி — அம்மன். பரிவாரமூர்த்திகள் — துர்க்கை, பிள்ளையார், சுப்பிரமணியர். இருகாலப் பூசை. ஆவணி மிருகசீரிடத்திற் கொடியேறி பத்து நாட் திருவிழாக்கள், தேர், தீர்த்தத்துடன் முடிவுறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

## காமாட்சி அம்பாள் கோவில்
## நீர்வேலி. கோப்பாய்

பல வருடங்களுக்கு முன்னர் மர நிழலில் வைத்து வணங்கப்பட்டு வந்த அம்பாளுக்கு 1946 ஆம் ஆண்டு கட்டடம் அமைக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. திருவூஞ்சற் பாடல்களும், தோத்திரப் பதிகங்களும் உள்ளன. மூலமூர்த்தி — காமாட்சியம்பாள். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், முருகன், மகாவிஷ்ணு, வைரவர். தினமும் இருகாலப் பூசை. வைகாசி மாதத்தில் அலங்கார உற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

## ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில்
## நீர்வேலி மத்தி, நீர்வேலி

தினமும் மூன்று காலப்பூசை உண்டு. ஆவணிச் சதுர்த்திக்கு அடுத்த நாள் கொடியேறிப் பன்னிரண்டு தினங்கள் மகோற்சவம் நடைபெறும். மாதச் சதுர்த்தி, பிள்ளையார் கதை, சோமவாரம் போன்ற விசேட காலங்களில் விசேட பூசைகள் நடைபெறும். கந்தபுராண படனம் நடைபெறுவதுடன் கோவில் மடத்தில் அறுபத்திமூன்று நாயன்மார் குருபூசையும், அன்னதானமும் நடைபெற்று வருகின்றன. இந்த ஆலயம் அரசகேசரி மன்னனால் ஸ்தாபிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

## வெள்ளெருவை, பிள்ளையார் கோவில்
## கோப்பாய் வடக்கு

300 வருடங்களுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த தலமாகும். ஆதியில், வேறு இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட விநாயகர் இவ்விடத்தில் வைத்தவுடன் எடுக்க முடியாதபடியால் அந்த இடத்திலேயே விட்டுவிட்டுப் போய்விட்டதாக கூறப்படுகிறது. பின்பு அந்த இடத்திலேயே ஆலயம் அமைக்கப்பட்டது. இரண்டு தளமாக அமைக்கப்பட்ட விமானம் உடையது. மூன்று காலப் பூசை. ஆனி மாதப் பூரணைக்கு முதற் பத்து நாட்கள் மகோற்சவம். சித்திர வேலைப்பாடுகள் அமைந்த தேருமுண்டு. பிங்கள வருஷம் (1980) சித்திரை மாதம் கும்பாபிஷேகம் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

## ஸ்ரீ பொன்னம்பலவாணர் சித்திவிநாயகர் கோவில்
## வெல்லன்கலட்டி, தம்பாலை, கோப்பாய்

அந்தக் காலத்தில் தொண்டைமானாற்றுப் பகுதிக்கு நெல் வாங்குவதற்காகச் சென்ற ஒருவர் திரும்பி வரும் வழியில் நெற் கடகத்தை தம்பாலை ரோட்டிலுள்ள ஆலமரக் கிணற்றுக்கட்டில் வைத்துவிட்டு மறுபடியும் அதைத் தூக்குவதற்கு முயன்றபோது அது மிகவும் பாரமாக இருந்தது. அப்போது நெல்லைக் கிளறிப் பார்த்தபோது அதற்குள் செப்பிலான விக்கிரகம் இருக்கக் காணப்பட்டு அங்கேயே விட்டு வீடு திரும்பி சில நாட்களுக்குப்பின் சென்று சிறு மடம் அமைத்ததாகவும் வரலாறு. தொடர்ந்து இப்பகுதியில் மாடு மேய்த்து வந்த சிறுவர், விக்கிரகத்திற்குப் பூ வைத்து வணங்கி வந்தனர். பின்னர் இப்போதிருக்கும் இடத்தில் கோவிலமைக்கப் பட்டது.

மூலமூர்த்தி — பிள்ளையார். தினமும் காலையிற் பூசை நடைபெற்று வருகிறது. 1970 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நிறைவேறிய இவ் வாலயத்தில் விசேஷ தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

## ஓடையம்பதி ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில்
## ஓடையம்பதி, உரும்பராய்

1612 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இவ்வாலயம் வரலாற்றுப் பெருமை மிக்கது. மூலஸ்தானத்தில் விநாயகர், நாகதம்பிரான், நடேசர், சனீஸ்வரன், வைரவர், காளியம்பாள் முதலிய மூர்த்திகளும் உளர். தினமும் மூன்று காலப் பூசை. ஆனி மாதத்திற் கொடியேறிப் பதினைந்து நாட் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

## போதிராப்பிட்டிப் பிள்ளையார் கோவில்
## தோப்பூர், அச்சுவேலி

மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — முருகன், நாகதம்பிரான், வைரவர். உச்சிக்காலப் பூசை தினமும் நடைபெறும். திருவெம்பாவை, விநாயக சதுர்த்தி ஆகிய விசேட நாட்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுவதுடன் அலங்காரத் திருவிழாவும் நடைபெறுவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

கற்பக விநாயகர் கோவில்
இருபாலை, கோப்பாய்

தினமும் இருகாலப் பூசை உண்டு. ஆனி உத்தரத்தன்று தீர்த்தம் நடைபெறக்கூடியதாகப் பதினைந்து நாட்கள் திருவிழா நடை பெறும். சிவராத்திரி, மாதச் சதுர்த்தி, பிள்ளையார் பெருங்கதை, கஜமுகாசுர சங்காரம், திருக்கார்த்திகை போன்ற காலங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும். நாவலர் குருபூசை, நாயன்மார் குருபூசைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோவில்
பலாலி வீதி, ஊரெழு

பழமை வாய்ந்த இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தில் விநாயகர். வேல், வைரவர், சண்டேஸ்வரர் முதலிய மூர்த்திகளும் உள்ளனர். தினமும் இருகாலப் பூசை. மாசி மாதத்தில் பன்னிரண்டு நாட் களுக்கு உற்சவம் நடைபெற்று மாசிமகத்தன்று தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

மாவட்டம்;- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

மிட்டிலான்கூடல் அம்பலவாணர் நடராச விநாயகர்
பத்தமேனி, அச்சுவேலி

மூலமூர்த்தி — விநாயகர். பரிவாரமூர்த்திகள் — சுப்பிரமணியர், வைரவர். தினமும் மூன்றுகாலப் பூசை. ஆனி மாதத்திற் பத்து நாட்கள் அலங்காரத் திருவிழா. திருவெம்பாவை, சிவராத்திரி தினங்களில் விசேட அபிஷேகங்கள். நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

தீர்த்தாங்குளப் பிள்ளையார் கோவில்

மூலமூர்த்தி — திருச்சிற்றம்பலப் பிள்ளையார். பரிவாரமூர்த்தி கள் — வைரவர், அரசடிப் பிள்ளையார். இருகாலப் பூசை உண்டு. ஆவணி மாதம் சோதி நட்சத்திரத்துக்கு முதல்வரும் பத்து நாட் களுக்குத் திருவிழா நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

வாலரய் பிள்ளையார் கோவில்
அச்சுவேலி

மூலமூர்த்தி — பிள்ளையார். தினமும் இருகாலப் பூசை. வைகாசி மாதத்தில் இருமுறை அலங்காரத் திருவிழா நடைபெறும். விசேஷ தினங்களில் விசேஷ பூசைகள் உண்டு. பிள்ளையார் பெருங் கதையும் படிக்கப்படுகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோவில்
வேளாளர் தோப்பு, இருபாலை

மூலமூர்த்தி — வேல். பரிவார மூர்த்திகளாக ஆறுமுகசுவாமி, பிள்ளையார், வைரவர் ஆகியோர் உளர். தினமும் மூன்றுகாலப் பூசை உண்டு. வைகாசி விசாகத்தில் தீர்த்தம் அமையக்கூடிய வாறு பன்னிரண்டு நாட்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெறும். புரட்டாதி மாதத்தில் மானம்பூவும், கார்த்திகையில் விளக்கீடும் விசேட திருவிழாக்களாகும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

காட்டுமலை, ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
நாவற்காடு 10 ஆம் வட்டாரம்,
காட்டுமலை, அச்சுவேலி

இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தில் வேல் பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளது. பிள்ளையார், அம்மன், வைரவர், காளி, நாகதம்பி ரான், வீரபத்திரர், சிவன் ஆகிய மூர்த்திகளும் ஆலயத்தில் உளர். தினமும் மூன்றுகாலப் பூசை. வருடாவருடம் ஆனி அமாவாசை யன்று தீர்த்தோற்சவம் நடைபெறக்கூடியதாகவும், 25 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறக்கூடியதாகவும் உற்சவங்கள் ஆரம்ப மாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

**கதிர்காம சுவாமி கோவில்**
**இருபாலை, கோப்பாய்**

*1890* ஆம் ஆண்டு கதிர்காமத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட ''வேல்'' இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. தினந்தோறும் காலையும், மாலையும் பூசைகள் நடைபெறுகின்றன. வருடாவருடம் ஆவணி உத்தரத்தில் சங்காபிஷேகமும், திருவிழாவும் சிறப்பாக நடைபெறும்.

மாவட்டம்;- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

**ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி கோவில்**
**உரும்பராய் வீதி, கோப்பாய்**

மூலஸ்தானத்தில் ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி. விநாயகர், சண்முகர், வைரவர் ஆகிய மூர்த்திகளும் உள்ளனர். தினமும் மூன்றுகாலப் பூசை. வருடாவருடம் வைகாசிப் பூரணைக்குப் பத்து நாட்கள் உற்சவம் நடைபெற்றுத் தேர், தீர்த்தத்துடன் அவை முடிவடையும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

**ஸ்ரீ சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவில்**
**உரும்பராய் மேற்கு**

*1891* ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. மூலஸ்தானத்தில் வேல். மற்றும் விநாயகர், வைரவர், சண்டேஸ்வரர், நவக்கிரகம் ஆகிய மூர்த்திகளும், நாயன்மார் நால்வரினது திருவுருவங்களும் இவ்வாலயத்தில் அமைந்துள்ளன. தினமும் மூன்றுகாலப் பூசை. கதிர்காம ஆலயத்தோடு இவ்வாலய உற்சவமும் ஆண்டுதோறும் நடைபெறும். இந்துசமய விருத்திச் சங்கம் சமய பாடவகுப்பு, சமயபாடப் போட்டி ஆகியனவற்றை வருடாவருடம் நடத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

### தனிப்பனை, ஸ்ரீ வீரபத்திரசுவாமி கோவில்
### பழைய வீதி, கோப்பாய் தெற்கு

மூர்த்தி — வீரபத்திரர். 100 வருடங்களுக்கு முற்பட்ட ஆலயம். பத்திரகாளி அம்மன் விக்கிரகம் 1955 ஆம் ஆண்டில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. சிவகாமசுந்தரி சமேத நடேசப் பெருமான், பிள்ளையார், சுப்பிரமணியர் நவக்கிரகங்கள் ஆகிய மூர்த்திகளுக்கும் இவ்வாலயத்தில் தனித்தனிக் கோவில்கள் உண்டு. தினந்தோறும் மூன்றுகாலப் பூசை. வருடாவருடம் ஆனி மாதத்திற் பத்து நாட்கள் அலங்கார உற்சவங்கள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

### ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
### ''போயிட்டி'' அச்செழு, நீர்வேலி

மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — சந்தான கோபாலர், அம்மன், வைரவர். வருடாவருடம் அலங்காரத் திருவிழா வைகாசி மாதத்தில் ஆரம்பித்து அனுச நட்சத்திரத்தில் முடிவடையும். மூன்றுகாலப் பூசை இங்கு நடைபெறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

### செல்லப் பிள்ளையார் கோவில்
### தனகலட்டி, சிறுப்பிட்டி, நீர்வேலி

மகா கணபதிப்பிள்ளையார் ஆலயம் என்றும் அழைப்பதுண்டு மூலமூர்த்தி — பிள்ளையார். மூன்றுகாலப் பூசை. ஆனி மாதத்தில் கொடியேறி தேர், தீர்த்தோற்சவங்களுடன் திருவிழா முடிவடையும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

### உலவிக்குளம், பிள்ளையார் கோவில்
### அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி

மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவாரமூர்த்திகள் — சுப்பிரமணியர் வைரவர். இருகாலப் பூசை. ஆவணியில் மகோற்சவம் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

## இலுப்பையடி ஸ்ரீ வீரகத்திவிநாயகர் கோவில்
## வராம்பற்றை, கோப்பாய் வடக்கு

இந்த ஆலயத்தில் நாகதம்பிரான், வைரவர் ஆகிய மூர்த்திகள் உளர். தினந்தோறும் இருகாலப் பூசை. வருடாவருடம் ஆனி மாதத்தில் பதினைந்து நாட்களுக்கு அலங்காரத் திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

## வடகோவை, ஸ்ரீ செல்வ விநாயகர் கோவில்
## கோப்பாய்

1839 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. தினந்தோறும் ஒரு காலப் பூசை. இவ்வாலயத்தில் விநாயக சதுர்த்தி, பிள்ளையார் பெருங்கதை, தைப்பொங்கல் முதலிய காலங்களில் விசேட பூசைகள் நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

## ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
## நீர்வேலி தெற்கு, நீர்வேலி

மூலமூர்த்தி – வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர். பரிவார மூர்த்திகள் – சிவன், அம்பாள், நடேசர், நாகதம்பிரான், பிள்ளையார், ஆறுமுகசுவாமி, நவக்கிரகம், வைரவர், பழனியாண்டவர். தினமும் ஆறுகாலப் பூசை உண்டு. சித்திரைப் பூரணையன்று தீர்த்தம் அமையக்கூடியவாறு இருபத்தொரு தினங்கள் வருடாந்த உற்சவம் நடைபெறும். கந்தசஷ்டியின்போது கொடியேற்றத் திருவிழா நடைபெறும். வைகாசி விசாகம், சிவராத்திரி போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

## ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
## இருபாலை, கோப்பாய்

150 வருடங்களுக்கு முற்பட்ட ஆலயம். மூலஸ்தானத்தில் சுப்பிரமணியர். கண்ணகி அம்பாள், நாகம்பாள், விநாயகர், வைரவர், முனியப்பர் ஆகிய மூர்த்திகளும் அமர்ந்துள்ளனர். தினமும் இருகாலப் பூசை நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

**ஸ்ரீ ஞானவைரவர் கோவில்**
**உரும்பராய்ச் சந்தி, உரும்பராய்**

மூலமூர்த்தி — ஞானவைரவர். சிவலிங்கம், அம்பாள். விக்நேஸ்வரர், சுப்பிரமணியர் ஆகிய மூர்த்திகளும் உள்ளனர். தினமும் மூன்றுகாலப் பூசை. வருடாவருடம் வைகாசி விசாகத்திற் திருவிழாக்கள் நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

**சங்கிலி வைரவர் கோவில்**
**பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலி**

மூலமூர்த்தி — வைரவர், அம்பாளும் ஆலயத்தில் உள்ளார். தினமும் இருகாலப் பூசை. வைகாசி மாதத்தில் திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

**காட்டு வைரவர் கோவில்**
**உரும்பராய்**

மூலமூர்த்தி — வைரவர். ஐம்பொன்னாலான எழுந்தருளி விக்கிரகம் உண்டு. பகற் பூசை நடைபெறும். பங்குனியில் பதினைந்து தினங்களுக்குத் திருவிழா நடைபெறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

**ஸ்ரீ வீரபத்திரர் கோவில்**
**சன்னதி வீதி, கதிரிப்பாய்**

மூலமூர்த்தி — வீரபத்திரர். பரிவாரமூர்த்தி — வைரவர். ஒரு காலப் பூசை. வெள்ளி, செவ்வாயில் விசேட பூசை உண்டு. பங்குனியில் பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறும். தைப்பொங்கல், திருவெம்பாவை விசேட தினங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

### ஸ்ரீ கிருஷ்ணன் கோவில்
### மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு,
### கோப்பாய்

மூலமூர்த்தி – பெருமாளின் படைக்கலமான சக்கரம். பரிவாரத்தில் ஆஞ்சனேயரும், கருடாழ்வாரும் உளர். இருகாலப் பூசை. ஆவணி ஓணத்தையொட்டிப் பத்துத் தினங்களுக்கு உற்சவம். கடைசித் தினத்தன்று உறியடி உற்சவமும் நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

### ஸ்ரீ பூதவராயர் கோவில்
### சிறுப்பிட்டி கிழக்கு
### நீர்வேலி

இவ்வாலயத்தில் விநாயகர், வைரவர் ஆகிய மூர்த்திகளும் அமைந்துள்ளனர். தினந்தோறும் மூன்றுகாலப் பூசைகள் நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

### மதுர் மகாமுத்துமாரி கோவில்
### வேளாளர்தோப்பு, நல்லூர் வடக்கு

ஆலயம் 270 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்று கூறப்படுகின்றது. திருவூஞ்சற் பாட்டு உண்டு. வேளா தோப்பு மதுர மகா முத்துமாரி அம்பாள் கோவில் என்பது முழுப்பெயர். மூலமூர்த்தி – அம்மன், மதுரையிலிருந்து கொண்டு வரப்பட்டது. பரிவாரமூர்த்திகள் – பிள்ளையார், வேல், சிவலிங்கம், வைரவர், நாகதம்பிரான். நித்திய பூசை உண்டு. பத்து நாட் திருவிழா நடைபெறும். விசேட தினங்களில் விசேட பூசை நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### கட்டப்பிராய், இருபாலை

1750 ஆம் ஆண்டளவில் அம்பாள் பிரதிஷ்டை செய்யப்பட்டது என அறியப்படுகிறது. பிள்ளையார், முருகன், வைரவர், நாகதம்பிரான் ஆகியோர் பரிவார மூர்த்திகளாக விளங்குகின்றனர். தினமும் இருகாலப் பூசை உளது. வைகாசி மாதத்தில் அலங்கார உற்சவம் நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

காளி கோவில்
உரும்பராய் வடக்கு, உரும்பராய்

மூலமூர்த்தி — அம்பாள். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், கந்தசுவாமியார், வைரவர் ஆகியோர். நித்திய பூசை உண்டு. தை உத்தரத்திற்கு விசேட திருவிழா நடைபெறக்கூடியதாக முதல் இருபது நாட்களுக்கு உற்சவம் நடைபெறும். திருவெம்பாவை, நவராத்திரி போன்றவை விசேட உற்சவ தினங்களாகும். வெள்ளி தோறும் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

கண்ணகை அம்மன் கோவில்
ஆவரங்கால், புத்தூர்

ஆவரங்கால் சந்தையிலிருந்து சுமார் $\frac{1}{2}$ மைல் தூரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இக்கண்ணகை அம்மனின் மறுபெயர் கன்னுரை அம்மன். மூலஸ்தானத்தை அம்பாள் விக்கிரகம் அலங்கரிக்க பிள்ளையார், வைரவர், நாகதம்பிரான் ஆகிய மூர்த்திகளும் ஆலயத்தில் உளர். தினமும் ஒருகாலப் பூசை. இவ்வாலயத்தில் வருடாவருடம் பங்குனித் திங்கள் நான்கு கிழமையும் பொங்கல் வைபவம் நடைபெறும். இப்பகுதி வாழ் மக்களின் சைவ வழிபாட்டுத் தலங்களில் இதுவும் பிரசித்தி பெற்று விளங்குகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

பலானை, ஸ்ரீ கண்ணகியம்பாள் கோவில்
கோப்பாய் வடக்கு

கண்ணகியம்பாளை மூலஸ்தானத்தில் கொண்டுள்ள இவ்வாலயத்தில் பிள்ளையார், முருகன், வைரவர் பரிவார மூர்த்திகளாக விளங்குகின்றனர். தினமும் இருகாலப் பூசை நடைபெறுகிறது. ஆடி மாதத்தில் இருபத்தொரு நாட்கள் உற்சவம் நடைபெறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

கண்ணகை அம்மன் கோவில்
''கொக்கிருந்தபதி'', அச்செழு, நீர்வேலி

மூலமூர்த்தி கண்ணகை அம்மன். பரிவார மூர்த்திகள் — வைரவர், சண்டேஸ்வரர். தினமும் மூன்று காலப் பூசை. அலங்காரத் திருவிழா பத்து நாட்களுக்குச் சிறப்பாக நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

**மருதடி நாச்சிமார் கோவில்**
**சிறுப்பிட்டி**

தலவிருட்சங்களான மருது, ஆல், வேம்பு ஆகியவற்றின் மத்தியில் நாச்சிமார் வீற்றிருக்கின்றூர். இங்கு விசேட தினங்களில் விசேட பூசை, பொங்கல் ஆகியன சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கோப்பாய்.

**நாச்சிமார் கோவில்**
**கோப்பாய்**

வருடாந்த பொங்கலும், விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

**சிதம்பர நடேசர் கோவில்**
**சைவச் சிறுவர் இல்லம், கைதடி**

கும்பகோணத்திற் செய்யப்பட்ட மூர்த்திகள் இங்கு கொண்டு வரப்பட்டு 1976 ஆம் ஆண்டு திருக்கேதீஸ்வரத்திலே பூசை செய்யப்பட்ட பின் இவ்வாலயத்திலே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனர். தலவிருட்சம் வேம்பு. சிவராத்திரி புராணப் படிப்பும் இங்கு உண்டு. நடேசர் அபிஷேக தினங்களில் விசேட அபிஷேகங்கள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

**'இலஞ்சியாரணியம்' மட்டுவில் அம்பாள் கோவில்**
**மட்டுவில், சாவகச்சேரி.**

நில அளவையாளரான பறங்கியர் ஒருவர் குதிரையில் இப்பகுதிக்கு வந்தபோது அந்தக்குதிரை மயங்கி விழுந்ததாகவும், அங்கிருந்த பூசகர் வந்து விபூதி தூவ குதிரை மயக்கம் தெளிந்ததாகவும், அதற்குப் பிரதியுபகாரமாக இந்த ஆலயம் உள்ள நிலத்தை அவர் இக்கோயிலுக்கு வழங்கியதாகவும் கர்ண பரம்பரைக் கதை ஒன்று உளது. ஊஞ்சற் பதிகங்களும் உண்டு. மூலமூர்த்தி — அம்மன். பரிவார மூர்த்திகள் — மகாமாரியம்மன், பேச்சியம்மன், முனியப்பர், வைரவர் ஆகியோர். தினமும் மூன்றுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆனி மாதத்தில் பன்னிரண்டு தினங்களுக்கு அலங்கார உற்சவம் நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் கோவில்
### கொடிகாமம்

நூறு வருடங்களுக்கு முற்பட்ட ஆலயம். மூலமூர்த்தி – இராஜ ராஜேஸ்வரி அம்பாள். தினமும் இருகாலப் பூசைகள் நடைபெறு கின்றன. வைகாசி அமாவாசைக்கு மூன்றும் நாள் கொடியேறி உற்சவம் நடைபெற்று பௌர்ணமியில் தீர்த்தோற்சவம் நடைபெறு கிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### ஸ்ரீ துர்க்கை அம்மன் கோவில்
### தாழையம்பதி, நுணுவில் தெற்கு,
### சாவகச்சேரி

தினமும் இருகாலப் பூசை. நவராத்திரியோடு திருவிழா நடைபெற்று வருகின்றது. 1981 ஆம் ஆண்டு புனருத்தாரண வேலைகள் நடைபெற்று சம்புரோக்ஷண மகாகும்பாபிஷேகம் நிறைவேறியது. பங்குனியில் வருடாந்த உற்சவம் உளது. தலவிருட்சம் தாழை. விசேட தினங்களில் விசேட அபிஷேகம், பூசை, உற்சவம் ஆகியன சிறப்புற நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### ஸ்ரீ பரமானந்தப் பிள்ளையார் கோவில்
### தாவளை, இயற்றாளை

போர்த்துக்கீசர் காலத்திற்கு முற்பட்ட ஆலயம். இவ்வாலயத்தைப் போர்த்துக்கீசர் அழிக்க எத்தனித்தபோது நாகர் என்பவர் அவர்களைத் துரத்தியதாகவும், அவர்களின் வழித்தோன்றல்களே இன்றும் அந்த ஆலயத்தைக் காத்து வருவதாகவும் கர்ண பரம்பரைக் கதை கூறுகிறது. 1730 ஆம் ஆண்டளவில் நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட வி. சின்னதம்பி அவர்கள் பாடிய அந்தாதிக்கும் கோவிலுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. ஸ்ரீ பரமானந்தப் பிள்ளையார் ஆலயம் பற்றியே இந்த அந்தாதியில் இருப்பதாக நம்பப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### சப்பச்சி மாவடிப்பிள்ளையார் கோவில்
### சாவகச்சேரி

200 வருடப் பழமை வாய்ந்த ஆலயம் இது. தலவிருட்சம் மா. அதன் சுற்றளவு 15 அடி. தினமும் இரண்டுகாலப் பூசை. மணவாளக் கோலம், விநாயக சதுர்த்தி ஆகிய தினங்களில் அலங்கார உற்சவம் நடைபெறுகிறது. பெருங்கதை, புராணபடனம் உண்டு. விசேட காலங்களில் விசேட திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### ஸ்ரீ வேதவனப்பிள்ளையார் கோவில்
### கல்வயல், சாவகச்சேரி

பல வருடங்களுக்கு முன் வேதாரணியத்திலிருந்து கொண்டு வரப்பட்ட பிள்ளையார் விக்கிரகம் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. திருவெம்பாவை பத்துத் தினங்களும் அலங்கார உற்சவம். தலவிருட்சம் பலா. தேவார வகுப்புக்கள், புராண படனம் என்பன நடைபெறுகின்றன. 1981 ஆனி மாதம் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. நித்திய நைமித்திய கிரியைகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### குளக்கட்டுப் பிள்ளையார் கோவில்
### கொடிகாமம்

மூலமூர்த்தி — கணேசர் ,பரிவார மூர்த்திகள் — நாகதம்பிரான், வைரவர் ஆகியோர். நித்திய பூசை நடைபெற்று வருகிறது. வரணி, தாவளை இயற்றாளை ஊரில் இருக்கும் ஆலயம் இது. சுமார் 180 வருடங்களுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### கேசரடிப்பிட்டி பிள்ளையார் கோவில்
### தாவளை, இயற்றாளை, சாவகச்சேரி

மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — அம்பாள், வைரவர், அனுமான், நாகதம்பிரான், ஆகியோர். தினமும் இரு காலப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆவணி மாத உத்தர தினத்தில் அபிஷேகத்துடன், மணவாளக்கோலத் திருவிழாவும் நடைபெற்று வருகிறது. இருநூறு வருடங்களுக்கு முற்பட்ட ஆலயம். வெள்ளம் தேங்கி நிற்கும் ஒரு பகுதியில் இருந்த மேட்டு நிலத்தில் இவ்வாலயம் அமைக்கப்பட்டுப் பொதுமக்களால் வழிபாடு செய்யப்பட்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### ஸ்ரீ செல்லப் பிள்ளையார் கோவில்
### சிவன் கோவில் வீதி, மட்டுவில், சாவகச்சேரி

தினமும் இரண்டுகாலப் பூசை உண்டு. சித்திரையிற் பத்து நாட்களுக்கு அலங்காரத் திருவிழா இடம்பெற்று வருகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### ஸ்ரீ சிதம்பர விநாயகர் கோவில்
### சரசாலை வடக்கு, சாவகச்சேரி

தினமும் இருகாலப் பூசை. வெள்ளிக்கிழமைகளில் மூன்றுகாலப் பூசை. பரிவார மூர்த்தி வைரவர். வைகாசி மாதத்தில் மகோற்சவம். இவ்விநாயகர் பேரில் திருவூஞ்சற் பாடல்கள் உள.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோவில்
### புராணக்கேணி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி

தினமும் இருகாலப் பூசைகள் உள. பரிவார மூர்த்திகள் – சுப்பிரமணியர், நடேசர், சிவகாமி அம்பாள், வைரவர், நாகதம்பிரான். இங்கு புராண படனமும் இடம்பெறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோவில் (பனையடி)
### மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி

தினமும் இருகாலப் பூசை. சுப்பிரமணியர் வைரவர், பரிவார மூர்த்திகளாவர்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### பிள்ளையார் கோவில்
### கும்பாவெளி, கொடிகாமம், சாவகச்சேரி

வெள்ளிக்கிழமைகளிற் பூசை நடைபெற்று வருகிறது. ஆனி அனுஷ நட்சத்திரத்தன்று விசேட திருவிழா இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### தோட்டத்துப் பிள்ளையார் கோவில்
### மந்துவில், கொடிகாமம்

இவ்வாலயத்தில் நித்திய பூசைகள் நடைபெறுகின்றன. சித்திரையில் சித்திர புத்திரர் கதைப்படிப்பும், விசேட பூசையும் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### குருக்கள் மாவடி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோவில்
### மிருசுவில், சாவகச்சேரி

தினமும் இரு காலப் பூசை. மார்கழியில் மூன்று காலப் பூசை. தேவிமாருடன் சுப்பிரமணியர், விநாயகர், நாகதம்பிரான், வைரவர் ஆகியோர் பரிவார மூர்த்திகள். பிள்ளையார் கதைப் படிப்பும் உண்டு.

மாவட்டம்:, யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### சித்தன் மாவடிப் பிள்ளையார் கோவில்
### கல்வயல், சாவகச்சேரி வடக்கு

தினமும் ஒரு காலப் பூசை உண்டு. விசேட காலங்களில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### வள்ளக்குளம் ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோவில்
### மறவன்புலோ, சாவகச்சேரி

வெள்ளிக்கிழமைகளில் மூன்று காலப் பூசைகளும், ஏனைய நாட்களில் இரண்டு காலப் பூசையும் நடைபெறுகின்றன. சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சந்நியாசியார் ஒருவர் தனது ஆத்மார்த்த பூசைக்காக இந்தியாவிலிருந்து ஒரு விநாயகர் திருவுருவத்தைக் கொண்டுவந்து ஸ்தாபித்தார். அந்த விக்கிரகமே இப்பொழுதும் வழிபாட்டிலிருக்கும் மூலவர். இத்தலத்தில் சந்நியாசிமாரின் வழிபாடு தொடர்ந்து இடம்பெற்றது. 1939 ஆம் ஆண்டு நிகழ்ந்த சிவராத்திரித் தினத்தன்று பகலும் இரவும் ஒரே இடத்திலிருந்து இந்த விநாயகரைக் கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் வழிபட்டார்களென்றும் அவர்களின் மௌன வழிபாட்டை அன்று ஏராளமானோர் நேரில் கண்டனர் என்றும் சொல்லப்படுகிறது. தலவிருட்சம் மருது. மாதச் சதுர்த்தி விழாவோடு இதர முக்கியமான சமய விழாக்களும் அனுஷ்டிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

**புலுட்டையன் ஆயிலடிப் பிள்ளையார் கோவில்**
**கல்வயல், சாவகச்சேரி**

தினமும் இரு காலப் பூசை நடைபெறுகிறது. மாதச் சதுர்த்தியிலும், மார்கழித் திருவாதிரையிலும் திருவிழாக்கள் உள்ளன. பரிவார மூர்த்திகள் கந்தசுவாமியார், வைரவர் ஆகியோராவர்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

**கொம்புதட்டி ஸ்ரீ பிள்ளையார் கோவில்**
**கரம்பைக்குறிச்சி கிழக்கு, சாவகச்சேரி**

இவ்வாலயத்தில் நித்திய பூசைகள் நடைபெறுகின்றன. இங்கு சுப்பிரமணியப் பெருமானுக்கும் வைரவருக்கும் தனிக் கோவில்கள் அமைந்துள்ளன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

**ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் கோவில்**
**கும்பிட்டான்புலம், வரணி வடக்கு**

தினமும் மூன்று காலப் பூசை. திருவிழா வைகாசிப் பௌர்ணமியில் நடைபெறுகிறது. பரிவார மூர்த்திகளாக சுப்பிரமணியர், வைரவர், நந்தி ஆகியோர் உளர்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

**ஆரியர் கறுக்காய் ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்**
**வரணி வடக்கு, சாவகச்சேரி**

தினமும் இரு காலப் பூசை. சுப்பிரமணியர், வைரவர் பரிவார மூர்த்திகளாக உளர்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

**அரசடிப் பிள்ளையார் கோவில்**
**மிருசுவில், சாவகச்சேரி**

மூலமூர்த்தி பிள்ளையார். பரிவார மூர்த்தி வைரவர். தினமும் இருகாலப் பூசை. விசேட தினங்களில் விசேட பூசைகள் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### கொல்லங்கிராய், பிள்ளையார் கோவில்
### நுணுவில், சாவகச்சேரி

மூலமூர்த்தி பிள்ளையார். பரிவார மூர்த்தி வைரவர். இருகாலப் பூசை நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### மணங்குணாய் பிள்ளையார் கோவில்
### நுணுவில், சாவகச்சேரி

தினமும் இருகாலப் பூசை. ஆவணி மாதத்தில் அலங்காரத் திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
### நாவற்குழி, கைதடி

ஏறக்குறைய 200 ஆண்டுப் பழமை வாய்ந்தது. ஆறுமுகசுவாமி, வைரவர், நாச்சிமார் ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் இரண்டு காலப் பூசை. ஆவணி சஷ்டி தொடங்கிப் பௌர்ணமி வரை உற்சவம் நடைபெறுகிறது. ஊஞ்சற் பாடல்கள் இங்கு உள்ளன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் கோவில்
### பெருங்குளம், சாவகச்சேரி

வெண்கலத்தினுற் செய்யப்பட்ட ஒரு விநாயகர் பரிவார மூர்த்தியாக ஆலயத்தில் உளர். தினமும் இருகாலப் பூசை. மாதந்தோறும் சதுர்த்தித் திருவிழா நடைபெற்று, வருடந்தோறும் மணவாளக் கோலமும் இடம்பெற்று வருகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில்
### புகையிரத வீதி, மீசாலை

இவ்வாலய மூலமூர்த்தியின் பெயர் ஸ்ரீ திருநீலகண்ட சித்தி விநாயகர். பரிவார மூர்த்திகள் – அம்பாள்மார் சகிதம் சுப்பிரமணியர், வைரவர், நாகதம்பிரான். தினமும் மூன்றுகாலப் பூசை. ஆடிப் பூர்வ பக்ஷபிரதமையிற் கொடியேறிப் பூரணையன்று தீர்த்தம். கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம், பெருங்கதை முதலிய புராணப் படிப்புக்கள் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

## புலுட்டையன் பிள்ளையார் கோவில்
## நுணுவில், சாவகச்சேரி

மூலமூர்த்தி — பிள்ளையார். தினமும் இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. பங்குனி மாதத்தில் வருடாந்த உற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

## மருதடிப் பிள்ளையார் கோவில்
## நுணுவில், சாவகச்சேரி

மூலமூர்த்தி — பிள்ளையார். தினமும் காலையும் மாலையும் பூசைகள் நடைபெறுகின்றன. வைகாசி மாதத்தில் உற்சவம் பத்துத் தினங்களுக்கு நடைபெறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

## வீரகத்திப் பிள்ளையார் கோவில்
## நுணுவில், சாவகச்சேரி

மூலமூர்த்தி — வீரபத்திரர். தினமும் மாலையிற் பூசை நடைபெறும். பங்குனி மாதத்தில் உற்சவம் நடைபெறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

## கந்தசுவாமி கோவில்
## உசன், மிருசுவில், சாவகச்சேரி

இவ்வாலயம் ஆரம்பத்தில் மண் கோயிலாயிருந்து பின்னர் புதுப்பிக்கப்பெற்று நித்திய பூசைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இங்கு பத்து நாட்களுக்கு மகோற்சவம் நடைபெறும். கந்தசஷ்டி ஆரம்ப தினத்தன்று கொடியேறி பத்தாம் நாள் தீர்த்தோற்சவமும், பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். இவ்வாலய மூலமூர்த்தி வேல். பண்டிதர் இளமுருகனாரின் கப்பற்பாட்டு, வித்துவான் சரவணமுத்துவின் ஏசற்பாட்டு, மற்றும் ஊஞ்சற் பாட்டு ஆகியன உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### வேம்படிக் கந்தசுவாமி கோவில்
### அம்பலந்துறை, மட்டுவில் தெற்கு,
### சாவகச்சேரி

தினமும் இரண்டுகாலப் பூசை நடைபெறுகிறது. ஊஞ்சற் பாடல்கள் உண்டு. ஆடிப் பௌர்ணமியை அந்தமாகக் கொண்டு பத்து நாட்களுக்கு அலங்காரத் திருவிழா நடைபெறுகிறது. இது தவிர ஆவணி உத்தரத்திற்கு மணவாளக் கோலம். கந்த சஷ்டியன்று சூரசம்ஹாரமும் இதர விசேட காலங்களில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெறுகின்றன. சுமார் 100 ஆண்டுகள் பழமை உடைய ஆலயம் இது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### கயிற்றசிட்டி அருள்மிகு கந்தசுவாமி கோவில்
### கைதடி

1820 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. மிகப் பழமை வாய்ந்தது. மூலமூர்த்தி—வேல். பரிவார மூர்த்திகள்—பிள்ளையார், ஆறுமுகசுவாமி, வைரவர். தினமும் மூன்றுகாலப் பூசை நடைபெறுகிறது. வருடந்தோறும் ஆனிமாத பூரணை தினத்திற்கு 10 நாட்கள் முன்னதாகக் கொடியேற்றம் தொடங்கி, பூரணை தினத்தன்று தீர்த்தோற்சவம் நடைபெறும். மாதந்தோறும் கார்த்திகை உற்சவமும், சிவராத்திரி, கந்தசஷ்டி, விநாயகர் சதுர்த்தி, தீபாவளி, திருவெம்வெம்பாவை போன்ற விசேட தினங்களில் விசேட பூசைகளும் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### பாலாவி கந்தசுவாமி கோவில்
### பாலாவி தெற்கு, கொடிகாமம்

பல காலமாக கந்தபுராணம் படிக்கப்பட்டு வந்ததனால் இந்த ஆலயம் கந்தபுராணக் கோயில் என்றும் அழைக்கப்பட்டு வந்தது. மூலமூர்த்தி வேல். பரிவார மூர்த்திகள் பிள்ளையார், வைரவர். நித்திய பூசை உண்டு. கதிர்காமத் திருவிழா நாட்களிலும் இதர விசேட நாட்களிலும் விசேட பூசை, திருவிழாக்கள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோவில்
### சங்கத்தானை

சுமார் நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆலயம் இது. புனருத்தாரண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்துக்களின் விசேட விரத நாட்களில் விசேட வழிபாடுகள் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில்
### சேவலப்பிட்டி, வரணி, சாவகச்சேரி

மூலமூர்த்தி வள்ளி தெய்வயானை சமேதரான சுப்பிரமணியர். பரிவார மூர்த்திகள் — சிவன், பார்வதி, விநாயகர், நாகதம்பிரான். தினமும் மூன்றுகாலப் பூசை உளது. ஆனிப் பௌர்ணமியன்று தீர்த்த உற்சவம் வரக்கூடியவாறு கொடியேற்றத்துடன் 12 தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### வைரவ கந்தசுவாமி கோவில்
### நுணுவில், சாவகச்சேரி

மூலமூர்த்தி — ஞானவைரவர். பரிவார மூர்த்திகள் பிள்ளையார், அம்மன், விஷ்ணு ஆகியோர். காலை, மாலைப் பூசை. பங்குனி மாதத்தில் அத்தத்தை முதலாகக் கொண்டு பத்துநாள் அலங்காரத் திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### கற்குழு கந்தசுவாமி கோவில்
### கரம்பைக்குறிச்சி மேற்கு
### வரணி

நித்திய பூசை நடைபெறுகிறது. பரிவார மூர்த்திகளாக விநாயகர், வைரவர் ஆகியோர் உளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

குருநாதர் கோவில்
வரணி வடக்கு,
கொடிகாமம், சாவகச்சேரி

மூலஸ்தானத்தில் வேல். பரிவார மூர்த்திகளாக காத்தவராயர், ஐயனார், அனுமார் உளர். வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசை நடைபெறுகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

கந்தசுவாமி கோவில்
கெருடாவில், சாவகச்சேரி

மூலமூர்த்தி ஐம்பொன்னால் வார்க்கப்பட்ட வேலும், முருகனும். தினமும் இருகாலப் பூசை. கந்தசஷ்டிக்கு அபிஷேகமும், திருவிழாவும் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

கற்புளிக் கந்தசுவாமி கோவில்
நுணாவில்

மூலமூர்த்தி — சுப்பிரமணியர். தினமும் காலையும் மாலையும் பூசைகள் நடைபெறுகின்றன. வைகாசி மாதத்தில் ஒருநாள் உற்சவம் நடைபெறுகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி,

மன்னன்குறிச்சி கந்தசுவாமி கோவில்
மிருசுவில், சாவகச்சேரி

மூலமூர்த்தி வேல். பரிவார மூர்த்திகள் பிள்ளையார், வைரவர். தினமும் மூன்று காலப் பூசை. வைகாசி பூர்வ பக்ஷ சஷ்டித் திதிக்குக் கொடியேற்றம். பத்து நாட்களுக்குத் திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
கரும்பி மாவடி, மீசாலை

நித்திய பூசை உண்டு. வெள்ளிக்கிழமைகளிலும், கந்தசஷ்டி நாட்களிலும் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

புளியந்திடல் கந்தசுவாமி கோவில்
கேலம், மந்துவில், கொடிகாமம்

நித்திய பூசை உண்டு. ஆவணியில் வருடாந்த உற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

சேவலைப்பிட்டி, ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
இடைக்குறிச்சி, வரணி

நித்திய பூசை உண்டு. பரிவார மூர்த்திகள் — விநாயகர், சிவன் ஆகியோர். ஆனி மாதத்தில் திருவிழா நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

கந்தசுவாமி கோவில்
படையாண்டவன் தோட்டம், சாவகச்சேரி வடக்கு
சாவகச்சேரி

மூலமூர்த்தி வேல் பரிவாரத்திற் பிள்ளையாரும், வைரவரும் உளர். தினமும் இருகாலப் பூசை. புராணப் படிப்பும் நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

சித்தர்மடத்து முருகன் கோவில்
எழுதுமட்டுவாள் வடக்கு, சாவகச்சேரி

இவ்வாலயத்தில் நித்திய பூசையுடன் கந்தசஷ்டி, ஐப்பசி வெள்ளி, திருக்கார்த்திகை போன்ற காலங்களில் விசேட உற்சவங்களும் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

வைரவர் கோவில்
நுணுவில், சாவகச்சேரி.

ஏற்றத்தடிக் கோவில் என்றும் அழைப்பதுண்டு. மூலமூர்த்தி ஞானவைரவர். வெள்ளி, செவ்வாய் நாட்களில் பூசை நடைபெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

## வைரவர் கோவில்
## மந்துவில் கொடிகாமம்

கிழமையில் இருநாட் பூசையும், ஆவணியில் மடையும் உண்டு. இவை தவிர இதர விசேட தினங்களில் விசேட பூசைகள் நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

## வைரவர் கோவில்
## மணற்காடு, தனங்கிளப்பு, சாவகச்சேரி

மூலமூர்த்தி வைரவர் சூலம். வெள்ளி, செவ்வாய் நாட்களில் பூசை நடைபெறுகிறது. வைகாசி விசாகத்தையொட்டித் திருவிழா இடம்பெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

## ஸ்ரீ ஆதிசிவ வீரபத்திரப் பெருமான் கோவில்
## இத்தியடி, சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி

500 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆலயம். தினமும் ஒருகாலப் பூசை. ஆசிர்வாதம், திருவூஞ்சல் பாட்டு போன்றவை ஏட்டில் உள்ளன. பரிவார மூர்த்திகளாக விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், ஆஞ்சனேயர் ஆகியோர் உளர்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

## கோயிற்குளத்து அம்மன் கோவில்
## மிருசுவில், சாவகச்சேரி

கண்ணகை அம்மன் மதுரையை எரித்துவிட்டு கோபந் தணிந்து இலங்கைக்கு வந்து களைப்பாறிய இடங்களில் இதுவும் ஒன்றென்பது நம்பிக்கை. மூலமூர்த்தி மகேஸ்வரி அம்பாள். பரிவார மூர்த்திகள் விநாயகர், சுப்பிரமணியர், கண்ணகை அம்மன், வைரவர். இருகாலப் பூசை நடைபெறுகிறது. ஆனிப் பூர்வபக்க சஷ்டித் திதிக்குக் கொடியேறிப் பத்துநாட் திருவிழா நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### கண்ணகை அம்மன் கோவில்
### கைதடி

மூலமூர்த்தி — கண்ணகை அம்பாள். பரிவார மூர்த்திகள் — ஆறுமுகசுவாமி, வைரவர். செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிற் பூசை நடைபெற்றுவருகிறது. வருடாந்த உற்சவம் பங்குனி மாதத்தில் நடைபெறும். தல விருட்சம் அரசு. கண்ணகை அம்பாள் சரித்திரம், புராண படனமாக உள்ளது. இது 1947 இல் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### கச்சாய் கண்ணகை அம்மன் கோவில்
### கச்சாய்

1845 ஆம் ஆண்டு ஆலயம் கட்டப்பட்டது. ''கண்ணகை வரலாறு'' என்னும் புத்தகத்தில் இவ்வாலயம் குறிப்பிடப்பட்டுள்ளது. திங்கள், வெள்ளி நாட்களில் ஒருநேரப் பூசை. வைகாசி விசாகத்தன்று பொங்கல். ஆனி மாதம் அத்த நட்சத்திரத்தன்று மணவாளக் கோலத் திருவிழா நடைபெறுகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### பேத்தி அம்மன் கோவில்
### கண்டி வீதி, நுணுவில், சாவகச்சேரி

மூலமூர்த்தி — அம்பாள். பிரதி திங்கட்கிழமையும் மாலைப் பூசை நடைபெறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### இலந்தைத்திடல், வீரமாகாளி கோவில்
### வேம்பிராய் வீதி, சரசாலை தெற்கு,
### சாவகச்சேரி

தினமும் ஒருகாலப் பூசையும், நவராத்திரி காலங்களில் திருவிழாவும் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

### ஐயனார் கோவில்
### கல்வயல், நுணுவில், சாவகச்சேரி

மூலமூர்த்தி — ஐயனார். பிரதி திங்கட்கிழமையும் பூசை நடைபெற்று வருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

முத்துமாரியம்பாள் கோவில் (ஈஸ்வரி அம்பாள்)
வரணி

இவ்வாலயத்தில் தினமும் இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆவணி மாதத்தில் திருவிழா நடைபெறுகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

ஸ்ரீ கள்ளியம்புட்டி அண்ணமார் கோவில்
தச்சன்தோப்புச் சந்தி,
சாவகச்சேரி

இக்கோயில் மூலமூர்த்தி — சூலம். பிள்ளையாரும் உண்டு. வெள்ளிக்கிழமை தோறும் பூசை. தைப்பொங்கல், வருடப் பிறப்புக் காலங்களில் விசேட மடை வைத்துப் பூசை நடைபெற்று வருகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

அண்ணமார் கோவில்
நாவற்குழி, கைதடி

நித்திய பூசையுடன் விசேட நாட்களிற் பொங்கல், பூசையும் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

அண்ணமார் கோவில்
கைதடிச் சந்தி

மூலமூர்த்தி திரிசூலம். தினமும் ஒருநேரப் பூசை உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
பூநகரி.

ஆலங்கேணிச் சிவன் கோவில்
ஆலங்கேணி, பூநகரி

1944 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. மூலவர் லிங்கமூர்த்தி. பரிவார மூர்த்திகள் — விநாயகர், முருகன், வைரவர். தினமும் மூன்றுகாலப் பூசை உண்டு. திருமுறை வகுப்புக்கள், பாலர் பாடசாலைகள் ஆகியனவும் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
பூநகரி.

### கொட்டிலில் பிள்ளையார் கோவில்
### செட்டியகுறிச்சி, பூநகரி

கோவில் பழமையானது. மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — சுப்பிரமணியர். வைரவர், நாகதம்பிரான். நித்திய பூசைகள் உள. ஆவணிச் சதுர்த்தி இங்கு விசேஷமாக நடைபெறுகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
பூநகரி.

### சோபாலப்பிட்டி ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
### மட்டுவில் நாடு, பூநகரி

மூலமூர்த்தியாக ஸ்ரீ சித்திவிநாயகர் எழுந்தருளியுள்ளார். நித்திய பூசை நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
பூநகரி.

### ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
### பொன்னுவெளி, பூநகரி

மூலமூர்த்தி விநாயகர். பரிவார மூர்த்திகள் கந்தசுவாமியார், வைரவர், நாகபூசணி அம்மன் ஆகியோர் உளர். நித்திய பூசை உளது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
பூநகரி.

### கல்மடம் கற்பகப் பிள்ளையார் கோவில்
### பல்லவராயன்கட்டு, பூநகரி

தினமும் ஒருகாலப் பூசை உண்டு. ஆனி, மார்கழி மாதங்களில் அலங்கார உற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
பூநகரி.

### வெள்ளிப்பள்ளத்து பிள்ளையார் கோவில்
### பூநகரி

மூலமூர்த்தி பிள்ளையார். பரிவாரமூர்த்திகள் — முருகன், ஐயனார், வைரவர், ஆகியோர். தினமும் பூசை நடைபெற்று வருகிறது. வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகிறது. ஆனி மாதத்தில் பத்து நாட்களுக்கு அலங்காரத் திருவிழா நடைபெறும். நவராத்திரி, கந்தசஷ்டி, பிள்ளையார் கதை, திருவெம்பாவை, தைப்பூசம் போன்ற தினங்களில் விசேட பூசை நடைபெற்று வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
பூநகரி.

### ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோவில்
### கலேவேட்டுத் திடல், கறுக்காய்தீவு,
### பூநகரி

1858 ஆம் ஆண்டு நாகதம்பிரான் கோவிலாகத் தாபிக்கப்பட்டமையை 1884 ஆம் ஆண்டுக்குரிய அரசின் கோவிற் பதிவேடு கூறுகின்றது. ஆரம்பத்தில் குடிசையிற் தாபிக்கப்பட்ட இவ்வாலயம் பிற்காலத்தில் செங்கற்களால் கட்டப்பட்டது. 1931 ஆம் ஆண்டில் கற்திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. மூலமூர்த்தி சித்திரவேலாயுதர். பரிவாரமூர்த்திகள் பிள்ளையார், நாகதம்பிரான், திருமால், கன்னிமார் (சப்தகன்னிகள்), வைரவர். தினமும் ஒருகாலப் பூசை. வைகாசி ரேவதி நட்சத்திரமும் அபர பக்க ஏகாதசித் திதியும் கூடும் சுபவேளையில் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி அலங்காரத் திருவிழா நடைபெற்று வருகிறது. கார்த்திகையில் நாகதம்பிரான் பொங்கலும் மயூரகிரி புராணம், திருவாதவூரடிகள் புராணம் படிக்கப்படுவதுடன் பயன் சொல்லப்பட்டும் வருகின்றன. மகாசிவராத்திரி தினம் விசேடமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. தலவிருட்சம் புளி.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
பூநகரி.

### காகம் கரைந்தான் ஐயனார் கோவில்
### பொன்னாவெளி, பாலாவி, பூநகரி

மூலமூர்த்தி — தான்தோன்றியான லிங்கம். விசேட காலங்களில் பூசை வழிபாடுகள் உள. வருடாந்தப் பொங்கல், திருக்குளிர்த்தி ஆகியன நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
பூநகரி.

### துத்தியில் ஐயனார் கோவில், வேரவில்

மூலமூர்த்தி ஐயனார். பரிவார மூர்த்திகள் — அம்மன், புட்கரன், வைரவர். ஆவணிப் பூர நட்சத்திரத்தில் அபிஷேகம், பொங்கல், ஆகியன நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
பூநகரி.

### கண்ணகை அம்மன் கோவில்
### மேளாய், நல்லூர், பூநகரி

இந்த ஆலயம் நல்லூர் ஆலங்கேணி மக்களின் தாய்த்தலமாக விளங்குகிறது. பல நூற்றுண்டுகளுக்கு முந்தியது. மூலமூர்த்தி கண்ணகை அம்பாள்; பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், முருகன், ஐயனர், வைரவர், நாகதம்பிரான். நித்திய பூசை உண்டு. விசேட தினங்களில் விசேட பூசைகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
பூநகரி.

### நல்லதண்ணிக்கட்டு, முனியப்பர் கோவில்

மூலமூர்த்தி முனியப்பர். பரிவார மூர்த்தி வைரவர். வெள்ளிக் கிழமை தோறும் விளக்கேற்றிப் பூசை நடைபெறுகின்றது. ஆனி விசாகத்துக்கு வருடாந்தப் பொங்கல் இடம்பெற்று வருகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
பச்சிலைப்பள்ளி (பளை)

### புலோப்பளை, அறத்தி அம்மன் கோவில்
### புலோப்பளை, பச்சிலைப்பள்ளி

1931 ஆம் வருடத்தில், இயற்றப்பட்ட கண்ணகி அம்மன் காவியம் உண்டு. மூலமூர்த்தி — கண்ணகை அம்பாள். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், சிவன், முத்துமாரியம்பாள், நாகதம்பிரான், வைரவர் ஆகியோர். தினமும் காலையும் மாலையும் பூசைகள் நடைபெறுகின்றன. வைகாசிப் பூரணைப் பொங்கல், சிவராத்திரி, விழா, சித்திரை மாதத்தில் மணவாளக்கோலம் ஆகியன நடைபெறுகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
பளை.

### புலோப்பளை முருகன் கோவில்
### புலோப்பளை, பளை

மூலமூர்த்தி — முருகன். பரிவார மூர்த்திகள் விநாயகர், அம்மன், வைரவர். தினமும் ஒருகாலப் பூசை. விசேட தினங்களிற் பூசைகள் நடைபெற்று அன்னதானமும் வழங்கப்பட்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
பச்சிலைப்பள்ளி (பளை)

## மாமுனை ஸ்ரீ நாகதம்பிரான் கோவில்
## மாமுனை, தாளையடி

ஆதிக்குடிகளான நாகர்களால் வழிபடப்பட்டு வந்தகோவில் இது. பின்னர் வடபகுதியை ஆண்ட செம்பிய மன்னனுல் தாபிக்கப் பட்டு வந்ததாகவும் கோயிலுக்கு உரிய பாடல்கள் கூறுகின்றன. ஒல்லாந்தர் காலத்திலிருந்து இந்த ஆலயத்திற்கு இடைஞ்சல் ஏற்பட்டபோது, இவ்வாலயத்திலிருந்த மூலமூர்த்தி காட்டுக்குள் கொண்டுசெல்லப்பட்டு மறைத்து வைக்கப்பட்டது. ஒல்லாந்தர் காலத்தில் இந்தக் கோயில் தற்போது இருக்கும் இடத்துக்கு இரு நூறு யார் தூரத்தில் இருந்ததாகப் பாடல் கூறுகிறது. இதற்கு ஆதாரமாக மாமுனை வாசிகளால் பழைய நாகதம்பிரான் கோயி லுக்கு அருகிலுள்ள குளம் ''கோயில் குளம்'' எனவும் அழைக்கப் பட்டு வருகிறது. பிள்ளையார் கதைக்காக வைக்கப்படும் கும்பம் இந்தக் குளத்திற்குட்தான் சேர்க்கப்பட்டு வருகிறது. 1941 ஆம் ஆண்டு மாமுனைப் பகுதியில் ஏற்பட்ட கொள்ளை நோயிலிருந்து அப்பகுதி மக்கள் காப்பாற்றப்பட்டது மூர்த்தியின் அற்புதம் என்றே இன்றும் கூறுகிருர்கள். பங்குனிப் பூரணையில் பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. பொங்கலுக் காக ''பண்டம் எடுத்தலும்'' பழமையான ஆலய வரலாறு படித் துக் காண்பித்தலும் இன்றும் நடைபெற்று வருகின்றன. நித்திய பூசை உண்டு. மூலமூர்த்தி – நாகதம்பிரான். பரிவார மூர்த்திகள் – பிள்ளையார், முருகன், வைரவர் ஆகியோர். ஆடி அமாவாசை யைக் கடைசித் தினமாகக் கொண்டு பத்து நாட்களுக்கு உற்சவம் நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கிளிநொச்சி

## சிவன் கோவில்
## சிவநகர், உருத்திரபுரம்

இவ்வாலய சிவலிங்கத்தின் ஆவுடையார் பொறிக்கடவை ஆல யத்திலிருந்து எடுக்கப்பட்டதாக முன்னேர் கூறியுள்ளனர். இங்கு அம்பாளோடு விநாயகர், சனீஸ்வரன், வைர்வர் ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் மூன்றுகாலப் பூசை. விசேட தினங்களில் விசேட பூசை நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கிளிநொச்சி

### இராமநாதபுரம், நந்தவனப் பிள்ளையார் கோவில்

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — சிவன், அம்பாள், வைரவர், சுப்பிரமணியர். தினமும் ஒருகாலப் பூசை. மார்கழித் திருவாதிரையையொட்டி 10 நாட்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது. தலவிருட்சம் வேம்பு. மிகப் பழமை வாய்ந்த ஆலயம் என்பதற்கு அறிகுறியாகப் பழங்காலத்துக் கருங் கல் தூண்கள் இங்கு இருப்பதைக் காணலாம். ஆலயத்தைச் சூழக் குளங்களும் அமைந்துள்ளன. சித்திர குப்த விரதக்கதை, கார்த் திகைப் பெருங்கதை, சிவராத்திரி புராணம் என்பன படிக்கப்பட்டு வருவதுடன் வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கிளிநொச்சி.

### ஊற்றுவிநாயகர் கோவில்
### முல்லைத்தீவு வீதி, 2 ஆம் கட்டை,
### பரந்தன்

யோகர் சுவாமிகளினால் ஸ்தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி பிள்ளை யார். சிவராத்திரி விழா, பிள்ளையார் கதை ஆகியன நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கிளிநொச்சி.

### ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில்
### உருத்திரம், கிளிநொச்சி

75 வருடங்களுக்கு முற்பட்ட ஆலயமெனக் கருதப்படுகிறது. பங்குனி உத்தரம், ஆவணிச் சதுர்த்தி, போன்ற நாட்களில் விசேட பூசை வழிபாடுகள் உண்டு.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கிளிநொச்சி.

### மாவடி ஸ்ரீ முருகன் கோவில்
### இராமநாதபுரம்

மூலமூர்த்தி சுப்பிரமணியர். பரிவார மூர்த்திகள் விநாயகர், அம்பாள், வைரவர். தினமும் மூன்றுகாலப் பூசை. விசேட தினங் களில் அபிஷேகம், உற்சவம் ஆகியன இடம் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கிளிநொச்சி.

### ஸ்ரீ சுப்பிரமணியர் கோவில்
### முரசுமோட்டை, பரந்தன்

*1954* இல் குடியேற்றத்திட்ட மக்களுக்காக ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம். மூலமூர்த்தி வேல். பரிவார மூர்த்திகள் விநாயகர், வைரவர், சண்டேஸ்வரர், நவக்கிரகம் ஆகியோர். தினமும் மூன்று காலப் பூசை. ஆவணி ஓணத்துடன் பத்து நாட்களுக்குத் திருவிழா நடைபெற்று வருகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கிளிநொச்சி.

### கந்தசாமி கோவில்
### கிளிநொச்சி

நித்திய பூசைகள் நடைபெறுகின்றன. ஆவணிப் பூரணைக்குப் பத்துத் தினங்களுக்கு முன் கொடியேறி, பூரணைத் தீர்த்தத் துடன் மகோற்சவம் முடிவுறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கிளிநொச்சி.

### ஸ்ரீ ரங்கநாதன் கோவில்
### வட்டக்கச்சி, கிளிநொச்சி

சரித்திரச் சான்றுகளைக் கொண்ட கோவில். குடியேற்றத் திட்டம் அமைந்தபடியால் புதிதாக்கப்பட்டது. மூலமூர்த்தி மகா விஷ்ணு, நித்திய பூசை உண்டு. விசேட தினங்களில் விசேட பூசை நடைபெறும்.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கிளிநொச்சி.

### குறிஞ்சாத்தீவு, கண்ணகை அம்மன் கோவில்
### ஆனையிறவு

யாழ்ப்பாணம் — கண்டி வீதியில் கடற்கரைப் பக்கமாக உளது. நித்திய பூசை உண்டு. பத்துத் தினங்களுக்குத் திருவிழா நடைபெற்று, வைகாசிப் பௌர்ணமிக்கு முடிவுறுகின்றது.

மாவட்டம்:- யாழ்ப்பாணம்,
கிளிநொச்சி.


### ஸ்ரீ நாகதம்பிரான் கோவில்
### டிப்போ வீதி, கிளிநொச்சி

நாக பாம்பொன்று தினமும் இங்கு வருவதாக நம்பிக்கை. மூலமூர்த்தி நாகதம்பிரான். பரிவார மூர்த்திகள் — விநாயகர், முருகன், வைரவர். தினமும் இருகாலப் பூசை. இங்கு சிவராத்திரி, திருவெம்பாவை விசேட தினங்கள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்டக் கோவில் படங்கள்




யாழ் / மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் 74 அடி உயரமான இராஜகோபுரம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் / மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் உள்ள சிற்பத்தூண்



யாழ் / மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் உட்பிரகார மேல் வாயிலுள்ள இராசி மண்டலச் சிற்பம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் / மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் எழுந்தருளியுள்ள. பழனியாண்டவர் மூர்த்தி




யாழ் / மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுள்ள கலியம்சமிக்க ஒரு காட்சி
வசிட்டரும் காராம்பசுவும்


யாழ் / கீரிமலை நகுலேஸ்வர சுவாமி ஆலயத்திலுள்ள சோமாஸ்கந்த மூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ் / வல்வெட்டித்துறை நெடிய காட்டுப் பிள்ளையார் கோவிலுள்ள பூங்காவன மண்டபம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் / பருத்தித்துறை [illegible] கோவில் மூலஸ்தான விமானம்



யாழ் /பருத்தித்துறை கோட்டடிப் பிள்ளையார் இராஜகோபுரம்



யாழ் /பொலிகண்டி கந்[illegible]திலிருந்து கொண்டு வரப்பட்ட
புராதன ஆறுமுகசுவாமியின் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ் / பொலிகண்டி கந்தவனக் கடவையிலுள்ள ஆறுமுகசுவாமி உற்சவமூர்த்தி

யாழ் / தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவிலில் பக்தர்கள் காவடி எடுத்து வீதி வலம் வருதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ் /நாகர் கோவில் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய மூலஸ்தான விமானத்தின் அழகுறு தோற்றம்

யாழ் /நாகர் கோவில் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தின் மிக புராதன நாகதம்பிரானும், சிவலிங்கமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் / நல்லூர் கந்தசுவாமி கோவில் மணிக்கூட்டு கோபுரம், முன் வாயில் அமைப்பு ஆகியன


யாழ் / நல்லூர் கந்தசுவாமி கோவிலிலுள்ள மகரவாகனம், அன்னவாகனம், இடபவாகனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் /வண்ணார்பண்ணை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலின் இராஜகோபுரம்



யாழ் /வண்ணார்பண்ணை ஸ்ரீ வரதராஜப் பெருமாளும் இரு தேவியரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ் / வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் 31.12.1847 இல் தமது முதலாவது பிரசங்கத்தை நிகழ்த்திய மண்டபமும், நினைவுச் சின்னமும்




யாழ் / வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலிலுள்ள அன்னை ஸ்ரீ காமாட்சி அம்பாள் (3 அடி உயரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் / வண்ணார்பண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில்



யாழ் / வண்ணார்பண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவிலுள்ள வாள். இது போர்த்துக்கேயரிடமிருந்து சங்கிலி அரசனால் கைபற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ் /வில்லூன்றி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும்
பஞ்சமுக விநாயகப் பெருமான்

யாழ் /வண்ணார்பண்ணை ஸ்ரீ கதிரேசன் கோவிலுள்ள மயில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ் / வண்ணார்பண்ணை வீரமாகாளியம்பாள் ஆலயத்தில் சிங்க வாகனத்தில்
எழுந்தருளியிருக்கும் உற்சவ மூர்த்தி

யாழ் / புங்குடுதீவுச் சிவன் கோவில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ் / நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோவிலில் உள்ள தேரில் காணப்படும் நுண்ணிய வேலைப்பாடமைந்த அழகுறு சிற்பங்கள்

யாழ் / பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலின் சுவர் ஓவியம், பகவத்கீதைக் காட்சி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ் / நயினைதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

யாழ் / நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோவிலுள்ள அம்பாள் விக்கிரகமும், மேரு யந்திரமும்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




யாழ் / பருளாய் விநாயகர் கோவிலின் பழைய தேரிலுள்ள சிற்பங்கள்

யாழ் / பருளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோவில் ஆறுமுகசுவாமி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




யாழ் / சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் சேர். பொன்னம்பலம் இராமநாதன அவர்களின் சமாதியிலுள்ள மூர்த்திகள்—சேர். பொன்னம்பலம் இராமநாதனவர் களின் நித்திய வழிபாட்டு மூர்த்திகள்

யாழ் / நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ் / மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் கொடித்தம்பத்துடன் உட்புறத் தோற்றம்

யாழ் / சாவகச்சேரி சிவன் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் /சாவகச்சேரி தான்தோன்றி வாரிய வனபதி சிவலிங்கம்




யாழ் /சாவகச்சேரி தான்[illegible] அம்பாள் (உயரம் 4 அடி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ் / கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன் கோவிலிலுள்ள மூலமூர்த்தி




யாழ் / குமரபுரம் ஸ்ரீ [illegible] கோவிலின் மூலஸ்தான விமானத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ் /நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதினத்து 1 ஆம் குரு மஹாசந்நிதானத்தின் சமாதியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கத்துக்கு 2 ஆம் குரு மஹாசந்நிதானம் பூஜை வழிபாடுகள் செய்கின்றார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் / தான்தோன்றி [illegible] — [illegible]ருட்சம் இத்திமரம்




யாழ் / புன்னாலைக் கட்டுவன் ஆகாயக் கடவைச் சித்திவிநாயகர் ஆலய இராஜ கோபுரம் மணிக்கூட்டுக் கோபுரம் ஆகியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் / குன்றுகைம் கதிரமலைச் சிவன் கோவில் மூலவர் ஸ்ரீ பொன்னம்பலவாணேசர்




யாழ் / சுன்னுகம் கதிரமலைச் சிவன் கோவிலில் கந்தபுராண ஏடுகளுக்குத் தீபாராதனை பூசைகள் நிறைவேறியதும் பிரதம சிவாச்சாரியார் காப்புச் சொல்லி புராண படனத்தை ஆரம்பித்து வைக்கிறுர்.

யாழ் / மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய எல்லைக்குள் இருக்கும் மிகப்பழமை வாய்ந்த தலவிருட்சம் ''காஞ்சிமா''.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ் / மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் இருக்கும் ''முகோத்தர மகாரதம்''
இது 1782 ஆம் ஆண்டு இந்திய சிற்ப வல்லுனர்களால் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# முல்லைத்தீவு மாவட்டம்

கொழும்பில் இருந்து 194 மைல் தொலைவில் உள்ளது. கொழும்பு – காங்கேசன்துறைப் புகையிரத மூலம் சென்று, மாங்குளம் புகையிரத நிலையத்தில் இறங்கி, அங்கிருந்து பேருந்து மூலம் முல்லைத்தீவுக்குச் செல்ல முடியும். முல்லைத்தீவுப் பட்டினத்தில் இருந்து பேருந்து மூலம் இங்குள்ள ஆலயங்களைத் தரிசிக்கலாம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பழம்பெரும் தான்தோன்றீஸ்வரர் ஆலயமும், அருள்மிக்க வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோவிலும் பேரருள் வாய்ந்த முறிகண்டிப் பிள்ளையார் கோவிலும் உள்ளமை குறிப்பிடக்கூடியதொன்றாகும். வற்றாப்பளை அம்மன் பொங்கல் இங்கு மிகவும் பிரபலியமானது.

யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவுக்குப் பேருந்திலே செல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- முல்லைத்தீவு.
புதுக்குடியிருப்பு.

## தான்தோன்றீஸ்வரர் கோவில்
## ஒட்டிசுட்டான்

இலங்கையிலுள்ள தான்தோன்றீஸ்வரர் ஆலயங்களுள் இதுவுமொன்று. மூலஸ்தானத்தில் உள்ள சுயம்பு லிங்கத்திற்கு ஆவுடையார் இல்லை. இவ்வாலயம் வன்னி மன்னர்களின் ஆதரவைப் பெற்றிருந்தது. அம்பாள் பெயர் தேவி பூலோக நாயகி.

இங்கு நித்திய பூசை மூன்று காலங்களுக்கு நடைபெறுகின்றது. மகோற்சவம் ஆனி அமாவாசையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, பௌர்ணமியில் தீர்த்தத்துடன் முடிவுறுகின்றது. பதின்மூன்றும் திருவிழாவிலே பக்தர்கள் வேடுவ வேடம் பூண்டு வீதி வலம் வந்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுகின்றனர்.

மாவட்டம்:- முல்லைத்தீவு.
முல்லைத்தீவு.

## குருந்தூர் சிவன்கோவில்
## தண்ணிமுறிப்பு, நெடுங்கேணி

குளக்கோட்டு மன்னன் காலத்தில் இவ்வாலயம் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆலயம் தற்போது சிதைவுற்ற நிலையில் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- முல்லைத்தீவு,
**முல்லைத்தீவு.**

**மகாலிங்கேஸ்வரர் கோவில்**
**கொக்குத்தொடுவாய், முல்லைத்தீவு**

மூலமூர்த்தி — லிங்கம். தினமும் இரண்டு காலப்பூசை உளது. விசேட தினங்களில் விசேட பூசை நடைபெறும்.

**மாவட்டம்:- முல்லைத்தீவு,**
**கரைதுறைப்பற்று.**

**வற்றாப்பளை, கண்ணகை அம்மன் கோவில்**
**மாங்குளம்-முல்லைத்தீவு வீதி, சந்திக்கடல் ஓரம், முல்லைத்தீவு**

கண்ணகி அம்பாள் இலங்கையில் வந்தமர்ந்த இடமாகிய பத்தாம்பளை என்பது மருவி வற்றாப்பளை ஆகியது என்பது வரலாறு. மூலமூர்த்தியாக கண்ணகை அம்பாள் வீற்றிருக்க, விநாயகர், நாகதம்பிரான் ஆகிய மூர்த்திகள் பரிவாரத்தில் உளர். தினமும் மூன்றுகாலப் பூசை உண்டு. சோமவாரம், நவராத்திரி; வைகாசி விசாகம், பொங்கல் விழா ஆகியன நடைபெறும் தினங்களாகும். தமிழ்நாட்டில் கண்ணகை அம்பாளுக்குக் கோவில் அமைத்த காலம் தொடக்கம் இத்தலம் இருந்து வருகிறது என்பது ஆதாரபூர்வமான வரலாறு. புராதனப் பெருமை வாய்ந்த ஓர் ஆலயம் இது.

**மாவட்டம்:- முல்லைத்தீவு,**
**முல்லைத்தீவு.**

**கண்ணகை அம்மன் கோவில்**
**கொக்கிளாய், முல்லைத்தீவு**

மூலமூர்த்தி கண்ணகை அம்பாள். பரிவார மூர்த்திகள் — மாணிக்கப் பிள்ளையார், முருகன், வைரவர். தினமும் இரண்டு காலப் பூசை உண்டு. சித்திரைப் பூசத்தில் இருந்து பத்து நாட்களுக்கு அலங்காரத் திருவிழா நடைபெறும்.

**மாவட்டம்:- முல்லைத்தீவு.**
**முல்லைத்தீவு.**

**முறிகண்டிப் பிள்ளையார் கோவில்**
**முறிகண்டி**

யாழ்ப்பாணம் கண்டி வீதியில் முறிகண்டி என்ற ஊரில் வீதிக்கு அருகில் உள்ள ஆலயமே முறிகண்டிப் பிள்ளையார் கோவிலாகும். வாகனங்கள் இங்கு நிறுத்தப்பட்டு தேங்காய் உடைத்து, கற்பூரம் கொளுத்தி வழிபாடு செய்த பின்பே பிரயாணிகள் தமது பயணத்தை மேற்கொள்ளுகின்றனர். இங்கே இன, மத வேறுபாடுகள் இல்லை. நித்திய பூசைகள் நடைபெறும். விசேட தினங்களில் விசேட அபிஷேகம், பூசை ஆகியன இடம்பெறுகின்றன. தல விருட்சம் பாலை மரம் ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- முல்லைத்தீவு.
முல்லைத்தீவு.

### ஸ்ரீ காட்டு விநாயகர் கோவில்
### முள்ளியவளை

பரராசசேகர வன்னியனால் பரிபாலிக்கப்பட்ட வரலாற்றையுடையது. ஆலயத்தைப் பற்றிய கர்ண பரம்பரைக் கதைகளும், நாட்டுப் பாடல்களும் உள்ளன. மூலமூர்த்தி — வெள்ளைக்கை நாச்சனால் கொண்டு வரப்பட்ட விக்கிரகம், பரிவார மூர்த்திகள் — கண்ணகை, சுப்பிரமணியர், வைரவர், நாகதம்பிரான், வெள்ளிக் கிழமைகளில் மூன்றுகாலப் பூசை உளது. மற்றைய தினங்களில் இரண்டு காலப் பூசை உண்டு. வைகாசிப் பூரணைத் திங்களை இறுதியாகக் கொண்டு எட்டு நாட்களுக்குத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. புராண படனமும் இங்கு நடைபெறும்.

மாவட்டம்:- முல்லைத்தீவு.
முல்லைத்தீவு.

### ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
### ஊற்றங்கரை வீதி, முல்லைத்தீவு

150 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. பண்டார வன்னியன் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. வசந்தன் கும்மி, திருவூஞ்சல், ஊற்றங்கரை சித்திவிநாயகர் வெண்பா ஆகிய நூல்கள் உண்டு. மூலமூர்த்தி — விநாயகர், பரிவார மூர்த்திகள் — பாலதண்டபாணி, வைரவர். தினமும் மூன்றுகாலப் பூசை உளது. சித்திரைப் பூர்வ பட்ச சதுர்த்தியன்று கொடியேறிப் பதினொரு தினங்களுக்கு உற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- முல்லைத்தீவு.
முல்லைத்தீவு.

### கொட்டுக் கிணற்றுப் பிள்ளையார் கோவில்
### குமுளமுனை, முள்ளியவளை

மூர்த்தி, தலம், தீர்த்தப் பெருமையுடையது. சரித்திரச் சிறப்பு வாய்ந்தது. பழங்குடி மக்கள் வாழும் பகுதியில் அமைந்தது. சித்தி விநாயகர், தலைவெட்டிப்பிள்ளையார், ஞானவிநாயகர் என்றும் இம் மூர்த்தியை அழைப்பதுண்டு. மூர்த்தி சிறப்பத்திறனுடையது. கொட்டுக் கிணற்று வயலில் ஆரம்பத்தில் எழுந்தருளியபடியால் இவருக்கு இப்பெயர் கிடைத்தது. ''பலர் காண வெட்ட வெளியில் இருப்பேன்'' என்று பிள்ளையார் கூறியதான கதையும் உண்டு. நித்திய பூசை, பொங்கல் ஆகியன சிறப்புற இடம்பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- முல்லைத்தீவு.
முல்லைத்தீவு.

### குமுளமுனை ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்
### முள்ளியவளை, முல்லைத்தீவு

சுமார் 300 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆலயம். பண்டார வன்னியனால் பூசிக்கப்பட்டு பராமரிக்கப்பட்ட பெருமைக்குரியது. ஆலயத்தைப் பற்றிய பாடல்களும், கர்ண பரம்பரைக் கதைகளும் உண்டு. மூலமூர்த்தி – விநாயகர். பரிவார மூர்த்திகள் – முருகன், வைரவர், நாகதம்பிரான். தினமும் மூன்றுகாலப் பூசை. ஆனி மாதச் சித்திரை நட்சத்திரத்தன்று அலங்கார உற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- முல்லைத்தீவு,
முல்லைத்தீவு.

### பிள்ளையார் கோவில்
### தண்டுவான், முல்லைத்தீவு

300 வருடங்களுக்கு முந்திய ஆலயம் இது. மூலமூர்த்தி பிள்ளையார். நித்திய பூசை உண்டு. சித்திரா பௌர்ணமி தினத்தன்று வருடாந்தக் திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- முல்லைத்தீவு,
முல்லைத்தீவு.

### கோட்டக்கேணிப் பிள்ளையார் கோவில்
### கொக்குத்தொடுவாய், முல்லைத்தீவு

மூலமூர்த்தி பிள்ளையார். விசேட நாட்களிற் பூசைகள் உண்டு. பிள்ளையார் கதைப் படிப்பும் இங்கு உண்டு.

மாவட்டம்:- முல்லைத்தீவு,
முல்லைத்தீவு.

### ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்
### குமுளமுனை, முள்ளியவளை

தினமும் மூன்றுகாலப் பூசை நடைபெறுகிறது. இப்பிள்ளையார் வன்னி மன்னர்களால் வணங்கப்பட்டவர். மண் சுவர்களினால் அமைந்த சிறு கோயிலிலிருந்து காலப்போக்கில் பெரிய ஆலயமாகக் கட்டப்பட்டது. ஆண்டுதோறும் அலங்காரத் திருவிழா நடைபெற்றுவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- முல்லைத்தீவு,
முல்லைத்தீவு.

**கணுக்கேணி, ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்**
**தண்ணீரூற்று, முல்லைத்தீவு**

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — நடராஜர், வைரவர். நித்திய பூசை உண்டு. தைப்பூசம், சிவராத்திரி, திருக் கார்த்திகை ஆகிய விசேட தினங்களில் விசேட பூசைகள் இடம் பெறுகின்றன.

மாவட்டம்:- முல்லைத்தீவு,
முல்லைத்தீவு.

**செம்மலை, மாணிக்க விநாயகர் கோவில்**
**கொக்கிளாய் வீதி, முல்லைத்தீவு**

கனவில் தோன்றிய இடத்திலிருந்து பிள்ளையார் விக்கிரகம் எடுக்கப்பட்டதாகக் கதை. தினமும் மூன்றுகாலப் பூசை இடம் பெறுகின்றது. விநாயக சதுர்த்தி, பெருங்கதை நாட்கள் முதலியன விசேட விழாத் தினங்கள் ஆகும்.

மாவட்டம்:- முல்லைத்தீவு,
முல்லைத்தீவு.

**ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்**
**கருநாட்டுக்கேணி, கொக்கிளாய், முல்லைத்தீவு**

மூலமூர்த்தி பிள்ளையார். பரிவார மூர்த்தி — வைரவர். தினமும் இரண்டுகாலப் பூசை உளது. ஆவணி மாதத்தில் வருடாந்த அலங் கார உற்சவம் சிறப்புற நடைபெறுகின்றது.

மாவட்டம்:- முல்லைத்தீவு,
முல்லைத்தீவு.

**பிள்ளையார் கோவில்**
**பழம்பாசிச் சந்தி, நெடுங்கேணி**

100 வருடங்களுக்கு முற்பட்டது. மூலமூர்த்தி — பிள்ளையார். வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் பூசை நடைபெறும். ஆவணிச் சதுர்த்தி, பிள்ளையார் கதை, திருவெம்பாவை ஆகிய விசேட தினங்களில் விசேட வழிபாடுகள் இடம்பெறுகின்றன.

மாவட்டம்:- முல்லைத்தீவு,
முல்லைத்தீவு.

**அரசடிப் பிள்ளையார் கோவில்**
**கொக்கிளாய், முல்லைத்தீவு**

மூலமூர்த்தி — பிள்ளையார். அலங்கார உற்சவமாக ஆவணிச் சதுர்த்தி விழா நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- முல்லைத்தீவு,
முல்லைத்தீவு.

புளியங்குளத்துப் பிள்ளையார் கோவில்
தண்டுவான், முல்லைத்தீவு

மூலமூர்த்தி பிள்ளையார். சுமார் 160 வருடங்களுக்கு முன்னர் இந்த விக்கிரகம் கண்டெடுக்கப்பட்டது. விசேட தினங்களில் பூசைகள் உண்டு.

மாவட்டம்:- முல்லைத்தீவு,
முல்லைத்தீவு.

திருமுருகன் கோவில்
கொக்கிளாய் வீதி, 6 ஆவது மைல் கல், முல்லைத்தீவு

பண்டார வன்னியன் காலத்தில் இருந்து வந்த கோவில். காலகதியில் சிதைவுறவே பக்தர்களின் முயற்சியால் இந்த ஆலயம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இங்கு வேல், பிள்ளையார், வீரபத்திரர் ஆகிய மூர்த்திகள் உளர். நித்திய பூசை உண்டு. பங்குனி உத்தரத்தையொட்டி வருடாந்த உற்சவம் நடைபெறும். சனி, ஞாயிறு நாட்களில் மாணவர்களுக்குச் சமய பாட வகுப்புகளும் நடைபெறும்.

மாவட்டம்:- முல்லைத்தீவு,
முல்லைத்தீவு.

ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோவில்
குமாரபுரம், முள்ளியவளை

புராதன ஆலயம். மூலமூர்த்தி — அம்பாள்மார் சகிதம் சுப்பிரமணியர். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், வைரவர். நித்திய பூசை நடைபெறுகின்றது.

மாவட்டம்:- முல்லைத்தீவு,
முல்லைத்தீவு.

குன்றின்மேல் குமரன் கோவில்
குமுளமுனை, முள்ளியவளை

கொட்டுண்கிணற்று விநாயகர் ஆலயத்தின் பின்புறத்தே அமைந்துள்ள அழகிய சிறுகுன்றின் உச்சியில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. விசேட காலங்களில் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- முல்லைத்தீவு,
முல்லைத்தீவு.

ஸ்ரீ முருகன் கோவில்
பனிச்சையடி, கொக்குத் தொடுவாய்

இங்கு விசேட தினங்களில் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- முல்லைத்தீவு.
முல்லைத்தீவு.

### மகாவிஷ்ணு கோவில்
### மாமூலை, முள்ளியவளை

சுமார் 100 வருடப்பழமை வாய்ந்தது. மூலமூர்த்தி விஷ்ணு, நித்திய பூசை உண்டு. கிருஷ்ண ஜயந்தி, வைகுண்டஏகாதசி நாட்களில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

மாவட்டம்:- முல்லைத்தீவு,
முல்லைத்தீவு.

### ஆதி ஐயனார் கோவில்
### ஆண்டான்குளம், முள்ளியவளை

ஆலயத்தில் திரிசூலம் வழிபடப்பட்டு வருகின்றது. இந்த ஆலயம் வரலாற்றுப் பெருமை வாய்ந்ததாகும். வருடாந்த உற்சவம் நடைபெறுகின்றது.

மாவட்டம்:- முல்லைத்தீவு,
மாந்தை கிழக்கு, பாண்டியன்குளம்.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### வன்னி விளாங்குளம், முல்லைத்தீவு

மூலமூர்த்தி — ஸ்ரீ முத்துமாரி அம்பாள். பரிவாரத்தில் பிள்ளையார், சுப்பிரமணியர், காத்தவராயர், வைரவர், குருநாதசுவாமி ஆகிய மூர்த்திகள் உளர். வைகாசி விசாகத்தில் விசேட பொங்கல் உண்டு.

மாவட்டம்:- முல்லைத்தீவு,
முல்லைத்தீவு.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### கொக்குத்தொடுவாய், முல்லைத்தீவு

மூலமூர்த்தி — முத்துமாரியம்மன். பரிவார மூர்த்திகள் — வைரவர், கண்ணகை அம்பாள், பிள்ளையார், முருகன். ஆனி மாதத்தில் பத்து நாட்களுக்கு வருடாந்தத் திருவிழா நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- முல்லைத்தீவு,
முல்லைத்தீவு.

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
கறடிப்பிலவு, நெடுங்கேணி

மூலமூர்த்தி — அம்பாள். வெள்ளிக்கிழமைகளில் பூசை வழிபாடு நடைபெறும்.

மாவட்டம்:- முல்லைத்தீவு,
முல்லைத்தீவு.


ஸ்ரீ நாகதம்பிரான் கோவில்
குமுளமுனை, முள்ளியவளை

இந்த ஆலயம் குமுளமுனைக் கோட்டுக் கிணற்றுப் பிள்ளையார் தலத்தின் அருகே சிறிய குன்றின் சரிவில் அமைந்துள்ளது. புரட்டாதியிற் பொங்கல் நடைபெற்றுவருகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்டக் கோவில் படங்கள்




முல்லைத்திவு ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய உற்சவ மூர்த்தி
(கிணற்றிலிருந்து எடுக்கப்பட்டது).




முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய கிணறும், அண்டாவும்.
(கிணற்றிலிருந்து இவ்வாலயத்திலுள்ள சில விக்கிரகங்கள் எடுக்கப்பட்டன).
அண்டா—(பண்டாரவன்னியன் அவர்கள் கோவிலுக்கு வழங்கியது).

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு வற்ருப்பளை கண்ணகை அம்மன் கோவில்

முல்லைத்தீவு வற்ருப்பளை கண்ணகை அம்பாள் கோவிலில் உள்ள உற்சவ மூர்த்தி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## வவுனியா மாவட்டம்

கொழும்பில் இருந்து *158* மைல் தூரத்தில் உளது. கொழும்பு — காங்கேசன்துறைப் புகையிரத மூலம் சென்று வவுனியாப் புகையிரத நிலையத்தில் இறங்க வேண்டும். அன்றேல், பேருந்துகளிற் சென்று வவுனியாவில் இறங்க வேண்டும்.

வவுனியாப் பட்டினத்தில் இருந்து இம்மாவட்டத்தில் உள்ள ஆலயங்களைப் பேருந்துகளிற் சென்று வழிபடலாம்.

முல்லைத்தீவில் இருந்து வவுனியாவுக்குப் பேருந்து வசதிகள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

### புதுவிளாங்குளம் சிவன் கோவில்
### மாங்குளம்

*1963* இல் ஸ்தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி — சிவலிங்கம். பரிவார மூர்த்திகள் — கௌரியம்பாள், நடேசர், வைரவர். நித்திய பூசைகளோடு ஆவணிப் பூரணையையடுத்துத் திருவிழா நடைபெறுகிறது.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

### ஸ்ரீ அம்பாள் கோவில்
### கோமோட்டை, நெடுங்கேணி

வெள்ளிக்கிழமைகளில் பகற்பூசை நடைபெறும். ஆவணியில் பொங்கல் விழா இடம்பெறும். சுமார் நூறு வருடங்களுக்கு மேற்பட்ட ஆலயம் இது.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா.

### குடியிருப்பு ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
### வவுனியா

நித்திய பூசை உளது. ஆவணிச் சதுர்த்தியில் விசேட அபிடேகம் உற்சவம் ஆகியன நடைபெறுகின்றன. மணவாளக்கோல விழா வன்று திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா தெற்கு,

**ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் கோவில்**
**வெளிவட்ட வீதி,**
**வவுனியா**

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் சனீஸ்வரன், வைரவர், முருகன். இருகாலப் பூசை. வருடாந்த உற்சவம் கார்த்திகை மாதத்தில் 10 தினங்களுக்கு நடைபெற்று வருகின்றது.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா தெற்கு, தமிழ்ப் பிரிவு.

**மூன்று முறிப்பு விநாயகர் ஆலயம்**
**மூன்று முறிப்பு**
**வவுனியா**

மூலவர் தான்தோன்றி விநாயக மூர்த்தி. சித்திரா பௌர்ணமியன்று வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகின்றது. தலவிருட்சங்கள் ஆல், பாலை.

மாவட்டம்:- வவுனியா.
வவுனியா வடக்கு.

**பிள்ளையார் கோவில்**
**மருதோடை,**
**வவுனியா வடக்கு**

மூலமூர்த்தி பிள்ளையார். வெள்ளி தோறும் பகல் பூசை. பிள்ளையார் கதை 21 நாட்களுக்கு நடைபெற்று வருவதுடன், விசேட காலங்களில் விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

**விநாயகர் கோவில்**
**மாமடு நெடுங்கேணி**

மூலமூர்த்தி — விநாயகர். வெள்ளி தோறும் பூசை உண்டு. விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

**பிள்ளையார் கோவில்**
**நைனாமடு, நெடுங்கேணி**

விசேட காலங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

குளக்கட்டுப் பிள்ளையார் கோவில்
புளியங்குளம்

மூலமூர்த்தி பிள்ளையார். விசேட தினங்களில் மாத்திரம் பூசை வழிபாடுகள் நடைபெறும்.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

பிள்ளையார் கோவில்
கரப்புக்குத்தி,
கனகராயன்குளம், மாங்குளம்

நேர்த்திகளை நிறைவேற்றுவதற்காக விசேட தினங்களில் விசேட பூசைகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

அரசடிப் பிள்ளையார் கோவில்
சின்னப் பூவரசங் குளம்
புளியங்குளம்

மூலமூர்த்தி – பிள்ளையார். விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

பிள்ளையார் கோவில்
பட்டிக்குடியிருப்பு
நெடுங்கேணி

மூலமூர்த்தி – லிங்கம். வெள்ளி தோறும் காலைப் பூசை உண்டு. திருவெம்பாவை, பிள்ளையார் கதை ஆகியனவும், விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

பிள்ளையார் கோவில்
பெரிய பூவரசங்குளம்
புளியங்குளம்

விசேட காலங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா தெற்கு,

### பிள்ளையார் கோவில்
### ஆச்சிக்குளம், வவுனியா

மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — நந்தி, வைரவர், நாகதம்பிரான். திங்கள், வெள்ளி நாட்களில் பூசை நடைபெறும். ஆனி மாதம் பூச நட்சத்திரத்தன்று அலங்காரத் திருவிழா நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

### பிள்ளையார் கோவில்
### பரந்தன், புளியங்குளம்

மூலமூர்த்தி பிள்ளையார். வெள்ளி தோறும் பூசை. விசேட தினங்களில் விசேட வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா தெற்கு.

### ஸ்ரீ விநாயகர் கோவில்
### தவசியாகுளம், வவுனியா

வெள்ளி தோறும் பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா தெற்கு.

### ஸ்ரீ விநாயகர் கோவில்
### கல்மடு யூனிற் - 1,
### வவுனியா

வெள்ளிதோறும் பூசை நடைபெறும். விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா தெற்கு.

### ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
### வெளிக்குளம், வவுனியா

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — முருகன், பஞ்ச உலோகத்திலான பிள்ளையார் விக்கிரகம். தினமும் பகல் பூசை உண்டு. விசேட தினங்களில் மாலையில் பூசை நடைபெற்று வருவதுடன் திருவெம்பாவை, சதுர்த்தி போன்ற விசேட தினங்களிலும் விசேட வழிபாடுகள் நடை பெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு,

மண்டபத்துப் பிள்ளையார் கோவில்
சின்னப்பூவரசம் குளம்
புளியங்குளம்

நேர்த்திக் கடன்களுக்காக விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

பிள்ளையார் கோவில்
மதியமடு, புளியங்குளம்

செவ்வாய்க் கிழமைகளில் பூசை நடைபெறும். விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- வவுனியா,
நெடுங்கேணி.

விநாயகர் கோவில்
வேலங்குளம், நெடுங்கேணி

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — முருகன், வைரவர். வெள்ளிக்கிழமைதோறும் ஒருகாலப் பூசை நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- வவுனியா,
நெடுங்கேணி.

ஆயிலடிப் பிள்ளையார் கோவில்
ஆயிலடி, வவுனியா

மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்தி — ஐயனார். வெள்ளிக்கிழமைகளிலும், விசேட தினங்களிலும் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- வவுனியா,
நெடுங்கேணி.

தோடையாற்றுப் பிள்ளையார் கோவில்
பெரியமடு, வவுனியா

இங்குள்ள மூர்த்திக்கு விசேட தினங்களில் பூசை நடைபெற்று வருகிறது. பரிவார மூர்த்தி வைரவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- வவுனியா,
நெடுங்கேணி.

### ஈட்டிமுறித்தான் விநாயகர் கோவில்
### குளவிசுட்டான், நெடுங்கேணி

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்தி — வைரவர். வெள்ளிக் கிழமைகளில் ஒருகாலப் பூசை நடைபெறுகிறது.

மாவட்டம்:- வவுனியா,
நெடுங்கேணி.

### இறம்பைக்குளம் விநாயகர் கோவில்
### நெடுங்கேணி

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்தி — முருகன். வெள்ளிக் கிழமைகளில் ஒருகாலப் பூசை நடைபெறுகிறது. வருடத்துக்கொரு முறை சங்காபிஷேகமும், வருடாந்த உற்சவமும், ஆவணிச் சதுர்த் தியும் விசேட பூசையுடன் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- வவுனியா,
நெடுங்கேணி.

### ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
### கரடியான், சின்னடம்பன், நெடுங்கேணி

மூலமூர்த்தி — பிள்ளையார், பரிவார மூர்த்திகள் — ஐயனார். வன்னியன், வைரவர். வெள்ளிக்கிழமைகள் தோறும் பூசைகள் நடைபெறும். ஆவணித் தமிழ் மாதப் பிறப்பன்று வருடாந்த உற்சவம் ஆரம்பமாகின்றது. 1979 ஆம் ஆண்டில் மகா கும்பாபி ஷேகம் நடைபெற்றது.

மாவட்டம்:- வவுனியா,
நெடுங்கேணி.

### வில்வையடிப் பிள்ளையார் கோவில்
### நெடுங்கேணி

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — முருகன், வைரவர், ஐயனார் ஆகியோர். தினமும் இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆவணிச் சதுர்த்தியில் சங்காபிஷேகம், பிள்ளை யார் கதை இடம்பெறும். ஆவணிச் சதுர்த்தியில் விசேட பூசையும் வழிபாடுகளும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

கனகராய பிள்ளையார் கோவில்
கனகராயன்குளம், மாங்குளம்

நூறு வருடப் பழமையான கோவில். 1889 ஆம் ஆண்டில் கனகராயன்குளம் புனருத்தாரணம் செய்யப்பட்டபோது ஆலயமும் புத்துயிர்பெற்றது. ஒரு சில விக்கிரகத்தை வைத்துப் பூசித்து வந்த இப்பகுதி மக்கள் 1962 ஆம் ஆண்டில் பிள்ளையார் விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்தனர். மூலமூர்த்தி — வைரவர். வெள்ளிக்கிழமைதோறும் பூசை நடைபெறும். பிரதிமாதத்திலும் விக்னேஸ்வர சதுர்த்தியிலும் விசேட பூசைகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

பிள்ளையார் கோவில்
கோவிற் புளியங்குளம், நெடுங்கேணி

வெள்ளிக்கிழமைகளில் உச்சிக்காலப் பூசையும், ஆவணிச் சதுர்த்தியில் விசேட உற்சவமும் உண்டு. பிள்ளையாரோடு நாகதம்பிரான், ஐயனுர், முருகன், வைரவர் ஆகிய மூர்த்திகளும் உளர். மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — நாகதம்பிரான், ஐயனுர், வைரவர், முருகன். சித்திரைப் பௌர்ணமியில் விசேட பூசை நடைபெறும்.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா தெற்கு.

ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
புதுக்குளம், வவுனியா

1850 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. ஊஞ்சல் பாடல்கள் உண்டு. மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — வைரவர், முருகப் பெருமான். மாணிக்கவாசக சுவாமிகளும் உளர். பிள்ளையார் கதை, விநாயக சதுர்த்தி, திருவெம்பாவை சிறப்பாக நடைபெற்று வருகின்றன. விசேட நாட்களில் அலங்காரத் திருவிழா நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா தெற்கு (தமிழ்ப் பிரிவு)

கருங்காலியடிப் பிள்ளையார் கோவில்
நொச்சிமோட்டை, ஓமந்தை

சுமார் நூறு வருடங்கள் பழமை வாய்ந்தது. தற்போது ஆலயத் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. மூலமூர்த்தி — பிள்ளையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

**ஸ்ரீ கந்தசுவாமி கோவில்**
**ஊஞ்சல்கட்டி, நெடுங்கேணி**

நூறு வருடங்களுக்கு முற்பட்டது. மூலமூர்த்தி – முருகன். பரிவார மூர்த்தி – பிள்ளையார். வெள்ளிக்கிழமைகளில் உச்சிக் காலப் பூசையும், விசேட தினங்களில் விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

**ஸ்ரீ கந்தசுவாமி கோவில்**
**கண்டி வீதி, புளியங்குளம்**

மூலமூர்த்தி – கந்தசுவாமியார். நித்திய பூசைகளோடு, ஆவணி மாதத்தில் திருவிழாவும் நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- வவுனியா,
நெடுங்கேணி.

**பழைய கந்தசுவாமி கோவில்**
**நெடுங்கேணி**

மூலமூர்த்தி – முருகன், பரிவார மூர்த்திகள் – விநாயகர், வைரவர். வெள்ளிக்கிழமைகளிலும், விசேட தினங்களிலும் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- வவுனியா,
நெடுங்கேணி.

**ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில்**
**நெடுங்கேணி**

மூலமூர்த்தி – முருகன். பரிவார மூர்த்திகள் – விநாயகர், வைரவர் ஆகியோர். தினமும் மூன்றுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. பங்குனி உத்தரத்தில் சங்காபிஷேகமும். திருவிழாவும் நடைபெறும்.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா தெற்கு.

**ஸ்ரீ கந்தசுவாமி கோவில்**
**கோதண்டர், நொச்சிக்குளம்,**
**சாஸ்திரி கூளாங்குளம் - 1,**
**வவுனியா**

மூலமூர்த்தி வேல். பரிவார மூர்த்தி – நாகதம்பிரான். கந்த சஷ்டி, பிள்ளையார் கதை ஆகிய விசேஷ தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
பட்டிக்குடியிருப்பு, நெடுங்கேணி, வவுனியா

திங்கள் தோறும் காலைப் பூசையும் ஆவணிப் பௌர்ணமியில் பொங்கலும் நடைபெறும். பரிவார மூர்த்திகள் — பேச்சியம்பாள், காத்தவாரயர்.

மாவட்டம்:- வவுனியா,
நெடுங்கேணி,

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
குறிசுட்டான்குளம், கனகராயன்குளம், நெடுங்கேணி

பிரதி வெள்ளிக்கிழமைகளிலும் பூசை நடைபெறும் ஆவணியில் பொங்கல் விழா இடம்பெறும்.

மாவட்டம்:- வவுனியா,
கள்ளிக்குளம்.

அறுதைரட்சகர் கோவில்
கள்ளிக்குளம், கோவில் வீதி, வவுனியா

தினமும் காலையில் பூசை நடைபெறும். மூலமூர்த்தி — ஆதி சேஷன்மீது மகாவிஷ்ணு. இதைத் தவிர மற்றும் இரண்டு அடி உயரமான சிலா விக்கிரகமும், ஏழு அங்குல வெண்கல விக்கிரகமும் இங்கு உண்டு. 1950 ஆம் ஆண்டில் ஒரு மடாலயமாக அமைக்கப் கப்பட்டது. ஞாயிறு தோறும் பூசையும் தைப்பொங்கல், வருடப் பிறப்பு, தீபாவளி தின்ங்களில் விசேட பூசைகளும் நடைபெறும்.

மாவட்டம்:- வவுனியா,
நெடுங்கேணி.

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
பனைநின்றான், நெடுங்கேணி

மூலமூர்த்தி — முத்துமாரியம்பாள். பரிவார மூர்த்திகள் — காத்தவராயர், வைரவர். வெள்ளிக்கிழமை தோறும் பூசையும் வைகாசி மாதத்தில் பொங்கலும் நடைபெறும்.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா தெற்கு.

ஸ்ரீ முத்துமாரியம்பாள் கோவில்
திடாச்சூரி, நெடுங்கேணி

ஆதிகாலத்துக் கோவில். வெள்ளிக்கிழமை தோறும் பூசையும் வைகாசி மாதத்தில் பொங்கலும் நடைபெறுகிறது. காத்தவராயர், வைரவர் மூர்த்திகளும் உளர். ஆனி மாதத்தில் கொடியேற்றத் துடன் பதினைந்து தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

**ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்**
**சின்னடம்பன், நெடுங்கேணி**

வெள்ளிக்கிழமை தோறும் பூசையும் ஆனி மாதத்தில் பொங்கலும் நடைபெறும்.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா தெற்கு,

**ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்**
**நாம்பன் குளம்**
**ஓமந்தை**

பல நூற்றுண்டுகளுக்கு முற்பட்ட கோவில். சிதைந்த ஆலயத்தின் கற்றூண்கள், சந்திர வட்டக்கல், பழங்கால செங்கற்கள் ஆகியன காணப்படுகின்றன. பூசை அணிகலன்களும் பழமை வாய்ந்தவை. மூலமூர்த்தி — முத்துமாரியம்மன். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், முருகன், சிவன். தினமும் விளக்கேற்றுவதோடு, வெள்ளி தோறும் பூசையும் நடைபெற்று வருகின்றது. ஆண்டு தோறும் பொங்கல் விசேடமாக நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

**ஸ்ரீ முத்துமாரியம்பாள் கோவில்**
**வெடிவைத்த கல்லு, நெடுங்கேணி, வவுனியா**

மூலமூர்த்தி — முத்துமாரியம்பாள். பரிவார மூர்த்திகள் — வைரவர், காத்தவராயர், பிள்ளையார், நாகதம்பிரான் ஆகியோர். வெள்ளிக்கிழமைதோறும் உச்சிக்காலப் பூசைகள் மட்டும் நடைபெறும். ஆவணிப் பௌர்ணமியை இறுதிநாளாகக்கொண்டு வருடாந்த உற்சவம் நடைபெறுகிறது. இக்கோவில் பற்றிய கல்வெட்டுக்கள், ஏடுகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

**ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்**
**126 ஆம் கட்டை, கண்டி - யாழ் வீதி,**
**புளியங்குளம்**

வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெறுகிறது. ஆவணியில் வருடாந்த உற்சவம்.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா தெற்கு.

**ஸ்ரீ கண்ணகை அம்பாள் கோவில்**
**வண்ணங்குளம், கொந்தக்காரன் குளம்**
**ஓமந்தை**

மூதாதையர்களால் காட்டில் கண்டு பிடிக்கப்பட்டது. கோவில் மூர்த்தி. கோவலன், கண்ணகி சதிரத்திர வரலாறு ஏட்டுப்பிரதியில் உண்டு. மூலமூர்த்தி — கண்ணகை அம்பாள். பரிவார மூர்த்திகள் — முருகன், காத்தவராயன், வைரவர், பிள்ளையார். வெள்ளி, திங்கள் தோறும் பூசை நடைபெறுகிறது. ஆனி மாதப் பிற்பகுதியில் கொடியேறி பொங்கலுடன் திருவிழா முடிவடையும். விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

**ஸ்ரீ கண்ணகை அம்பாள் கோவில்**
**புற்குளம், மாங்குளம்**

திங்கள், வெள்ளிதோறும் உச்சிக்காலப் பூசை நடைபெறும். பரிவார மூர்த்திகள் — நாகதம்பிரான், காத்தவராயர், வைரவர் ஆகியோர் வைகாசி அமாவாசையுடன் வரும் திங்கள் இரவு பொங்கல் நடைபெறும். அன்று கண்ணகி கதை ஏட்டுப் பிரதியிலிருந்து படிக்கப்படும். சிலம்பு, பிரம்பு, படை ஆயுதம் ஆகியவை சின்னமாக வைத்து வணங்கப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

### கலிங்குவான் இளந்தாரி ஐயனார் கோவில்
### கனகராயன்குளம், மாங்குளம்

150 ஆண்டுகள்வரை பழமையானது. குடிசைக் கோவில் மாதப் பிறப்பன்றும், வருடப்பிறப்பன்றும் விசேட பூசைகள் நடைபெறும்.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

### ஸ்ரீ ஐயனார் கோவில்
### ஆதி சடவன்குளம், வவுனியா

பழைய ஏட்டுப் பிரதியுடைய கோவில். மூலமூர்த்தி – ஐயனார். வெள்ளிக்கிழமைதோறும் பூசை நடைபெறும். ஆவணி மாதத்தில் பொங்கல் விழா இடம்பெறும்.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

### ஐயனார் கோவில்
### நெடுங்கேணி

மூலமூர்த்தி – ஐயனார். பரிவார மூர்த்திகள் விநாயகர், வைரவர், பௌர்ணமி தினங்களில் ஒருகாலப் பூசை நடைபெற்று வருகின்றது. வருடம் ஒருமுறை ஆவணிப் பௌர்ணமியை அண்டிய சனிக்கிழமையில் பொங்கல் நடைபெறும்.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

### நாகதம்பிரான் கோவில்
### புதூர், புளியங்குளம்

மூலமூர்த்தி – நாகதம்பிரான். நித்திய பூசை நடைபெற்று வருகின்றது. வருடாந்தப் பொங்கல் ஆவணித் திருவிழா ஆகியன நடைபெற்றுவருகின்றன.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

### ஸ்ரீ நாகதம்பிரான் கோவில்
### கண்டிவீதி, புளியங்குளம்

திங்கள். வெள்ளி நாட்களில் பூசை நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு,

நாகதம்பிரான் கோவில்
பரந்தன், புளியங்குளம்

மூலமூர்த்தி — நாகதம்பிரான். வெள்ளி தோறும் பூசை நடைபெறும். வருடாவருடம் விசாகத்தில் பொங்கல் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

நாகதம்பிரான் கோவில்
துவரகேதி
புளியங்குளம்

மூலமூர்த்தி — நாகதம்பிரான். விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- வவுனியா,
வவுனியா வடக்கு.

நாகதம்பிரான் கோவில்
கொம்பெடுத்த குளம்
மாங்குளம்

விடேச காலங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அனுராதபுர மாவட்டம்

கொழும்பில் இருந்து 128 மைல் தொலைவில் உள்ளது. கொழும்பு — காங்கேசன்துறைப் புகையிரத மூலமும் பேரூந்து மூலமும் பிரயாணம் செய்து அனுராதபுரத்தை அடையலாம். யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் இருந்தும் புகையிரதம் பேரூந்து மூலம் இங்கு வரமுடியும்.

சங்கமித்தை, இந்தியாவில் இருந்து கொண்டுவந்து நாட்டிய புனித அரச மரக்கிளை இங்கு பெரும் விருட்சமாக அமைந்து ''ஸ்ரீ மஹாபோதி'' என்ற நாமம் பூண்டு, பௌத்தர்களின் சிறந்த வழிபாட்டு ஸ்தலமாகவும் விளங்குகிறது.

புராதன சிவத்தலங்கள் பல இங்கு இருந்தமையை ஆராய்ச்சியாளர்களின் முடிவுகளிலிருந்தும், அகழ்வின்போது கண்டிபிடிக்கப் பட்ட விக்கிரகங்கள் மூலமும் நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அனுராதபுரம்,
அனுராதபுரம்,

## ஸ்ரீ கதிரேசன் கோவில்
## அனுராதபுரம்

இலங்கை ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்ட காலத்தில் அனுராதபுரம் மறுமலர்ச்சி கண்டது. இக்காலத்தில் சேர் ஹென்றி வாட் என்பவரின் ஆட்சிக் காலத்தில் இப்பகுதியில் ஏராளமான தமிழ் மக்கள் வசித்து வந்தனர். இது 19 ஆம் நூற்ருண்டின் இறுதிக் காலமாகும். இக்காலத்தில் கதிரேசன் ஆலயம் தாபிக்கப்பட்டது. முருக பக்தரான தென்னிந்தியத் துறவியொருவர் அனுராதபுரத்தை அடைந்ததாகவும், இன்று பழைய நகராகத் திகழும் பகுதியில் ஒரு சிறு கொட்டில் அமைத்து வேலையும், சுப்பிரமணிய இயந்திரத்தையும் வைத்துப் பூசித்ததாகவும் பின்னர் தாம் செல்லும் இடமெல்லாம் கொண்டு செல்வதற்கு அந்த இடத்தில் இருந்து எடுக்க முனைந்தபோது முருகன் சொப்பனத்தில் எடுக்க விடாது தடுத்தமையால் அந்த இடத்தில் ஆலயம் அமைத்து வழிபட ஆரம்பிக்கப்பட்டதாகவும் வரலாறு உண்டு.

சில காலத்திற்குப் பின்னர் காலநிலைக்கமைய சிறிது தூரத்திற்கு அப்பால் குளத்துக்கு அண்மையில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதுவே ஆதிக் கதிரேசன் கோயிலாகும்.

பின்னர், இட வசதியின்மையால் அனுராதபுர மாவடி என்னும் இடத்தில் இரண்டு ஏக்கர் காணியில் 1927 ஆம் ஆண்டு திருப்பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையை ஆரம்பித்து 1930 ஆம் ஆண்டில் நிறைவேற்றினர். தொடர்ந்து 1955 ஆம் ஆண்டில் இங்கே கும்பாபிஷேகம் நடைபெற்றது. புனித நகரமைப்பின் கீழ் இக்கோயில் மறுபடியும் இடம் பெயர்ந்தது. இதன் காரணமாக புதிய நகரில் ஜயந்தி மாவத்த சந்திக்கும் இடத்தில் 1962 ஆம் ஆண்டு யூலை மாதம் 4 ஆம் திகதி சேர். கந்தையா வைத்தியநாதன், திரு. எஸ். மணி ஆகியோரால் புதிய ஆலயத்திற்கான அத்திவாரக் கல் நாட்டப்பட்டது. புதிய ஆலயத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட வள்ளி தேவயானை சமேத முத்துக்குமார சுவாமியை மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்தார்கள். பரிவார மூர்த்திகளான விநாயகர், வைரவர், நவக்கிரகம் ஆகிய மூர்த்திகள் பரிவாரத்தில் 1964 ஆம் ஆண்டு பிரதிஷ்டை செய்யப்பட்டனர். கடைசியாக 1980 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் புனருத்தாரண மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

மாவட்டம்:- அனுராதபுரம்,
அனுராதபுரம்.

### கெக்கிராவைப் பிள்ளையார் கோவில்
### கெக்கிராவை

ஆலயம் கெக்கிராவை — கண்டி வீதியில் அமைந்திருக்கிறது. சுமார் நூறு வருடங்களுக்கு முற்பட்ட ஆலயம் இது. அலங்காரத் திருவிழா, தைப்புனர்பூச நட்சத்திரத்தையொட்டிப் பத்துத் தினங்களுக்கு நடைபெறும். கடைசியாக 1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

மாவட்டம்:- அனுராதபுரம்,
அனுராதபுரம்.

### மருதங்கடவைப் பிள்ளையார்

நித்திய பூசை உண்டு. இவ்வூரில் இந்துக் கோவில் ஒன்றுதான் உண்டு. விசேட காலங்களில் விசேட பூசைகள் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பொலன்னறுவை மாவட்டம்

கொழும்பில் இருந்து 134 மைல் தொலைவில் உள்ளது. கொழும்பு—மட்டக்களப்புப் பாதையில் இம்மாவட்டம் உள்ளது. புகையிரதம், பேரூந்துகளில் இங்கு வர முடியும்.

பண்டைக் காலத்தில் சிவத்தலங்கள் பல இங்கு இருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- பொலன்னறுவை,
பொலன்னறுவை.

### வெள்ளிமலை ஸ்ரீ விநாயகர் கோவில்
### ஊத்துச்சேனை, வெலிகந்தை

மூலமூர்த்தி — லிங்க உருக்கொண்ட பிள்ளையார். தினமும் மூன்றுகாலப் பூசை. வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசை. வருடாந்த உற்சவம், ஆடிப் பூரணையில் தீர்த்தத் திருவிழாவுடன் முடிவுறும். முன்னவர்கள் முதிரை மரத்தடியில் வைத்து வணங்கிய பிள்ளையாருக்குப் பின்னர் ஆலயம் அமைத்து ஸ்ரீ வெள்ளிமலை விநாயகர் எனப் பெயரிட்டனர். 1925 ஆம் ஆண்டில் மூலஸ்தானமும், இரு மண்டபங்களும் அமைக்கப்பட்டன.

மாவட்டம்:- பொலன்னறுவை,
பொலன்னறுவை.

### பிள்ளையார் கோவில்
### மன்னம்பிட்டி

விசேட தினங்களில் விசேட பூசை நடைபெற்று வருகின்றது.

மாவட்டம்:- பொலன்னறுவை,
பொலன்னறுவை.

### சித்திரவேலாயுத சுவாமி கோவில்
### கங்கைத்துறை, மன்னம்பிட்டி

மகாவலி ஆற்றங்கரைக்குப் பக்கத்திலுள்ள பழமை வாய்ந்த கோயில். ஆடி அமாவாசைத் தினத்தன்று தீர்த்தோற்சவம் நடைபெறக் கூடியவாறு பத்துத் தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகின்றது. இக்கோயிலுக்குப் பக்கத்தில் அரச மரத்துப் பிள்ளையார் கோயிலும் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருகோணமலை மாவட்டம்

திருகோணமலை, கொழும்பில் இருந்து 160 மைல் தொலைவில் உள்ளது.

கொழும்பிலிருந்து திருகோணமலைப் புகையிரதம் மூலமும், பேரூந்து மூலமும் செல்லலாம். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புப் புகையிரத மூலம் மாஹோ வரை சென்று, அங்கிருந்து திருகோண மலை செல்லும் புகையிரத மூலமும் திருகோணமலைக்குச் செல்ல லாம். யாழ்ப்பாணத்திலிருந்து இலங்கைப் போக்குவரத்து சபைப் பேரூந்தும் தனியார் பேரூந்து சேவையும் உண்டு.

திருஞானசம்தப் பெருமானால் திருப்பதிகம் பாடப்பெற்ற திருக் கோணநாதப் பெருமான் இங்கு இனிதமர்ந்தருளி அடியார்களுக்கு இன்னருள் பாலித்து வருகின்றார். நெகிழ்ந்துருகும் அடியார்களின் மனநோயையும் உடற்பிணியையும் நீக்கியருளும் ஆதிகோணநாய கப் பெருமான் தம்பலகாமத்தில் கோவில் கொண்டு உறைகின்றார். திருக்கோணேஸ்வரப் பெருமானின் சிவராத்திரி காலத்து ''நகர் வலம்'' இம்மாவட்டத்தில் அதிசிறப்பானது. திரு. பத்திரகாளி அம்பாள் ஆலய கும்ப விழாவும், கேதார கௌரி விழாவும் பக்தி பரவசமானது. வருடாந்தப் பொங்கல் சிறப்புற இடம்பெற்று வருவது குறிப்பிடற்பாலது. கன்னியாய் வென்னீர் ஊற்றுக்களில் புனித நீராடிய பின் இம்மாவட்டத்து ஆலயங்களைத் தரிசிப்பது மிக உத்தமமானது.

பேருந்துகளில் சென்று இம்மாவட்டத்தில் உள்ள கோவில் களைத் தரிசிக்க முடியும். திருக்கோணநாதப் பெருமான் இங்கு உள்ளமையால் இங்குள்ள ஆலயங்களின் பெயரின் முன் ''திரு'' இயல்பாகவே அடைமொழிச் சொல்லாகச் சேர்க்கப்பட்டுள்ளமை நோக்கற்பாலது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- திருகோணமலை,
திருகோணமலை.

## திருக்கோணேஸ்வரர் கோவில்
## திருகோணமலை

தக்ஷிண கைலாய மான்மியத்திற் கூறப்படும் திருக்கோணேஸ்வரம் இலங்கையின் வடகிழக்குக் கரையில் உள்ள சிறிய மலையிலே உள்ளது. திருக்கோணநாதர் வீற்றிருக்கும் மலை ஆதலின் இந் நகருக்கே திரு + கோணமலை = திருகோணமலை என்று சிறப்புப் பெயரும் ஏற்படலாயிற்று. முக்கோண வடிவம் உள்ளமையால் திரிகோணமலை எனவும் அழைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு மூலமூர்த்தி கோணநாதஸ்வரர். அம்பாளின் பெயர் மாதுமை அம்பாள். அகழ்வு வேலைகள் மேற்கொண்டபோது கண்டெடுக்கப்பட்ட புராதன சோமாஸ்கந்தர், அம்பாள், சந்திர சேகரர், தேவியருடன் மகாவிஷ்ணு ஆகிய மூர்த்திகளும் பரிவார மூர்த்திகளாக வீற்றிருப்பது குறிப்பிடப்பட வேண்டியதொன்று.

திருஞானசம்பந்தப் பெருமான், இத்தலத்தின் மீது திருப்பதிகம் பாடியுள்ளார். அருணகிரிநாத சுவாமிகளும் தமது திருப்புகழில் இவ்வாலயத்தைப் போற்றிப் பாடியுள்ளார்.

கடலுக்கு அடியிலே கடலாற் கொள்ளப்பட்ட திருக்கோண நாதர் கோவில் இருப்பதாக ஆராய்ச்சியாளர்களும், கண்டுபிடிப் பாளர்களும் கூறியுள்ளனர். இதற்கமையத் தற்பொழுதும் நித்திய பூசையின்போது கடலுக்கு அடியில் உள்ள கோணநாதப் பெரு மானுக்கு மலையுச்சியில் இருந்து பூசை நடைபெறுவதை நாம் காணலாம்.

குளக்கோட்டு மன்னனின் திருப்பணி வேலைகள் மேற்கொள்ளப் பட்டு ஆலய உருவில் அமைக்கப்பட்ட இத்தலம் கி.பி. 1624 இல் போர்த்துக்கீசத் தளபதியான கொன்ஸ்ரன்ரைன்டீசா என்பவனால் தரைமட்டமாக்கப்பட்டது. பின்னர் இவ்வாலயத் திருப்பணிச் சபையினரின் பெருமுயற்சியால் தற்போது உள்ள ஆலயமாகப் புனரமைக்கப்பட்ட பின் 1963.04.03 ஆம் நாள் மகா கும்பாபி ஷேகம் சிறப்புற நடைபெற்றது.

தற்போது தினமும் ஆறுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. பங்குனி உத்தரத்தன்று கொடியேறிப் பதினெட்டுத் தினங்களுக்கு உற்சவம் நடைபெற்று பாபநாசத் தீர்த்தத்துடன் மகோற்சவம் முடிவுறுகின்றது. மகாசிவராத்திரி விழாவை அடுத்துக் கோண நாதப் பெருமான் மாதுமை அம்பாளோடு திருகோணமலை நக ரைப் பவனிவரும் வேளையில் அங்கு இடம்பெறும் விசேட பூசை, வழிபாடுகளை ஏற்றுப் பின்னர் தமது ஆலயத்தை வந்தடைவார்.

**மாவட்டம்:- திருகோணமலை,**
**திருகோணமலை.**

**வெள்ளை வில்வபத்திர கோணேஸ்வரர் கோவில்**
**மின்சார நிலைய வீதி, திருகோணமலை**

தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயம் என்றும் பெயருண்டு. மூல மூர்த்தி – லிங்கேஸ்வரர். இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. பாண்டியன் காலக் கல்வெட்டொன்றில் இக்கோவில் பற்றிக் குறிப் பிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- திருகோணமலை,
திருகோணமலை.

### கோணலிங்கப் பிள்ளையார் கோவில்
### இலிங்கநகர், திருகோணமலை

மூலமூர்த்தி — விநாகயர். பரிவார மூர்த்திகள் — வைரவர், நாகதம்பிரான். இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. திருக்கோணேசர் ஆலய வரலாற்ருேடு தொடர்புடையதென்று கூறப்படுகிறது. திருகோணமலையிலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் உள்ளது. தினமும் காலை, மாலைப் பூசைகள் நடைபெறுகின்றன. நவராத்திரி, திருவெம்பாவை, தைப்பூசம், விநாயக சதுர்த்தி போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. சமயபாட வகுப்பும் நடத்தப்பட்டு வருகிறது.

மாவட்டம்:- திருகோணமலை.
திருகோணமலை.

### ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோவில் (சிவன் கோவில்)
### திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

மூலமூர்த்தி — சிவலிங்கம்.. பரிவார மூர்த்திகள் — விசாலாட்சி அம்மன், பிள்ளையார், முருகன், நடேசர், சிவகாமி அம்மன் வைரவர், சூரியன், நவக்கிரகம், சண்டேஸ்வரர் ஆகியோர். மூன்று காலப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆனி மாதத்தில் கொடியேறி பத்து நாட்கள் மகோற்சவம் நடைபெற்று உத்தரத்தில் தீர்த்தத்துடன் முடிவுறுகிறது. ஆலயம் அமைந்துள்ள இடத்தின் பண்டைக்காலப் பெயர் செங்கற்பண்ணை. ஆலயத்திற்கு இரு பகுதியிலும் கடல் சூழ்ந்துள்ளது. முந்நூறு வருட பழமை வாய்ந்த லிங்கம் இங்குள்ளது. காசிப் பதியிலிருந்து யாத்திரைசெய்து வந்த சந்நியாசி ஒருவரின் ஆன்மார்த்த லிங்கம் செங்கற்பண்ணை சிவன் கோவிலில் பிரதிஷ்டை செய்த வரலாறு உண்டு. 1895 ஆம் ஆண்டளவில் சென்னை மதராசுரிப்பன் அச்சகத்தில் பதிப்பித்த பிரகடனம் ஒன்று இதன் வரலாற்றைக் கூறுகிறது. 1898, 1890, 1957 ஆம் வருடங்களில் கும்பாபிஷேகம் நடந்துள்ளன.

நவராத்திரி, கேதாரகௌரி நோன்பு, கார்த்திகைச் சோமவாரம், திருவெம்பாவை, நடேசர் உற்சவம், மகோற்சவம் ஆகியன நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- திருகோணமலே,
திருகோணமலே.

### வடலியம்பதி பிள்ளேயார் கோவில்
### 5 ஆம் வட்டாரம், சாம்பல்தீவு, திருகோணமலே

பண்டைய காலங்களில் கோணேசர் ஆலயத்தில் வேள்விகள் நடத்தப்பட்டபோது அவ்வேள்விகளுக்குப் பாவிக்கப்பட்ட தீயின் சாம்பல்கள் குவிக்கப்பட்ட ஒரு தீவாக இக்கிராமம் ஆதியில் காணப் பட்டமையால் சாம்பல் தீவு எனப் பெயர்பெற்றதுடன், காடுகள் துப்பரவாக்கி, வடலிகளேப் புரட்டும்போது நிலத்தின் அடியிலிருந்து இப்பிள்ளேயார் கண்டு எடுக்கப்பட்டமையால் வடலிப் பிள்ளேயார் என்ற பெயரும் வரலாயிற்று. ஆரம்பத்தில் குடிசையாகவிருந்த இக்கோவில் 1936 ஆம் ஆண்டு கற்கோயிலாகக் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இப்பாதே இங்குள்ள விநாயகர் சாம்பல் தீவிலுள்ள வாலயம்மன் கோயிலில் இருந்து பெறப்பட்ட தாகும். திருவெம்பாவை, நவராத்திரி, சிவராத்திரி, கந்தசஷ்டி, கௌரிக்காப்பு, திருக்கார்த்திகை போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருவதுடன் உச்சிக்காலப் பூசையும் உண்டு. வைகாசிச் சுவாதி நட்சத்திரத்தன்று ஆரம்பித்து பத்துத் தினங்களுக்கு அலங்கார உற்சவம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

மாவட்டம்:- திருகோணமலே,
திருகோணமலே.

### கேணியடி - சின்னத்தொடுவாய் ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
### ஏகாம்பரம் வீதி, உப்புவெளி

இருநூற்றெண்பது வருடங்களுக்கு முற்பட்ட கோவில். மூல மூர்த்தி — சித்திவிநாயகர். மூன்றுகாலப் பூசைகள் நடைபெறுகின் றன. ஆனி உத்தரத்தில் தீர்த்தம் அமையக்கூடியவாறு, வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகின்றது. விநாயகர் சதுர்த்தி, சித்திரை வருடப்பிறப்பு, நவராத்திரி, திருவெம்பாவை போன்ற விசேட தினங்களில் விசேட வழிபாடு கள் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- திருகோணமலை,
திருகோணமலை.

### ஆலடி விக்நேஸ்வரர் கோவில்
### 192, உவர்மலை வீதி, செல்வவிநாயகபுரம், திருமலை

மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — வைரவர், நாகதம்பிரான் ஆகியோர். 1962 இல் ஓலைக்குடிசையில் கோவில் கொண்டிருந்த விநாயகருக்கு கட்டிடம் அமைக்கப்பட்டு 1980 இல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. தைப்பொங்கல், சிவ ராத்திரி, சித்திரா பௌர்ணமி, தொடுவாய்ப் பிள்ளையார் கோவில் உற்சவம், திருவெம்பாவை, டொக்கியாட் பிள்ளையார் வரவு, கோணேசர் வரவு, சரஸ்வதி பூசை போன்ற விசேட தினங்களில் விசேஷ பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- திருகோணமலை,
திருகோணமலை.

### ஆலடி ஸ்ரீ விநாயகர் கோவில்
### டொக்கியாட் வீதி, திருகோணமலை

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — வைரவர், ஐயனார் நாகதம்பிரான், விஷ்ணு, சிவன், சண்டேஸ்வரர் ஆகியோர். தினமும் மூன்றுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. சித்திரா பூரணைத் திதியைத் தீர்த்தமாகக் கொண்டு பத்துத் தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெறும். இங்கு பழமை வாய்ந்த திரியா லிங்கமொன்றும் உளது. முன்நூறு வருடங்களுக்கு முற்பட்டதாக இருக்கலாமென்று கூறுகிறார்கள். விஷ்ணுபாகம் நாற்கோணமாய் அமைந்துள்ளது. திருப்பள்ளியெழுச்சி, ஊஞ்சல் பாடல் உண்டு. சர்வாலயதீபம், விநாயகர் விரதம், கஜமுகசங்காரம், மகாவிஷ்ணு உற்சவம், திருவெம்பாவை போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.

திருகோணமலையுடன் கடல்மார்க்கமாக நூறு வருடங்களுக்கு முன்னர் தொடர்பு கொண்டிருந்த யாழ்ப்பாணத்தவர்களும், பன்னுமை (மாத்தளை) மக்களும் ஆலடி விநாயகருக்கு பொங்கல் பூசைசெய்துதான் தமது வியாபாரத்தையும், பிரயாணத்தையும் ஆரம்பித்து வந்தமைக்கு சான்றுகள் உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- திருகோணமலை,
திருகோணமலை.

### ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் கோவில்
### திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — விநாயகர், காளியம்பாள். காலை, மாலை இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. நவராத்திரி, சிவராத்திரி, திருவெம்பாவை போன்ற தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. கதிர்காம யாத்திரிகர்களுக்குப் பல வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. சுமார் இருநூறு வருடங்களுக்குப் பழமையானது.

மாவட்டம்:- திருகோணமலை,
திருகோணமலை.

### இராசமலை சிற்றம்பலப்பிள்ளையார் கோவில்
### மலையாவெளி, திருகோணமலை

தினமும் காலை, மாலை பூசைகள் நடைபெறுகின்றன. ஆடிக் கிருத்திகையில் அலங்கார உற்சவம் ஆரம்பமாகி ஆடி அமாவாசையில் சமுத்திரத் தீர்த்தத்துடன் முடிவுறும். மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — சுப்பிரமணியர், கிருஷ்ணர், நாகதம்பிரான், கோணேசர். ஸ்ரீ வல்லவாம்பிகையின் மண்டப வாயிலில் உள்ள யாக குண்டத்தில் வேப்பங் கட்டைகளைக் கொண்டு அக்கினி வளர்க்கப்படுகின்றது. ஈழத்தின் கிழக்குக் கரையில் கோணேசர் மலைக்கும், கந்தசாமி மலைக்குமிடையில் இருக்கும் இராசமலை என்னும் குன்றின் சாரலில் கடற்கரையோடு உள்ள ஸ்தலம். பத்தினித் தெய்வ வழிபாடு நடைபெறுகிறது. திருக்கார்த்திகை, உறியடி உற்சவம், வீம ஏகாதசி, வைகுண்ட ஏகாதசி, சூரியநாராயண பொங்கல் போன்றவைகள் இங்கு விசேட விழாக்கள். காட்டுக்குள் காணப்பட்ட பழைய ஆலயமொன்றிலிருந்து எடுக்கப்பட்ட விநாயகர் என்று கூறி வருகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- திருகோணமலே,
திருகோணமலே.

திரு. பத்திரகாளி அம்மன் கோவில்
வித்தியாலய வீதி, திருகோணமலே

முதலாம் இராஜேந்திர சோழ மன்னன் மெய்க்கீர்த்தியின் கல்வெட்டுத் தூண் இவ்வாலயத்தில் உள்ளதால் இதன் தொன்மை மிகப் பழமையானது என்று கூறலாம். மூலமூர்த்தி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள். விநாயகர், சுப்பிரமணியர், நாகதம்பிரான், சந்தான கோபாலர், வைரவர் ஆகிய மூர்த்திகள் இங்கு உளர். தினமும் நண்பகல் 12.00 மணிக்கும் மாலே 6.00 மணிக்கும் பூசை உளது. மகோற்சவம் பங்குனி உத்திரத்தை அந்தமாகக் கொண்டு முதற் பத்துத் தினங்களுக்கும் திருவிழா நடைபெறுகிறது. தேர்த்திரு விழாவிலே பிள்ளேயார், காளி, சண்டேஸ்வரி ஆகிய மூர்த்திகள் தனித்தனி சித்திர இரதத்தில் வீதிவலம் வருகின்றனர். தை மாதத்தில் லக்ஷார்ச்சனேயும், நவராத்தியில் கொலு பூசையும் சிறப்புற இடம்பெற்று வருகின்றன.

இலங்கையிலே கேதாரகௌரி விரதம் மிகவும் சிறப்பான முறையில் இங்கு அனுஷ்டிக்கப்படுவது ஒரு சிறப்பம்சம் ஆகும். வைகாசிப் பூரணேயை அடுத்துவரும் திங்களில் வருடாந்தப் பொங்கல் நடைபெறுகின்றது. இங்கு மிகப் பழைய சிங்கவாகனம் ஒன்றும், புராதன காளி விக்கிரகம் ஒன்றும் உள்ளமை குறிப்பிடப்பட வேண்டியதொன்ருகும்.

மாவட்டம்:- திருகோணமலே,
திருகோணமலே.

ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத கிருஷ்ணன் கோவில்
திருகோணமலே

இவ்வாலயத்தில் நித்திய பூசைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. விசேட தினங்களில் விசேட பூசை, உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- திருகோணமலே,
திருகோணமலே.

பாலம் போட்ட பத்தினித் தெய்வம்
(பாலம் பட்டாறு அம்பாள் கோவில்)
திருகோணமலே

இங்கு அம்பாள் மூலஸ்தானத்தில் உள்ளார். வருடாந்தப் பொங்கல் வைகாசித் திங்கள் அன்று வெகுவிமரிசையாக இடம்பெறுகின்றது. கிழக்கிலங்கையிலிருந்து நூற்றுக்கணக்கான பக்தர்கள் அங்கு கூடிப் பொங்கிப் படைத்து பூசைசெய்து தமது நேர்த்திக் கடன்களே நிறைவேற்றுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- திருகோணமலை,
திருகோணமலை.

### ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவில்
### உவர்மலை, திருகோணமலை

கஜபாகு மன்னன் பத்தினித் தெய்வ வழிபாட்டை இலங்கையில் அறிமுகப்படுத்திய காலத்திலே கண்ணகை அம்மன் கோவில் கட்டப்பட்டது. ஆனால் போர்த்துக்கேய ஆக்கிரமிப்பின்போது கோவில் அழிவுற்றதும் திருகோணமலையிலிருந்து பத்து மைல்களுக்கு அப்பாலுள்ள பாலம் பட்டாறு என்னும் காட்டுப் பிரதேசத்தில் வைத்து அம்பாளை வணங்கி வந்ததாகவும் வரலாறு உள்ளது. இன்றும் இந்த வழிபாடு நடைபெற்று வருகிறது. இந்த ஆலயத்தோடு அழிவுற்ற இதர ஆலயங்களுக்குக் கட்டிடம் அமைக்கப்பட்ட போதிலும் கண்ணகை அம்மனுக்கு இன்னும் ஆலயம் அமைக்கப்படவில்லை. 1946 ஆம் ஆண்டு ஏற்பட்ட புயல் சேதத்தின் பின்னர் கண்ணகை அம்பாளுக்குத் தற்காலிகமாக ஆலயம் அமைத்து, அப்பகுதிக்கு கண்ணகிபுரம் எனப் பெயரிட்டு பூசை வழிபாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன. வைகாசி மாத பூர்வ பட்சத்தில் கும்பம் வைத்துப் பூரணை தினத்தில் குளிர்த்தி நடைபெறும்.

மாவட்டம்:- திருகோணமலை,
திருகோணமலை.

### சனீஸ்வரன் கோவில்
### திருகோணமலை

இலங்கையிலே சனீஸ்வரப் பெருமானுக்கென உள்ள ஒரேயொரு தனி ஆயலம் இதுவாகும். இங்கு காக வாகனத்தில் சனீஸ்வரப் பெருமான் மூலமூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். சனிக்கிழமைகளில் இலங்கையின் பலபாகங்களிலிருந்தும் பக்தர்கள் இங்கு குழுமித் தமது சனிதோஷத்தைப் போக்க எள் எண்ணெய் எரித்தல், கறுப்புத்துணி சாத்துதல், முதலான நேர்த்திக் கடன்களைச் செய்வர். புரட்டாதிச் சனிக்கிழமைகளில் இங்கு விசேட அபிஷேகங்கள், பூசைகள் நடைபெறுகின்றன. எள் எண்ணெய் எரிப்பதற்கென்றே இங்கு கோவில் வாயிலில் ஒரு தொட்டி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாவட்டம்:- திருகோணமலை,
திருகோணமலை.

### சிவன் கோவில்
### கங்கை, கிண்ணியா

மூலமூர்த்தி சிவலிங்கம். வெள்ளிக்கிழமைதோறும் பூசை நடைபெறுகிறது. ஆடி அமாவாசைத் தினத்தன்று திருவிழா நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- திருகோணமலை,
திருகோணமலை.

**விநாயகர் கோவில்**
**ஆலங்கேணி மத்தி, கிண்ணியா**

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — வைரவர். மூன்றுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. தம்பலகாமம் ஆதி கோணநாயகர் ஆலயத்திற்கும் இதற்கும் நெருங்கிய தொடர் புள்ளது. திருவெம்பாவை, விநாயகர் சதுர்த்தி, சிவராத்திரி போன்ற தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின் றன. தம்பலகாமத்தில் எழுந்தருளியுள்ள ஆதிகோணநாயகர் ஆல யம் அமைக்கப்பட்ட காலத்தில் இந்த ஆலயமும் அமைக்கப்பட் டிருக்கலாமென்று கருதப்படுகிறது.

தம்பலகாமம் ஆதிகோணநாயகர் பெருமான் வருடாந்த உற் சவம் முடிந்து மகாவலிகங்கைக் கடலுடன் சங்கமிக்கும் கொட்டி யாரக் குடாவுக்கு தீர்த்தமாடவரும் சமயத்தில், ஆலங்கேணி விநாயகர் ஆலயத்தில் சிறிது நேரம் ஓய்வெடுத்து விசேட பூசைக் குப் பின்னர் புறப்படுவது இன்றும் வழக்கில் இருந்து வருகிறது.

மாவட்டம்:- திருகோணமலை,
கிண்ணியா.

**ஊற்றடிப் பிள்ளையார் கோவில்**
**சின்னக் கிண்ணியா, கிண்ணியா**

சுமார் 150 வருடங்கள் பழமையானது. மூலமூர்த்தி — பிள்ளை யார். 100 வருடங்களுக்கு முன்னர் கண்டெடுக்கப்பட்ட வைரவ வரும் இங்கு உள்ளார். தினமும் பூசை நடைபெறுகிறது. வெள்ளிக் கிழமைகளில் விசேட பூசை வழிபாடுகள் உள்ளன. நவராத்திரி, திருவெம்பாவை நாட்களில் விசேட பூசைகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- திருகோணமலை,
கிண்ணியா.

**ஸ்ரீ பிள்ளையார் கோவில்**
**ஈச்சந்திவு, கிண்ணியா**

தினமும் இருகாலப் பூசை நடைபெறுகிறது. திருவெம்பாவைக் காலத்தில் விசேட உற்சவம் நடைபெறுகிறது. 1880 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. 1942 ஆல் தாமரை வில்லில் இருந்து ஈச்சந் திவுக்கு எழுந்தருளியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- திருகோணமலை,
கிண்ணியா.

**பிள்ளையார் கோவில்**
**உப்பாறு, கிண்ணியா**

மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — வைரவர், முருகன், வெள்ளிக்கிழமைதோறும் பூசை நடைபெறுகிறது. திருவெம்பாவைப் பத்துத் தினங்களுக்கு விசேட பூசையுடன் வழிபாடுகளும் உண்டு.

மாவட்டம்:- திருகோணமலை,
குச்சவெளி.

**செம்பீஸ்வரர் கோவில்**
**செம்பிமலை, குச்சவெளி**

மூலமூர்த்தி — லிங்கம். வாரம் இருமுறை பூசை நடைபெறுகிறது. சிவராத்திரிவிழா கொண்டாடப்பட்டு வருகிறது.

மாவட்டம்:- திருகோணமலை,
குச்சவெளி.

**திரு. 'வராகி' அம்பாள் கோவில்**
**6 ஆம் வட்டாரம் கும்புறுப்பிட்டி, திருகோணமலை**

மூலமூர்த்தி — வராகி அம்பாள். பரிவார மூர்த்திகள் — வைரவர், பத்திரகாளி ஆகியோர் வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெறுகிறது. வைகாசி மாதத்தில் பொங்கல்விழா இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- திருகோணமலே.
குச்சவெளி.

## ஸ்ரீ விநாயகர் கோவில்
### கட்டுக்குளம், திரியாய், திருகோணமலே

குளக்கோட்டு மன்னன் கல்வெட்டு வரலாற்றின்படி கோணேசர் ஆலயத்திற்குத் தாமரை நூல் திரியும், பசு நெய்யும் பூசைக்கு வழங்கும் புனிதப் பணியை இக்கிராம மக்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அதற்காக அக்கிராமத்தில் ஏழு தாமரைக் குளங்கள் அமைக்க வேண்டுமென்றும் பரராசசேகரன், செகராசசேகரன் என்ற சிற்றரசர்களுக்கு குளக்கோட்டு மன்னன் ஆணை பிறப்பித்தானென்றும் கட்டளையைக் கருத்திற் கொண்டு திருக்குளங்கள் அமைக்கும் சீரிய பணியை சிற்றரசர்கள் மேற்கொண்டார்களென்றும் சாசனம் சான்று பகர்கிறது. திரி — தாமரை நூற்திரி, ஆய் — பசு நெய், தாமரை நூற்திரியும், பசுநெய்யும் வழங்கக் கடமைப் பட்டவர்கள் இக்கிராமத்தில் வாழ்ந்தமையால் திரியாய் என்ற காரணப் பெயர் இக்கிராமத்திற்குச் சூடப்பட்டது. திரியாயில் அமைக்கப் பட்ட ஏழு குளங்களில் கட்டுக்குளம் ஒன்ருகும். கட்டுக்குளத்தின் கட்டுவேலே நடைபெற்றுவரும் நாட்களில் தினமும் இராக்காலங் களில் யானைகள் வந்து குளக்கட்டை மிதித்துச் சிதைத்து அட்ட காசம் புரிந்து வந்ததையிட்டு மன்னன் கலங்கிக் கோணேசப் பெருமானைத் தியானித்து வந்தான். ஒருநாள் இரவு, மன்னன் கனவிலே இறைவன் தோன்றி அமைக்கும் குளத்திற்கு அருகாமையில் கீழ்த்திசையிலே வீரமர நிழலிலே விநாயகப் பெருமான் வீற்றிருக்கிருர், அவரைப் பூசித்துக் கட்டு — குளம் என்று திருவாய் மலர்ந்தருளிஞர் என்றும், இக்கட்டளையை ஏற்று குளத்தை நோக்கிச் சென்றபோது வீரமர நிழலிலே விநாயகப்பெருமான் வீற்றிருந்ததாகவும், அவரைப் பூசித்துக் குளத்தைக் கட்டியதாகவும் வரலாறு உண்டு. ''வீரையடி விநாயகரை வழிபட்டு கட்டுகுளம்'' என்று அசரீரி ஆணையிட்டமையிஞல் அக்குளத்திற்குக் கட்டுகுளம் என்ற பெயர் வந்தது. நாளடைவில் அது கட்டுக்குளம் என்று வழங்கலாயிற்று. இக்குளத்தில் ஆண்டுதோறும் மலரும் தாமரை மலர்களைக் கொய்து வீரையடி விநாயகருக்குச் சமர்ப்பித்த பின்னரே திரி தயாரிப்பர்.

பொங்கல்விழா, சித்திரா பெளர்ணமி போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- திருகோணமலை,
கட்டுக்குளம் கிழக்கு, குச்சவெளி.

## கரடிமலைப் பிள்ளையார் கோவில்
### 1 ஆம் வட்டாரம் குச்சவெளி

முந்திய காலத்தில் இப்பகுதியில் கரடி ஒன்று விவசாயிகளினதும் கடற்றொழிலாளர்களினதும் மனைவி பிள்ளைகளைப் பயமுறுத்தி வந்ததாகவும் இதனால் பீதியடைந்திருந்த மக்களுக்கு இறைவன் கனவில் தோன்றி, மலையில் உள்ள பிள்ளையாரை வழிபட்டால் எதுவித குறையும் இருக்காதென்று பகர்ந்ததையடுத்து இப்பிள்ளையார் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அன்றிலிருந்து கரடியின் தொல்லை நீங்க, ஆலயத்துக்கு ''கரடிமலைப் பிள்ளையார் ஆலயம்'' என்று பெயரிட்டதாகவும் கர்ண பரம்பரைக் கதைகள் உண்டு.

கடல் வளம், நீர்வளம், மலைவளம் ஒருங்கே அமைந்த இக் கிராமத்தில் வாழும் கடற்றொழிலாளர்களுக்கும், கமத்தொழிலாளர்களுக்கும் இவ்விநாயகர் காவல் தெய்வம். வானம் பொய்த்த காலத்தில் விவசாயிகள் விசேட வழிபாடுகளைச் செய்து வருகிறார்கள். ''கடற்கரைப் பிள்ளையார்'' என்றும் அழைக்கப்பட்டு வருகிறார்.

தினமும் ஒருகாலப் பூசை நடைபெறுகிறது. ஆனி மாதத்தில் வருடாந்த உற்சவம் நடைபெறுகிறது.

மாவட்டம்:- திருகோணமலை,
குச்சவெளி.

## ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
### 2 ஆம் வட்டாரம், நிலாவெளி, திருகோணமலை

திருகோணமலையிலிருந்து எட்டு மைல் தூரத்தில் உள்ளது. தொன்மை வாய்ந்தது. திருக்கோணநாயகர் கல்வெட்டுப் பாடல் ஒன்றில் ஆலயம் குறிப்பிடப்பட்டுள்ளது. மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — சண்டேஸ்வரர், வைரவர். இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. வருட உற்சவம் ஆனி மாத அவிட்ட நட்சத்திரத்தில் தொடங்கி தேர் தீர்த்தத்துடன் முடிவுறுகிறது. 1967 இல் ஆரம்பிக்கப்பட்ட புனருத்தாரண வேலைகள் முடிந்து 1973 இல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்பு 1980 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- திருகோணமலை,
குச்சவெளி.

## ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
## குச்சவெளி

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — அம்பாள். வைரவர் ஆகியோர். தினமும் இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. ஐப்பசி மாதத்தில் வருடாந்த உற்சவம் நடைபெறுகிறது. திருமலைக் கோணேசர் ஆலயத்துடன் தொடர்புடையதென்பது வரலாறு. ஐப்பசியில் கும்பாபிஷேக தினமும், ஆவணிச் சதுர்த்தியும், விசேட பூசை, விழாக்களுடன் கொண்டாடப்படும். கதிர்காம யாத்திரிகர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

மாவட்டம்:- திருகோணமலை,
குச்சவெளி.

## தஞ்ச விநாயகர் கோவில்
## 6 ஆம் வட்டாரம், திரியாலை, திருகோணமலை

இருநூற்றைம்பது வருடங்கள் பழமை வாய்ந்தது கல்லம்பத்தை என்ற பகுதியில் முன்னொருகால் பயிர்களுக்கு நோய் ஏற்பட்டது. அத்தோடு யானைகளும் அட்டகாசம் புரிந்ததாகக் கூறப்படுகிறது. தஞ்சாவூர் தாடிச்சாமியார் என்பவரால் ஒரு குளத்தில் கண்டெடுக்கப்பட்ட விநாயகர் விக்கிரகம் பூசைக்கு வைக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து பயிர்களின் நோய்கள் நீங்கியதுடன், யானைகளின் அட்டகாசமும் நின்று விட்டது என்பது வரலாறு. அந்த நேரத்திலிருந்து பொங்கல் விழா இங்கு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அறுவடை செய்த நெல்லிலிருந்து பொங்கல் செய்து வருகின்றார்கள். சித்திரை புதுவருடப் பிறப்பன்று பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தஞ்சாவூர்ச் சுவாமியாரால் ஸ்தாபிக்கப்பட்ட கோயில் என்பதால் தஞ்ச விநாயகர் கோயில் என்றும், கல்லம்பத்தைப் பகுதியில் அமைந்திருப்பதால் கல்லம்பத்தை விநாயகர் கோவில் என்றும் அழைக்கப்பட்டு வருகின்றது. தினமும் ஒருகாலப் பூசை நடைபெற்று வருகிறது. விதைப்பு, அறுவடை காலங்களிலும் விசேட பொங்கல் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- திருகோணமலை,
குச்சவெளி.

### உறைக்கிணற்றடி விநாயகர் கோவில்
### 5 ஆம் வட்டாரம், திரியாய், திருகோணமலை

இருநூறு வருடங்களுக்கு முற்பட்ட கோவில். முந்திய காலத்தில் பிரப்பன்கேணி என்ற வனப்பகுதிக்குச் சென்ற ஒருவர் அங்கே கற்கிணறு ஒன்றைக் கண்டு ஆச்சரியப்பட்டு அப்பகுதியைப் பார்த்த போது தோன்றிய விநாயகர் என்பது வரலாறு. திருவாய் கிராமத்தில் தன்னைப் பிரதிஷ்டை செய்யவேண்டுமென்று விநாயகர் கோரியதாகவும், அக்கிணற்றடிக்கு அண்மையில் கண்டெடுக்கப்பட்டமையால் உறைக்கிணற்றடி விநாயகர் எனவும் அழைக்கப்பட்டார். ஆனி உத்தரத்தன்று விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருவது குறிப்பிடத் தக்கது.

மாவட்டம்:- திருகோணமலை,
குச்சவெளி.

### ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
### 6 ஆம் வட்டாரம், கும்புறுப்பிட்டி, திருகோணமலை

மூலமூர்த்தி — பிள்ளையார். நூறு வருடங்களுக்கு மேலான ஆலயம். தினமும் பூசை நடைபெற்று வருகிறது. திருவெம்பாவை, விநாயக சதுர்த்தி, தைப்பூசம், சித்திரைத் திருநாள் ஆகிய காலங்களில் விசேட பூசைகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- திருகோணமலை,
குச்சவெளி.

### வரத விக்நேஸ்வரர் கோவில்
### திரியாய், திருகோணமலை

மூலமூர்த்தி — லிங்கம். பரிவார மூர்த்திகள் — அம்மன், வைரவர் ஆகியோர். தினமும் இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆவணி உத்திரட்டாதி நட்சத்திரம் தொடக்கம் பத்துத் தினங்களுக்கு அலங்கார உற்சவம் நடைபெறும். இதுமிகப் பழமை வாய்ந்த கோவில்.

மாவட்டம்:- திருகோணமலை,
குச்சவெளி,

### சிவஞான விநாயகர் கோவில்
### இறக்கண்டி, 11 ஆம் கட்டை, நிலாவெளி

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்தி — நாகதம்பிரான். தினமும் இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. சதுர்த்தியில் விசேட பூசை நடைபெற்று வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- திருகோணமலை,
குச்சவெளி.

சிந்தாமணிப் பிள்ளையார் கோவில்
இரணைக்கேணி, 2 ஆம் வட்டாரம், குச்சவெளி

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — அம்மன், நாகதம்பிரான் ஆகியோர். மாலையில் தினமும் பூசை நடைபெறுகிறது. ஆடி அமாவாசையன்று திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- திருகோணமலை,
குச்சவெளி.

ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
புல்மோட்டை, வீதி, நிலாவெளி

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — சண்டேஸ்வரர், வைரவர் ஆகியோர். தினமும் இருகாலப் பூசை இடம்பெறுகிறது. ஆனி மாத அவிட்ட நட்சத்திரம் முதலாகப் பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறுகிறது. பழைய கல்வெட்டு உண்டு.

மாவட்டம்:- திருகோணமலை,
குச்சவெளி.

வீரன்சோலை அருள்மிகு விநாயகர் கோவில்
குச்சவெளி, திருகோணமலை

மூலமூர்த்தி — விநாயகர். தினமும் ஒருகாலப் பூசை நடைபெறுகிறது. தைப்பொங்கல், பங்குனி உத்தரம், ஆவணிச் சதுர்த்தி, திருவெம்பாவைக் காலங்களில் விசேட பூசைகள் நடைபெறுகின்றன. 1973 இல் கற்கோவிலமைக்கப்பட்டது.

மாவட்டம்:- திருகோணமலை,
குச்சவெளி.

செந்தூர் முருகன் கோவில்
செந்தூர் திரியாய், திருகோணமலை

வன்னி நாட்டின் கீழ்த்திசையிலுள்ள முல்லைத்தீவுப் பகுதியை ஆட்சி செய்த குமாரசிங்க வன்னியன் காலச் சரித்திரத்தோடு தொடர்புடைய ஆலயம். முல்லைத்தீவுக்கு மூன்று கல் தூரத்தில் அமைத்த சிறந்த வேலைப்பாடுகளுடனுன கோயிலுக்குச் சித்திர வேலாயுதர் கோவில் என்று பெயரிட்ட இந்த அரசன் தாம் அமைத்த கோவிலின் அழகை மற்றக்கோவில்கள் கொண்டிருக்கக் கூடாதென்று விரும்பி சிற்பிகளின் கைகளை சேதம் செய்ததாகவும், இதைப் பொறுக்காத முருகப் பெருமான் பாதயாத்திரையில் கதிர்காமம் செல்லப்போனதாக அசரீரி மொழிந்ததாகவும் குமார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புர மான்மியம் கூறுகிறது. கதிர்காமம் செல்வதற்கு வந்த முருகன் திரியாய் படர் குன்றின்மீது அமர்ந்து அருள் செய்ததாகவும் புராணம் தெரிவிக்கிறது.

படர்குன்று என்பதற்கு படர்ந்த மலை எனப்பொருள். இது கிராமிய பேச்சு வழக்கில் படலைக்கல்லாக வந்ததாகக் கூறப்பட்டு வருகின்றது. முருகன் தங்கிய ஆலயமாகையால் இது மிகவும் பழமை வாய்ந்ததெனக் கருதலாம். முருகன் அன்று கால்நடையாக யாத்திரை மேற்கொண்டதாகக் கூறப்படும் அதே பாதையில் இன்றும் செல்பவர்கள் இந்த ஆலயத்தில் தங்கிச் செல்கிறார்கள். இப்போது தினமும் ஒருகாலப் பூசை நடைபெற்று வருகிறது.

**மாவட்டம்:- திருகோணமலை,**
**குச்சவெளி.**

**ஸ்ரீ சுந்தர சண்முகர் கோவில்**
**கோபாலபுரம், நிலாவெளி**

மூலமூர்த்தி — வேல். இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆலயம் 1956 இல் குடியேற்ற வாசிகளால் அமைக்கப்பட்டது. தைப்பூசத் தினத்தில் வேல்விழா நடைபெறும்.

**மாவட்டம்:- திருகோணமலை,**
**குச்சவெளி.**

**ஸ்ரீ மாரியம்மன் கோவில்**
**5 ஆம் வட்டாரம், திரியாய், திருகோணமலை**

மூலமூர்த்தி — மாரியம்மன். பரிவார மூர்த்திகள் — வைரவர், வீரபத்திரர், வெள்ளி, திங்கள் நாட்களில் பூசைகள் நடைபெறுகின்றன. வைகாசி விசாகம், நவராத்திரி விழா விசேடமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. கரையாவெளிக் குளத்தில் நவராத்திரி இறுதிநாளன்று கும்பம் சொரியும் விழா நடைபெறுவதுண்டு. இக்குளத்தை மாரியம்மன் தீர்த்தக்குளமென்றும் அழைப்பர். 1918 ஆம் ஆண்டளவில் ஸ்தாபிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. 1960 ஆம் ஆண்டளவில் கோவிலுக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டது.

**மாவட்டம்:- திருகோணமலை,**
**குச்சவெளி.**

**ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்**
**2 ஆம் வட்டாரம், நிலாவெளி**

மூலமூர்த்தி — அம்பாள். செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் ஒருகாலப் பூசை நடைபெறுகிறது. வைகாசி மாதத்தில் பத்துத் தினங்கள் பூசையும், பொங்கலும் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- திருகோணமலை,
குச்சவெளி.

**திரு. கண்ணகை அம்மன் கோவில்**
**5 ஆம் வட்டாரம், கும்புறுப்பிட்டி, திருகோணமலை**

மூலமூர்த்தி – கண்ணகை அம்பாள். பரிவார மூர்த்தி – வைரவர். வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெறுகிறது. வருடந்தோறும் வைகாசி மாதத்தில் பொங்கல் நடைபெறும்.

மாவட்டம்:- திருகோணமலை,
குச்சவெளி.

**கடற்கரைக் கண்ணகை அம்மன் கோவில்**
**கோபாலபுரம், நிலாவெளி**

பழைய புராதன ஆலயம். பாரம்பரிய வழிபாட்டு முறை கடைப் பிடிக்கப்படுகிறது. மூலமூர்த்தி – கண்ணகி அம்பாள். வைகாசிப் பூரணையுடன் ஐந்து தினங்கள் திருவிழா நடைபெறுகிறது.

மாவட்டம்:- திருகோணமலை,
குச்சவெளி.

**ஸ்ரீ பத்தினி அம்மன் கோவில்**
**2 ஆம் வட்டாரம், நிலாவெளி**

மூலமூர்த்தி – அம்பாள். திங்கள், வெள்ளி தினங்களில் ஒரு காலப் பூசை நடைபெறுகிறது. வைகாசிப் பொங்கல், நவராத்திரி போன்ற காலங்களில் விசேட விழாக்கள் நடைபெறும்.

மாவட்டம்:- திருகோணமலை,
மூதூர்.

**ஆதி சிவன் கோவில்**
**கங்குவேலி, தெகிவத்த**

தினமும் ஒருகாலப் பூசை நடைபெறுகிறது. ஆடி அமாவாசை யன்று தீர்த்தத் திருவிழா நடைபெறும். மிகப் புராதன ஆலயங் களில் இதுவும் ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- திருகோணமலை,
மூதூர்.

## ஸ்ரீ வருணகுல விநாயகர் கோவில்
## சேனையூர், மூதூர்

சேனையூர் ஸ்ரீ வருணகுல ஆலயம் மிக்க வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. ஆலய வரலாற்றுக் குறிப்புக்கள் ஆலயத்திற்குரிய பழமை வாய்ந்த செப்புப் பட்டயத்தில் வரையப்பட்டுள்ளன. 1785 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 11, திங்கட்கிழமை இவ்வாலயம் ஸ்தாபிக்கப்பட்டது. அரசடிவான் எனப்படும் இடத்திலிருந்து தருவிக்கப்பட்ட விநாயகர் மூலமூர்த்தியாக உள்ளார். 1896 ஆம் ஆண்டு கும்பாபிஷேகமும் செய்யப்பட்டதாகக் குறிப்பு உண்டு. 1948 ஆம் ஆண்டிலும், கடைசியாகக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. தினமும் ஒருகாலப் பூசை நடைபெறுகிறது. பரிபரிவார மூர்த்தி — சந்தானகோபாலர், தேவியர் இருவருடன் சுப்பிரமணியர், வைரவர், நவக்கிரகம் ஆகியோர். வருடாந்த உற்சவம் ஆனி உத்தரத்தில் நடைபெற்று வருகின்றது.

மாவட்டம்:- திருகோணமலை,
மூதூர்.

## ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
## 3 ஆம் வட்டாரம் மூதூர்

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்தி — முருகன். தினமும் உச்சிக்காலமும், சாயரட்சையும் பூசை நடைபெறுகிறது. ஆவணியில் விநாயகர் சதுர்த்தியில் அலங்கார உற்சவம் நடைபெறும். கதிர்காம யாத்திரிகர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

மாவட்டம்:- திருகோணமலை,
மூதூர்.

## ஸ்ரீ பாலவிநாயகர் கோவில்
## பாரதிபுரம், கிளிவெட்டி

வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெறுகிறது. இதரநாட்களில் விளக்கேற்றி வழிபாடு நடைபெறுகிறது. ஆதிகால வழிப்போக்கர்கள் வணங்கி வந்த கோவிலாக இது அறியப்படுகிறது. தேவஸ்தானம் மக்களின் அறிவு வளர்ச்சிக்குப் பல பொதுப் பணிகளை ஆற்றி வருகின்றது. திருவெம்பாவைப் பத்து நாட்களும் திருவிழா நடைபெற்று வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- திருகோணமலே,
மூதூர்.

ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
7 ஆம் வட்டாரம் மூதூர்

தினமும் உச்சிக்காலப் பூசை நடைபெறும். ஆனி உத்திர உற்சவம் சிறப்புற நடைபெறுகின்றது.

மாவட்டம்:- திருகோணமலே.
மூதூர்.

ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்
3 ஆம் வட்டாரம், கட்டைப் பறிச்சான், மூதூர்

மூலமூர்த்தி — விநாயகர், பரிவார மூர்த்திகள் — அம்மன். வைரவர், நாகதம்பிரான் ஆகியோர். அலங்கார உற்சவம் நடைபெறுகிறது.

மாவட்டம்:- திருகோணமலே.
மூதூர்.

அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவில்
சம்பூர், மூதூர்

மூலமூர்த்தி — அம்பாள், பரிவார மூர்த்திகள் — விநாயகர், முருகன், வீரபத்திரர், நாகதம்பிரான், வைரவர். தினமும் ஒரு காலப் பூசை நடைபெறுகிறது. சித்திரை, வைகாசி மாதங்களில் விசேட திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. கௌரி விரதம் இங்கு சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

மாவட்டம்:- திருகோணமலே,
கந்தளாய்.

பிள்ளையார் கோவில்
கந்தளாய்

கந்தளாயக் குளத்தின் அருகில் உள்ள ஆலயத்திலே பிள்ளையார் வீற்றிருக்கின்ருர். குளக்கோட்டு மன்னனுல் இவ்வாலயம் ஸ்தாபிக்கப்பட்டது என வரலாறு கூறுகின்றது. நித்திய பூசை சிறப்புற நடைபெறுகின்றது. விசேட தினங்களில் உற்சவங்கள் இடம்பெறுகின்றன. இவ்வாலய வரலாறு பற்றிய ஏடு ஒன்றும் இங்கு பாதுகாப்பாக உளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- திருகோணமலை,
பன்குளம்.

### கிற்றுள் ஊத்துப் பிள்ளையார் கோவில்
### அனுராதபுர வீதி, 10 ஆம் மைல் கல், திருகோணமலை

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்தி — வைரவர். தினமும் காலை, மாலை பூசைகள் நடைபெறுகின்றன. விசேட தினங்களில் உற்சவம் நடைபெறுகின்றன. சித்திரா பௌர்ணமி விநாயகர் சதுர்த்தி போன்ற நாட்களில் விசேட உற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- திருகோணமலை,
பன்குளம்.


### எல்லைக்காளி கோவில்
### பன்குளம், திருகோணமலை

சோழப் பெருமன்னர்களால் பரிபாலனம் செய்யப்பட்ட வரலாற்றுப் பெருமைமிக்க அருள்மிகு கோவில். தைப்பூசத்தன்று பொங்கல்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. 1977 ஆம் ஆண்டு இவ்வாலயம் சிதைவுற்றதைத் தொடர்ந்து திருத்தியமைக்கப்பட்டது. ஆலயத்திற்கான கல்வெட்டுக்களும் உண்டு. சோழர் காலத்திலுள்ள புராதனமான அம்பாளின் விக்கிரகம் இங்கு மூலமூர்த்திகயாகவும், பரிவார மூர்த்திகளாக — வைரவர், நாகதம்பிரான், ஆகியோரும் உளர். தினமும் காலை, மாலைப் பூசைகள் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மாவட்டக் கோவில் படங்கள்



திருகோணமலை / திருக்கோணநாத சுவாமி ஆலயத்திலுள்ள புராதன
சோமாஸ்கந்த விக்கிரகம். (அகழ்வின்போது கண்டெடுக்கப்பட்ட மூர்த்தியும் அம்பாளும்)




திருகோணமலை / திருக்கோணநாத சுவாமி கோவிலின் முன் காட்சியளிக்கும்
ஒரு பழைய கற்றூண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலை /திருக்கோணநாத சுவாமி வீற்றிருக்கும் மலையும், கடலும் சங்கமிக்கும் இடத்திலுள்ள கற்பாறைகள் முன்னைய கோவிலின் விக்கிரகங்கள் இங்கு புதையுண்டு உள்ளமையால் நித்திய பூசை வேளையில் மலையுச்சியிலிருந்து கற்பாறையுள் அமிழ்ந்துள்ள மூர்த்திகளுக்குத் தினமும் பூசை நடைபெறுகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை /திருக்கோணநாத சுவாமி கோவிலின் பாபநாச தீர்த்தம்




திருகோணமலை / மிகப் பழமையும், மூர்த்தியும் கொண்ட தம்பலகாமம் ஆதிகோணநாத சுவாமியும், அம்பாளும்



திருகோணமலை [illegible] சுவாமி கோவிலிலுள்ள நந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருகோணமலை /தம்பலகாமம் கோணநாதசுவாமி கோவிலில் மூலஸ்தான
விமானப் பண்டிகை வேலைப்பாடுகள்

திருகோணமலை /வெள்ளை வில்வபத்திர கோணநாத சுவாமி கோவிலில் அகழ்வின்
போது கண்டெடுக்கப்பட்ட தக்ஷிணாமூர்த்தியின் இரு திருவுருவங்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




திருகோணமலை / வெள்ளை வில்வபத்திர கோணநாதசுவாமி கோவிலின் கல்வெட்டு




திருகோணமலை / வில்வநாத சிவன் கோவிலுள்ள சிவகாமி அம்பாள்—சோழர் காலத்தைய இவ்விக்கிரகம், கிணற்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருகோணமலை / திரு பத்திரகாளி அம்மன் கோவிலின் மூலஸ்தான பண்டிகை வேலைப்பாடுகள்.

திருகோணமலை / திரு பத்திரகாளி அம்மன் கோவிலிலுள்ள ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் (உற்சவமூர்த்தி—அகழ்ந்தெடுக்கப்பட்டது). 11ஆம் நூற்றுண்டுச் சோழர் காலத்தையது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருகோணமலை / திரு பத்திரகாளி அம்மன் கோவிலில் நவராத்திரி உற்சவக்கொலு பூசையில் எழுந்தருளியிருக்கும், துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி, தேவியர்


திருகோணமலை / ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலை / ஆலடிப் பிள்ளையார் கோவிலிலுள்ள பஞ்சமுக விநாயகர்



திருகோணமலை / ஸ்ரீ முத்துக் குமாரசுவாமி கோவிலிலுள்ள மூலஸ்தான விமானத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருகோணமலை / வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை / ஸ்ரீ கிருஷ்ணர் கோவிலுள்ள பெரியயாழ்வார்




திருகோணமலை / சனீஸ்வரன் கோவில். (இலங்கையில் சனீஸ்வரனுக்கான தனி ஆலயம் இதுவாகும்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை / மாரியம்பாள் கோவிலிலுள்ள பேச்சி அம்மன்



திருகோணமலை / மிகப் பிரசித்தி வாய்ந்த கன்னியா வெந்நீர் ஊற்றுக் கிணறுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மட்டக்களப்பு மாவட்டம்

இம்மாவட்டம் கொழும்பிலிருந்து 195 மைல் தூரத்தில் உள்ளது. திருகோணமலையிலிருந்து புகையிரத மூலமும், பேரூந்து மூலமும் இம்மாவட்டத்திற்குச் செல்ல முடியும். கொழும்பிலிருந்து புகையிரத மூலமும், பேரூந்துகள் மூலமும் இம்மாவட்டத்தை அடையலாம்.

மட்டக்களப்பிலே தான்தோன்றீஸ்வரம், மாமாங்கேஸ்வரம் என்ற பெருந் தலங்களும் சித்தாண்டி, மண்டூர் ஆகிய இடங்களில் முருகன் ஆலயங்களும் மிகவும் பேரருள் வாய்ந்தவை. ஆனைப் பந்திப் பிள்ளையார் கோவில், களுதாவளைப் பிள்ளையார் கோவில் ஆகிய தலங்கள் இம்மாவட்டத்தில் மிகவும் பிரபல்யமானவையாக விளங்குகின்றன.

மட்டக்களப்பில் கண்ணகி வழிபாடு பண்டுதொட்டு இருந்து வருகின்றது. இதனால் இம்மாவட்டத்தில் கண்ணகி கோவில்கள் அதிகமாக உள்ளன. பஞ்ச பாண்டவர் கதையைத் தழுவிய விழாக்கள் மிகவும் சிறப்பாக இங்கு நடைபெற்று வருவது குறிப்பிடக் கூடியதொன்று.

மட்டக்களப்பில், விழாக்களின்போது ''குரவை போடும்'' வழக்கம், மரபு வழியாக இங்கு உள்ளது.

இம்மாவட்டத்திலுள்ள ஏனைய ஆலயங்களையும் பேரூந்து மூலம் சென்று வழிபட்ட பின் அம்பாறை மாவட்டத்திற்குச் செல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி,

### கொக்கட்டிச்சோலை, தான்தோன்றீஸ்வரர் கோவில்

இலங்கையிலுள்ள இரு தான்தோன்றீஸ்வரர் ஆலயங்களுள் ஒன்றுன கொக்கட்டிச்சோலை, தான்தோன்றீஸ்வரர் கோவில் மட்டக்களப்பு மாநகரத்திலே உள்ளது. இவ்வாலயத்திலுள்ள லிங்கம் சுயம்புலிங்கம் ஆதலின் தான்தோன்றீஸ்வரர் என அழைக்கப்படுகின்றார். கொக்கட்டி மரங்களின் நடுவே இவ்வாலயம் அமைந்தமையால் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலயம் என அழைக்கப்படுகின்றது. மூலமூர்த்தி வெளியிலிருந்து பார்ப்பவருக்குத் தெரியாதபடியால், இங்கு உமாமகேஸ்வரர் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு நித்தியபூசை மூன்றுகாலத்துக்கு உள்ளது. வருடாந்த மகோற்சவம் ஆவணி மாத உத்தர நட்சத்திரத்தில் ஆரம்பமாகி, தேர், தீர்த்த உற்சவத்துடன் முடிவுறுகிறது. இக்கோவிலில் பூசை செய்பவர்களை ''கோயிலார்'' என அழைப்பர்.

குளக்கோட்டு மன்னன் இந்தியாவிலிருந்து கலைஞர்களைக் கொண்டுவந்து இவ்வாலயத்தை அமைத்துள்ளான். இலங்கையில் உள்ள புராதன சிவாலயங்களுள் கொக்கட்டிச்சோலைத் தான் தோன்றீஸ்வரர் ஆலயமும் ஒன்ருகும்.

**மாவட்டம்:- மட்டக்களப்பு.**
**வெல்லாவெளி.**

**ஸ்ரீ மாவேற்குடாப் பிள்ளையார் கோவில்**
**திருப்பழுகாமம், பெரியபோரதீவு**

கிழக்கு மாகாணத்தில் குளக்கோட்டரசராலும், அவர் பிரதி நிதிகளாலும் புனருத்தாரணஞ் செய்யப்பட்ட சம்புநாவற்பதி (கோயிற்போரதீவு)ச் சித்திரவேலர் ஆலயத்துக்குத் திருப்பணி வேலைகளுக்காகத் தென்னிந்தியாவிலுள்ள காரைக்கால், மருங்கூர் ஆகிய இடங்களிலிருந்து ஆறு குடி வேளாளர் வரவழைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் அத்தியார்குடி, வைத்தியனார்குடி என்று அழைக்கப்பட்டனர். தமது இருப்பிடமாகிய ஸ்ரீ மாவேற்குடாவில் கோவில் ஒன்றை அமைத்து முருகப்பெருமானின் தங்கவேல் ஒன்றை மூலமூர்த்தியாக வைத்து வழிபட்டு வந்ததாகவும், பின்னர் இவர்கள் குடிபெயர்ந்து பழுகாமம் சென்றபோது இந்த இடம் காடாகி விட்டதாகவும் கர்ண பரம்பரைக் கதை கூறுகிறது. அப்பொழுது கோவிலின் பெயர் ''ஸ்ரீ மாவேற்குடையார்'' என்றிருந்தது. பின்னர் பிள்ளையாரும் இருப்பிடம் கொள்ள, ''ஸ்ரீ மாவேற்குடாப் பிள்ளையார் கோவில்'' எனப் பெயர்பெற்றது.

போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட புராதன ஆலயங்களில் இதுவும் ஒன்று. 1960 ஆம் ஆண்டில் புனருத்தாரணம் செய்யப்பட்டது. மூலமூர்த்திகளாக பிள்ளையாரும், முருகனும் உள்ளனர். பரிவார மூர்த்திகள் நாகதம்பிரான், ஸ்ரீமாவேற்குடாக்காளி. தினமும் ஒரு காலப் பூசை. ஆனி உத்தரம், கந்தசஷ்டி, விநாயகர் விரதம், நவராத்திரி போன்ற தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் உண்டு. கோவிலுக்கு அண்மையிலுள்ள மக்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

## ஸ்ரீ தாந்தாமலைப் பிள்ளையார் கோவில்
### தாந்தாமலை, மாவடி முன்மாரி, கொக்கட்டிச்சோலை

பழமைவாய்ந்த ஆலயம். ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் எழுந்தருளியமையால் தாந்தாமலையெனப் பெயர் பெற்றது என்பது வரலாறு. மூலமூர்த்தி – பிள்ளையார். பரிவார மூர்த்திகள் – முருகன். மாரியம்பாள். நித்திய பூசை உண்டு. ஆடிப் பௌர்ணமியன்று தீர்த்தம் நடைபெறக்கூடியதாகப் பன்னிரண்டு நாட்களுக்குத் திருவிழா நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

## மண்டபத்தடிப் பிள்ளையார் கோவில்
### அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை

இருநூற்றைம்பது வருடங்கள் பழமைவாய்ந்த ஆலயம். மூலமூர்த்தி – பிள்ளையார். பரிவார மூர்த்திகள் – மாரியம்மன், சுப்பிரமணியர், வைரவர். நித்தியபூசை நடைபெறும். கார்த்திகை விரதம், கந்தசஷ்டி, மாரியம்மன் உற்சவநாள் போன்ற விசேட தினங்களில் திருவிழா நடைபெறுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு.
வெல்லாவெளி.

## குறிஞ்சிநகர்ப் பிள்ளையார் கோவில்
### குறிஞ்சிநகர், முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை

பழமை வாய்ந்த கோவில். ஏட்டுப் பாடலும் உண்டு. மூலமூர்த்தி – பிள்ளையார். பரிவார மூர்த்தி – வைரவர். நித்திய பூசை உண்டு. கார்த்திகை இறுதிப் பகுதியில் வருடாந்த உற்சவம் ஆரம்பித்து மார்கழி நடுப்பகுதியில் முடிவடையும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

## ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில்
### நாகஞ்சோலை, மண்டூர்

தினமும் மூன்றுகாலப் பூசை நடைபெறுகின்றது. வெள்ளிக்கிழமைகளில் விசேட அபிஷேகம், பூசை ஆகியன நடைபெற்று வருவதுடன், ஆனி உத்தர நட்சத்திரத்தில் தீர்த்தம் அமையக்கூடியதாகப் பத்து நாட்கள் திருவிழாவும் நடைபெறுகிறது. இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட சிவலிங்கம், இங்கு பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### மீனாட்சி கட்டுப்பிள்ளையார் கோவில்
### கோயில் போரதீவு, பெரியபோரதீவு

குளக்கட்டு ஒன்றிலுள்ள மீனாட்சி மரத்தடியில் கிணறு வெட்டிய போது அங்கு கண்டெடுக்கப்பட்ட விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப் பட்டதாக வரலாறு கூறுகிறது. மூலமூர்த்தி – பிள்ளையார். பரிவார மூர்த்தி – வைரவர். வெள்ளி, செவ்வாய், நாட்களிற் பூசை நடை பெறும். ஆனி உத்தரத்தில் தீர்த்தம் நடைபெறக்கூடியதாகப் பத்துத் தினங்களுக்கு வருடாந்த உற்சவம் இடம்பெறும். வருடப் பிறப்பு, கார்த்திகைத் தீபம், விநாயகர் விரதம், திருவாதிரை, சிவராத்திரி போன்ற விசேட காலங்களில் உற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### ஆனைப்பந்திப் பிள்ளையார் கோவில்
### ஆனைகட்டியவெளி, மண்டூர்

பூமி அகழ்வு வேலைகளின்போது 1959 ஆம் ஆண்டில் கண்டெடுக் கப்பட்ட பிள்ளையார் விக்கிரகம் மூலமூர்த்தியாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். பரிவார மூர்த்திகள் – விஷ்ணு, முருகன், சக்தியும் சிவனும், வைரவர், நாககன்னி ஆகியோராவர். தினமும் மூன்றுகாலப் பூசை. ஆனி உத்தரத்தில் வருடாந்த உற்சவம் விமரிசையாக நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### விளாவெட்டுவான் பிள்ளையார் கோவில்
### 13 ஆம் கிராமம், மண்டூர்

ஏறக்குறைய ஐம்பது வருடங்களுக்கு முற்பட்ட கோவில் இது. மூலமூர்த்தி – விநாயகர். பரிவார மூர்த்திகள் – வைரவர், நாக தம்பிரான், வாரம்தோறும் பூசை நடைபெறுகிறது. ஆடி அமா வாசை, சித்திரைக்கதை, சிவராத்திரி போன்ற விசேட தினங்களில் விசேட பூசைகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
### தீவுக்குடியிருப்பு, அம்பளாந்துறை, குருக்கள்மடம்

மூலமூர்த்தி – விநாயகர். மூன்றுகாலப் பூசை தினமும் நடை பெறுகிறது. கார்த்திகை மாதத்தில் வருடாந்த உற்சவம் நடை பெற்று வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### பச்சையடிப் பிள்ளையார் கோவில்
### படையாண்டவெளி, கொக்கட்டிச்சோலை

1950 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. வெள்ளிக்கிழமை தோறும் உச்சிக்காலப் பூசை நடைபெற்று வருவதுடன், கார்த்திகையில் பிள்ளையார் கதை தொடக்கம் திருவாதிரைவரை விசேட உற்சவமும் நடைபெறுகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### ஸ்ரீ முத்துலிங்கப் பிள்ளையார் கோவில்
### கொக்கட்டிச்சோலை

1948 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி – முத்துலிங்கப் பிள்ளையார். சித்திரை, கார்த்திகை ஆகிய மாதங்களில் வருடாந்தப் பொங்கல் நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### அம்பாறைப் பிள்ளையார் கோவில்
### திக்கோடை, தும்பன்கேணி

மூலமூர்த்தி – பிள்ளையார். ஆனி உத்தரத்தில் விசேட திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### வேப்பையடிப் பிள்ளையார் கோவில்
### பூச்சிக்காடு, 16 ஆம் கிராமம், மண்டூர்

1952 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி – விநாயகர். பரிவார மூர்த்திகள் – நாகதம்பிரான், வைரவர். வெள்ளிக்கிழமை தோறும் பூசை நடைபெறுகிறது. சித்திரா பௌர்ணமி, கார்த்திகை விளக்கீடு, சிவராத்திரி போன்ற விசேட காலங்களில் விசேட பூசைகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் கோவில்
### சரவணையடி ஊற்று, தும்பன்கேணி

சுமார் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர் தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி – பிள்ளையார். பரிவார மூர்த்திகள் – வைரவர், நாகதம்பிரான். வெள்ளிதோறும் பூசை நடைபெறுகிறது. ஆடித் திருவிழாவும் விசேடமாக நடைபெற்று வருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
### மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — வைரவர், நாக தம்பிரான். நித்திய பூசை நடைபெறும். கார்த்திகை, விநாயகர் விரதம், மார்கழித் திருவாதிரை, தைப்பொங்கல், சிவராத்திரி போன்ற தினங்களில் விசேஷ பூசை வழிபாடுகள், கூட்டுப் பிரார்த்தனைகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### ஆனைப்பந்திப் பிள்ளையார் கோவில்
### நவகிரி நகர்

இந்த ஆலயத்திலுள்ள பிள்ளையார் நிலத்திற்கு அடியில் இருந்து கண்டெடுக்கப்பட்டதாக வரலாறு. தினமும் மூன்றுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆனி உத்தரத்தன்று விசேட திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### பிள்ளையார் கோவில்
### (குளக்கட்டுக்கருகில்) வெல்லாவெளி

மூலமூர்த்தி பிள்ளையார். நித்திய பூசை உண்டு. ஆனி மாதத்தில் பதினொரு நாட்களுக்குத் திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### மண்டபத்தடிப் பிள்ளையார் கோவில்
### அம்பிளாந்துறை, குருக்கள்மடம்

மூலமூர்த்தி — பிள்ளையார். பிரதான சமயவைபவ நாட்களில் விசேட பூசைவழிபாடுகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### பிள்ளையார் கோவில்
### 2 ஆம் வட்டாரம், சின்னவத்தை, வக்கியல்ல

மூலமூர்த்தி — பிள்ளையார். ஆடி அமாவாசைத் தினத்தில் வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

**கருணைமலைப் பிள்ளையார் கோவில்**
**காக்காச்சி வட்டை, மண்டூர்**

மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — வைரவர், நாகதம்பிரான். வெள்ளிக்கிழமைதோறும் பூசை நடைபெறுகிறது. ஆடி அமாவாசைத் தினத்தன்று விசேட உற்சவம் நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

**அரசடிப் பிள்ளையார் கோவில்**
**வெல்லாவெளி**

மூலமூர்த்தி பிள்ளையார். நித்திய பூசை நடைபெறுகிறது. ஆனி மாதத்தில் வருடாந்த உற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு.
வெல்லாவெளி.

**ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்**
**முனைக்காடு, கொக்கட்டிச்சோலை**

1943 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி விநாயகர். பரிவார மூர்த்திகள் — சுப்பிரமணியர், நாகதம்பிரான், வைரவர். நித்திய பூசை உண்டு. வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசை நடைபெறும். கார்த்திகை மாதத்தில் வருடாந்த உற்சவம் நடைபெறும். கிராம மக்களுக்கு மதபோதனைகளும் கூட்டுப் பிரார்த்தனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

**கொக்கட்டிப் பிள்ளையார் கோவில்**
**கடுக்காமுனை, கொக்கட்டிச்சோலை**

மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — வைரவர் மாரியம்மன். தினமும் ஒருகாலப் பூசை நடைபெறுகிறது. திருக் கார்த்திகை விரதத்தினத்தன்று திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

**ஸ்ரீ ஆலையடிப் பிள்ளையார் கோவில்**
**1 ஆம் வட்டாரம், 37 ஆம் கிராமம், வக்கியல்ல**

1958 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்தி — வைரவர். ஆடி அமாவாசையில் தீர்த்தம் அமையக்கூடியவாறு மூன்று நாட்களுக்குத் திருவிழா நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

புளியடிப் பிள்ளையார் கோவில்
37 ஆம் கிராமம், பாலையடிவட்டை

*1958 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — முருகன், வைரவர், நாகதம்பிரான் ஆகியோர். ஆடி அமாவாசை, சிவராத்திரி போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.*

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

மாவடிப் பிள்ளையார் கோவில்
பட்டிப்பளை, கொக்கட்டிச்சோலை

*மூலமூர்த்தி — பிள்ளையார். நித்திய பூசை நடைபெறுகிறது. கார்த்திகை மாதத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.*

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

குழுவினமடு பிள்ளையார் கோவில்
நீறுபோட்ட சேனைக்கண்டம், கொக்கட்டிச்சோலை

*பழமை வாய்ந்த ஆலயம். மூலமூர்த்தி — பிள்ளையார். வெள்ளிக்கிழமைதோறும் விசேட பொங்கல், பூசைகள் நடைபெற்று வருகின்றன. பங்குனிப் பௌர்ணமியில் வருடாந்த உற்சவம் முடிவடையுமாறு மூன்று தினங்களுக்கு அலங்கார உற்சவம் நடைபெற்று வருகிறது.*

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

ஸ்ரீ சித்தி விக்நேஸ்வரர் கோவில்
அம்பிளாந்துறை, குருக்கள்மடம்

*நித்திய பூசை நடைபெறும். அலங்கார உற்சவம் பத்து நாட்களுக்கு நடைபெறுகின்றது. வருடாவருடம் மாதச் சதுர்த்தி, ஆவணிச் சதுர்த்தி, கந்தசஷ்டி, விநாயகர் விரதம் போன்ற விசேட காலங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

ஸ்ரீ விக்நேஸ்வரர் கோவில்
38 ஆம் கிராமம், நவகிரிநகர், வக்கிஎல்ல

கோவில் ஸ்தாபிக்கப்பட்டு இருபத்தைந்து வருடங்களாகின்றன. மூலமூர்த்தி விநாயகர். பரிவார மூர்த்திகள் கண்ணகி, வைரவர், நாகதம்பிரான் ஆகியோர். நித்திய பூசை நடைபெறும். திருவெம்பாவை, சிவராத்திரி, நவராத்திரி, தைப்பொங்கல், விநாயகர் சதுர்த்தி போன்ற தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும். ஆனி உத்தரத்தில் வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
மாலையர்கட்டு, 16 ஆம் கிராமம், மண்டூர்

1952 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட கோவில். மூலமூர்த்தி விநாயகர். பரிவார மூர்த்திகள் — ஆதிவைரவர், நாகதம்பிரான், சுப்பிரமணியர். நித்திய பூசை நடைபெறும். தைத்திருநாள், நவராத்திரி, சித்திரைப் பொங்கல், சித்திரைப் பௌர்ணமி, ஆனி உத்தரம், கார்த்திகைத் திருநாள், திருவெம்பாவை போன்ற தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

கொட்டாம்புலைப் பிள்ளையார் கோவில்
8 ஆம் வட்டாரம், முனைக்காடு, கொக்கட்டிச்சோலை

1922 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி — விநாயகர். விநாயகர் விரதம் அனுஷ்டிக்கும் இருபத்தொரு நாட்களும் விசேட பூசை. பரிவார மூர்த்திகள் — வைரவர், நாகதம்பிரான், அம்பாள் ஆகியோராவர். தினமும் ஒருகாலப் பூசை. கார்த்திகை மாதத்தில் வருடாந்த உற்சவம் நடைபெறும். வெள்ளிக்கிழமைகளிலும், திருவெம்பாவை, திருக்கார்த்திகை தினங்களிலும் விசேட வழிபாடு நடைபெற்று வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்;- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

## ஸ்ரீ முத்துலிங்க விக்நேஸ்வரர் கோவில்
## பெரியபோரதீவு

பெரியபோரதீவு, ஸ்ரீ பத்திரகாளி அம்மன் சரித்திரத்தில் இவ்வாலயமும் இடம்பெற்றுள்ளது. 1924 ஆம் ஆண்டில் புனருத்தாரணஞ் செய்யப்பட்டது. மூலமூர்த்தி பிள்ளையார். பரிவார மூர்த்திகள்—நவக்கிரகம், வைரவர், நாகதம்பிரான் ஆகியோராவர். கிராமத்தினூடாகப் பூசைப்பெட்டி கொண்டு வரப்பட்டு பூசை நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

## சங்குமக்கண்டிப் பிள்ளையார் கோவில்
## வம்மியடி, ஊற்று, நவகிரிநகர்

சித்திரைக்கதை, சிவராத்திரி போன்ற நாட்களில் விசேட பூசை நடைபெறுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

## ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
## சின்னவத்தை - 2, மண்டூர்

நித்திய பூசை உண்டு. ஆடி அமாவாசையில் தீர்த்தம் வரக்கூடியவாறு மகோற்சவம் நடைபெறுகின்றது. தைப்பூசம், சிவராத்திரி, சித்திரா பௌர்ணமி, ஆனி உத்தரம் போன்ற விசேட காலங்களிலும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

## ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
## 37 ஆம் கிராமம், 1 ஆம் வட்டாரம், புதுமுன்மாரிச்சோலை, வக்கிஎல்ல

விநாயகப் பெருமானோடு வைரவர், நாகேசுவரர் ஆகிய மூர்த்திகளும் உளர். ஆடி மாதத்தில் திருவிழா நடைபெற்று ஆடி அமாவாசைத் தினத்தன்று தீர்த்தம் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில்
### முனைத்தீவு, பெரியபோரதீவு

இக்கோவிலுக்கு நீண்டகால வரலாறு உண்டு. நித்திய பூசை நடைபெறுகிறது. பங்குனி உத்தரம் தொடங்கிப் பத்து நாட்களுக்குத் திருவிழா நடைபெறும். மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசை ஆண்டுதோறும் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### பாலையடிப் பிள்ளையார் கோவில்
### முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை

இங்கு மூலமூர்த்தியோடு வைரவர், நாகதம்பிரான் ஆகிய மூர்த்திகளும் உளர். நித்திய பூசையோடு கார்த்திகை மாத ரோகிணி நட்சத்திரத்தை முதலாகக் கொண்டு இருபத்தொரு நாட்கள் விநாயக விரதம் அனுட்டிக்கப்பட்டுப் பூசைகளும் சிறப்புற நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### ஸ்ரீ முத்துலிங்கப் பிள்ளையார் கோவில்
### வாழைச்சேனைச் சந்தி, அம்பிளாந்துறை

நித்திய பூசை நடைபெறுகிறது. ஆடிப் பூரணைக்கு முதல் நாள் திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### விரையடிப் பிள்ளையார் கோவில்
### தம்பலவத்தை, மண்டூர்

நித்திய பூசை நடைபெறும். ஆடி, அபரபக்கச் சதுர்த்தியில் வருடாந்தத் திருவிழா ஆரம்பமாகி அமாவாசையன்று தீர்த்தம் நடைபெறும். இங்கு கார்த்திகைத் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### கூழாவடிப் பிள்ளையார் கோவில்
### 39 ஆம் கிராமம் வக்கிஎல்ல

உற்சவ காலத்தில் பூசை நடைபெற்று வருகின்றது. சித்திரைக் கதை, சிவராத்திரி போன்ற காலங்களில் விசேட பூசை நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

ஸ்ரீ வம்மியடிப் பிள்ளையார் கோவில்
பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை

நித்திய பூசை நடைபெறுகின்றது. கார்த்திகையில் இருபத்தொரு நாட்கள் விநாயகர் விரதமும், தொடர்ந்து திருவெம்பாவை, தைப்பொங்கல் சிவராத்திரி போன்ற விசேட விழாக்களும் இடம்பெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

சங்குமக்கண்டிப் பிள்ளையார் கோவில்
40 ஆம் கிராமம், தும்பங்கேணி

தினமும் மூன்றுகாலப் பூசை நடைபெறும். ஆடி அமாவாசையோடு திருவிழா நடைபெறுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
39 ஆம் கிராமம், வக்கிஎல்ல

வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெறுகின்றது. ஆடி அமாவாசைத் தீர்த்தம், சித்திரைக் கதை நாட்களில் விசேட பூசை நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில்
(வைக்கோல் நிலைய அருகாமையில்)
தும்பங்கேணி

சுமார் எட்டு வருடங்களுக்கு முன் தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — அம்பாள், நாகதம்பிரான். வெள்ளிக்கிழமைதோறும் பூசை நடைபெறுகிறது. சித்திரைத் திருவிழா நாட்களில் விசேட வழிபாடுகளும், சமயப் போதனைகளும் இடம்பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

## தில்லை மண்டூர் முருகன் கோவில்
### மண்டூர்

மட்டக்களப்பிலிருந்து சுமார் 20 மைல் தூரத்தில் உள்ளது இக் கோவில். தில்லை மண்டூர் என்றும் அழைக்கப்பட்டு வருகிறது. தில்லை மரங்கள் அடர்ந்த காடாக இருந்தமையாலும் மூலஸ் தானத்தோடு மருவி தில்லை மரம் இருப்பதனாலும் இவ்வாலயத் திற்கு இப்பெயர் வந்துள்ளது.

சூரபன்மனைச் சம்ஹாரம் செய்த வேலாயுதத்திலிருந்து பிறந்த மூன்று ஒளிப்பிளம்புகளில் ஒன்று உகந்த மலையிலும், இன்னொன்று திருக்கோவில் வெள்ளை நாவலொன்றிலும்; மூன்றாவது மண்டூர் தில்லை மரத்திலுமாக தங்கி நிலைகொண்டதாக ஐதீகம்.

கதிர்காமத்தில் நடைபெறுவது போன்ற வழிபாட்டுடன் ஒத்த தாக இங்கு பூசை நடைபெற்று வருகிறது. மூலஸ்தானம், கதிர் காமத்தைப்போல திரைச்சீலையால் மூடப்பட்டு இருக்கும், தெற்கு வாயிலைக் கொண்ட கோவில். வம்மி, ஆல், அரசு, கோங்கு போன்ற மரங்கள் நிறைந்த திருவீதியுடையது. முல்லை, மருதம், நெய்தல், குறிஞ்சி ஆகிய நாநிலச் சிறப்பினையும் பெற்றது.

கதிர்காமத் தீர்த்தோற்சவத்தின் பத்தாம் நாள் இங்கு கொடி யேற்ற உற்சவம் நடந்து இருபது தினங்கள் விழா நடைபெற்று ஆவணிப் பௌர்ணமியில் தீர்த்தம் நடைபெறும். விரத காலங் களில் திருச்செந்தூர், மகிமை, வள்ளியம்மை திருமணம், திருநீற்று மகிமை, படை வீடுகளின் சிறப்பு, போன்ற புராண, பாடல்கள் படிக்கப்பட்டு வருகின்றன. கார்த்திகைத் திருவிழா மிக விசேஷமாக நடைபெற்று வருகிறது. ''சந்தி மறித்தல்'' என்றவகையில் சங்கு களை ஊதி வீதிவலம் வருதலும், வேடர் பூசையும் திருவிழாக் காலங் களில் இங்கு விமரிசையாக இடம்பெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

## தாந்தாமலை முருகன் கோவில்
### மட்டக்களப்பு

இந்த ஆலயம், மட்டக்களப்புப் பிரிவில் கொக்கட்டிச்சோலைக் கிராமத்திலிருந்து மேற்கே சுமார் பத்து மைல் தூரத்தில் உள்ளது. தான்தோன்றீஸ்வரர் தாண்டவமாடிய இடமாதலால் ''தாண்டவ மலை'' என்று பெயர் பெற்று காலக்கிரமத்தில் சிதைந்து தாந்தா மலையாகியது. மழையில்லாக் காலத்தில் பொங்கல் செய்து மழை வளம் கோருவது இக்கோவிலில் ஒரு பழமையான வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் ஒருவன் இங்கு வாழ்ந்தமைக்கான சான்றுகளாக சந்திர வட்டக்கல், கொடிச்சீலைகள், படிக்கட்டுக்கள், கற்றூண்கள், இன்னும் சின்னமாக இங்குள்ளன. கோணேசர் கல்வெட்டில் தாந்தா மலையை ஆட்சிபுரிந்த மன்னனின் வரலாறு உள்ளதைக் காணலாம்.

ஆடி மாதத்தில் வருடாந்த உற்சவம் பன்னிரண்டு தினங்கள் நடைபெறுகின்றன. புதுவருடம், தைப்பொங்கல், புதிர்ப்பொங்கல், ஆகிய முக்கிய தினங்களில் விசேட திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. தினமும் ஒருகாலப் பூசை உண்டு.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### கோவில் போரதீவு, சித்திரவேலாயுதர் கோவில்
### மட்டக்களப்பு

மட்டக்களப்புக்கு சுமார் 19 மைல் தூரத்திலுள்ளது கோயில். வெள்ளை நாவலம்பதி எனவும் அழைக்கப்படுகிறது. மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புடையது.

வெருகல், திருக்கோவில், மண்டூர், கொக்கட்டிச்சோலை, ஆலயங்கள் அமைக்கப்பட்ட காலத்திலேதான் இக்கோயில் அமைக்கப்பட்டிருக்கலாமென்று கருதப்படுகிறது.

இந்தியாவைச் சேர்ந்த கொங்கண முனிவர் என்பவர் ஈழத்தலயாத்திரையை மேற்கொண்டபோது ஏழு லிங்கங்களை இங்கு கொண்டு வந்ததாகவும் அதில் ஒரு லிங்கத்தை இங்கு வைத்துப் பூசை செய்து பின்னர் எடுத்துச் செல்ல முயன்றபோது அது இருப்புக் கொண்டு விட்டதாகவும் கதை ஒன்றுள்ளது.

சில காலமாக வளர்ச்சி குன்றியிருந்த இக்கோவிலில் 1974 ஆம் ஆண்டில் புனருத்தாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடந்தேறியது. தினமும் மூன்றுகாலப் பூசை நடைபெற்று வருகிறது. முன்னரெல்லாம் இருபது தினங்களுக்கு நடைபெற்று வந்த வருடாந்தத் திருவிழாக்கள் இப்போது பத்துத் தினங்களாகக் குறைந்து விட்டன. ஆடி மாதத்தில் வருடாந்த உற்சவம் நடைபெறும். சித்திரா பௌர்ணமி, கார்த்திகை விளக்கீடு. திருவெம்பாவை, திருவாதிரை போன்ற விழாக்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோவில்
### கொக்கட்டிச்சோலை

1964 ஆம் ஆண்டு இந்து இளைஞர் மன்றத்தினரால் தாபிக்கப்பட்ட கோவில். ஆனி உத்தரம், சிவராத்திரி போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோவில்
### பழுகாமம், பெரியபோரதீவு

*1938 இல் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம் இது. ஆலயத்திற்கு வடக்குப் பக்கத்தில் இருந்த ஆலமரத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி — வேல். பரிவார மூர்த்தி — விநாயகர். உச்சிக்காலப் பூசை தினமும் நடைபெற்று வருகிறது. வருடாந்த உற்சவம் ஏழு நாட்களுக்கு நடைபெற்று வைகாசி விசாகத்தில் தீர்த்தத் திருவிழாவுடன் முடிவடையும்.*

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### கந்தசுவாமி கோவில்
### அம்பளாந்துறை, குருக்கள்மடம்

*மூலமூர்த்தி — வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியர். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், வைரவர் ஆகியோர். 1969 ஆம் ஆண்டு இவ்வாலயம் தாபிக்கப்பட்டது. வாரம் இருமுறை பூசை நடைபெறுவதுடன், ஐப்பசி மாதத்தில் வருடாந்த உற்சவமும், சிவராத்திரி, வருடப்பிறப்பு, தைப்பொங்கல் போன்ற விசேட தினங்களில் விசேட வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.*

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### ஸ்ரீ முருகன் கோவில்
### அம்பலத்தடி, குருக்கள்மடம்

*நித்திய பூசை நடைபெறும். ஆடியில் கொடியேறி ஏழு நாட்கள் திருவிழா நடைபெற்று, வருடாந்த உற்சவம் சிறப்புற முடிவுறுகின்றது.*

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### வைரவர் கோவில்
### ஆனைகட்டியவெளி, மண்டூர்

*மூலமூர்த்தி — வைரவர். வெள்ளிக்கிழமைதோறும் பூசை நடைபெறுகிறது. புரட்டாசி மாதப் பூரணையை அடுத்து மூன்று தினங்களுக்கு விசேட பூசை நடைபெற்று வருகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

சுடலை வைரவர் கோவில்
பட்டிப்பளை, கொக்கட்டிச்சோலை

ஆவணி மாதத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

ஸ்ரீ வீரபத்திரர் கோவில்
முதலைக்குடா கொக்கட்டிச்சோலை

மூலமூர்த்தி — வீரபத்திரர். விசேட நாட்களில் பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. ஆனி மாதத்தில் வருடாந்த உற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி, (பட்டிப்பளை)

ஸ்ரீ லட்சுமி நாராயணர் கோவில்
அருள்நேசபுரம், குருக்கள்மடம்

மூலமூர்த்தி—லக்ஷ்மி. பரிவார மூர்த்திகள்—அம்பாள், பிள்ளையார், நாகதம்பிரான். விசேட காலங்களில் பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. அலங்கார உற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

ஸ்ரீ நாராயணன் கோவில்
வக்கிஎல்ல

மூலமூர்த்தி — ஸ்ரீ நாராயணன். பரிவார மூர்த்திகள் — வைரவர். நாகதம்பிரான். வாரம் ஒருமுறை பூசை நடைபெறும். ஆடி அமாவாசைத் தினத்தன்று தீர்த்தம் இடம்பெறக்கூடியவாறு மூன்று தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

ஸ்ரீ நாராயண கோவில்
35 ஆம் கிராமம், வக்கியல்ல

மூலமூர்த்தி ஸ்ரீ நாராயணன். தினமும் மூன்றுகாலப் பூசை. சிவராத்திரி, ஆடி அமாவாசை, திருவெம்பாவை, திருவாதிரை, சித்திரை, தைப்பூசம் நாட்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### ஸ்ரீ மகாவிஷ்ணு கோவில்
### 2 ஆம் குறிச்சி, பழுகாமம், பெரியபோரதீவு

ஸ்ரீ மகாவிஷ்ணுவோடு பிள்ளையார், நவக்கிரகம், வைரவர் ஆகிய மூர்த்திகளும் இங்கு உள்ளனர். நித்திய பூசை நடைபெறு கிறது. ஆவணி மாதத்தில் கொடியேறி உற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### ஸ்ரீ மகாவிஷ்ணு கோவில்
### மாவடி, உம்மாரி, காக்காச்சிவட்டை கிராமம்

ஸ்ரீ மகாவிஷ்ணு மூலமூர்த்தி. முருகன், விநாயகர், வைரவர் ஆகிய மூர்த்திகள் பரிவார மூர்த்திகள். நித்திய பூசைகள் நடை பெற்று, ஆனி உத்தரத்தை ஒட்டி ஒரு வாரம் திருவிழா நடை பெறுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### ஸ்ரீ மகாவிஷ்ணு கோவில்
### 3 ஆம் கட்டை, வெல்லாவெளி

இங்கு மகாவிஷ்ணு, வைரவர் ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் மூன்று காலப் பூசை நடைபெறுகிறது. ஆடி அமாவாசைத் தினத் தன்று தீர்த்தம் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### ஸ்ரீ விஷ்ணு கோவில்
### 14 ஆம் கிராமம், மண்டூர்

ஸ்ரீ மகாவிஷ்ணுவோடு, விக்நேஸ்வரர், நாகதம்பிரான், வைர வர் ஆகிய மூர்த்திகளும் இங்கு உள்ளனர். வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### ஸ்ரீ விஷ்ணு கோவில்
### காக்காச்சிவட்டை, மண்டூர்

மூலமூர்த்தி — விஷ்ணு. பரிவாரமூர்த்திகள் — வைரவர். நாக தம்பிரான். வெள்ளிக்கிழமைதோறும் பூசை நடைபெறும். புரட் டாதி மாதத்துப் பௌர்ணமியில் விசேட உற்சவம் இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### மகாவிஷ்ணு கோவில்
### 3 ஆம் குறிச்சி, மண்டூர்

இப்பகுதியில் விஷ்ணு ஆலயம் இல்லாதிருந்த குறையை நீக்குவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம் இது. புரட்டாதி மாதத்தில் வருடாந்த உற்சவம் ஐந்து நாட்களுக்கு நடைபெற்றுவருகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
பெரியபோரதீவு.

### ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில்
### பெரியபோரதீவு

மட்டக்களப்புக்குப் பதினெட்டு மைல் தூரத்தில் உள்ளது இக்கோவில். இந்த இடத்தைப் பெரிய போர் ஏறு தீவு என்றும் அழைப்பர். இந்த ஆலயத்தில் பழைய ஏடு ஒன்று ''கனவு கண்ட பக்தாசி'' என்ற பெயரில் இருக்கிறது.

1556 ஆம் ஆண்டில் ஆலயம் முதலில் ஸ்தாபிக்கப்பட்டதாகவும் பின்னர் 1825 ஆம் ஆண்டில் கல்லால் கட்டப்பட்டதாகவும் கூறப்பட்டு வருகிறது. மடாலய முறையில் ஸ்தாபிக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்ட கோயிலில், கர்ப்பக்கிரகம், மகாமண்டபம், ஸ்நபன மண்டபம், ஸ்தம்ப மண்டபம் ஆகியவை உள்ளன. வெள்ளிக்கிழமைதோறும் பூசை நடைபெற்று வருகிறது. தைப்பூசம், சிவராத்திரி, வைகாசிக் குளிர்த்தி, போன்ற காலங்களில் பூசைகள் விசேஷமாக நடத்தப்பட்டு வருகின்றன.

வருடாந்த உற்சவம் புரட்டாதி மாதத்தில் நடைபெற்று வருகிறது. இதற்காக நவராத்திரி பூசைக் காலத்தில் கதவு திறந்து பூசை நடைபெறும். அன்று அம்மனைப் பெட்டகத்தில் இருந்து வெளியே எடுத்து ஊர்வலமாகக் கொண்டு வந்து வைத்துக் கதவு திறப்பர்.

தீக்குளித்தல் உட்பட மடை பரவி வழிபாடு செய்யும் வழக்கம் இங்கு பிரபல்யமாக இருக்கிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவில்
### தாளையடித் தெரு, முதலைக்குடா

மூலமூர்த்தி — அம்பாள். விசேஷ நாட்களில் விசேட பூசை நடைபெறும். ஆவணி மாதத்தில் உற்சவம் நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### காளியம்பாள் கோவில்
### அருள்நேசபுரம், குருக்கள்மடம்

அருள்நேசபுரக் கிராமக் குடியேற்றத் திட்டத்தினரால் அம்மன் வழிபாட்டுக்காகத் தாபிக்கப்பட்ட கோயில் இது. மூலமூர்த்தி–காளியம்பாள். பரிவார மூர்த்தி—வைரவர். புரட்டாதி மாதத்தில் மூன்று நாட்களுக்குத் திருவிழா நடைபெற்றுத் தீர்த்தோற்சவத்துடன் விழா நிறைவுபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் (சுவாதியம்மன்) கோவில்
### வெல்லாவெளி

பட்டிருப்புத் துறையிலிருந்து சுமார் ஐந்து மைல் தூரத்தில் உள்ளது இக்கோயில். பன்னெடுங்காலமாக இக்கிராமம் 'நாதனை'' என்ற பெயரில் இருந்து வந்தது. வெல்லாவெளிக் குளத்தின் தென் கரையாக அமைந்திருக்கிறது. ஐநூறு ஆண்டுகட்கு முற்பட்ட இக்கோயில் ''சுவாதி அம்மன்'' கோயில் என்ற பெயரில் வேறு ஓரிடத்தில் இருந்து வந்தது.

அக்காலத்தில் வதனமார் என்ற இடையர் கூட்டம் வட இந்தியாவிலுள்ள அயோத்தியிலிருந்து புறப்பட்டு தென்னிந்தியாவின் காஞ்சிக்கு வந்து அங்கிருந்து இலங்கை வந்ததாகக் கதை உள்ளது. இவர்கள் தான் இக்கோயிலை ஆதியில் ஆரம்பித்தனர். சிவன், பிள்ளையார், முருகன், விஷ்ணு, நாகதம்பிரான், ஆகியோர் இங்கு பரிவார மூர்த்திகளாக உள்ளனர்.

1850 ஆம் ஆண்டு ஆலயத்துக்கான இடம் தீர்மானிக்கப்பட்டு 1917 இல் புனருத்தாரண வேலைகள் நடந்தன. பின்னர் 1967 இல் முற்றாக இடிக்கப்பட்டு புதிய கோயிலாகக் கட்டி 1968 இல் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இப்போது உச்சிக்காலப் பூசையுடன் வெள்ளிக்கிழமைதோறும் கூட்டுப் பிரார்த்தனையும் சாயரட்சைப் பூசையும் நடைபெற்று வருகின்றன.

வருடாந்த உற்சவம் ஆனி மாதத்தில் வரும் மகம், பூரம், உத்தரம், என்னும் ஏதாவது ஒரு நட்சத்திரத்தில் கும்பஸ்தான பூசையுடன் ஆரம்பமாகிப் பத்து தினங்கள் நடைபெற்று கும்பம் சொரிதல் திருவிழாவுடன் முடிவடையும். தீக்குளிப்பு, பள்ளயம் எனும் மடைச்சடங்கு போன்றவைகள் முக்கியமான திருவிழாக்கள். மாரியம்மனுக்குரிய பாடல்கள் இங்கு படிக்கப்பட்டு வருகின்றன. அம்பாள் மீது பலர் ஊஞ்சல் பாடல்கள் பாடியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

ஸ்ரீ சிவமுத்துமாரியம்மன் கோவில்
1 ஆம் குறிச்சி, பழுகாமம், பெரியபோரதீவு

*மூலமூர்த்தி — மாரியம்மன். பேச்சியம்மன், பிள்ளையார், நாக தம்பிரான், முருகன், வைரவர் ஆகிய மூர்த்திகளும் இங்கு உளர். வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசை உண்டு. ஆனி உத்தரம், ஆனிப் பூரணை ஆகியன திருவிழாக் காலங்களாகும்.*

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
37 ஆம் கிராமம், 1 ஆம் கண்டம், வக்கிஎல்ல

ஆலயம் 1956 ஆம் ஆண்டில் குடியேற்றக் கிராம மக்களுக்காக ஸ்தாபிக்கப்பட்டது. வெள்ளிக்கிழமைதோறும் பூசை நடைபெறும். ஆனிப் பூரணை, குளிர்த்தி போன்ற நாட்களில் விசேட பூசை வழி பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

ஸ்ரீ மாரியம்மன் கோவில்
2 ஆம் வட்டாரம், 40 ஆம் கிராமம், தும்பங்கேணி

*1958 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி—அம்பாள். ஆனி உத்தரத்திற்கு ஏழு நாட்களுக்கு முன் கொடியேறி பௌர்ணமி யன்று வருடாந்த உற்சவம் முடிவடையும். அம்பாள் ஊர்வலமும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.*

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

ஸ்ரீ மாரியம்மன் கோவில்
மட்டக்களப்பு வாவிக்கரை, மண்டூர்த்துறை மண்டூர்

*வாரத்திற்கொருமுறை பூசையும் விசேட காலங்களில் விசேட பூசைகளும் நடைபெறுகின்றன. ஆனி மாதத்தில் ஏழு நாட்களுக் குத் திருவிழா நடைபெற்று பூரணையன்று திருவிழா பூர்த்தியடை கிறது. நோயாளிகள் பிணிகளைத் தீர்த்துக் கொள்வதற்காக இவ் வாலயத்திற்குச் சென்று வழிபடுவார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
35 ஆம் கிராமம், பாலையடிவட்டை, வெல்லாவெளி

மூலமூர்த்தியாகிய அம்பாள் வெங்கலத்தினாலான விக்கிரகம். பிள்ளையார், வைரவர் ஆகிய மூர்த்திகளும் பரிவாரத்தில் உளர். வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெறும். ஆனி மாதத்தில் திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

தெய்வயானை அம்பாள் கோவில்
தாந்தாமலை, மாவடி முன்மாரி, கொக்கட்டிச்சோலை

மிகவும் பழமைவாய்ந்த ஆலயம். மூலமூர்த்தி அம்பாள். நித்திய பூசை நடைபெறுகிறது. ஆடிப் பௌர்ணமி தினத்தன்று தீர்த்தம் இடம்பெறக் கூடியவகையில் திருவிழா ஆடி மாதத்தில் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

வள்ளிஅம்பாள் கோவில்
தாந்தாமலை, மாவடிமுன்மாரி, கொக்கட்டிச்சோலை

பழமை வாய்ந்த ஆலயம். மூலமூர்த்தி — வள்ளி அம்பாள். நித்திய பூசை உண்டு. ஆடி மாதத்தில் விசேட பூசைகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

கடலாச்சி அம்மன் கோவில்
அம்பிளாந்துறை, குருக்கள்மடம்

பழமை வாய்ந்த கோவில் இது. விசேட தினங்களில் வழிபாடுகள் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

ஸ்ரீ கண்ணகை அம்பாள் கோவில்
முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை

சிலப்பதிகார ஏட்டுப் பிரதிகள் உள்ளன. பாரம்பரிய முறைகளுக்கமைய கோவலன் கதை படிக்கப்பட்டு வருகின்றது. மூலமூர்த்தி—கண்ணகை அம்மன். பரிவார மூர்த்தி—வைரவர். வைகாசிப் பூரணைக்கு முன் ஐந்தாம் நாள் குளிர்த்தி நடைபெறும். தை மாதத்தில் சடங்கு சிறப்புற இடம்பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

குறிஞ்சிநகர் கண்ணகை அம்பாள் கோவில்
குறிஞ்சிநகர், கொக்கட்டிச்சோலை

பழமைவாய்ந்த ஆலயம். கண்ணகை அம்பாள் ஏட்டுப் பாடல்களில் இந்த ஆலயம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. மூலமூர்த்தி — கண்ணகை அம்பாள். வைகாசிப் பூரணையில் உற்சவம் நடைபெறும் வகையில் வருடாந்தத் திருவிழா நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

ஸ்ரீ கண்ணகை அம்பாள் கோவில்
முனைக்காடு, கொக்கட்டிச்சோலை

1943 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. கண்ணகை அம்பாள் வழிபாடு இங்கு பேணிப் போற்றப்பட்டு வருகிறது. மூலமூர்த்தி கண்ணகை அம்பாள். நித்திய பூசையுடன், வைகாசி மாதப் பூரணையில் விசேட உற்சவமும் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

ஸ்ரீ கண்ணகை அம்பாள் கோவில்
தும்பங்கேணி

இருபது வருடங்களுக்கு முன் தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி — கண்ணகை அம்பாள். பரிவாரமூர்த்தி — பிள்ளையார். வருடம் ஒருமுறை வைகாசிப் பூரணையில் குளிர்த்தி நடைபெறும். விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

ஸ்ரீ கண்ணகை அம்பாள் கோவில்
பெரியபோரதீவு

மூலமூர்த்தி — கண்ணகை அம்பாள். வெள்ளிக்கிழமைதோறும் பூசை நடைபெறும். வைகாசிப் பௌர்ணமிக்கு முதல் மூன்று நாட்களுக்கு வருடாந்த உற்சவம் இடம்பெறும். கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

**கண்ணகை அம்மன் கோவில்**
**13 ஆம் கிராமம், மண்டூர்**

1953 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி கண்ணகை அம்மன். பரிவார மூர்த்திகள் — விநாயகர், வைரவர், நாகதம்பிரான். வாரத்தில் ஒருமுறை பூசை நடைபெறும். ஆனி உத்தரத்திலும், வைகாசித் திங்களிலும் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

**ஸ்ரீ கண்ணகி அம்மன் கோவில்**
**14 ஆம் கிராமம், மண்டூர்**

மூலமூர்த்திகள்—விக்நேஸ்வரர். நாகதம்பிரான், வீரபத்திரர், வைரவர். வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெறுகிறது. வருடா வருடம் வைகாசி மாதப் பூரணையில் குளிர்த்தியும் அதற்கு முன்னைய பதினொரு நாட்களுக்குக் கும்பம் வைத்துத் திருவிழாவும் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

**கண்ணகை அம்மன் கோவில்**
**38 ஆம் கிராமம், வக்கிஎல்ல**

கண்ணகை அம்பாளுக்கு நித்திய பூசைகள் நடைபெற்று வைகாசிப் பூரணையில் அம்மன் சடங்கும், குளிர்த்தியும் நடைபெறுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

**ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவில்**
**மகிழமுடித்தீவு, கொக்கட்டிச்சோலை**

மூலமூர்த்தி—ஸ்ரீ கண்ணகி அம்பாள். வைரவர், நாகதம்பிரான், விநாயகர் ஆகிய மூர்த்திகள் பரிவாரத்தில் உளர். நித்திய பூசை உளது. வைகாசி விசாகம் சிறப்பாக நடைபெறுகிறது. ஏழு நாட்கள் சடங்கு நடைபெறும். ஆப்போது கல்யாணக் கால் வெட்டுதல், கல்யாணப் படிப்பு, பச்சை கட்டுக் குளிர்த்தி ஆகியன விசேடமானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### ஸ்ரீ கண்ணகையம்மன் கோவில்
### கொக்கட்டிச்சோலை

மூலமூர்த்தி — நாகதம்பிரான். வைரவர் ஆகிய மூர்த்திகளும் உள்ளனர். தினமும் ஒருகாலப் பூசை நடைபெறுகிறது. வைகாசிப் பூரணை தினத்தை ஒட்டித் திருவிழா நடைபெறுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவில்
### கோயில்போரதீவு, பெரியபோரதீவு

மூலமூர்த்தி — கண்ணகை அம்பாள். பரிவாரமூர்த்திகள் — நாகதம்பிரான், வைரவர், பிள்ளையார், முருகன். வைகாசியில் பத்து நாட்களுக்கு அலங்கார உற்சவம் நடைபெற்று வருவதுடன், தீக்குளிப்பும், குளிர்த்தியும் இங்கு விசேடமாக நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### ஸ்ரீ திரௌபதைஅம்மன் கோவில்
### திருப்பழுகாமம், பெரியபோரதீவு

மூலமூர்த்தி திரௌபதையும் பஞ்சபாண்டவருமாவர். விஷ்ணு, நாகதம்பிரான், வைரவர் ஆகிய மூர்த்திகளும் இங்கு உளர். போதிராசன் விக்கிரகம் ஒன்று நந்திக்குப் பதிலாக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. வெள்ளிக்கிழமை தோறும் பூசை நடைபெற்று வருகிறது. கூட்டுப் பிரார்த்தனை சமயச் சொற்பொழிவு ஆகியன இடம்பெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

### ஸ்ரீ நாகேஸ்வரர் கோவில்
### பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை

செவ்வாய், வெள்ளி நாட்களில் பூசை நடைபெறுகிறது. ஆனி மாதத்தில் கொடியேறி ஆனி உத்தரத்தன்று விழா பூர்த்தி அடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

ஸ்ரீ நாகதம்பிரான் கோவில்
சின்னவத்தை, மண்டூர்

மூலமூர்த்தி — நாகதம்பிரான். மாதம் ஒருமுறை பூசை நடைபெறும். ஆனி உத்தரத்தன்று விசேட பூசை இடம்பெறுகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

ஸ்ரீ நாகதம்பிரான் கோவில்
முனைக்காடு, கொக்கட்டிச்சோலை.

மூலமூர்த்தி — நாகதம்பிரான். ஆனி உத்தரத்தன்று விசேட பூசைகள் நடைபெற்று வருகின்றன. பொங்கல் விழாவும் இடம் பெறுகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

பெரியதம்பிரான் கோவில்
முனைக்காடு மேற்கு, கொக்கட்டிச்சோலை

கோவில் சுமார் இருநூறு வருடங்கள் பழமை வாய்ந்தது. மூலஸ்தானத்தில் திரிசூலம் இருக்கின்றது. வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெறும். ஆடிமாதத்தில் வருடாந்த உற்சவம் இடம் பெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வெல்லாவெளி.

ஸ்ரீ பெரியதம்பிரான் கோவில்
முனைக்காடு, கொக்கட்டிச்சோலை

1925 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. மூலஸ்தானத்தில் திரிசூலம். வெள்ளிக்கிழமைதோறும் பூசை நடைபெறும். ஆடி மாதத்தில் வருடாந்த உற்சவம் இடம்பெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை மேற்கு — வவுணதீவு.

ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில்
பாவற்கொடிச்சேனை, உன்னிச்சை, செங்கலடி

நித்திய பூசை உண்டு. ஆடி மாதத்தில் ஐந்து நாட்களுக்குத் திருவிழா நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை மேற்கு – வவுணதீவு.

### பாலையடி ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
### வேக்கஞ்சேனை, காஞ்சிரங்குடா, கொக்கட்டிச்சோலை

நித்திய பூசை நடைபெற்று வருகிறது. ஏகாதசி விரதம், சிவராத்திரி, காப்புப் பூசை, பொன்னூஞ்சல், சித்திரை வருடப் பிறப்பு போன்ற நாட்களில் விசேட உற்சவங்கள் நடைபெறும். மாசி மகத்தில் வருடாந்தத் திருவிழா இடம்பெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை மேற்கு – வவுணதீவு.

### பிள்ளையார் கோவில்
### பன்சேனை, முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை

இது சுமார் 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆலயம். வெள்ளிக் கிழமை தோறும் பூசை நடைபெறும். கார்த்திகை உற்சவம், காப் புக்கட்டுப் பூசை, தைப்பூசம், தைப்பொங்கல், மாசிமகம், சிவ ராத்திரி போன்ற விசேட நாட்களில் விசேட பூசை நடைபெடும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை மேற்கு – வவுணதீவு.

### ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில்
### நரிப்புல் தோட்டம், ஆயித்தியமலை, செங்கலடி

மூலமூர்த்தி விநாயகர். பரிவார மூர்த்திகள் — நாகதம்பிரான், சுப்பிரமணியர், வைரவர். நித்திய பூசை உண்டு. மார்கழி மாதத் தில் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை மேற்கு – வவுணதீவு.

### பிள்ளையார் கோவில்
### கரவெட்டி, நாவற்காடு, மட்டக்களப்பு

300 ஆண்டுகள் பழமையான ஆலயம் இது. பரிவார மூர்த்திகள்— வைரவர், நந்தி, முருகன், நாகதம்பிரான். தினமும் ஒருகாலப் பூசை. திருவாதிரை, மாசிமகம், கந்தசஷ்டி, சித்திரைக்கதை, நவராத்திரி ஆகிய தினங்களில் விசேட பூசை நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை மேற்கு — வவுணதீவு.

ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
உன்னிச்சை, செங்கலடி

வெங்கலத்தால் செய்யப்பட்ட பிள்ளையார் விக்கிரகம் இவ் வாலயத்தின் மூலஸ்தானத்தில் அமைந்திருக்கிறது. வாரந்தோறும் பூசை நடைபெறும். வருடாவருடம் புரட்டாதி மாதத்தில் திரு விழாக்கள் சிறப்பாக இடம்பெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை மேற்கு — வவுணதீவு.

விநாயகர் கோவில்
சாளம்பைக்கேணி, கன்னன்குடா

தினந்தோறும் மூன்று காலப் பூசை. கார்த்திகைத் திருவிழா, திருவெம்பாவை, சிவராத்திரித் திருவிழா, சித்திரைத் திருவிழா முதலிய விசேஷ திருவிழாக்கள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் படும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை மேற்கு — வவுணதீவு.

பிள்ளையார் கோவில்
கன்னன்குடா

மூலஸ்தானம் சிலா விக்கிரகம். வெங்கலத்தால் செய்யப்பட்ட நாகதம்பிரானும் உண்டு. தினந்தோறும் ஒரு காலப் பூசை. வருடா வருடம் ஆனி மாதத்தில் பூரணையை அடுத்த உத்தரத்தில் மூன்று நாட்கள் திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை மேற்கு — வவுணதீவு.

ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
மண்டபத்தடி, கன்னன்குடா

கன்னன்குடா செல்லும் வழியில் மண்டபத்தடி என்னும் இடத் தில் மூன்றும் வட்டாரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. 1815 ஆம் ஆண்டு தொடக்கம் இவ்வாலயம் இருந்து வருகின்றது. தினந் தோறும் ஒரு காலப் பூசை. வருடாவருடம் ஆனி மாத நடுப்பகுதி யில் நான்கு நாட்கள் திருவிழா நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை மேற்கு - வவுணதீவு.

### ஸ்ரீ முருகன் கோவில்
### கன்னன்குடா

வெங்கலத்தால் செய்யப்பட்ட வேல் மூலஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. தினமும் ஒரு காலப் பூசை. ஐப்பசியில் கந்த சஷ்டி விரதம் சிறப்பாக அனுட்டிக்கப்படும். சூரசம்ஹாரமும் இங்கு சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை மேற்கு - வவுணதீவு.

### ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில்
### மண்டபத்தடி, 3 ஆம் வட்டாரம், கன்னன்குடா

1815 ஆம் ஆண்டில் இவ்வாலயம் தாபிக்கப்பட்டது. மூல மூர்த்தி — பத்திரகாளி அம்மன். தினந்தோறும் ஒரு காலப் பூசை. வருடந்தோறும் ஆனி மாத நடுப்பகுதியில் நான்கு நாட்கள் திருவிழா நடைபெறுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை மேற்கு - வவுணதீவு.

### ஸ்ரீ மாரியம்மன் கோவில்
### பாவற்கொடிச்சேனை

வருடாவருடம் ஆனி மாதத்தில் மூன்று சடங்குகள் நடைபெறுகின்றன. விசேட நாட்களில் விசேட பூசை வழிபாடுகள் இடம் பெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை மேற்கு - வவுணதீவு.

### ஸ்ரீ மாரியம்மன் கோவில்
### விளாவட்டவான், நாவற்காடு

மூலமூர்த்தி — ஸ்ரீ முத்துமாரியம்மன். காளி, வைரவர் முதலிய மூர்த்திகளும் உள்ளனர். வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் இவ்வாலயத்தில் பூசை நடைபெறும். வருடந்தோறும் ஆனி அமாவாசையில் உற்சவம் தொடங்கி, ஒரு கிழமைவரை நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை மேற்கு – வவுணதீவு.

**கண்ணகி அம்மன் கோவில்**
**கன்னன்குடா, மட்டக்களப்பு**

ஆலயத்தின் பழமையை எடுத்துக் காட்டும் விதத்தில் ஆலய வளவினுள் ஆலமரமும், வம்மி மரமும் தலவிருட்சங்களாக அமைந்துள்ளன. ஆதியில் சிறு பந்தல் அமைத்து அங்கே வழிபாடாற்றினர். பின்னர் செங்கற்களால் கோவிலை அமைத்தனர். ஆண்டுதோறும் 9 நாட்கள் விமரிசையாகச் சடங்குகள் நடைபெற்று, இறுதி நாளாகிய வைகாசித் திங்களில் குளிர்த்தி நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை மேற்கு – வவுணதீவு.

**ஸ்ரீ நாகதம்பிரான் கோவில்**
**விளாவெட்டுவான், கரவெட்டி**

வாரந்தோறும் பூசை நடைபெற்று வருகிறது. வருடாவருடம் ஆண்டுப் பொங்கல் விழா நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை மேற்கு – வவுணதீவு.

**ஸ்ரீ நாகதம்பிரான் கோவில்**
**மண்டபத்தடி, 3 ஆம் வட்டாரம், கன்னன்குடா**

1812 ஆம் ஆண்டிலிருந்து இவ்வாலயத்தில் வழிபாடு நடைபெற்று வருகிறது. நாகதம்பிரான் – மூலமூர்த்தி. வாரந்தோறும் பூசை நடைபெறும். வருடாவருடம் ஆவணி மாத நடுப்பகுதியில் 3 நாட்கள் சடங்கும், பொங்கலும் நடைபெற்று வருகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

**சிவன் கோவில்**
**கித்துள்வெவ குடியேற்றத் திட்டம், கரடியனாறு**

வெள்ளிக்கிழமைதோறும் பூசை நடைபெறுகின்றது. புரட்டாதிப் பூரணையையொட்டி வருடாந்தத் திருவிழா சிறப்பாக நடைபெறுவதுடன் நாயன்மார் குருபூசை நாட்களும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

**ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்**
**மயிலவெட்டுவான், செங்கலடி**

ஆனி மாதத்தில் மூன்று நாட்களுக்குத் திருழாவிக்கள் நடைபெறுகின்றன. விசேட வழிபாடுகளும் உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
4 ஆம் குறிச்சி, ஏறாவூர்

தினமும் மூன்று காலப் பூசைகள் உண்டு. இந்த ஆலயத்தில் வைரவர், நாகதம்பிரான், நவக்கிரகம், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகட்குத் தனித்தனி கோயில்கள் உண்டு. ஆவணிச் சதுர்த்தியிலும், ஏனைய பிரதான தினங்களிலும் விசேட பூசைகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

வயற்கரை விநாயகர் கோவில்
உப்போடை வீதி, வந்தாறுமூலை

கண்டி இராசதானிக்குச் செல்லும் பாதை விநாயகர் ஆலயத்தின் அருகாமையில் இருந்ததாகவும், பிரதானிகள் செல்லும் போது இந்த ஆலயத்தை வழிபட்டுச் சென்றதாகவும் கூறுவர். நெல் விதைக்கும்காலம் அறுவடை காலம் விசேட பூசைகள் நடைபெறும் காலமாகும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

வெள்ளைக்கல் விநாயகர் கோவில்
பெரியபுல்லுமலை, புல்லுமலை

தைப்பொங்கல், தைப்பூசம், சிவராத்திரி, ஆடித்திருவிழா, போன்ற காலங்களில் பூசை வழிபாடுகள் உண்டு.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
ஐயங்கேணி, ஏறாவூர் 4

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் பூசை நடைபெற்று வருகின்றது. விசேட தினங்களில் விசேட வழிபாடு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
பெரிய புல்லுமலை

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — நாகதம்பிரான், வேல், வைரவர் ஆகியோர். 1968 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புனருத்தாரண வேலைகள் 1973 ஆம் ஆண்டு முடிவுற்றுக் கும்பாபிஷேக வேலைகள் நடைபெற்றன. ஆனி மாதத்தில் வருடாந்த உற்சவமும், சிவராத்திரி, கந்தசஷ்டி, வருடப்பிறப்பு, விநாயகர் விரதம், திருவெம்பாவை போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

ஸ்ரீ நவநாயகப் பிள்ளையார் கோவில்
தளவாய், செங்கலடி

1914 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி — நவநாயகப் பிள்ளையார். ஆடி மாதத்தில் வருடாந்த உற்சவமும், சித்திரை வருடப்பிறப்பு திருவாதிரை, சிவராத்திரி, போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

பெருமாவெளிப் பிள்ளையார் கோவில்
சித்தாண்டி, முறக்கொட்டாஞ்சேனை

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — வைரவர், நாகதம்பிரான் ஆகியோர். பதின்மூன்றும் நூற்றுண்டில் பொலன்நறுவை இராச்சியம் வீழ்ச்சியுற்றபோது இங்கு புஞ்சிராளையில் இருந்த வன்னியனும் குடும்பமும், குடிபெயர்ந்து வந்து பெருமாவெளிக்குளத்தைக் கட்டி வயல்களைப் பயன்படுத்திப் பிள்ளையார் ஆலயத்தை ஸ்தாபித்ததாக வரலாறு கூறுகிறது. வாரத்திற்கு ஒருமுறை பூசை நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி,

### ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
### கொம்மாதுறை, செங்கலடி

மூலமூர்த்தி — ஸ்ரீ சித்தி விநாயகர். நூறு வருடங்களுக்கு முன் விருட்சம் ஒன்றின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட ஆலயம் ஆது. மரப் பொந்து ஒன்றுக்குள் விநாயகர் விக்கிரகம் கண்டெடுக்கப்பட்ட தாக வரலாறு. இந்த விக்கிரகத்தைச் சிலர் ஊனப்படுத்தியதாக வும், அதனால் சொத்திக்கைப் பிள்ளையார் என்று பெயர் சூட்டப் பட்டிருந்ததாகவும் வரலாறு உள்ளது. 1070 ஆம் ஆண்டு இந்த விக்கிரகத்திற்குப் பதிலாக ஸ்ரீ சித்தி விநாயகர் மூலமூர்த்தியாகப் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளர்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

### மாவடிப் பிள்ளையார் கோவில்
### ஆறுமுகத்தான் குடியிருப்பு, செங்கலடி

மூல்மூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — வைரவர், நாகதம்பிரான் ஆகியோர். இது எண்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டது. தினமும் பூசை நடைபெற்று வருகிறது. தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, திருவாதிரை, சிவ ராத்திரி ஆகிய தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
முறக்கொட்டாஞ்சேனை.

### அம்பலத்தடிப் பிள்ளையார் கோவில்
### சித்தாண்டிக்குடி, முறக்கொட்டாஞ்சேனை

மூலமூர்த்தி — விநாயகர். 1913 ஆம் ஆண்டுக் காலத்திலுள்ள பனை ஓலையினாலான கல்வெட்டுக்கள் இவ்வாலயத்தில் உண்டு. நித்திய பூசையும், ஆடி அமாவாசைத் தினத்தில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு.
செங்கலடி.

### ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
### உன்னிச்சை, செங்கலடி

மூலஸ்தானத்தில் வெங்கலத்தாலான பிள்ளையார் விக்கிரகம் உள்ளது. வாரந்தோறும் ஒருநாள் பூசை நடைபெறுகிறது. புரட் டாதி மாதத்தில் வருடாந்த உற்சவம் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

### ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
### மயிலம்பாவெளி, செங்கலடி

ஆனி மாதத்தில் மூன்று நாட்களுக்குத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

### மருங்கையடி விநாயகர் கோவில்
### வந்தாறுமூலை, செங்கலடி

நித்திய பூசை உண்டு. ஆடி அமாவாசைக்கு முதல் மூன்று தினங்கள் அலங்காரத் திருவிழாவும் அமாவாசையன்று சமுத்திர தீர்த்தமும் நடைபெறும். சிவராத்திரி, திருவெம்பாவை, திருக் கார்த்திகை போன்ற காலத்தில் விசேடவழிபாடுகள் உண்டு.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

### பிள்ளையார் கோவில்
### மகிழவெட்டுவான், ஆயித்தியமலை

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — சிவன், சக்தி, மகாவிஷ்ணு, முருகன். நாகதம்பிரான், வைரவர் ஆகியோர். தினமும் ஒருகாலப் பூசை. விநாயகசஷ்டி, தைப்பொங்கல், சிவராத்திரி, சித்திரை வருடப்பிறப்பு, சித்திரைக்கதை, ஆனி உத்தரம், திருக்கார்த்திகை, திருவாதிரை போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

## சித்திரவேலாயுதசுவாமி கோவில்
## சித்தாண்டி, முறக்கொட்டாஞ்சேனை

இப்பகுதியில் சமய முக்கியத்துவம் பெற்ற திருத்தலங்களில் ஒன்முக இக்கோயில் திகழ்ந்து வருகிறது. வானளாவ ஓங்கியும், கம்பீரமாகவும் எழுந்து நிற்கும் திருக்கோவிலின் எடுப்பான தோற்றம் இதன் பழமையினையும், சிறப்பையும் எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. இது மட்டக்களப்புப் பட்டினத்துக்கு வடக்கே சுமார் பதின்மூன்று மைல் தூரத்திலுள்ளது.

கர்ண பரம்பரைக் கதைகள் பல உள்ள ஆலயம் இது. ஆவணி மாதத்தில் வருடாந்த மகோற்சவம் நடைபெறும். இறுதி மூன்று நாட்களும் மயில் கட்டுத் திருவிழா. உற்சவ காலங்களில் சொற்பொழிவுகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்று, தீர்த்தோற்சவத்துடன் மகோற்சவம் முடிவடையும். சித்தாண்டித் திருத்தல புராணம் ஆரையூர் நல். அழகேச முதலியாரால் இயற்றப்பட்டது. சிகண்டி முனிவரின் வருகையோடு சித்தாண்டித்தல வரலாறு கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கோவில் உற்பத்தியான காலத்திலிருந்தே வேலின் மகிமையும் வியாபித்தது. காலத்துக்குக்காலம் இந்த ஆலய மகிமை பற்றி நூல்களும், காவியங்களும், பாடல்களும், வெளிவந்துள்ளன.

சிகண்டி முனிவர் கதிர்காம யாத்திரையை மேற்கொண்டு ஈழ நாட்டுக்கு வந்து காட்டுப்பாதை வழியாக கால் நடையாகச் சென்றபோது மதங்கொண்ட யானை ஒன்று இவர்களை வழிமறித்துக் கொல்ல எத்தனித்தபோது சிகண்டி முனிவர் கதிர்காமக் கடவுளைத் தியானித்து சட்கர மந்திரத்தை வெற்றிலை ஒன்றில் ஓதி விட அது சுப்பிரமணியக் கடவுளின் திருவருளினுல் வேலாகச் சென்று யானையைக் கொன்றதாகக் கர்ணபரம்பரைக் கதை ஒன்றுண்டு.

இங்குள்ள வேலின் சக்தியைக் குறிக்க இக்கதை கூறப்பட்டு வருகிறது.

சிகண்டி முனிவர் இந்த ஆலயத்திற் பல அற்புதமான சித்துக்களைச் செய்தபடியால், ''சித்து'' என்ற பெயரும், நீறுபூத்த மேனி, உருத்திராக்கம் ஆகிய கோலத்துடன் விளங்கியமையால் ''ஆண்டி'' என்ற பெயரும் சேர்ந்து ''சித்து ஆண்டி'' என காரண இடுகுறிப் பெயராக இது அமைந்தது.

ஆவணிப் பிரதமையில் கொடியேறி பதினைந்து தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடந்து விழா முடிவுறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

### ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி கோவில்
### கி. சபை வீதி, வந்தாறுமூலை, செங்கலடி

தினமும் மூன்று காலப் பூசை. ஆடி மாதத்தில் 14 நாட்கள் திருவிழா நடைபெறும். இந்த ஆலயத்தில் விநாயகர், அம்பாள், நரசிம்ம மூர்த்தி ஆகிய மூர்த்திகளும் உளர். விசேட தினங்களில் பூசைகள் சிறப்பாக நடைபெறுவது வழக்கம்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி,

### ஸ்ரீ முருகன் கோவில்
### களுவன்கேணி, முறக்கொட்டாஞ்சேனை

வாராந்தம் பூசை நடைபெற்று வருகின்றது. ஆவணி அமாவாசை அன்று வருடாந்தத் திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி,

### ஸ்ரீ முருகன் கோவில்
### கரடியனறு, செங்கலடி

தினமும் இரு நேரப் பூசை. கதிர்காம உற்சவத்தையொட்டி இங்கு சிறப்பாகத் திருவிழா நடத்தப்படுகிறது. எல்லா முக்கிய தினங்களிலும் விசேட பூசை வழிபாடுகள் உண்டு. திருஞானசம்பந்த மூர்த்திநாயனூர் குருபூசை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை என்பன இங்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

### கந்தகுமராலய கதிர்வேல் முருகன் கோவில்
### வெலிக்காகண்டி கொலனி, பெரியபுல்லுமலை

நித்திய பூசை உண்டு. ஆவணி மாதப் பூரணையையொட்டி அலங்காரத் திருவிழா நடைபெற்று வருகின்றது. ஆலயத்தில் பிள்ளையார் வைரவர் ஆகிய மூர்த்திகளும் உளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
ஏறுவூர்.

### பத்திரகாளி அம்மன் கோவில்
### ஏறுவூர்

ஏறுவூர் முதலாம் வட்டாரத்தில் அமைந்துள்ள இக்கோயில் 175 வருடங்களுக்கு முந்தியதாக இருக்கலாமென்று கருதப்படுகிறது. மட்டக்களப்புக்கு எட்டு மைல் தூரத்தில் அமைந்திருக்கிறது. வருடத்திற்கு ஒருமுறைதான் கோயில் திறக்கப்பட்டு வருகிறபோதிலும் மூலஸ்தானக் கதவைத் திறக்காமல் அதற்கு முன்னுல் உள்ள கதவு வரையும் திறந்து வெள்ளிக்கிழமைதோறும் பூசை செய்து வருகிருர்கள். நீண்ட காலமாகப் புனருத்தாரண வேலைகள் நடைபெற்று வந்து இக்கோயிலில் 1972 ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. மாமரங்கள் அடர்ந்து வளர்ந்திருப்பதால் ''மாங்காட்டுக்காளி'' என்றும் அழைக்கிருர்கள். வருடாந்த உற்சவம் ஆனி உத்திரத்தில் தொடங்கி பதின்மூன்று தினங்களுக்கு நடைபெற்று வருகிறது. வைரவர், கண்ணகி அம்மன், பேச்சியம்மன் ஆகியோர், பரிவார மூர்த்திகளாக உள்ளனர். தீக்குளித்தல் திருவிழா இங்கு விசேஷமாக நடக்கிறது. தீக்குளிக்கும் பெண்கள் வாய், கேடயங்கள் சகிதம் தீக்குளிப்பது இங்கு வழக்கமாக உள்ளது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

### ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோவில்
### வெலிக்காகண்டி,பெரியபுல்லுமலே

பிரதான நாட்களில் விசேட பூசை, வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. வைகாசி அமாவாசை தொடங்கி ஐந்து நாட் திருவிழா நடைபெறும். புராதன கோவில் இருந்த அறிகுறிகளும் கற்றூண்கள் சிலவும் இவ்விடம் காணப்படுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

### ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில்
### பதுளே வீதி, கொடுவாமடு, செங்கலடி

வெள்ளிக்கிழமைதோறும் பூசை நடைபெறுகிறது. ஆடி அமாவாசையையொட்டி திருவிழா நடைபெற்று வருகின்றது. ஆலயத்தில் நரசிங்க வைரவர், வீரபத்திரர், நரசிங்க காளி, மாடன் போன்ற இதர மூர்த்திகளும் உளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

### ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில்
### சித்தாண்டிக் கொலனி, முறக்கொட்டாஞ்சேனை

வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெறுகின்றது. தீ மிதித்தல் உட்பட 5 நாட்கள் திருவிழா சிறப்பாக நடைபெறும். இந்த ஆலயத்தில் அட்ட வைரவரும் அமைந்துள்ளார்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### முறக்கொட்டாஞ்சேனை

மூலமூர்த்தி — ஸ்ரீ முத்துமாரியம்மாள். பரிவார மூர்த்திகள் — சித்தி விநாயகர், வீரபத்திரர், நாகதம்பிரான் வைரவர் ஆகியோர். சுமார் இருநூற்றைம்பது ஆண்டுகள் பழமையான கோவில். வெள்ளிக்கிழமைதோறும் பூசை நடைபெற்றுவருகிறது. வைகாசிப் பூரணையில் முடிவடையக்கூடியவாறு பதினைந்து தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது. பூரணையன்று அதிகாலை தீக்குளித்தல் இடம்பெறும். கன்னிமார் திருக்குளிர்த்திபாடும் வைபவத்துடன் முடிவுறும். தைப்பூசம், ஆடி அமாவாசை, சித்திரா பௌர்ணமி, கார்த்திகைத் தீபம், கார்த்திகை விரதம், திருவாதிரை விழா போன்ற நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### கருவங்கேணிவீதி, வந்தாறுமூலை
### செங்கலடி

இந்த ஆலயத்தில் வருடாந்த உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### உறுகாமம், செங்கலடி

இது சுமார் இருநூறு ஆண்டுகட்கு முற்பட்ட கோவில். ஆண்டு தோறும் வைகாசிப் பூரணை தினத்தன்று பொங்கல் பூசை நடைபெற்று வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி

### ஸ்ரீ மாரியம்மன் கோவில்
### பிரதான வீதி, வந்தாறுமூலே

வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெற்று வருகின்றது. குளிர்த்தித் திருவிழா ஆனி மாதத்தில் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### 1 ஆம் குறிச்சி, ஏறாவூர், செங்கலடி

ஆனி உத்தரத்தையொட்டி ஏழுநாள் திருவிழா நடைபெற்று வருகின்றது. ஆலயத்தில் காளி, கறுப்பாயி, மாரி, வதனமார், வைரவர் போன்ற இதர மூர்த்திகளும் உளர்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

### ஸ்ரீ நாகதம்பிரான் கோவில்
### செம்பியன்துறை வீதி, சித்தாண்டி

வருடந்தோறும் புரட்டாதி மாதத்தில் விசேட திருவிழா நடைபெறும். சுமார் 100 வருடங்கட்கு முன்னர் இவ்வாலயம் இருக்கும் இடத்தில் ஒரு இத்தி மரம் இருந்ததாகவும், அந்த மரத்தில் ஒரு பெரிய நாகம் குடி இருக்கக் கண்டு மக்கள் வழிபட்டதாகவும் கூறப்படுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

### நாகதம்பிரான் கோவில்
### சித்தாண்டி, உதயன்மூலே, முறக்கொட்டாஞ்சேனே

மூலமூர்த்தி — நாகதம்பிரான். ஆரம்பத்தில் புற்றிலுள்ள நாகதம்பிரானே வழிபட்டுவந்த மக்கள், பின்னர் இவ்விடத்தில் ஆலயம் அமைத்து வழிபட்டு வரலாயினர். தைப்பூசத் திருநாளில் இங்கு விசேட உற்சவம் நடைபெற்று வருகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

### பெரியதம்பிரான் கோவில்
### ஆறுமுகத்தான் குடியிருப்பு, ஏறாவூர், செங்கலடி

மூலமூர்த்தி — பெரியதம்பிரான். பரிவார மூர்த்திகள் — பிள்ளேயார், வீரபத்திரர் ஆகியோர். வாராந்த பூசை, உற்சவம் ஆகியன இவ்வாலயத்தில் நடைபெற்றுவருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
செங்கலடி.

சித்தாண்டி, ஸ்ரீ நாகதம்பிரான் கோவில்
சித்தாண்டி, முறக்கொட்டாஞ்சேனை

இத்தி மரத்தடியில் பண்டைக் காலம் தொட்டு ஒரு வெள்ளை நிற நாகதம்பிரான் வாசம் செய்துகொண்டு வந்தது. இவ்விடத்தில் ஓர் ஆலயத்தை அவ்வூர் மக்கள் அமைத்தனர். ஒவ்வொரு வருடமும் விசேட பொங்கல் பூசைகள் நடைபெறும். இப்படியான காலங்களில் நாகதம்பிரான் நேரில் காட்சி கொடுத்து வருகின்றார்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளை வடக்கு.

ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் கோவில்
பாலச்சேனை, கதிரைவெளி

வெள்ளிக்கிழமைகளில் பூசையும், ஆனியில் வருடாந்தப் பொங்கல், சடங்கு ஆகியனவும் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளை வடக்கு,

ஸ்ரீ துர்க்கை அம்மன் கோவில்
சோழன் கட்டுக்குளம், கதிரைவெளி

செவ்வாய்க்கிழமைகளில் பூசை, வழிபாடுகள் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளை வடக்கு,

ஸ்ரீ செல்வ விநாயகர் கோவில்
காயான்கேணி, மாங்கேணி

விசேட தினங்களில் பூசைகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளை வடக்கு.

ஸ்ரீ மாணிக்க விநாயகர் கோவில்
அரசினர் வைத்தியசாலை, மாணிக்கபுரம், வாகரை

வாராவாரம் வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெற்று வருகிறது. வைகாசி மாதத்தில் உற்சவம் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு.
கோறளை வடக்கு.

### ஶ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோவில்
### பிரதான விதி, கதிரவெளி, வாழைச்சேனை.

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்தி — வைரவர். நித்திய பூசை உளது. ஆடி அமாவாசையன்று தீர்த்தம் இடம்பெறக் கூடியதாக மூன்று தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெறுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளை வடக்கு.

### மாணிக்கக்குளம் பிள்ளையார் கோவில்
### பால்ச்சேனை, கதிரைவெளி

வெள்ளிக்கிழமைகளிலும், விசேட தினங்களிலும் பூசைகள நடைபெற்று, வைகாசிப் பூரணையில் திருவிழாவும் சிறப்பாக இடம்பெறுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளை வட்க்கு.

### கற்பக விநாயகர் கோவில்
### கட்டுமுறிவு, வாகரை

ஐப்பசியிலும், விசேட தினங்களிலும் பூசை உண்டு.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளை வடக்கு.

### முத்துலிங்கப் பிள்ளையார் கோவில்
### கதிரைவெளி

பிரதி வெள்ளிக்கிழமையிலும் பூசை நடைபெறுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளை வடக்கு,

### பிள்ளையார் கோவில்
### இருவோடை

விசேட தினங்களில் பூசைகள் இடம்பெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளை வடக்கு.

### ஶ்ரீ சித்திவிநாயகர் கோவில்
### பால்ச்சேனை, கதிரைவெளி, வாழைச்சேனை

வாரந்தோறும் பூசை நடைபெறும். விசேட தினங்களில் விசேட பூசைவழிபாடுகள் இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளை வடக்கு.

பிள்ளையார் கோவில்
வட்டவான், காயான்கேணி, மாங்கேணி

விசேட தினங்களில் விசேட பூசைகள், திருவிழாக்கள் உண்டு.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளை வடக்கு.

சித்திவிநாயகர் கோவில்
கற்பிட்டி, கதிரைவெளி

இங்கு வெள்ளிக்கிழமைகளிலும், விசேட தினங்களிலும் பூசைகள் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளை வடக்கு.

ஸ்ரீ முருகன் கோவில்
ஆலங்குளம், வாழைச்சேனை

வெள்ளிக்கிழமைகளிலும், விசேட தினங்களிலும் விசேட பூசைகள் உண்டு.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளை வடக்கு.

ஸ்ரீ முருகன் கோவில்
பனிச்சங்கேணி, வாகரை

மூலமூர்த்தி — வேல். பரிவார மூர்த்தி — பிள்ளையார். நித்திய பூசை நடைபெறுகிறது. ஆடி மாதத்தில் கதிர்காமத் திருவிழாவுடன் இங்கு திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளை வடக்கு.

ஸ்ரீ பாதாள வைரவர் சுவாமி கோவில்
அம்மந்தனாவெளி

வெள்ளிக்கிழமைகளிலும், ஆனி மாதத்திலும் விசேட பூசைகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு.
கோறளை வடக்கு.

ஸ்ரீ வீரபத்திர சுவாமி கோவில்
வட்டியவெளி, கதிரைவெளி

வைகாசியில் விசேட பூசை, வழிபாடுகள் மூன்று தினங்களுக்குச் சிறப்பாக நடைபெறுகின்றன. வருடாந்த உற்சவமும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளை வடக்கு.

### ஸ்ரீ பெரிய தெய்வ கோவில்
### பால்ச்சேனை, கதிரைவெளி

ஸ்ரீ மகாவிஷ்ணு மூலமூர்த்தியாக உள்ளார். இவரைக் கப்பல் தெய்வம் எனவும் அழைப்பர். ஆனி மாதத்தில் சிறப்பான விழாக்கள் உண்டு.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளை வடக்கு.

### ஸ்ரீ பத்திரகாளி கோவில்
### அம்மந்தனுவெளி, கதிரைவெளி

வருடாந்தத் திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளை வடக்கு.

### ஸ்ரீ பத்தினி அம்மன் கோவில்
### பிரதான வீதி, கதிரைவெளி, வாழைச்சேனை

திங்கட்கிழமைதோறும் பூசை நடைபெறும். இருபத்தொரு நாட்கள் கௌரியம்பாள் விரதம் அனுஷ்டிக்கப்பட்டுக் கடைசி நாள் தீர்த்தோற்சவத்துடன் விழா முடிவடையும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளை வடக்கு,

### நாகதம்பிரான் கோவில்
### கதிரைவெளி

பிரதி ஞாயிறுதோறும் பூசை உண்டு.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று — வாழைச்சேனை.

### கோராவெளி ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
### வாழைச்சேனை

கண்ணகை அம்மன் வழிபாட்டுக் காலந்தொட்டு மேற்படி கோவிலில் விநாயகருக்கும் கோவில் கட்டி வழிபட்டார்கள். தினமும் பூசை நடைபெறுகின்றது. வைகாசிப் பூரணையையொட்டி மூன்று நாட்களுக்கு உற்சவம் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று — வாழைச்சேனை.

### ஸ்ரீ கைலாயபிள்ளையார் கோவில்
### கற்குடா

ஆரம்பத்தில் களிமண்ணினால் கட்டப்பட்டிருந்த ஆலயம் 1906 இல் கற்கோயிலாகக் கட்டப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. நித்திய பூசை நடைபெறுகிறது. விநாயகர் விரத காலங்களிலும், திருவெம்பாவைக் காலங்களிலும் விசேட பூசைகள் உள்ளன. மூலவர் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட விக்கிரகமாகும். திருவாதவூரடிகள் பூராணப் படிப்பும் இங்கு உண்டு.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று — வாழைச்சேனை.

### ஸ்ரீ விநாயகர் கோவில்
### சுங்காங்கேணி, வாழைச்சேனை

1913 ஆம் ஆண்டுக்கு முற்பட்டது. விநாயகரை மூலமூர்த்தியாகக் கொண்ட இந்த ஆலயத்தில் வைரவர், அம்பாள், பரிவார மூர்த்திகளாக எழுந்தருளி உள்ளனர். நித்திய பூசை உண்டு. ஆனி உத்தரம், திருவாதிரை முதலிய விசேஷ தினங்களில் விசேட பூசைகள் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று — வாழைச்சேனை.

### ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
### பிரதான வீதி, கிரான்

1816 இல் இருந்து வரலாற்றுக் குறிப்புக்கள் உண்டு. மூலமூர்த்தி விக்கிநேஸ்வரர். பரிவார மூர்த்திகள் — வைரவர், சண்டேஸ்வரர். மூன்று காலப் பூசை. சித்திரைப் பூரணையில் அலங்காரத் திருவிழா நடைபெறுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று — வாழைச்சேனை.

### ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில்
### ஆனைசுட்டபொத்தானை, கிரான்

இது 100 வருடங்களுக்கு முந்திய ஆலயம். மூலமூர்த்தியாக மாணிக்கப் பிள்ளையார். பரிவார மூர்த்திகளாக அம்பாள், சண்டேசுவரர் ஆகியோர் எழுந்தருளியுள்ளனர். தினமும் மூன்று காலப் பூசை உளது. சித்திரைப் பூரணைத் திதியில் தீர்த்தம் நடைபெறக் கூடிய வகையில் 10 நாட்களுக்குத் திருவிசா நடைபெறும். சித்திர புத்திர நாயனார் கதை படிக்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று – வாழைச்சேனை.

ஓட்டமாவடி ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
வாழைச்சேனை

தொழில்புரிய வந்த சைவமக்களால் 1923 ஆம் ஆண்டு இந்த ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. பிரதி வெள்ளிக்கிழமைப் பூசையுடன் விசேட காலங்களில் விசேட பூசைகளும் உண்டு. ஆடி அமாவாசையின்போது வருடாந்த விசேட பூசை இடம்பெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வாழைச்சேனை.

ஆலகண்டிப் பிள்ளையார் கோவில்
மாவடிச்சேனை 5, வாழைச்சேனை

மூலமூர்த்தி – விநாயகர். 1945 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட கோவில். வெள்ளிக்கிழமைதோறும் பூசை நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வாழைச்சேனை.

கிணற்றடிப் பிள்ளையார் கோவில்
பள்ளத்துச் சேனை, கிரான்

மூலமூர்த்தி – விநாயகர். பரிவார மூர்த்திகள் – கண்ணகை அம்பாள், வீரபத்திரர், நாகதம்பிரான் ஆகியோர். 1960 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட இவ்வாலயத்தில் ஆனி மாதத்தில் வருடாந்த உற்சவமும், சித்திரை வருடப்பிறப்பு, கார்த்திகை தீபம் ஆகிய விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று – வாழைச்சேனை.

ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
காகிதஆலை, வாழைச்சேனை

1968 இல் கும்பாபிஷேகம் நடைபெற்ற போதிலும் அதற்குப் பல வருடங்களுக்கு முன்னர் ஆலமரத்தின் கீழ் விநாயகர் விக்கிரகத்தை வைத்து வணங்கிவந்துள்ளனர். மூலமூர்த்தி – சித்தி விநாயகர். தினமும் காலை, மாலைப் பூசை நடைபெறும். வெள்ளிக்கிழமைகளில் உச்சிக் காலப் பூசையும் நடைபெறும். ஆவணி மாதத்தில் 10 நாட்களுக்கு அலங்கார உற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது. இவ்வாலயத்துக்குக் காகித ஆலை நிர்வாகம் ஓர் ஏக்கர் நிலத்தைக் கொடுத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று — வாழைச்சேனை.

ஸ்ரீ சின்ன வெள்ளிப் பிள்ளையார் கோவில்
புலிபாய்ந்தகல், கிரான்

ஆலயம் 1948 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆடி மாதத்திற் திருவிழாவும், தீர்த்தமும் நடைபெறும். வெள்ளிக்கிழமைகளிலும், விசேட தினங்களிலும், விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வாழைச்சேனை.

காங்கேஸ்வரப் பிள்ளையார் கோவில்
குடும்பி மலை, கிரான்

1972 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம். ஆடி அமாவாசையன்று விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வாழைச்சேனை.

ஸ்ரீ விக்நேஸ்வரர் கோவில்
பெற்றோல் நிலையச் சந்தி, வாழைச்சேனை

1975 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி — விக்நேஸ்வரர். பரிவார மூர்த்திகள் — நாகதம்பிரான், வைரவர் ஆகியோர். வெள்ளிக்கிழமைதோறும் பூசை நடைபெற்று வருகிறது. சிவராத்திரி, திருவெம்பாவை, ஆவணிச் சதுர்த்தி, வாணி பூசை ஆகியவை சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று — வாழைச்சேனை.

பிள்ளையார் கோவில்
ஆற்றங்கரையோரம், முறக்கொட்டாஞ்சேனை

பழமை வாய்ந்த, பிரசித்தி பெற்ற ஒரு ஆலயம். விசேட காலங்களில் விசேட பூசை நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று — வாழைச்சேனை.

ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில்
கும்புறுமூலைவேம்பு, கிரான்

வெள்ளிக்கிழமைகளிலும் முக்கிய தினங்களிலும் பூசை நடைபெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று — வாழைச்சேனை.

### சாராவெளி ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
### சாராவெளி, கிணையடி, வாழைச்சேனை

வாரம் ஒருமுறை பூசை நடைபெறுகிறது. ஆலயத்தில் வைர வரும் உண்டு. விசேட காலங்களில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று — வாழைச்சேனை.

### வாகனேரிப் பிள்ளையார் கோவில்
### வாழைச்சேனை

வாராந்தம் பூசை நடைபெறுகிறது. ஆனி மாதத்தில் பத்து நாட்களுக்குத் திருவிழா நடைபெறும். வைரவர் பரிவாரத்தில் உள்ளார்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று — வாழைச்சேனை.

### ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில்
### கிண்ணையடி, வாழைச்சேனை

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்தியாக எழுந்தருளிப் பிள்ளையார். நித்திய பூசை உண்டு. சித்திரை மாதத்தில் வருடாந்த அலங்கார உற்சவம் நடைபெறுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று — வாழைச்சேனை.

### ஸ்ரீ வீரையடிப் பிள்ளையார் கோவில்
### பேத்தாளை, வாழைச்சேனை

தைப்பூசம், சிவராத்திரி, சித்திரா பௌர்ணமி போன்ற தினங் தினங்களில் விசேட பூசை உளது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று — வாழைச்சேனை.

### ஸ்ரீ விநாயகர் கோவில்
### பூலாக்காடு, கிரான்

விளினையடி விக்கினேஸ்வரர் ஆலயம் என்றும் இதை அழைப்பதுண்டு. இங்கு விசேட தினங்களில் விசேட பூசைகள் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று - வாழைச்சேனை.

ஸ்ரீ கணேசர் கோவில்
நாசிவன்தீவு, வாழைச்சேனை

வெள்ளிக்கிழமைகளிலும் விசேட நாட்களிலும் பூசை நடைபெறும்

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று - வாழைச்சேனை.

நாவலடிப் பிள்ளையார் கோவில்
கல்மடு, கல்குடா

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும பூசை நடைபெறும். மகா சிவராத்திரி தினத்தில் திருவிழா உண்டு.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று - வாழைச்சேனை.

ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில்
வாழைச்சேனை வீதி, கல்குடா

மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — நாகதம்பிரான், வைரவர், அம்பாள் ஆவர். நித்திய பூசைகள் நடைபெறுகின்றன. கார்த்திகை மாதத்தில் வருடாந்த உற்சவம் உளது. மூன்று நாட் திருவிழா. விசேட காலங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று - வாழைச்சேனை.

புதுப்பிள்ளையார் கோவில்
சந்திவெளி, வாழைச்சேனை

மூலமூர்த்தியாகப் பிள்ளையாரும், பரிவார மூர்த்திகளாக வைரவர், நடேசர், சுப்பிரமணியர் ஆகியோரும் எழுந்தருளியுள்ளனர். இருகாலப் பூசை உண்டு. வைகாசி மாதத்திற் கொடியேறித் திருவிழா நடைபெற்றுத் தேர், தீர்த்தத்துடன் முடிவுறுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று - வாழைச்சேனை.

பிள்ளையார் கோவில்
வில்கமம், கிரான்

தினமும் மூன்றுகாலப் பூசை. ஆடி மாத பிரதமையில் திருவிழா ஆரம்பமாகிப் பௌர்ணமியில் முடிவுறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று - வாழைச்சேனை.

### ஸ்ரீ விநாயகர் கோவில்
### கறுவாக்கேணி, வாழைச்சேனை

தினமும் மூன்று காலப்பூசை. வருடாவருடம் ஆடி மாதப் பிரதமையில் திருவிழா ஆரம்பமாகிப் பௌர்ணமியில் முடிவடையும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று - வாழைச்சேனை.

### ஸ்ரீ மகாவிஷ்ணு கோவில்
### கிரான்

தினமும் மூன்று காலப் பூசை. புரட்டாதிப் பூரணையில் சமுத்திர தீர்த்தம் இடம்பெறும் வகையில் மகோற்சவம் 15 நாட்களுக்கு நடைபெறுகிறது. கஞ்சன் கதைப் படிப்பு, விழாக் காலங்களில் இடம்பெறும். அகத்திய முனிவர் குருபூசையும் நடைபெறுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று - வாழைச்சேனை.

### ஸ்ரீ விஷ்ணு கோவில்
### திகிலவட்டை, சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை

மூலமூர்த்தியாக ஸ்ரீ ருக்மணி, சத்தபாமா சமேத ஸ்ரீ மகா விஷ்ணுவும், பரிவார மூர்த்திகளாக விநாயகர், முருகன், வைரவரும் எழுந்தருளியுள்ளனர். நித்திய பூசை உண்டு. ஆனி உத்தரத்தையொட்டி ஏழு நாட்களுக்குத் திருவிழா நடைபெற்றுத் தீர்த்தத்துடன் முடிவடைகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று - வாழைச்சேனை.

### ஸ்ரீ மகாவிஷ்ணு கோவில்
### கிண்ணையடி, வாழைச்சேனை

நித்திய பூசை நடைபெறும். இந்த ஆலயத்திற் புரட்டாதியில் ஆறுநாட் திருவிழா நடைபெற்றுப் பூரணையன்று தீர்த்தம் இடம் இடம்பெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று - வாழைச்சேனை.

### கானந்தனை அம்மன் கோவில்
### பேரில்லாவெளி, கிரான்

வைகாசியில் வருடாந்தக் குளிர்த்தி நடைபெறும். விசேட தினங்களில் பூசைகள் சிறப்பாக நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று — வாழைச்சேனை.

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
முறக்கொட்டாஞ்சேனை

இக்கோயில் 350 வருடம் பழமையானது. வாராந்தம் பூசை உளது. ஆனி முதலாம் பிறையில் விசேட உற்சவம் ஆரம்பமாகி 14 தினங்கள் நடைபெற்றுத் தீக்குளிப்புடன் முடிவடையும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று — வாழைச்சேனை.

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
புகையிரதப் பாதை வீதி, வாகனேரி, வாழைச்சேனை.

மூலமூர்த்தி — அம்பாள். பரிவார மூர்த்திகள் — வைரவர், நாக தம்பிரான். வைகாசி மாதக் கடைசி மூன்று தினங்களிலும் திரு விழா நடைபெறுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று — வாழைச்சேனை.

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
பாசிக்குடா வீதி, கற்குடா

ஆலயம் முன்னோரினால் ஸ்தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி — மாரியம்பாள். பரிவார மூர்த்திகள் பிள்ளையார், வைரவர், நாகதம்பிரான், காத்தவராயர். வெள்ளிதோறும் பூசை. ஆனி மாதத்தில் ஐந்து நாள் உற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று — வாழைச்சேனை.

மாவடி மாரியம்மன் கோவில்
பேத்தாழை, வாழைச்சேனை

வெள்ளிக்கிழமைதோறும் பூசை. ஒன்பது நாட்களுக்குத் திரு விழா நடைபெற்று ஆனிப் பூரணையில் தீர்த்தத்துடன் சிறப்புறத் திருவிழா முடிவுறுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று — வாழைச்சேனை.

ஸ்ரீ மாரியம்மன் கோவில்
பெரியவேரம், கிரான்

வருடாவருடம் வைகாசி மாதத்திற் பந்தல் அமைத்து மூன்று நாட் திருவிழா நடைபெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று — வாழைச்சேனை.

ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவில்
கல்குடா, வாழைச்சேனை

வருடாந்தம் ஏழு நாட்களுக்குப் பூசை நடைபெற்று, வைகாசி மாதத்திற் குளிர்த்தி நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று — வாழைச்சேனை.

ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவில்
கோராவெளி, முறக்கொட்டாஞ்சேனை

கண்ணகி அம்மனுக்கு கோவில் எடுத்த காலம் தொடக்கம் இங்கு வழிபாடு நடைபெற்று வருகிறது. வைகாசிப் பூரணைத் திதியில் அம்மனுக்குப் பொங்கல், குளிர்த்தி நடைபெறும். பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பொங்கற் பானைகள் குளிர்த்தியில் இடம் பெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று — வாழைச்சேனை.

கண்ணகி அம்மன் கோவில்
பிரதான வீதி, சந்திவெளி, சித்தாண்டி

வெள்ளிதோறும் பூசை. ஆடி மாதத்தில் 15 நாட்களுக்கு விழா எடுத்துப் பௌர்ணமியில் முடிவடைகின்றது.

மாவட்டம்;- மட்டக்களப்பு,
வாழைச்சேனை.

கண்ணகை அம்பாள் கோவில்
மாயவட்டை வடக்கு, குடும்பி மலை, கிரான்

மூலமூர்த்தி — அம்பாள். பரிவார மூர்த்தி — வேல். வைகாசி மாதம் உட்பட வருடத்திற்கு மூன்று முறை உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
கோறளைப்பற்று — வாழைச்சேனை.

ஸ்ரீ நாகதம்பிரான் கோவில்
கருங்காலிச்சோலை, பேத்தாழை, வாழைச்சேனை

வாரத்தில் ஒருநாட் பூசையும், ஆனி மாத அமாவாசை தொடக்கம் பௌர்ணமி வரை வருடாந்த அலங்காரத் திருவிழாவும் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
வாழைச்சேனை.

### ஸ்ரீ நாகதம்பிரான் கோவில்
### 7 ஆம் வட்டாரம், வாழைச்சேனை

வாரந்தப் பூசையுடன் ஆனி உத்தரத்தில் வருடாந்த உற்சவமும் நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### சிவன் கோவில்
### ஆரையம்பதி 2, காத்தான்குடி

நடேசர் மூலமூர்த்தியாக உள்ளார். பரிவார மூர்த்திகளாக அம்மன், விநாயகர், முருகன் ஆகியோர் உள்ளனர். ஆனி உத்தரம், திருவெம்பாவைத் திருவிழாக்கள் ஆகியன சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### சீரடி சாயிபாவா கோவில்
### எதிர்மன்னசிங்கம் வீதி, அமிர்தகழி

மூலமூர்த்தி — சிவலிங்கம். பரிவார மூர்த்திகள் — துர்க்கை, கிருஷ்ணர். தினமும் ஆறுகாலப் பூசைகள் இடம்பெறுகின்றன. வருடாந்த உற்சவமும், நவராத்திரி நாட்களில் விசேட வழிபாடுகளும் நசைபெற்று வருகின்றன. தைப்பூசம், மகாசிவராத்திரி ஆகியன விசேட பூசைத் தினங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

## மாமாங்கப் பிள்ளையார் கோவில்
## மாமாங்கேஸ்வரம், மட்டக்களப்பு

கிழக்கிலங்கையில் மூர்த்தி, தலம், தீர்த்தம், ஆகிய மூன்றும் ஒருங்கமைந்த தலம் மாமாங்கேஸ்வரமாகும். மூலஸ்தானத்தில் சிவலிங்கம் உள்ளது. எனினும் பெரும்பாலும், விநாயகர் அங்கியுடனே சிவலிங்கம் காட்சியளிப்பதால் மாமாங்கப் பிள்ளையார் என்று பக்தர்களினால் அன்பாக மூலமூர்த்தி அழைக்கப்படுகிறார்.

இத்தலத்திலுள்ள சிவலிங்கம் ஸ்ரீ இராமபிரானால் ஆக்கப்பட்டுப் பூசிக்கப்பட்டதென ஐதீகம் உள்ளது.

வருடாந்த உற்சவம் ஒன்பது தினங்கள் நடைபெற்று தீர்த்தத்துடன் முடிவடைகிறது. ஆடி அமாவாசைத் தினத்தன்று வருடாந்த தீர்த்தோற்சவம் நடைபெறும். தீர்த்தோற்சவத்தன்று சிவன், சக்தி, பிள்ளையார், ஆகிய மூன்று மூர்த்திகளும் எழுந்தருளிக் காட்சி கொடுப்பர். சிவனுக்கும், பிள்ளையார்க்கும் ஒன்றாகப் பூசை நடைபெற்று வருகிறது. இவற்றைத்தவிர விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

விநாயக சஷ்டி காலத்தில் கஜமுகாசுரன் போர் விழா மிகக் கோலாகலமாக இடம்பெறுகின்றது. 1880 ஆம் ஆண்டில் இங்கு முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. அக்காலம் முதல் கொடியேற்றத்தையடுத்து ஐந்து திருவிழாக்கள் நடைபெறறு தீர்த்தோற்சவம் இடம் பெற்றுள்ளது. தற்பொழுது திருவிழா முறையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

மாமாங்கேஸ்வரத்தின் மீது வித்துவான் சரவணமுத்து அவர்கள் பதிகம் பாடியுள்ளார். பண்டிதர் செ. பூபாலபிள்ளை, புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை, மண்டூர் பூ. சின்னையா ஆகியோர் மாமாங்கேஸ்வரருக்குப் பாமாலை சூட்டியுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

## ஆனைப்பந்திப் பிள்ளையார் கோவில்
## புளியந்தீவு, மட்டக்களப்பு

கிழக்கிலங்கையின் மட்டக்களப்புத் திருநகரில் ஆனைப்பந்திப் பதியில் எழுந்தருளியுள்ளவர் ஆனைப்பந்திப் பிள்ளையார். புலியன் என்ற வேடர் குலத் தலைவன் அரசு புரிந்த இடமாகையால் முன்னுளில் இவ்விடம் ''புலியந்தீவு'' என அழைக்கப்பட்டு, பின்னுளில் ''புளியந்தீவு'' எனப் பெயரைக்கொண்டது. இவ்வாலயத்தில் மூலமூர்த்தியாகப் பிள்ளையார். எழுந்தருளியுள்ளார். இங்கு சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமானும், தேவியர் சமேத சுப்பிரமணியரும், பழனியாண்டவரும், மனோன்மணி அம்பாளும், வைரவர், சஸ்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகளும், பரிவார மூர்த்திகளாக எழுந்தருளியுள்ளனர். அத்தோடு சிவலிங்கம், பார்வதி அம்பாள் ஆகிய மூர்த்திகளுக்கும் தனித்தனிக் கோவில்கள் இங்குள்ளன.

இக்கோவிலில் தினமும் மூன்று காலப் பூசைகள் நடைபெறுகின்றன. வெள்ளிக் கிழமைகளில் நடைபெறும் பூசை மிகச் சிறப்பானது. மாத உற்சவமாக விநாயகப் பெருமானின் சதுர்த்தி உற்சவமும், முருகப் பெருமானின் கார்த்திகை உற்சவமும் அம்பாளின் பௌர்ணமிக்கான விசேட அலங்காரப் பூசையும் நடைபெற்று வருகின்றன. சித்திரா பௌர்ணமிக்குத் தீர்த்தோற்சவம் வரக் கூடியதாக முதல் பத்து தினங்களுக்கும் உற்சவம் நடைபெற்று அமிர்தகளி மாமாங்கேஸ்வரர் ஆலயத் திருக்குளத்தில் தீர்த்தோற்சவத்துடன் வருடாந்த மகோற்சவம் முடிவடையும்.

இம் மகோற்சவத்தில் வேட்டைத்திருவிழாவின்போது சுவாமி, திரௌபதை அம்மன் கோவிலுக்கு எழுந்தருளி வேட்டையாடி தமது கோவிலுக்குத் திரும்புவார். ஆனி உத்தரத்தன்றும், மார்கழித் திருவாதிரையன்றும் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கான அபிஷேகமும், ஆவணி ஓணத்தன்று பிள்ளையாருக்கும், மனோன்மணி அம்பாளுக்கும் மணவாளக்கோல விழாவும் அதி சிறப்பாக நடைபெறுகின்றன. புரட்டாதிச் சனிக்கிழமைகளில் விசேட பூசைகளும், நடைபெறுகின்றன. கார்த்திகை சோமவாரத்தில் விசேட அபிஷேக வழிபாடுகளும், சிறப்பாக நடைபெறுகின்றன. கேதார கௌரி விரதமும், விநாயகசஷ்டி விரதமும் இங்கு சிறப்பாக இடம் பெறுகின்றன.

இங்கு, பிள்ளையார் பெருங்கதை, கந்தபுராணம், திருவாதவூர் அடிகள் புராணம் ஆகியன படித்துப் பயன் சொல்லப்பட்டு வருகின்றன. இவ்வாலயத்தின் மீது வித்துவான் பூபாலபிள்ளை, பண்டிதர், வி.சி. கந்தையா, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகியோர் பதிகம் பாடியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ கணேசர் கோவில்
### நாவற்குடா, நொச்சிமுனை, காத்தான்குடி

இது 1770 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம் என்றும், கிணறு வெட்டியபோது கண்டெடுக்கப்பட்ட விநாயகர் ஆலயத்தில் மூலமூர்த்தியாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகவும், வரலாறு உள்ளது. 1957 ஆம் ஆண்டு பழைய ஆலயத்திற்குப் பதிலாகப் புதிதாக ஒன்று அமைக்கப்பட்டு 1967 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. வெள்ளிக்கிழமை தோறும் மாலைப் பூசையும், தைப்பொங்கல், மாசிமகம், சித்திரா பௌர்ணமி, நவராத்திரி, கந்தசஷ்டி, கார்த்திகை விரதம், திருவாதிரை, திருவெம்பாவை போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ மண்முனைப் பிள்ளையார் கோவில்
### தாளங்குடா, 1 ஆம் வட்டாரம், காத்தான்குடி

குளக்கோட்டர் கல்வெட்டில் இடம் பெற்றிருக்கும் ஆலயம் இது. வாரத்துக்கு ஒருநாட் பூசை. கார்த்திகை விளக்கீட்டுத் திருவிழாவும், ஐப்பசிக் கந்தசஷ்டியும் விசேட உற்சவ தினங்கள்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
### கல்லடி, மட்டக்களப்பு

மூலமூர்த்தி — விநாயகர், தினமும் மூன்று காலப் பூசை. விநாயக சதுர்த்தியில் திருவிழா நடைபெறும். தைப்பூசம், மாசிமகம், சித்திரைச் சித்திரை, வைகாசி விசாகம், திருவெம்பாவை, நவராத்திரி, முதலிய விசேஷ காலங்களில் திருவிழாக்கள் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ மாவடிப் பிள்ளையார் கோவில்
### சின்ன ஊறணி, மட்டக்களப்பு

மூலமூர்த்தி — விக்நேஸ்வரர். சுமார் நூறு வருடங்களுக்கு முன் தாபிக்கப்பட்டது. தினமும் பூசையும், தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, ஆனி உத்தரம், மகா சிவராத்திரி போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடபகுதி.

### கள்ளமுனைப் பிள்ளையார் கோவில்
### புதுக்குடியிருப்பு, காத்தான்குடி

மூலமூர்த்தி — பிள்ளையார். இவ்வாலயத்தில் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றப் பூசைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ கணபதிப் பிள்ளையார் கோவில்
### கிரான்குளம், மட்டக்களப்பு

இந்த ஆலயம் விநாயகரை மூலமூர்த்தியாகக் கொண்டது. நித்திய பூசையும், விசேட தினங்களில் விசேட பூசைகளும் உண்டு.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோவில்
### கோட்டமுனை, மட்டக்களப்பு

மூலமூர்த்தியோடு தண்டாயுதபாணி, நாகதம்பிரான், வைரவர் ஆகிய பரிவார மூர்த்திகளும் இங்கு உளர். தினமும் மூன்று காலப் பூசை உளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடபகுதி.

### ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் கோவில்
### ஆரையம்பதி 2, காத்தான்குடி

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — வைரவர், நாகதம்பிரான், மகாவிஷ்ணு, முருகன் ஆகியோர். இது வில்வ மரத்தின்கீழ் உற்பத்தியான கோவில். காலப்போக்கில் இவ்வாலயம் கல்லினால் தாபிக்கப்பட்டது. 1907 ஆம் ஆண்டு மண்டபங்களும், மணித்தூண்களும் அமைக்கப்பட்டு, தூபிக் கோபுரக் கலசம் இந்தியாவிலிருந்து கொண்டுவந்து பிரதிஷ்டை செய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்தியாவில் தர்ம்புரத்தைச் சேர்ந்த சதோதய முனிவர் நீலகண்ட விநாயகர் மாலை, நீலகண்ட விநாயகர் பதிகம்; பிரணவ அட்டகம் முதலியவற்றைப் பாடியருளினார். இவ்வாலயத்தில் தினமும் பூசை நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ சிவலிங்கப் பிள்ளையார் கோவில்
### கோட்டமுனை, மட்டக்களப்பு

இங்கு தினமும் உச்சிக்காலப் பூசையும், வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசைகளும் உண்டு. மகாசிவராத்திரி யன்று விசேட பூசைகள் உண்டு.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ ஆலயடிப் பிள்ளையார் கோவில்
### கல்லடி, முகத்துவாரம்

இங்கு வாரந்தோறும் பூசைகள் உண்டு. மகாசிவராத்திரி, விநாயக சதுர்த்தி மிக விசேடமானவை.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு,

### ஸ்ரீ அரசடிப் பிள்ளையார் கோவில்
### கல்லடி, முகத்துவாரம்

பிள்ளையார்—மூலமூர்த்தி. வைரவர், நாகதம்பிரான் ஆகிய மூர்த்திகளும் உளர். ஆவணிச் சதுர்த்தி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. விநாயக சஷ்டி தினத்தன்று விசேட பூசைகள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு,

### பிள்ளையார் கோவில்
### பிரதான வீதி, புதுக்குடியிருப்பு

நித்தியபூசை நடைபெறும் இந்த ஆலயத்தில், கார்த்திகைத் திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
### மாவிலங்கத்துறை, காத்தான்குடி

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்தி — வைரவர். சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் தாபிக்கப்பட்ட இவ்வாலயத்தில் 1980 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் நடந்தேறியது. தினமும் பூசையும், ஆவணிச் சதுர்த்தியன்று வருடாந்த உற்சவமும், விநாயகர் விரதம், புதுவருடப்பிறப்பு, திருவெம்பாவை போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### அரசையடிப் பிள்ளையார் கோவில்
### மோர்ச்சாப்பிட்டி, மட்டக்களப்பு

வாரத்தில் வெள்ளிக்கிழமைகளில் மாலைப் பூசை உண்டு.

மாவட்டம்:- மட்டக்களப்பு.
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
### புதுநகர், மட்டக்களப்பு

மூலவர் — விநாயகர். முருகன், நாகதம்பிரான், வைரவர் ஆகிய மூர்த்திகளும் உளர். வெள்ளிக்கிழமைகளிலும் விசேட தினங்களிலும் பூசைகள் உண்டு. சித்திரை உற்சவ விழா சிறப்பாக நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ முத்துக்குமாரவேலாயுதசுவாமி கோவில்
### திருப்பெருந்துறை

மூலமூர்த்தி — வேல். பரிவாரத்திலே மாணிக்க விநாயகர், நாக தம்பிரான், தண்டாயுதபாணி, வள்ளியம்மன், தெய்வயானை, வைரவர் ஆகிய மூர்த்திகள் உளர். 1871 இல் இவ்வாலயம் அமைக்கப்பட்டது. 1972 இல் புதுப்பிக்கப்பட்டது. வெள்ளிக்கிழமைகளில் பூசைகள் உண்டு. விசேட தினங்களில் விசேட பூசைகளும் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு

### ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி கோவில்
### வாவிக்கரை வீதி, மட்டக்களப்பு

மூலமூர்த்தி — சித்திரவேலாயுதர். சுமார் எண்பது வருடங்களுக்கு முற்பட்ட கோவிலெனக் கருதப்படுகின்றது. வாரம்தோறும் பூசையும், கதிர்காமத் தீர்த்தத்தோடு வருடாந்த உற்சவமும், கார்த்திகைத் திருவிழா, திருவெம்பாவை போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு

### ஸ்ரீ வேலாயுதசுவாமி கோவில்
### கல்லடி, மட்டக்களப்பு

மூலமூர்த்தி — வேல். பரிவாரமூர்த்தி — வைரவர். தினமும் பூசையும், வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெற்றுவருகின்றன. வைகாசிப் பூரணையில் உற்சவம் முடிவடையக் கூடியவாறு ஏழு தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெற்று எட்டாம் நாள் சமுத்திர தீர்த்தமும், கந்தசஷ்டி, திருக்கார்த்திகை போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு.
மண்முனே வடக்கு.

ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோவில்
மாந்தீவு தொழுநோய் வைத்தியசாலே, மட்டக்களப்பு

மூலவர் — வேல். வாராந்தப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. கதிர்காமத் தீர்த்தத்துக்கு முதல் மூன்று தினங்களுக்கு முன் திருவிழா ஆரம்பித்து மூன்றும் நாள் தீர்த்தத் திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. இவ்வாலயம் மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ் கிருஷ்ணமிஷன் உதவியுடன் சிறப்பாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனே வடக்கு.

ஸ்ரீ முருகன் கோவில்
மறியற்சாலே, மட்டக்களப்பு

மூலமூர்த்தி — முருகன். விசேட தினங்களில் விசேட பூசைவழிபாடுகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனே வடக்கு.

ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி கோவில்
ஆரையம்பதி 3, காத்தான்குடி

மூலமூர்த்தி — வேல். பரிவார மூர்த்திகள் — வைரவர், நவக்கிரகம், விஷ்ணு ஆகியோர். இவ்வாலயம் முப்பது வருடங்கள் பழமை வாய்ந்தது. நவராத்திரி, சிவராத்திரி, தைப்பொங்கல், தைப்பூசம், வருடாந்தத் திருவிழா ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனே வடக்கு.

ஸ்ரீ வேலாயுத சுவாமி கோவில்
அகத்தியாவட்டை, கல்லடி, மட்டக்களப்பு

வரலாற்றுக் குறிப்புகளுடன் சாசனக் கல்வெட்டுக்கள் உள்ளன. மூலமூர்த்தி — வேல். பரிவாரமூர்த்தி — வைரவர். தினமும் ஒருகாலப்பூசை நடைபெறுகிறது. வெள்ளிக்கிழமைதோறும் கூட்டுப் பிரார்த்தனே நடைபெறும். வைகாசிப் பூரணேயை அடுத்து ஏழு நாள் திருவிழா நடைபெற்றுப் பூரணே அன்று சமுத்திரத் தீர்த்தம் நடைபெறும். ஆலயத்திற்கான தோத்திரப்பாடல், கும்மிப் பாடல் போன்றவை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ முருகன் பழனியாண்டி கோவில்
### அரசினர் பொது வைத்தியசாலை, மட்டக்களப்பு

தினமும் மாலையில் பூசை உண்டு. ஆனி மாதம் எட்டுத் தினங்களுக்கு உற்சவங்கள் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ சக்தி வடிவேல் கோவில்
### புதுமுகத்துவாரம், மட்டக்களப்பு

வெள்ளிதோறும் பூசை. ஆவணிப் பூரணையோடு மூன்று தினங்களுக்கு வருடாந்தத் திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடபகுதி.

### ஸ்ரீ மகா நரசிங்க வைரவர் கோவில்
### எல்லை வீதி, மட்டக்களப்பு

மூலமூர்த்தி — ஸ்ரீ மகா நரசிங்க வைரவர். பரிவார மூர்த்திகள் — மாரியம்மன், விநாயகர், நாகதம்பிரான் ஆகியோர். 1846 ஆம் ஆண்டு வன்னி நாட்டிலிருந்து நரசிங்கமூர்த்தியைக் கொண்டு வந்து மட்டக்களப்பு நகரின் மேற்குப் பகுதியில் விடத்தல் முனையில் சிறிய மேடை அமைத்து எழுந்தருளச் செய்து வழிபட்டதாக வரலாறு உளது. இங்கு வழிபடமுடியாத நிலை ஏற்பட்டபோது மட்டக்களப்பின் வடகிழக்கை அடைந்து அங்குள்ள கூழா மரத்தடியில் விக்கிரகத்தை வைத்து வழிபட்டு வந்ததாகவும் வரலாறு கூறுகிறது. பின்னர் இந்தத் தேத்தா மரத்தடியில் 1868 ஆம் ஆண்டு கோவில் அமைக்கப்பட்டதாகவும், தற்போது ஆனி உத்தரத்தில் வருடாந்த உற்சவமும், தைப்பொங்கல், சிவராத்திரி, கார்த்திகைத் தீபம் போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடபகுதி,

### ஆதி வைரவர் கோவில்
### ஆரையம்பதி 2, காத்தான்குடி

இது ஆலமரத்தடியில் உற்பத்தியான ஆலயம். 1907 ஆம் ஆண்டுக்கு முன்னர் தாபிக்கப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. ஆலயம் பத்து வருடங்களுக்கு முன்னர் கல்லினால் கட்டப்பட்டது. வெள்ளிக்கிழமைதோறும் பூசை நடைபெறுகிறது. ஆடி அமாவாசைத் தினத்தன்று வருடாந்த உற்சவம் நடைபெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ சுடலை வைரவர் கோவில்
### கிரான்குளம், குருக்கள்மடம், மட்டக்களப்பு

மூலமூர்த்தி — திரிசூலம். பரிவார மூர்த்திகள் — வைரவர், காளி. மகாசிவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ கிருஷ்ண சுவாமி கோவில்
### கல்லடி, மட்டக்களப்பு

வைகாசி மாத அமாவாசையை அடுத்துவரும் மிருகசீரிட நட்சத்திரத்தன்று கோவிற் கதவு திறக்கப்பட்டு அன்றிலிருந்து பத்துத் தினங்களுக்கு பகலும் இரவும் விழா நடைபெற்றுக் கடைசித்தின இரவில் திருக்கல்யாணக்கால் சடங்கு வைபவமும், பின்னர் திருமாங்கல்யதாரண விழாவும் நடைபெற்று வருகிறது. கதவுபூட்டுதல் விழாவும் பழமைக்கமைய நடைபெறுகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோவில்
### பெரியஊறணி, மட்டக்களப்பு

இது நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆலயம். பிள்ளையார், எழுந்தருளி அம்மன் — பரிவார மூர்த்திகள். ஆடி மாதத்தில் உற்சவம் நடைபெறுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ மகா காளியம்பாள் கோவில்
### புன்னைச்சோலை, அமிர்தகழி

மூலமூர்த்தி — காளியம்பாள். பரிவார மூர்த்திகள் — பத்தினி அம்பாள், பிள்ளையார், நாகதம்பிரான் ஆகியோர். இவ்வாலயம் மிகப் பழமையானதாகக் கருதப்படுகின்றது. ஆனி மாதத்தில் வருடாந்த உற்சவமும் தைப்பொங்கல், சிவராத்திரி போன்ற தினங்களில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவில்
### குறிஞ்சாமுனை, கன்னன்குடா, மட்டக்களப்பு

இது சுமார் பதினைந்து வருடங்களுக்கு முற்பட்ட கோவில். மூலமூர்த்தி பத்திரகாளியம்பாள். தினமும் மூன்று காலப் பூசைகள் நடைபெறுகின்றன. சித்திரை மாதத்தில் வருடாந்த உற்சவம் நடைபெற்றுவருகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடபகுதி.

### ஸ்ரீ கொத்துக்குளத்து முத்துமாரியம்மன் கோவில்
### கொத்துக்குளம், மட்டக்களப்பு

மூலமூர்த்தி – முத்துமாரியம்பாள். பரிவார மூர்த்திகள் – விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோர். முற்காலத்தில் கொத்துக்குளத்தில் வழிப்பிள்ளையார் என்று அழைக்கப்பட்ட தலம் ஒன்று இருந்ததாகவும், பின்னர் அந்த இடத்தில் முத்துமாரியம்மனுடைய விக்கிரகத்தை வைத்து வழிபட்டதாகவும் கருதப்படுகிறது. ஆலயம் 1973 ஆம் ஆண்டிற் புனருத்தாரணம் செய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. தினமும் மூன்று காலப் பூசையுடன், ஆனிப் பூரணையில் வருடாந்த உற்சவமும், ஆடிப்பூரம், நவராத்திரி, கௌரி விரதம், கந்தசஷ்டி, பெருங்கதை, தைப்பொங்கல், தைப்பூசம், மாசி மகம் போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

கோட்டைமுனை ஸ்ரீ முத்துமாரியம்பாள் கோவில்
பொற்தொழிலாளர் வீதி, கோட்டைமுனை, மட்டக்களப்பு.

நூறு வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் கோட்டைமுனைப் பகுதி புன்னை மரங்கள் நிறைந்த காடாகவிருந்ததாகவும், அங்கு ஒருநாள் சிறுமியர் இருவர் விறகு சேகரிப்பதற்குச் சென்றபோது ஆபரணதிகளுடன் அழகாக நின்ற இளம்பெண் ஒருத்தியைக் கண்டதாகவும் பின்னர் உருவம் மறைந்ததைப் பார்த்து ஆச்சரியமடைந்து மற்றவர்களுக்கு விபரம் கூறியதாகவும், அதிலிருந்து இக்கோவில் உருவாகியதாகவும் கூறப்பட்டு வருகிறது. 1970 ஆம் ஆண்டு ஆலய புனருத்தாரண வேலைகள் முடிவடைந்தன. தென்னிந்தியாவிலுள்ள காஞ்சிபுரத்திலிருந்து 1870 ஆம் ஆண்டளவில் பாய்க்கப்பல் ஒன்றில் மட்டக்களப்புக்குக் கொண்டுவரப்பட்ட காமாட்சி வடிவத்தில் அமைந்த மகாமாரியம்பாள் விக்கிரகம் இங்கு பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. பரிவார மூர்த்திகள் — நடேசர், விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், ஆகியோர் தினமும் மூன்று காலப் பூசை நடைபெறுகிறது. நவராத்திரி, திருக்கார்த்திகை, திருவாதிரைத் தீர்த்தம், ஆடிப்பூரம், தைப்பூசம், ஆகியவை இங்கு விசேட தினங்களாகும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடபகுதி.

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
ஆரையம்பதி 2, செங்குந்தர் வீதி, காத்தான்குடி

மூலமூர்த்தி — முத்துமாரியம்மாள். பரிவார மூர்த்திகள் — வைரவர், வீரபத்திரர், பேச்சியம்மன் ஆகியோர். ஆலயம் பற்றிய ஓலைச்சுவடிகள் உள. இங்கு வாராந்தப் பூசையுடன், கும்பம் வைத்தல், அம்மன்தேர், கப்பல் திருவிழா, குளிர்த்தி போன்றவைகளும், விசேடமாக மாரியம்மன் பெருமையைச் சித்திரிக்கும் விழாக்களும் பலவருடகாலமாக நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு,

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
கிரான்குளம், குருக்கள்மடம்

இக்கோவில் மட்டக்களப்பிலிருந்து 16 மைல் தூரத்தில் உள்ளது. ஏழு தினங்களுக்குப் பூசை நடைபெற்றுக் குளிர்த்தியுடன் ஆனி மாதப் பூரணையில் வருடாந்த உற்சவம் முடிவுறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு,

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### கல்லடி முகத்துவாரம், மட்டக்களப்பு

மூலமூர்த்தி – மாரியம்மன். பரிவார மூர்த்திகள் – வீரபத்திரர், வைரவர், நாகதம்பிரான், பேச்சியம்மன் ஆகியோர். ஆனிப் பூரணைக்குமுன் 7 நாட்கள் சடங்கும் பூரணையன்று குளிர்த்தி யாடலும், கும்பம் சொரிதலும் நடைபெறும். நாகதம்பிரான் பொங்கல், வைரவர் பூசை, தைப்பொங்கல் போன்றவைகள் சிறப் பாக நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ மாரியம்பாள் கோவில்
### கதிர்காமர் வீதி, அமிர்தகழி

மூலமூர்த்தி – மாரியம்பாள். பரிவார மூர்த்திகள் – சிவலிங்கம், வைரவர், வீரபத்திரர், ஐயனார், காத்தவராயர், நாகதம்பிரான், அனுமார் ஆகியோர். ஸ்ரீ மாரியம்பாளுக்கு ஆகம முறைப்படி பூசையும் ஆனிப் பௌர்ணமியில் வருடாந்த உற்சவமும், இறுதித் தினத்தில் கும்பம் சொரிந்து சமுத்திர தீர்த்தமும் நடைபெறும். தைப்பொங்கல், மகாசிவராத்திரி, கார்த்திகைத் தீபம் போன்ற விசேட காலங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ மாரியம்மன் கோவில்
### நாவற்குடா, காத்தான்குடி

இது 1934 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட கோவில். வருடத் திற்கு ஒருமுறை கதவு திறந்து உற்சவம் நடைபெறுகிறது. அன் றைய தினம் அமுது வழங்கலும், குளிர்த்தியும், பள்ளயமும், சமுத் திர நீராடலும் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### வம்மிக்கேணி, ஆரையம்பதி 2, காத்தான்குடி

மூலமூர்த்தி – மாரியம்பாள். பரிவார மூர்த்திகள் வீரபத்திரர், வைரவர். வருடமொருமுறை ஆனி மாதப் பூரணைக்கு முடிவடையு மாறு ஐந்து நாட் பூசை நடைபெற்று வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவில்
சத்துருக்கொண்டான், மட்டக்களப்பு

இது 100 வருடங்களுக்கு முற்பட்ட கோவில். மூலமூர்த்தி — கண்ணகை அம்மன். ஆலயத்துடன் பிள்ளையார் கோவில், நாக தம்பிரான் கோவில் ஆகினயவும் உண்டு. பிள்ளையார் கோவிலில் நித்தியபூசை, வருடாந்த உற்சவம் உண்டு. கண்ணகை அம்மன், நாகதம்பிரான் கோவில்களில் வருடாந்த உற்சவங்கள் வைகாசியில் நடைபெறும். மாணவர்களுக்கு இங்கு சமயபாடம் கற்பிக்கப் பட்டு வருகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு

ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவில்
புன்னைச்சோலை, அமிர்தகழி, மட்டக்களப்பு

மூலமூர்த்தி — கண்ணகை அம்பாள். பரிவார மூர்த்திகள் — வைரவர், வீரபத்திரர், ஐயனார், அநுமார், நாகதம்பிரான் ஆகியோர். 1871 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட இவ்வாலயத்திற்குப் பதிவேடுகளும் உள. வைகாசிப் பௌர்ணமிக்கு முன் ஐந்து தினங்களுக்கு உற்சவம் நடைபெற்று பொற்காவியப் பாடலுடன் உற்சவம் முடிவடைகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

கண்ணகை அம்மன் கோவில்
பிரதான விதி, புதுக்குடியிருப்பு

கண்ணகை அம்மனுக்கு வைகாசிப் பூரணைத் திருக்குளிர்த்தியுடன் முதல் ஐந்து தினங்களுக்கும் சடங்கு நடைபெறுகிறது. வருடாந்தப் பொங்கல் தைப்பூசத்தில் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு,

### ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவில்
### விடத்தல்முனை, புளியந்தீவு

மாதந்தோறும் பௌர்ணமி தினத்தன்று பொங்கல் பூசை நடைபெற்று வருகிறது. வைகாசிப் பௌர்ணமிக்குப் பத்துநாள் முன்னர் திருவிழா ஆரம்பமாகிக் குளிர்த்தியுடன் விழா பூர்த்தியாகின்றது. வீரபத்திரர், நரசிம்மம், காளி, நாகதம்பிரான் ஆகிய மூர்த்திகளும் உளர்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவில்
### தாளங்குடா, காத்தான்குடி

இந்தியாவில் கண்ணகி வழிபாடு ஆரம்பிக்கப்பட்ட காலத்துக் கோவில் இது. பழமை வாய்ந்த கட்டுப்பாடுகளுக்கமைய இன்றும் பூசைகள் நடைபெற்று வருகின்றன. பரிவார மூர்த்திகள் நாகதம்பிரான், வைரவர். வருடாவருடம் வைகாசித் திங்களுக்கு 7 நாட்களுக்கு முன் திருவிழா ஆரம்பமாகிக் குளிர்த்தியுடன் முடிவடையும். உற்சவ காலங்களில் இரு காலப் பூசை நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

### ஸ்ரீ பெரியதம்பிரான் கோவில்
### வெயிலிவீதி, அரசடி, மட்டக்களப்பு

ஆலயம் முதலாம் கஜபாகு அரசன் காலத்தையது என்பது வரலாறு. தக்கன் யாகம் செய்த வரலாற்றுடன் சம்பந்தப்பட்டது. ஆலயத்துக்கென இருந்துவரும் காவியத்தில் முதலாம் கஜபாகுவின் சோழநாட்டுப் படையெடுப்புப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. பழைய ஏட்டுப்பிரதிகளும், காவியங்களும், கற்சிற்பங்களும் உள்ளன. ஸ்ரீ தக்கயாகேஸ்பரன் கோவில் என்றும் அழைப்பார்கள். வீரபத்திரர், மகாவிஷ்ணு, பிள்ளையார், முருகன், மாரியம்பாள், காளி, வைரவர் பரிவார மூர்த்திகள். வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசை. ஆடிப் பௌர்ணமியில் கொடியேற்றத் திருவிழா நடைபெற்று, தீர்த்தத் திருவிழாவுடன் வருடாந்த விழா முடிவுறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

## ஸ்ரீ நாகதம்பிரான் கோவில்
## மாமாங்கம், மட்டக்களப்பு

இக்கோவில் 22 வருடங்களுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டது. தைப் பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, மகாசிவராத்திரி, வைகாசிப் பூரணை போன்ற தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் உண்டு.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

## ஸ்ரீ நாகதம்பிரான் கோவில்
## இருதயபுரம் (கிழக்கு), 1 ஆம் வட்டாரம், மட்டக்களப்பு

இவ்வாலயத்தில் தைப்பொங்கல்; சித்திரை வருடப்பிறப்பு, மகா சிவராத்திரி, வைகாசிப்பூரணை ஆகிய தினங்களில் சிறப்பாகப் பூசைகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

## ஸ்ரீ நாககன்னி கோவில்
## நாவலடி, மட்டக்களப்பு

இங்கு பிரதி வெள்ளிக்கிழமையும் பூசை நடைபெறும். வருடத்திற்கொருமுறை திருவிழா நிகழும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

## ஸ்ரீ நாகபூரணியம்மன் கோவில்
## நாவலடி, மட்டக்களப்பு

மூலமூர்த்தி — நாகதம்பிரான். புரட்டாதி மாதத்தில் மூன்று தினங்களுக்கு பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

## பரமனைார் (ஐயனார்) கோவில்
## ஆரையம்பதி 1, காத்தான்குடி

மூலமூர்த்தி — பூரணை புட்கலை சமேத ஐயனார். பரிவார மூர்த்திகள் — உமாதேவியர், விநாயகர், சுப்பிரமணியர், கண்ணகை அம்பாள் ஆகியோர். வெள்ளிக்கிழமைகளில் மூன்றுகாலப் பூசைகளும், ஏனைய நாட்களில் இருகாலப் பூசைகளும் நடைபெறுகின்றன. அலங்கார உற்சவம் ஆனி உத்தரத்தில் தீர்த்தம் அமையக் கூடியதாக நடைபெற்று வருகிறது. வைகாசிப் பூரணையை ஒட்டிக் கண்ணகை அம்பாளுக்குத் திருவிழா, சடங்கு, திருமுழுக்கு ஆகியன செய்யப்பட்டு குளிர்த்தியும் நடைபெற்று வருகின்றது. சித்திரை வருடப்பிறப்பு, கந்தசஷ்டி, விநாயக சஷ்டி, திருவெம்பாவை, தைப்பூசம், மகாசிவராத்திரி, பங்குனி உத்தரம் போன்ற தினங்கள் விசேட பூசைத்தினங்களாகும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

## ஸ்ரீ திரௌபதை அம்பாள் கோவில்
## இல. 2, வாவி வீதி, மட்டக்களப்பு

1875 ஆம் ஆண்டில் மூலமூர்த்தி பிரதிஷ்டை செய்யப்பட்டதாக வரலாறு. இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட மூலமூர்த்தி இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவ்வாலயத்திற்குக் கல்லாலான கட்டிடம் அமைக்கப்பட்டது. வருடாந்த உற்சவ காலங்களில் பஞ்ச பாண்டவர்களுக்காக ஐவரும், திரௌபதைக்காக ஒருவரும், விஷ்ணுவுக்காக ஒருவரும் காப்புக்கட்டி அவர்களைக் கொலுவில் இருத்திப் பூசை செய்யப்படும் வழக்கம் இருந்துவருகிறது. பத்துத் தினங்கள் வருடாந்த உற்சவம் நடைபெற்றுமுடியப் பதினோராம் நாள் தீக்குளிப்பும் இடம்பெறுகிறது. சரித்திரரீதியான நிகழ்ச்சிகள் இங்கு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. ஐந்தாம் நாள் திருவிழாவன்று கல்யாணக்கால் வெட்டும், எட்டாம் நாள் பகலில் ஐவர் வனவாசம் செல்வதும், வீமன் பழவகைகள் சேர்த்து வருவதும், ஒன்பதாம் நாள் கும்பச் சடங்கும், பத்தாம் நாள் அர்ச்சுனன் தவத்திற்குச் சென்று பாசுபதம் பெறுவதற்காக தவக்கம்பம் நாட்டி அதில் ஏறுதலும், பதினோராம் நாள் தீக்குளிப்பும் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு.
மண்முனை வடக்கு.

ஸ்ரீ துரோபதாதேவி அம்மன் கோவில்
மட்டிக்களி, மட்டக்களப்பு

பரிவார மூர்த்திகளாகப் பஞ்ச பாண்டவர்களைக் கொண்டு விளங்கும் இந்த ஆலயத்தில் வெள்ளிக்கிழமைதோறும் பூசைகள் நடைபெறுகின்றன. புரட்டாதி மாதத்தில் கொடியேறிப் பத்துத் தினங்களுக்குத் திருவிழாக்கள் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
மண்முனை வடக்கு.

பேச்சியம்மன் கோவில்
ஆரையம்பதி 2, காத்தான்குடி

மூலமூர்த்தி – பேச்சியம்மன். இருகாலப் பூசை நடைபெறுகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு.
மண்முனை வடக்கு.

ஸ்ரீ நாகதம்பிரான் கோவில்
சேனைத்தெரு

விசேட தினங்களில் பூசை நடைபெறும். சிவராத்திரியைத் தொடர்ந்து மூன்று நாட்கள் பூசை வழிபாடுகள் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு.
களுவாஞ்சிக்குடி,

சிவன் கோவில்
செட்டிபாளையம், குருக்கள்மடம்

நித்திய பூசை நடைபெறுகின்றது. அத்துடன் விசேட தினங்களில் விசேட வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
இவனைர்மடு, எருவில்

இங்கு நித்திய பூசை உண்டு. *1860* ஆம் ஆண்டுக்கு முன்னர் சிறியதாக அமைக்கப்பட்டிருந்த இந்த ஆலயம் *1900* ஆம் ஆண்டு பெரிய அளவில் உருவாக்கப்பட்டது. ஆலயம் தொடர்பான பாடல்களும் உண்டு. ஆனி உத்தரம், ஆடி அமாவாசை, ஆவணி ஓணம், மாசி மகம் போன்ற விசேட காலங்களில் திருவிழா நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

## களுதாவளைப் பிள்ளையார் கோவில்
## களுதாவளை, களுவாஞ்சிக்குடி

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மகிமைகளையுடைய கோவில் இது. மட்டக்களப்பிலிருந்து பதினன்கு மைல் தூரத்தில் உள்ளது. கிழக்கே கடலையும், மேற்கே மட்டக்களப்பு வாவியையும் அண்டியிருப்பதனல் இயற்கை அழகுடனுள்ளது. முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட கோயிலென்று கூறப்படுகிறது.

ஆனி மாத உத்தர நட்சத்திரத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறக்கூடியவாறு பத்துத் தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது. கோயிலுக்கான நாகபாம்புகள் இன்றும் இருப்பதாகவும் வழிபட வருவோர்க்கு இவை இடையூருக இருப்பதில்லையென்றும் கூறப்பட்டு வருகிறது.

சுயம்புலிங்கப் பிள்ளையார் கோயில் என்றும் இந்த ஆலயத்தை அழைத்து வருகிருர்கள். ஆலய மகிமையை எடுத்துக் கூறும் ''பட்டமம்'' என்ற ஏடு உள்ளது. 1945ம் ஆண்டில் நடைபெற்ற குடமுழுக்கு விழாவுக்குப் பின்னர் தினப்பூசை ஆரம்பிக்கப்பட்டது. 1967ல் புனருத்தாரண வேலைகள் நடைபெற்றதைத் தொடர்ந்து 1868ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. கலை நிகழ்ச்சிகளுக்கு ஆலயம் ஊக்கமளித்து வருகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

## ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில்
## களுவாஞ்சிக்குடி

நித்திய பூசை உண்டு. திருவெம்பாவைப் பத்து நாட்களும், அலங்காரத் திருவிழாவும், திருவாதிரையில் சமுத்திர தீர்த்தமும் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

## ஸ்ரீ விநாயகர் கோவில்
## பட்டிருப்பு, களுவாஞ்சிக்குடி

1952 இல் தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தியாக விநாயகரும், முருகனும் உளர். வெள்ளிதோறும் பூசை வழிபாடுகளும், மாசி மகம், கந்தசஷ்டி, விநாயகசஷ்டி போன்ற விசேட தினங்களில் விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஆலையடிப் பிள்ளையார் கோவில்
### குறுமண்வெளி, களுவாஞ்சிக்குடி

கண்டி இராச்சியம் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் ஆட்சியில் இருந்த காலத்தில், அவன் இந்தியா சென்று சீர்பாத தேவியை மணம் புரிந்து இலங்கைக்கு அழைத்து வந்த காலத்தில் கப்பல் ஓர் இடத்தில் அசையாது நின்றதாகவும், அந்த இடத்தில் விநாயகர் விக்கிரகம் ஒன்றைக் கண்டு எடுத்தாகவும் வரலாறு உண்டு. ஆரம்பத்தில் ஆலமரத்தடியில் இவ்விக்கிரகத்தை வைத்து வணங்கியபடியால் ஆலையடிப் பிள்ளையார் என்று பெயர் வந்ததாகவும் வரலாறு உண்டு. மூலமூர்த்தி விநாயகர். பரிவார மூர்த்திகள் — சிவன், பார்வதி, முருகன், நாககன்னிகை. உச்சிக்காலப் பூசை உண்டு. ஆடி அமாவாசை, திருவாதிரை, சிவராத்திரி, ஆவணிச் சதுர்த்தி போன்றவை இங்கு விசேட பூசைக்குரிய தினங்களாகும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### வம்மியடிப் பிள்ளையார் கோவில்
### கடற்கரை வீதி, களுவாஞ்சிக்குடி

இங்கு வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெறும். சிவராத்திரி, நவராத்திரி முதலிய விசேஷ காலங்களில் விசேஷ பூசைகள் நடைபெறும். இவ்வாலயம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுக் கட்டப்பட்டு வருகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### பிள்ளையார் கோவில்
### மகிளூர், களுவாஞ்சிக்குடி

சித்திரைச் சித்திரையில் சித்திரைக் கதை படிக்கப்பட்டுத் திருவிழா நடைபெறுகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஆலையடிப் பிள்ளையார் கோவில்
### கோடைமேடு, எருவில்

வெள்ளிக்கிழமை தோறும் பூசை நடைபெற்று வருகின்றது. திருக்கார்த்திகை, திருவாதிரை, சித்திரா பௌர்ணமி, தைப்பொங்கல் முதலிய தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

அம்பாறைப் பிள்ளையார் கோவில்
துறைநீலாவணை

வருடாந்த வைகாசிப் பூரணையன்று திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
பெரியகல்லாறு

நித்திய பூசை உண்டு. தைப்பொங்கல், சிவராத்திரி, சித்திரை வருடப்பிறப்பு, ஆடி அமாவாசை, கந்தசஷ்டி, திருவெம்பாவை போன்ற காலங்களில் விசேட வழிபாடுகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

ஸ்ரீ விக்நேஸ்வரர் கோவில்
மகிளூர், களுவாஞ்சிக்குடி

நித்திய பூசை நடைபெற்று வருகின்றது. ஆடி அமாவாசைத் தினத்தன்று விசேட ஆராதனைகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

ஸ்ரீ தில்லையம்பலப் பிள்ளையார் கோவில்
துறைநீலாவணை 8, கல்முனை

இங்கு நித்திய பூசை நடைபெறுகிறது. ஆடி அமாவாசைத் தினத்தில் திருவிழா. இந்த ஆலயத்தில் தேவிமார் சகிதம் சுப்பிரமணியர், சிவன், நவக்கிரகம் ஆகிய மூர்த்திகள் உளர்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
செட்டிபாளையம்

500 வருடங்களாக இக்கோயிலில் வழிபாடு நடைபெற்று வருகின்றது. நித்திய பூசையுடன், கந்தசஷ்டி, திருக்கார்த்திகை, கௌரி விரதம், கிருஷ்ண ஜயந்தி போன்ற காலங்களில் விசேட திருவிழாக்கள் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### கொம்புச் சந்திப் பிள்ளையார் கோவில்
### தேற்றாத்தீவு, களுவாஞ்சிக்குடி

இங்கு நித்திய பூசை நடைபெறுகின்றது. கந்தசஷ்டி, விநாயகர் விரதம், திருவெம்பாவை, நவராத்திரி, கௌரி விரதம் போன்ற விசேட காலங்களில் விசேட வழிபாடுகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
### மடத்தடி, பெரியகல்லாறு

வெள்ளிக்கிழமைகளிலும், விசேட தினங்களிலும் பூசை நடைபெறுகின்றது. ஆனி உத்தரத்தன்று விழா. இந்த ஆலயம் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும், சாசனங்களும் உண்டு. சமய வகுப்புக்களும் இங்கு நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் கோவில்
### களுதாவளை

நித்திய பூசை நடைபெறுகிறது. ஆனி உத்தரத்தில் திருவிழா நடைபெறும். திருவெம்பாவை நாட்களில் விசேட வழிபாடுகள் உள்ளன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஸ்ரீ புளியடிப் பிள்ளையார் கோவில்
### எருவில், களுவாஞ்சிக்குடி

இங்கு தினமும் ஒரு காலப் பூசை. விசேட நாட்களில் விசேட வழிபாடுகள் இடம்பெறும். சித்திரை மாதத்தில் நடைபெறும் சித்திரைக் கதையோடு கந்தசஷ்டி, திருக்கார்த்திகை, திருவெம்பாவை போன்ற காலங்களில் விசேட வழிபாடுகளும் உண்டு. சமயச் சொற்பொழிவுகள், சிரமதானப் பணிகள் என்பனவும் பரிபாலன சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஸ்ரீ அரசடி விநாயகர் கோவில்
### ஓந்தாச்சிமடம்

ஏறத்தாழ 100 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட ஆலயம் இது. வெள்ளிக்கிழமை, விசேட தினங்களில் பூசை. நவராத்திரி, திருவெம்பாவை நாட்களில் திருவிழா நடைபெறும். சமயச் சொற்பொழிவுகள், சமய வகுப்புகள் வருடாந்த பண்ணிசைப் போட்டிகள் என்பன பரிபாலன சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### சின்னப் பிள்ளையார் கோவில்
### துறைநீலாவணை

இந்த ஆலயமூர்த்தியை ''ஆலையடிப் பிள்ளையார்'', ''கற்பகப் பிள்ளையார்'' எனவும் அழைப்பர். தினமும் இரண்டு காலப் பூசை. விநாயக சதுர்த்தி, விநாயக சஷ்டி போன்ற திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### கட்டுப் பிள்ளையார் கோவில்
### மாங்காடு, குருக்கள்மடம்

நித்திய பூசை உண்டு. தைப்பூசம், சிவராத்திரி போன்ற விசேட காலங்களில் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி,

### களுதாவளை ஸ்ரீ முருகன் கோவில்
### களுவாஞ்சிக்குடி

மூலமூர்த்தி முருகன். பரிவார மூர்த்திகள் — வைரவர், நாகதம்பிரான். வெள்ளி, ஞாயிறு, செவ்வாய் தினங்களில் உச்சிக காலப் பூசையும், மாலைப் பூசையும் நடைபெற்று வருகின்றன. மாசிமகம், ஆடிப்பூரணை. கந்தசஷ்டி போன்ற நாட்களில் விசேட பூசைகள் உண்டு. ஆடிப் பூரணை யன்று சமுத்திர தீர்த்த உற்சவம் நடைபெறக்கூடியவாறு பத்துத் தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது. திருநீற்றுக் கற்களினுல் தாமரைத் தடாகம் அமைந்து இருப்பதனுல் இந்தத் தடாகம் திருநீற்றுக்கேணி என்று அழைக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஸ்ரீ சிவசக்தி முருகன் கோவில்
### திருநீற்றுக்கேணி, களுதாவளை

ஆலயத்தில் வேல் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. நித்திய பூசை உளது. ஆடிப் பௌர்ணமியை இறுதியாகக் கொண்டு திருவிழா நடைபெற்று, தீர்த்தோற்சவத்துடன் வருடாந்த உற்சவம் முடிவுறுகின்றது. உற்சவ முடிவில் கெங்கா சமுத்திரத்திற் தீர்த்தம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கத்தது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஸ்ரீ சிவ சுப்பிரமணியர் கோவில்
### பெரியகல்லாறு

தினமும் மூன்று காலப் பூசை. ஆடிமாதப் பூரணைக்குப் பத்து நாட்களுக்கு முன்னர் கொடியேறி, பத்து நாட்களுக்குத் திருவிழா நடைபெற்று வருகின்றது. ஆலயத்தில் பிள்ளையார், நடேசர் ஆகிய மூர்த்திகள் உளர். ஆலயத்தைப் பற்றிய வரலாற்றுப் பாடல்களும் உள்ளன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### கந்தசுவாமி கோவில்
### கோட்டைக்கல்லாறு

ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆலயம் இது. வாரம் ஒருமுறை பூசை நடைபெறுகிறது. கந்தசஷ்டி, தீபாவளி, திருக்கார்த்திகை போன்ற விசேட காலங்களில் விசேட வழிபாடுகள் உண்டு.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஸ்ரீ பாலமுருகன் கோவில்
### தேற்றாத்தீவு, களுவாஞ்சிக்குடி

இது பழம்பெருமை வாய்ந்த ஒரு ஆலயம். வாரத்தில் இரு நாட்கள் பூசை வழிபாடுகள் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஸ்ரீ முருகன் கோவில்
### குருக்கள்மடம்

மூலமூர்த்தி – வேல். நித்திய பூசை உண்டு. வருடாந்த உற்சவமும் நடைபெறுகின்றது. வைரவர், நாகதம்பிரான் ஆலயத்திலுலுள்ள இதர மூர்த்திகளாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
### கோட்டைக்கல்லாறு

வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெற்று வருகின்றது. ஆடிப் பூரணையில் விசேட பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஸ்ரீ நித்தியானந்த சிவசுப்பிரமணியர் கோவில்
### செட்டிபாளையம், குருக்கள்மடம்

விசேட பூசை வழிபாடுகள் உண்டு. விசேட தினங்களிலும் பண டிகைக் காலங்களிலும் விசேட ஆராதனைகள் நடைபெற்று வரு கின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஸ்ரீ செல்லக் கதிர்காம சுவாமி கோவில்
### குருக்கள்மடம்

இங்கு நித்திய பூசை நடைபெறுகிறது. ஆவணிப் பௌர்ணமியை அந்தமாகக்கொண்டு பத்து நாட்களுக்கு மகோற்சவம் நடைபெறும். விநாயகர், மாரியம்மன், வைரவர் போன்ற இதர மூர்த்திகளும் இவ்வாலயத்தில் உளர்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஆதி வீரபத்திரன் கோவில்
### குடியிருப்பு, தேற்றாத்தீவு 2, களுவாஞ்சிக்குடி

இங்கு நித்திய பூசை நடைபெறுகிறது. ஆனி உத்தரத்தில் திரு விழா சிறப்பாக நடைபெறுவதுடன் விசேட காலங்களில் பூசைகள் சிறப்பாகவும் நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஸ்ரீ மகாவிஷ்ணு கோவில்
### களுவாஞ்சிக்குடி

நித்திய பூசையுடன் வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசையும் நடைபெற்று வருகின்றது. ஆவணி அனுஷ நட்சத்திரத்தில் தீர்த் தம் அமையக்கூடியதாகப் பத்து நாட்கள் திருவிழா நடைபெறும். இவ்வாலயத்தில் ஊஞ்சற் பாடல்களும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### விஷ்ணு கோவில்
### சமுத்திரபுரம், கடற்கரை வீதி, களுவாஞ்சிக்குடி

வங்காள விரிகுடாக் கடலிலே அலைகளினால் மோதுண்டு களுவாஞ்சிக்குடிக் கடற்கரையிலே கரை சேர்ந்த விஷ்ணுமூர்த்தி – இவ்வாலயத்தின் மூலமூர்த்தி. களுவாஞ்சிக்குடியில் இது இரண்டாவது விஷ்ணு ஆலயம். பல இடங்களிலுமுள்ள பக்த கோடிகள் தினமும் இவ்வாலயத்திற்குப் பெருந்திரளாகச் சென்று வழிபட்டு விஷ்ணுவின் அருளைப் பெறுகின்றனர். அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயத்தை கற்களாலான ஆலயமாக விரைவில் கட்டுவதற்கு அவ்வூர் மக்கள் ஆவன செய்து வருகிறார்கள்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஸ்ரீ கிருஷ்ணன் கோவில்
### குருக்கள்மடம்

தினமும் இருகாலப் பூசை. விசேட தினங்களில் விசேட வழிபாடு உண்டு. மூலமூர்த்தி – ஸ்ரீ கோபாலகிருஷ்ணர். கிருஷ்ண ஜயந்தி தினத்தில் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஐயனார் கோவில்
### குருக்கள்மடம்

மிகவும் தொன்மை வாய்ந்த ஆலயம் இது. விசேட தினங்களில் விசேட பூசைகள் நடைபெற்று வருகின்றன. சித்திரை வருடப் பிறப்பு, சிவராத்திரி போன்ற நாட்களில் விசேட வழிபாடுகள் இடம்பெறுகின்றன.

மாவட்டம்;- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஐயனார் கோவில்
### எருவில், களுவாஞ்சிக்குடி

வெள்ளிக்கிழமை தோறும் பூசை நடைபெறுகிறது. ஆடி அமாவாசை, தைப்பொங்கல், சித்திரா பௌர்ணமி போன்ற காலங்களில் விசேட வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### திருநீற்றுக்கேணி சிவசக்தி கோவில்
### 4 ஆம் குறிச்சி, களுதாவளை, களுவாஞ்சிக்குடி

இது 1880 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஒரு துறவியால் வேல் வைத்து வணங்கப்பட்டு வந்த கோவில் என்று கூறப்படுகிறது. தினமும் உச்சிக் காலப்பூசை நடைபெறும். ஆடி மாதத்தில் வரும் திருவிழாக் காலங்களில் சுவாமி வீதிவலம் வருதலும், முடிவில் கங்கா தீர்த்தமும் நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவில்
### களுவாஞ்சிக்குடி

இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட புராதன ஆலயங்களில் இதுவும் ஒன்று. சேர நாட்டினின்றும் கண்ணகை அம்பாளின் சிலை கொண்டுவரப்பட்டு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. முதலாம் கஜபாகு மன்னன் இலங்கையை ஆட்சி புரிந்த காலத்தில் கண்ணகை அம்மன் வழிபாடு, கிழக்கு மாகாணத்தில் பரவலாயிற்று. பாடல்கள், சிலப்பதிகார ஏடு படித்தல், உடுக்குத் தாளத்தோறு கூடிய ஊர் சுற்றுக் காவியம் படித்தல் என்பனவும்; உற்சவ முடிவில் படிக்கும் குளிர்த்திப் பாடல்களும் இவ்வாலயத்தில் சிறப்பாக இடம்பெறுகின்றன. வருடந்தோறும் வைகாசிப் பௌர்ணமிக்கு முன் 7 நாட்கள் கதவு திறக்கப்பட்டு விசேட நைமித்திய வழிபாடு நடைபெற்று வருகின்றது. நோய்கள் ஏற்படும் காலங்களில் பொங்கல் வழிபாடுகள் மக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### கண்ணகை அம்மன் கோவில்
### மகிளூர், களுவாஞ்சிக்குடி

இங்கு வைகாசிப் பௌர்ணமியில் குளிர்த்தி நடைபெறுகின்றது. இந்த நாட்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### கண்ணகை அம்மன் கோவில்
### தேற்றாத்தீவு, களுவாஞ்சிக்குடி

நித்திய பூசை உண்டு. ஆனி மாதத்தில் 7 நாட்களுக்கு அலங்கா ரத் திருவிழா நடைபெற்றுப் பொங்கலுடன் திருவிழா பூர்த்தியாகும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவில்
### துறைநீலாவணை

திருக்கோயில் கல்வெட்டு, மட்டக்களப்பு மான்மியம் ஆகியவற்றில் ஆலய வரலாற்றைக் காணலாம். தொன்மைக் காலச் சிலம்புகளும், சிலைகளும் இன்றும் ஆலயத்தில் காணப்படுகின்றன. வெள்ளிக்கிழமைதோறும் பூசை. வைகாசி மாதப் பூரணையுடன் கூடிய திங்கள் இரவு குளிர்த்தி வரக்கூடியதாக ஒரு வாரம் திருவிழா நடைபெறுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஸ்ரீ மாரியம்மன் கோவில்
### கோட்டைக்கல்லாறு

வருடம் ஒருமுறை கதவு திறக்கப்பட்டுக் கும்பத்தில் அம்பாளின் முகச்சிலையை வைத்து ஆராதித்து, ஐந்து நாட்களுக்கு விழா நடைபெறுகின்றது. ஆனி மாதப் பூரணையை அனுசரித்துத் திருவிழா நடைபெறுகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### எருவில்

விசேட காலங்களில் பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. ஆனி மாதத்தில் திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### எருவில் களுவாஞ்சிக்குடி

ஆனிப் பூரணையில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

ஸ்ரீ மாரியம்மன் கோவில்
துறைநீலாவணை 7, கல்முனை

ஆனிப்பூரணைக்கு முன் எட்டு நாட்களுக்குத் திருவிழா நடைபெறுகிறது. உற்சவம் ஆரம்பித்த ஐந்தாம் நாள் கன்னிக்கால் வெட்டு விழாவும், ஏழாம் நாள் குளிர்த்தியும், எட்டாம் நாள் தீ மிதிப்பு விழாவும் இடம்பெறும்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
கோட்டைக்கல்லாறு

இக்கோயிலில் ஆதிகாலம் தொட்டு வழிபாடு ஆற்றப்பட்டு வருகின்றது. இந்தக் கோவிலைப் பற்றிய காவியமும் உண்டு. வருடா வருடம் ஆனிப் பூரணையில் விசேட வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு
களுவாஞ்சிக்குடி.

ஸ்ரீ மாரியம்மன் கோவில்
குருமண்வெளி, களுவாஞ்சிக்குடி

வருடத்திற்கு ஒருமுறை புரட்டாதிப் பூரணையில் அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது. கும்பத்தில் அம்பாளின் முக அங்கியை வைத்து வழிபட்டு வருகின்றூர்கள்.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

ஸ்ரீ நாகதம்பிரான் கோவில்
குறுமண்வெளி, களுவாஞ்சிக்குடி

வெள்ளிக்கிழமை தோறும் பூசை நடைபெற்று வருகின்றது. ஆனி உத்தரம், மார்கழித் திருவெம்பாவை, சித்திரா பௌர்ணமி ஆகிய நாட்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இந்த ஆலயத்திற்குப் பழம்பெருமை வாய்ந்த காவியம் ஒன்றும் உள்ளது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

நாகர் கோவில்
பெரியகுளம், களுவாஞ்சிக்குடி

இங்கு ஆண்டுக்கு ஒருமுறை வருடாந்தப் பொங்கல் நடைபெறுகின்றது. பழமைவாய்ந்த ஆலயம் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஸ்ரீ நாகதம்பிரான் கோவில்
### கோட்டைக்கல்லாறு

ஒல்லாந்தர் இங்கு வந்த காலத்தில் இங்குள்ள புற்றிலிருந்து நாகம் ஒன்று வெளிப்பட்டு புற்றை வலம்வரவே அதனை பக்தர்கள் உடைக்காது அவ்விடத்தை ஒரு தலமாக மதித்து வழிபட்டு வந்தனர் என வரலாறு கூறுகின்றது. விஷம் சம்பந்தமான எல்லா நோய்களுக்கும் இந்த ஆலயத்தில் மக்கள் நேர்த்தி வைத்துச் சுகம் பெற்றுள்ளார்கள். தினமும் ஒரு காலப் பூசை. தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு போன்ற காலங்களில் விசேட பூசைகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஸ்ரீ நாகதம்பிரான் கோவில்
### தேற்றாத்தீவு, களுவாஞ்சிக்குடி

வெள்ளி, செவ்வாய் நாட்களில் பொங்கலுடன் பூசை வழிபாடு நடைபெற்று வருகின்றது. ஆனி உத்தர தினத்தன்று பொங்கலுடன் விசேட பூசை வழிபாடுகள் உண்டு.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### நாகதம்பிரான் கோவில்
### செட்டிபாளையம், குருக்கள்மடம்

மூலமூர்த்தி – நாகதம்பிரான். வாராந்தப் பூசை இங்கு நடைபெற்று வருகின்றது.

மாவட்டம்:- மட்டக்களப்பு,
களுவாஞ்சிக்குடி.

### ஸ்ரீ நாகதம்பிரான் கோவில்
### குருக்கள்மடம்

வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசை உளது. ஆனி மாதத்தில் வருடாந்தத் திருவிழா நடைபெற்று வருகின்றது. மூலஸ்தானத்தில் ஐந்து தலை கொண்ட நாகதம்பிரான் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மாவட்டம்:- மட்டக்களப்பு.
களுவாஞ்சிக்குடி.

## ஸ்ரீ நாகதம்பிரான் கோவில் குறுமண்வெளி


வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. ஆனி உத்தரத்ததிற்கு ஆறு நாட்களுக்கு முன்னதாகத் திருவிழா ஆரம்பமாகி உத்தரத்தன்று பொங்கலுடன் பூர்த்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மட் / கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட் / மாமாங்கேஸ்வரத்தின் மூலஸ்தான பண்டிகை வேலைப்பாடு




மட் / மாமாங்கேஸ்வர ஆலயத்தில் எழுந்தருளியுள்ள மாமாங்கப் பிள்ளையார்


மட் / மாமாங்கேஸ்வர ஆலயமும் தீர்த்தக் கேணியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட் / ஆனைப்பந்திப் பிள்ளையார் கோவில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட் / சித்தாண்டி சித்திர வேலாயுத சுவாமி கோவிலின் இராஜகோபுரம்




மட் / மண்டூர் ஸ்ரீ முருகன் கோவில்

மட் / மண்டூர் கந்தசுவாமி கோவிலிலுள்ள புராதன வைரவர் விக்கிரகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மட் /மண்டூர் கந்தசுவாமி கோவிலில் உள்ள நாகதம்பிரான்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட் /தாந்தாமலை முருகன் ஆலயமும் வரவேற்புக் கோபுரமும்




மட் / தாந்தாமலையில் எழுந்தருளியிருக்கும் மிகப் பழமை வாய்ந்த முருகன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட் / கொத்துக்குள மாரியம்மன் கோவில்




மட் / பெரியபோரதீவு பத்திரகாளியம்மன் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட் / பெரியபோரதீவு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயத்தின் உள் மண்டபத் தோற்றம்



மட் /கோயிற் போரதீவு சித்திர வேலாயுத சுவாமி கோவில் மூலஸ்தான பண்டிகை வேலைப்பாடு



மட் /களுவாஞ்சிக்குடி பிள்ளையார் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மட் /களுவாஞ்சிக்குடி மகாவிஷ்ணு ஆலயத்தின் உட்தோற்றம்




மட் /களுவாஞ்சி [illegible] பட்ட ஸ்ரீ மகாவிஷ்ணு விக்கிரகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மட் /களுதாவளைப் பிள்ளையார் கோவில்



மட் /களுதாவளைப் பிள்ளையார் கோவிலின் மூலஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மட் / மாவேற்குடா பிள்ளையார் கோவில்

மட் /வெல்லாவெளி முத்துமாரியம்மன் ஆலயத்தின் வெளித்தோற்றம்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மட் / திருப்பெருந்துறை முருகன் கோவில்


மட் / வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தின் பின்புறத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட் / கோட்டமுனை மகாமாரியம்மன் கோவில் மூலஸ்தான பண்டிகை வேலைப்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட் / புதூர் கிருஷ்ணன் கோவில்



மட் /கல்லடி வீரகத்திப் பிள்ளையார் கோவில்

மட் /கல்லடி முருகன் கோவில்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அம்பாறை மாவட்டம்

கொழும்பிலிருந்து 201 மைல் தொலைவில் இம்மாவட்டம் உளது. மட்டக்களப்பில் இருந்து பேரூந்து மூலம் இம்மாவட்டத்தை அடையமுடியும். பேரூந்துகள் மூலஞ்சென்று இங்குள்ள கோவில்களை தரிசிக்கலாம்.

இம்மாவட்டத்தில் உகந்தை, சங்கமக்கண்டி, திருக்கோயில் ஆகிய இடங்களில் உள்ள முருகன் கோவில்கள் மிகவும் பிரசித்தி பெற்றவை. பத்தினித் தெய்வதத்துக்கு அதிமுக்கியத்துவங் கொடுக்கும் கிழக்கிலங்கையின் பாண்டிருப்பு எனும் இடத்தில் திரௌபதையம்மன் கோவில் ஒன்று உளது.

இம்மாவட்டத்திலுள்ள தலங்கள் யாவற்றையும் தரிசனஞ் செய்து நாம் மொனருகலை மாவட்டத்திற்குப் பேரூந்து மூலஞ் செல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனே.

### கம்ப காமாட்சி அம்பாள் கோவில்
### முதலாம் வட்டாரம், சேனேக்குடியிருப்பு, கல்முனே

வெள்ளிக்கிழமை தோறும் பூசை. ஆவணிச் சதுர்த்திக்கு முன் ஏழு நாட்கள் திருவிழா நடந்தேறித் தீக்குளிப்புடன் முடிவடையும்.

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனே.

### ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில்
### பாண்டிருப்பு 1 ஆம் குறிச்சி, கல்முனே

450 வருடங்களுக்கு முன்பாக கலிங்க தேசத்துச் சிற்றரசன் மன்னசிங்கன் இவ்வாலயத்தைப் பரிபாலித்து வந்ததோடு திருப்பணிகளைச் செய்து காணிகளையும் (நிந்தகம்) வழங்கியுள்ளார் என்பது வரலாறு. மட்டக்களப்பு மான்மியம், தாதன் கல்வெட்டுக்கள், உறுதி சாதனங்களில் இக்கோவில் பற்றி கூறப்பட்டுள்ளது. புரட்டாதிப் பூரணைக்கு முன்னுள்ள பதினெட்டு நாட்களில் வருடாந்த உற்சவம் நடைபெறுகிறது. மூலமூர்த்தி – விநாயகர். பரிவார மூர்த்திகள் – முருகன், விஷ்ணு, நவக்கிரகங்கள், வைரவர். தினமும் பூசை உண்டு. விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள். பழங்காலந்தொட்டு பதினெட்டுக் குடிவழியினரின் பெண் உரிமைப்படி பரிபாலிக்கப்பட்டு வருகிறது

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனே.

### ஸ்ரீ தரவைச் சித்திவிநாயகர் கோவில்
### பிரதான வீதி, 3 ஆம் குறிச்சி, கல்முனே

மூலமூர்த்தி – விநாயகர். நித்திய பூசை. வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப் பிரார்த்தனே. திருவெம்பாவை, திருவாதிரை, சிவராத்திரி, ஆடி அமாவாசை, கார்த்திகைத் திருவிழா போன்ற தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனை.

### கதிரவேற்பிள்ளையார் கோவில்
### டெம்பிள் வீதி, 2 ஆம் குறிச்சி, கல்முனை

மூலமூர்த்தி — பிள்ளையார். ஆடித் திருவிழா வருடந்தோறும் நடைபெறுகிறது.

மாவட்டம்:- அம்பாறை.
கல்முனை.

### அம்பலத்தடிப் பிள்ளையார் கோவில்
### அம்மன்கோவில் வீதி, 1 ஆம் குறிச்சி, கல்முனை

மூலமூர்த்தி பிள்ளையார். நித்திய பூசை நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனை.

### ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் கோவில்
### கொஸ்தாபர் வீதி, 1 ஆம் குறிச்சி, கல்முனை

மூலமூர்த்தி — பிள்ளையார். தினமும் பூசை நடைபெற்று வருகிறது. வருடந்தோறும் ஆடித் திருவிழா விசேடமாக நடைபெற்று வருகின்றது.

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனை.

### ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
### சேனைக்குடியிருப்பு, கல்முனை

400 வருடங்களுக்குப் பழமை வாய்ந்த ஆலயம் எனக் கூறப்படுகிறது. மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — விஷ்ணு, நாகதம்பிரான், வைரவர். தினமும் இரு காலப் பூசை. ஆடி அமாவாசைத் தீர்த்தம், திருவெம்பாவை போன்ற விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனே.

### பிள்ளையார் கோவில்
### துரவந்திய மேடு, சேனைக்குடியிருப்பு, கல்முனே

ஆலயம் ஆரம்பிக்கப்பட்டு நாற்பது வருடங்களாகின்றன. வெள்ளிக்கிழமைகளில் மட்டும் பூசை. ஆடி அமாவாசையில் திருவிழாவுடன் தீர்த்தோற்சவம் நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனே.

### ஸ்ரீ முத்துவிநாயகர் கோவில்
### சேனைக்குடியிருப்பு, கல்முனே

ஸ்தாபிக்கப்பட்டு முப்பது வருடங்கள். வாரத்துக்கு ஒருமுறை பூசை. விசேட காலங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும்.

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனே.

### ஸ்ரீ முத்துவிநாயகர் கோவில்
### கிட்டங்கி, சேனைக்குடியிருப்பு, கல்முனே

மூலமூர்த்தியாக விநாயகர் எழுந்தருளியிருக்கும் இந்த ஆலயத்தில் வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனே.

### அம்பலத்தடி விநாயகர் கோவில்
### கல்முனே

நூறு வருடங்களுக்கு முன் தோன்றியது. பரிவார மூர்த்திகள் — முருகன், வைரவர். தினமும் மூன்று காலப்பூ சை. விசேட தினங்களில் விசேட பூசை நடைபெறும்.

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனே.

### ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
### ஆதார வைத்தியசாலே, கல்முனே 1

தினமும் மூன்று காலப் பூசை. பரிவார மூர்த்திகள் — சுப்பிரமணியர், வைரவர். ஆனி உத்தரத்தையொட்டித் திருவிழா நடைபெறுகிறது. பொங்கல் பூசை உண்டு. வைத்தியசாலே ஊழியர்கள், நோயாளிகள் ஆகியோரின் வழிபாட்டிற்காக முப்பது வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனை.

ஸ்ரீ சித்திவிநாயகர் அரசடி அம்பாள் கோவில்
பிரதான வீதி, பாண்டிருப்பு 2, கல்முனை

சுமார் 300 வருடங்களுக்கு முந்தியதெனக் கூறப்படுகிறது. பரிவார மூர்த்திகள் — ஸ்ரீ சிவசுப்பிரமணியர், நாகதம்பிரான், வைரவர் நவக்கிரகம் மூஷிகம், பலிபீடம், சிங்கம். தினமும் இரண்டுகாலப் பூசை. திருவெம்பாவை விசேட திருவிழாவாக நடைபெறுகிறது.

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனை.

ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
நற்பிட்டிமுனை, கல்முனை

200 வருடங்கள்வரை பழமை வாய்ந்த கோவில். சூறுவளியால் சேதமடைந்த ஆலயம் இப்போது புதுப்பிக்கப்பட்டு வருகிறது. முன் மண்டபத்தையும் சேர்த்து ஐந்து மண்டபங்கள். மூலமூர்த்தி — வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியர். பரிவார மூர்த்திகள் — வைரவர், நவக்கிரகம் ஆகியோர். இரு காலப் பூசை. கார்த்திகை, திருவாதிரை, ஆடிப்பூரணைத் திருவிழாக்கள் விசேடமாக நடைபெற்று வருகின்றன. கந்தபுராணம் படிக்கப்பட்டு வருகிறது.

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனை,

அரசடி ஸ்ரீ முருகன் கோவில்
1 ஆம் குறிச்சி, பெரியநீலாவணை, கல்முனை

நித்திய பூசை நடைபெறுவதுண்டு. ஆலய புனருத்தாரண வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனை.

ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி கோவில்
திருவள்ளுவர் வீதி, பாண்டிருப்பு 1, கல்முனை

51 வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி — வேல். புனருத்தாரண வேலைகள் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனை.

ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
அம்மன் கோவில் வீதி, கல்முனை

200 ஆண்டுகட்கு முற்பட்டது. ஆதியில் வேல் வைக்கப்பட்டிருந்தது. 1943 ஆம் ஆண்டு விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. மூன்று காலப் பூசை. ஆடித் திருவிழா பத்து நாட்கள். கந்தசஷ்டி, சித்திரைக் கதை, தைப்பூசம் போன்ற காலங்களில் விசேட திருவிழாக்கள் நடைபெறும்.

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனை.

ஸ்ரீ முருகன் கோவில்
அம்மன் கோவில் வீதி, 1 ஆம் குறிச்சி, கல்முனை

தினமும் பூசை நடைபெற்று வருகிறது. ஆடி மாதத்தில் கொடியேறி வருடாந்த திருவிழா நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனை.

ஸ்ரீ மகாவிஷ்ணு கோவில்
பெரியநீலாவணை 2, கல்முனை

தினமும் உச்சிக் காலப் பூசை. வெள்ளிக்கிழமைகளில் மூன்று காலப்பூசை. ஆவணி ஓணம், கிருஷ்ண ஜயந்தி போன்ற விசேட தினங்களில் உற்சவம் நடைபெறும். 200 ஆண்டுகட்கு முன் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டு மூர்த்தி ஸ்தாபிக்கப்பட்டது. பரிவார மூர்த்திகள் – சித்திவிநாயகர், சித்திரவேலாயுதர், ஆஞ்சனேயர், வைரவர்.

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனை.

ஸ்ரீ பத்திரகாளியம்பாள் கோவில்
நற்பிட்டிமுனை, கல்முனை

300 வருடங்களுக்கு பழமை வாய்ந்த ஆலயம் எனக் கூறப்படுகிறது. சக்தி வழிபாடு நடைபெற்று வருகிறது. நவராத்திரிக்குப் பத்து தினங்களுக்கு முன் கொடியேறி உற்சவம் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனை.

## ஸ்ரீ வடபத்திரகாளியம்மன் கோவில்
## 2 ஆம் குறிச்சி, பாண்டிருப்பு, கல்முனை

50 வருடங்கள் பழமை வாய்ந்தது. மூலமூர்த்தி — காளி அம்பாள். பரிவார மூர்த்திகள் — வீரபத்திரர், நாகதம்பிரான், வைரவர். ஆவணிப் பூரணையில் கொடியேறி கதவு திறப்பு விழா ஒன்பது நாள் நடைபெற்று தீக்குளிப்புடன் முடிவடைகிறது.

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனை

## ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
## சேனைக்குடியிருப்பு, கல்முனை

400 வருடங்கள் பழமை வாய்ந்த கோவில் என்று கருதப்படுகிறது. மூலமூர்த்தி — மாரியம்பாள். பரிவார மூர்த்திகள் — பேச்சியம்பாள், வைரவர், வீரபத்திரர். நவராத்திரி காலத்தில் பத்து நாட்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனை.

## ஸ்ரீ மாரியம்மன் கோவில்
## 1 ஆம் குறிச்சி, பாண்டிருப்பு, கல்முனை

புராதன கல்வெட்டுகளும், பாடல்களும் உள்ளன. மூலமூர்த்தி — மாரியம்மன். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், கந்தசுவாமியார், வைரவர், நாகதம்பிரான் ஆகியோர். ஆனியில் உற்சவம் ஏழு நாட்கள் நடைபெறும். திருவிழாக் காலத்தில் ஊர் சுற்றிக் கும்பத்தால் காவல் செய்வது வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனை.

### பாண்டிருப்பு திரௌபதை அம்மன் கோவில்
### கல்முனை

பழமை வாய்ந்த பிரசித்தி பெற்ற அம்மன் ஆலயம் இது. இக் கோவில் கண்டி மன்னனுன விமலதரும சூரியன் காலத்தில் (கி.பி. 1594 – 1604) நிறுவப்பட்டதாக அறிய முடிகிறது. இங்கு நடக்கும் வருடாந்த சடங்கு 18 நாட்கள் நடைபெற்று இறுதிநாள் தீப்பள்ளயம் நடைபெறும். பெருந் தீ வேள்வியே ''தீப் பள்ளம்'' எனப் பொருள்படும். தீப்பள்ளயச் சடங்குக் காலங்களில் கோவிலில் பாண்டவர் வனவாசம் முதலியவற்றைக் கூறும் பாரதக் கதை படிக்கப்பெறும். சடங்கின் இறுதி நாளன்று தீப்பாயும் வைபவம் முக்கியமானதாகும். அத்துடன் பாண்டவர்கள் வன வாசம் போகும் காட்சி, தவநிலை ஏறும் காட்சி முதலியனவும் சிறப்பம்சமாக அமைகிறது.

மட்டக்களப்பு மான்மியத்திலும் இந்த ஆலயத்தின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது.

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனை.

### கடற்கரைக் கண்ணகியம்மன் கோவில்
### 3 ஆம் குறிச்சி, கல்முனை

மூலமூர்த்தி – கண்ணகி அம்மன். வைகாசி மாத பூர்வபட்சப் பூசைகளும் தைப்பொங்கல், சிவராத்திரி, சித்திரை வருடப்பிறப்பு, சித்திரா பௌர்ணமி, ஆடி அமாவாசை, கார்த்திகைத் தினங் களில் விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனே.

**ஸ்ரீ கண்ணகி அம்மன் கோவில்**
**அம்மன் கோவில் வீதி, 1 ஆம் குறிச்சி, கல்குனே**

தினமும் பூசை நடைபெற்று வருகிறது. வருடாவருடம் வைகாசித் திங்கள் உற்சவம் நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனே.

**ஸ்ரீ ஐயஞர் கோவில்**
**யாட் வீதி, தாளவட்டான் ஒழுங்கை, 1 ஆம் குறிச்சி, கல்முனே**

பழமை வாய்ந்த ஆலயம். இப்போது புதுப்பிக்கப்பட்டு வருகிறது. வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெறுகிறது. மூலமூர்த்தி — ஐயஞர்.

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனே.

**ஸ்ரீ பெரியதம்பிரான் கோவில்**
**2 ஆம் குறிச்சி, பாண்டிருப்பு, கல்முனே**

மூலமூர்த்தி — சிவன். பரிவார மூர்த்திகள் — வீரபத்திரர், வைரவர். வருடாவருடம் ஆடி மாதம் திருவிழா நடைபெற்று வருகின்றது.

மாவட்டம்:- அம்பாறை,
கல்முனே.

**பெரியதம்பிரான் கோவில்**
**பெரியநீலாவணே 1, கல்முனே**

மூலமூர்த்தி — பெரியதம்பிரான். பரிவார மூர்த்திகள் — பிள்ளேயார், வைரவர், வீரபத்திரர், வதனமார், முருகன், பேச்சியம்மன். வாராந்த பூசையும், ஆடி மாதத்தில் வருடாந்த உற்சவமும், தைப்பொங்கல், சித்திரை வருடப் பிறப்பு போன்ற தினங்களில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அம்பாறை,
நிந்தவூர்.

## ஸ்ரீ நந்தவனப் பிள்ளையார் கோவில்
## 2 ஆம் குறிச்சி, காரைதீவு

தவத்திரு விபுலானந்த அடிகளின் பிறந்த இடமான காரைதீவில் உள்ள இக்கோவிலில் அடிகளார் கூட்டுப் பிரார்த்தனை நடத்தி வந்தது உண்டு. ஸ்தாபிக்கப்பட்டு 100 வருடங்களுக்கு மேலாகிறது. சேரநாட்டிலிருந்து யாத்திரையாக இங்கு வந்த அம்மையார் ஒருவர் விக்கிரகம் ஒன்றைக்கொண்டு வந்து இங்கு வைத்து வணங்கி வந்ததாகவும் கூறப்பட்டுவருகிறது. பின்னர் பிள்ளையார் விக்கிரகம் வயல் ஒன்றுக்குள் கண்டெடுக்கப்பட்டுப் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகவும் வரலாறு. ஆலயத்தைச் சுற்றி வயல்கள், தடாகங்கள், பூந்தோட்டங்கள் இருப்பதால் ஸ்ரீ நந்தவனப் பிள்ளையார் எனப்பெயர் பெற்ருர். நித்திய பூசை உண்டு. திருவெம்பாவை தினங்களில் உற்சவம் நடந்து திருவாதிரைத் தினத்தன்று முடிவுறும். ஆடி அமாவாசையன்று தேர்த்திருவிழாவும் தீர்த்தமும் நடைபெறுகின்றன. குளத்துவெளிப் பிள்ளையார் எனவும் அழைக்கப்பட்டு வருகின்ருர்.

மாவட்டம்:- அம்பாறை,
நிந்தவூர்.

## ஸ்ரீ பாலவிக்நேஸ்வரர் கோவில்
## பாலையடி, காரைதீவு 3

தினமும் மூன்று காலப் பூசை நடைபெற்று வருகிறது. சித்திரை பத்து நாட்களுக்கு வருடாந்தத் திருவிழாவும், பூரணை தினத்தன்று தீர்த்தோற்சவமும் இடம்பெறுகின்றது. தலவிருட்சம் பாலை. புராணப் படனமும் இங்கு உளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அம்பாறை,
நிந்தவூர்.

### ஸ்ரீ காரையடி அம்பாறைப் பிள்ளையார் கோவில்
### 2 ஆம் குறிச்சி, காரைதீவு

உச்சிக் காலப் பூசை நடைபெறுகிறது. விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாவட்டம்:- அம்பாறை,
நிந்தவூர்.

### ஸ்ரீ முருகன் கோவில்
### 5 ஆம் குறிச்சி, பிரதான வீதி, நிந்தவூர்

நித்திய பூசை உண்டு. விசேட தினங்களில் விசேட பூசை நடைபெறும். முருகன் இருதேவியருடன் வீற்றிருக்கின்றார். மூலமூர்த்தி இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டது. கந்தசஷ்டி, வருடப்பிறப்பு, கார்த்திகை உற்சவம் விசேடமானவை. வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப் பிரார்த்தனை நடத்தப்படுகிறது.

மாவட்டம்:- அம்பாறை,
நிந்தவூர்.

### ஸ்ரீ விஷ்ணு கோவில்
### காரைதீவு 3

மூலமூர்த்தி — ஸ்ரீ விஷ்ணு, பரிவார மூர்த்திகள் — சிவன், வைரவர். நித்திய பூசை உண்டு. ஆவணித் திருவோணத்தில் வருடாந்தத் திருவிழாக்கள் உண்டு. தைப்பொங்கல், திருவெம்பாவை, சிவராத்திரி, பௌர்ணமி தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும்.

மாவட்டம்:- அம்பாறை,
நிந்தவூர்.

### ஸ்ரீ வீரபத்திரசுவாமி கோவில்
### காரைதீவு 2

வருடாந்தம் பொங்கல் நடைபெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அம்பாறை,
நிந்தவூர்.

ஸ்ரீ கண்ணகை அம்பாள் கோவில்
காரைதீவு

500 ஆண்டுகள் வரையிலான கோவில் ''காரேறு மூதூர்'' என்ற பெயர் வழக்கிலிருந்தபோது ஸ்தாபிக்கப்பட்டது. இப்போது இப்பெயர் திரிந்து காரைதீவாகிவிட்டது. கதிர்காம யாத்திரிகர்கள் இந்த ஆலயத்திலே தங்கிச் செல்வதுண்டு. கோவிலின் தலவிருட்சம் — வேம்பு. இந்த வேப்பமரம் மிகவும் பழமையானதென்றும், இன்றிருக்கும் வயது முதிர்ந்த மரங்களில் இதுவும் ஒன்றெனவும் கருதப்படுகிறது.

இப்பகுதியை அரசோச்சிய வன்னிய அரசன் யானை மீது வயல் நிலங்களைப் பார்வையிட வந்த சமயம் அந்த யானை விழுந்து படுத்துவிட்டதாகவும் அப்போது கோவில் மணி ஒலிக்க ஏவலாளர்கள் கோவிலின் மகிமைபற்றி அரசனுக்குக் கூறி அழைத்துச் சென்ற சமயம் அங்கு பூசை செய்து கொண்டிருந்த தேவந்தி என்ற பெண் விவரம் அறிந்து வேப்பிலை அரைத்து குளிகை செய்து தீர்த்தத்துடன் யானை படுத்த இடத்துக்குச் சென்றதாகவும் அங்கு வேப்பிலைக் குளிகை கொடுத்து தீர்த்தம் பருக்கியதும் யானை எழுந்ததாகவும் கர்ண பரம்பரைக் கதையொன்று கூறப்படுகிறது. இதற்கு கைமாறாக அரசன் ஆலயம் அமைத்துக் கொடுத்தானாம்.

அரசனது இரு மனைவியர்களில் ஒருவரான சிறிய பூங்கோதைக்கு கண் பார்வை மறுபடியும் இந்த ஆலயத்தில் கிட்டியதாகவும் கூறப்பட்டு வருகிறது.

ஆலயம் தொடர்பான ''வழக்குரை'' என்னும் ஏடு ஒன்றுமுளது. வருடாந்த உற்சவத்தின் முன் ஏழு நாட்களுக்குத் தினமும் இது பாடப்பெற்று நிறைவுறும்.

1976 ஆம் ஆண்டில் புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடந்தது. தினமும் மூன்று காலப் பூசை நடைபெற்று வருகிறது.

முக்கிய தினங்களில் விசேஷ வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அம்பாறை,
நிந்தவூர்.

### ஸ்ரீ மீனாட்சியம்மன் கோவில்
### செங்கற்பட்டை, நிந்தவூர்

450 ஆண்டுகள்வரை பழமை வாய்ந்தது. வன்னியரால் வழிபாடு செய்யப்பட்ட கோவில் என்பது வரலாறு. மூலமூர்த்தி—அம்பாள். பரிவார மூர்த்தி — நாகதம்பிரான். வெள்ளிக்கிழமை தோறும் பூசை. தைப்பொங்கல், சித்திராபூரணையில் விசேட பூசை வழி பாடு உண்டு. சமயப் பிரசாரமும் செய்யப்பட்டுவருகிறது.

மாவட்டம்:- அம்பாறை,
சம்மாந்துறை.

### வீரமுனை ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் கோவில்
### வீரமுனை, சம்மாந்துறை

கி.பி. 1537 ஆம் ஆண்டில் மதுரைப் பட்டின சீர்பாகதேவி யினால் சித்தியாத்திரைப் பிள்ளையார் கொண்டு வரப்பட்டு ஆலயம் அமைக்கப்பட்டதாக வரலாறு. சரித்திர ரீதியான தொடர்பு களும் உண்டு. இந்த ஆலயம்பற்றி இந்தியாவுக்கு கொண்டு செல்லப்பட்ட செப்பேட்டில் இது விளக்கப்பட்டுள்ளது. சாச னங்கள், கல்வெட்டுகள், ஊஞ்சற்பாட்டு, சீர்பாதவரலாறு என்ப வற்றில் ஆலயக் குறிப்புண்டு. மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — அம்பாள், வைரவர், சுப்பிரமணியர், நடேசர். மூன்று காலப் பூசை. ஆனி உத்தரத்தில் தீர்த்தோற்சவத்துடன் பத்துநாட் திருவிழா முடிவுறும்.

மாவட்டம்:- அம்பாறை,
சம்மாந்துறை.

### நாவிதன்வெளி ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
### சம்மாந்துறை

நித்திய பூசையும், வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசையும் நடைபெறுகின்றன. முன்நூறு வருடங்களுக்குப் பழமையானது. ஆடி அமாவாசையன்று தீர்த்தம் நடைபெறத்தக்கவாறு நான்கு நாட்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெறும். தென்னிந்தியாவின் திருவொற்றியூர்ப் பகுதியிலிருந்து முன்னர் இங்கு வந்தவர்களினால் ஆரம்பிக்கப்பட்டதென்ற வரலாற்றையுடையது. மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்தி — வள்ளி தேவயானை சமேத சுப்பிர மணியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அம்பாறை,
சம்மாந்துறை.

### வேப்பையடிப் பிள்ளையார் கோவில்
### 15 ஆம் கிராமம், காரைக்குடா, நாவிதன்வெளி

மூலமூர்த்தி — பிள்ளையார். (கபால விநாயகர்) பரிவார மூர்த்திகள் — நாகபூஷணி அம்பாள், வைரவர் ஆகியோர். நித்திய பூசை நடைபெறுகிறது. ஆடி அமாவாசைக்கு முந்திய ஐந்து தினங்களுக்கு மகோற்சவம் நடைபெற்று ஆடி அமாவாசைத் தீர்த்தத்துடன் முடிவுறுகின்றது. மாதப்பூரணைத் தினங்களில் விசேட திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- அம்பாறை.
சம்மாந்துறை.

### விளாவடிப் பிள்ளையார் கோவில்
### 15 ஆம் கிராமம், நாவிதன்வெளி, கல்முனை

ஆலயம் குடியேற்றத்திட்டத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. மூலமூர்த்தி—பிள்ளையார். லிங்கமும் உண்டு. பரிவார மூர்த்திகள் — வைரவர், நாகதம்பிரான், கண்ணகை அம்மன். கார்த்திகைத் திருவிழா, திருவெம்பாவை, தைப்பொங்கல், மாசிமகம், பங்குனி உத்தரம், போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும்.

மாவட்டம்:- அம்பாறை
சம்மாந்துறை,

### ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
### 4 ஆம் கிராமம், சம்மாந்துறை

வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெற்று வருகிறது. மூலமூர்த்தி ஸ்ரீ சித்திவிநாயகர். திருவெம்பாவை, விநாயகர் சதுர்த்தி, மகா சிவராத்திரி போன்ற விசேட பூசைகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- அம்பாறை,
சம்மாந்துறை.

### ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் கோவில்
### சவளக்கடை, சம்மாந்துறை

மூலமூர்த்தி — ஸ்ரீ கற்பகவிநாயகர். பரிவார மூர்த்திகள் — சிவலிங்கம், முருகன், வைரவர். இரு காலப் பூசை. ஆனி உத்தரத்தில் கொடியேற்றத் திருவிழா ஆம்ரபமாகி ஆறு தினங்களுக்கு நடைபெற்று தீர்த்தோற்சவத்துடன் முடிவுறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அம்பாறை,
சம்மாந்துறை.

### வீரமுனை வழிபாட்டுப் பிள்ளையார் கோவில்
### வீரமுனை, சம்மாந்துறை

வரலாற்றுத் தொடர்புடைய ஆலயம். சாசனங்கள், கல்வெட்டுக்கள், பாடல்கள் உள்ளன. வெள்ளிக்கிழமை தோறும் பூசை வழிபாடுகள் நடைபெறும்.

மாவட்டம்:- அம்பாறை,
சம்மாந்துறை.

### ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில்
### வளத்தாப்பிட்டி, மல்வத்தை, சம்மாந்துறை

நித்திய பூசை நடைபெறுகிறது. வளத்தாப்பிட்டிக் குளம் கட்டுவதற்கு முன் தோன்றிய பிள்ளையார் கோவில்.

மாவட்டம்:- அம்பாறை,
சம்மாந்துறை.

### ஸ்ரீ கோரக்கர் விநாயகர் கோவில்
### தமிழ்க் குறிச்சி, கோரக்கர் கோவிலடி, சம்மாந்துறை

வெள்ளிக்கிழமை தோறும் பூசையும், விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- அம்பாறை,
சம்மாந்துறை.

### ஸ்ரீ முருகன் கோவில்
### 15 ஆம் கிராமம், பெரியகாடு, நாவிதன்வெளி, கல்முனை

தினமும் மூன்று காலப் பூசை நடைபெறுகிறது. மூலமூர்த்தி – கந்தசுவாமியார். பரிவார மூர்த்திகள் – வைரவர், நாகதம்பிரான், ஆடிமாதத்துப் பூரணையையொட்டி இருபத்தொரு தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெறுகிறது.

மாவட்டம்:- அம்பாறை,
சம்மாந்துறை.

### ஸ்ரீ முருகன் கோவில்
### 6 ஆம் கிராமம், சொறிக்கல்முனை

வாராந்தம் பூசை நடைபெற்று வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அம்பாறை,
சம்மாந்துறை.

## ஸ்ரீ முருகன் கோவில்
## 4 ஆம் கிராமம், சம்மாந்துறை

1957 இல் குடியேற்றத் திட்ட மக்களுக்காக தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி — முருகன். வெள்ளி தோறும் பொங்கற் பூசை.

மாவட்டம்:- அம்பாறை,
சம்மாந்துறை.

## ஸ்ரீ முருகன் கோவில்
## கணபதிபுரம் குடியேற்றம், மல்வத்தை, சம்மாந்துறை

வருடாந்தத் திருவிழா மட்டும் நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- அம்பாறை,
சம்மாந்துறை

## ஸ்ரீ பத்திரகாளியம்பாள் கோவில்
## வள்ளத்தாப்பிட்டி, மல்வத்தை, சம்மாந்துறை

வெள்ளிக்கிழமை தோறும் பூசை நடைபெற்று வருகிறது. ஆவணி மாதத்தில் பத்துத் தினங்களுக்கு உற்சவம் நடைபெறுகிறது.

மாவட்டம்:- அம்பாறை,
சம்மாந்துறை,

## ஸ்ரீ வட பத்திரகாளி அம்பாள் கோவில்
## அன்னமலை, கல்முனை

விசேட தினங்களில் பூசை சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- அம்பாறை,
சம்மாந்துறை

## ஸ்ரீ மாரியம்மன் கோவில்
## மல்லிகைத் தீவு, மல்வத்தை

அம்பாளை குல தெய்வமாக மக்கள் போற்றி வருகின்றனர். விசேட காலங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும்.

மாவட்டம்:- அம்பாறை,
சம்மாந்துறை.

## வீரமுனை ஸ்ரீ கண்ணகை அம்பாள் கோவில்
## வீரமுனை, சம்மாந்துறை

மூலமூர்த்தி — ஸ்ரீ கண்ணகி அம்பாள். பரிவார மூர்த்தி — வைரவர். வெள்ளிதோறும் பூசை வழிபாடுகள் உண்டு. வைகாசி மாதத்தில் ஏழு நாட்களுக்கு நடைபெறும். உற்சவம் குளிர்த்தித் திருவிழாவுடன் முடிவடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அம்பாறை,
சம்மாந்துறை,

**ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவில்**
**4 ஆம் கிராமம், சம்மாந்துறை**

வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெறும். வைகாசித் திங்களில் தொடர்ந்து எட்டு நாட்களுக்குப் பூசையும், திருவிழாவும் நடைபெறும்.

மாவட்டம்:- அம்பாறை,
சம்மாந்துறை.

**நாகேஸ்வரர் கோவில்**
**கமபிக்காலே, சவளக்கடை, சம்மாந்துறை**

1958 இல் ஸ்தாபிக்கப்பட்டது. தினமும் காலே, உச்சிக்காலம் பூசைகள் நடைபெறுகின்றன. வைகாசிப் பூரணையில் மூன்று நாள் திருவிழா நடைபெறுகிறது.

மாவட்டம்:- அம்பாறை,
அக்கரைப்பற்று

**ஸ்ரீ பாசுபதேஸ்வரர் கோவில்**
**பனங்காடு, அக்கரைப்பற்று**

மூலமூர்த்தி — சிவலிங்கம். பரிவார மூர்த்திகள் — விநாயகர், அம்பாள், ஐயனர், சுப்பிரமணியர், வைரவர், சண்டேஸ்வரர். தினமும் மூன்று காலப் பூசை. ஆவணியில் மகோற்சவம் நடைபெற்று வருகின்றது.

மாவட்டம்:- அம்பாறை,
அக்கரைப்பற்று.

**ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்**
**கருங்கொடித்தீவு, 7 ஆம் குறிச்சி, அக்கரைப்பற்று**

தினமும் மூன்று காலப் பூசை. திருவெம்பாவைக் காலத்தில் பத்துத் தினங்களுக்கு திருவிழா நடைபெற்று கடல் தீர்த்தத்துடன் முடிவடையும். 200 வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம் என்பது வரலாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அம்பாறை,
அக்கரைப்பற்று.

**பட்டிநகர் ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவில்**
**பனங்காடு, அக்கரைப்பற்று**

கண்ணகி வரலாற்றேடு தொடர்புடைய ஆலயம் என்பது வரலாறு. கண்டி அரசனல் மானியமாக வழிபாட்டுக்காக வழங்கப்பட்ட சொத்துக்களையுடையது. மூலமூர்த்தி — ஸ்ரீ கண்ணகை அம்பாள். பரிவார மூர்த்திகள்— விநாயகர், வைரவர் நாகதம்பிரான். வைகாசித் திங்களில் குளிர்த்தி நடைபெறும் வகையில் வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- அம்பாறை,
திருக்கோவில்.

**ஸ்ரீ சகலகலை அம்பாள் கோவில்**
**கள்ளியந்தீவு, திருக்கோவில்**

ஆண்டுதோறும் மே மாதப் பௌர்ணமியில் விசேட பூசை வழிபாடு நடைபெறும். திருவிழா தொடர்ந்து மூன்று தினங்களுக்கு நடைபெற்று வருகிறது.

மாவட்டம்:- அம்பாறை,
திருக்கோவில்.

**சமாதிப் பிள்ளையார் கோவில்**
**கோரைக்களப்பு, திருக்கோவில்**

விசேட தினங்களில் பொங்கல் வழிபாடு உண்டு. நீண்ட காலமாக இப்பகுதியில் மக்களால் வழிபடப்பட்டு வரும் தலம்.

மாவட்டம்:- அம்பாறை,
திருக்கோவில்.

**பிள்ளையார் கோவில்**
**சாகாமம் 7 ஆம் வட்டாரம், தம்பிலுவில்**

நித்திய பூசை உண்டு. 1800 ஆம் ஆண்டு குடியேறிய மக்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம். ஆனி உத்தரம், கார்த்திகை விளக்கீடு, சித்திரா பௌர்ணமி, சிவராத்திரி போன்ற காலங்களில் விழா வெடுக்கப்படும். பரிவார மூர்த்திகள் — வைரவர், நாகதம்பிரான்.

மாவட்டம்:- அம்பாறை,
திருக்கோவில்.

**காஞ்சுரம்குடா கபாலவிநாயகர் கோவில்**
**காஞ்சுரம்குடா, திருக்கோவில்**

நித்திய பூசை நடைபெறுகிறது. குடியேற்றவாசிகளால் ஸ்தாபிக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அம்பாறை,
திருக்கோவில்.

அக்கிராசப் பிள்ளையார் கோவில்
அக்கரைப்பற்று, திருக்கோவில்

மாதாந்தம் பௌர்ணமி தினத்தன்று விசேட பூசை நடைபெறு கிறது. சித்திரை நோன்பு சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகிறது. விசேட உற்சவ தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- அம்பாறை,
திருக்கோவில்.

செம்மண்புலே ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
தம்பட்டை, தம்பிலுவில் 1

தினமும் நித்திய பூசை. சித்திரா பூரணையிலும், திருவாதிரை, திருக்கார்த்திகை போன்ற காலங்களிலும் திருவிழாக்கள் உண்டு. ஆலயத்திலுள்ள விக்கிரகம் கடலில் கண்டெடுக்கப்பட்டதாகக் கர்ணபரம்பரைக் கதை ஒன்றுண்டு. பரிவார மூர்த்திகள் — வைரவர், நாகதம்பிரான்.

மாவட்டம்:- அம்பாறை,
திருக்கோவில்.

ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
2 ஆம் குறிச்சி, தம்பிலுவில்

தினமும் மூன்று காலப் பூசை. விநாயகர் சதுர்த்தித் திருவிழா வும் நடைபெறுகின்றது. விசேட உற்சவமும் உண்டு. பரிவார மூர்த்திகள் — நடேசர், சுப்பிரமணியர், வைரவர்.

மாவட்டம்:- அம்பாறை,
திருக்கோவில்.

ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
விநாயகபுரம், அக்கரைப்பற்றுத் தென்பகுதி

விசேட உற்சவ நாட்களில் விசேட பூசை வழிபாடுகள் நடை பெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அம்பாறை,
திருக்கோவில்.

### சித்திரவேலாயுத சுவாமி கோவில்
### திருக்கோவில்

மட்டக்களப்பிலுள்ள முதலாவது திருப்படைக் கோவில் சித்திர வேலாயுதசுவாமி கோவில் ஆகும். இதனைத் தேசத்துக் கோவில் என்றும் அழைப்பர்.

கிறிஸ்துவுக்குப் பின் 1315 இல் பாண்டிய நாட்டிற்கும், மட்டக் களப்புத் திருக்கோயிலுக்கும் கலையுறவு பற்றிய நேரடித் தொடர் புகள் ஏற்பட்டமைக்குச் சான்றுகள் உள்ளன. காலத்திற்குக் காலம் இக்கோவிலின் திருப்பணி வேலைகள் இந்தியாவிலிருந்து வந்தவர் களினுல் செய்யப்பட்டு வந்துள்ளன. சோழ நாட்டிலிருந்து குடிகள் இங்கு வந்ததற்குச் சான்றுகள் உள்ளன.

தினமும் மூன்று காலப் பூசை. ஆடி அமாவாசையன்று சமுத்திர தீர்த்தோற்சவம் நடைபெறக்கூடியவாறு வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது. கந்தசஷ்டி, சூரன்போர், கார்த்திகை விளக்கீடு, விநாயக விரதம், திருவெம்பாவை, திருவாதிரை, சிவ ராத்திரி, சித்திரை வருடப்பிறப்புபோன்ற தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன. பரிவார மூர்த்தி களாக அக்கிரகாரப் பிள்ளையார், வெட்டுக் குழந்தைப் பிள்ளை யார், மாணிக்கப் பிள்ளையார், சித்திவிநாயகர், வைரவர், நாக லிங்கேஸ்வரர் உள்ளனர்.

மாவட்டம்:- அம்பாறை,
திருக்கோவில்.

### ஸ்ரீ ஆறுமுகசுவாமி கோவில்
### தம்பட்டை, தம்பிலுவில் 1

தினமும் மூன்று காலப் பூசை. விசேட காலங்களில் திருவிழாவும் நடைபெறுகின்றது. மூலமூர்த்தி — தேவிமாருடனுன ஆறுமுக சுவாமி. பரிவார மூர்த்தி — விக்நேஸ்வரர். ஆடிப்பௌர்ணமி, கார்த்திகை, சித்திரைத் திருவிழாக்கள், தைப்பூசம், சிவராத்திரி, கந்தசஷ்டி ஆகிய விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அம்பாறை,
திருக்கோவில்.

## ஸ்ரீ விஷ்ணு கோவில்
## 1 ஆம் குறிச்சி, தம்பிலுவில்

பெரியதம்பிரான் (விஷ்ணு) ஆலயம் அழைப்பதுண்டு. மூல மூர்த்தி — திரிசூலம். வருடத்திக்கு ஒருமுறை பூசை. ஆடி மாத வளர்பிறையில் மூன்று நாள் உற்சவம். இக்கிராமத்திலுள்ள வைணவ பக்தர்களின் மூதாதையர்களினால் அமைக்கப்பட்டதாக வரலாறு.

மாவட்டம்:- அம்பாறை,
திருக்கோவில்.

## பெரியதம்பிரான் கோவில்
## 1 ஆம் குறிச்சி, தம்பிலுவில்

மூலமூர்த்தி — விஷ்ணு. ஆடித் திங்களில் வளர்பிறையுடன் ஆரம்பமாகி ஒரு வாரம் திருவிழா நடைபெற்று ஆடிப் பூரணை யுடன் முடிவடையும். சுமார் 100 வருடங்களுக்கு முன்னர் ஸ்தா பிக்கப்பட்டது.

மாவட்டம்:- அம்பாறை,
திருக்கோவில்.

## ஸ்ரீ பத்திரகாளியம்பாள் கோவில்
## முனையூர், தம்பிலுவில் 1

தொன்றுதொட்டு தம்பிலுவில் வாழ் மக்களால் வணங்கப்பட்டு வரும் ஆலயம். வாராந்தம் பூசை நடைபெறுகிறது. ஆவணிப் பூரணையில் விசேட திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- அம்பாறை,
திருக்கோவில்.

## ஆலையடி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
## விநாயகபுரம், திருக்கோவில்

வருடாந்தம் மூன்று நாட்களுக்குப் பூசை நடத்தப்படுகிறது. இதர முக்கிய நாட்களில் விளக்கு ஏற்றி வழிபாடு நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அம்பாறை,
பொத்துவில்.

### சங்கமான் கண்டிப் பிள்ளையார் கோவில்
### கோமாரி

இந்த ஆலயம் மட்டக்களப்பிலிருந்து பொத்துவிலுக்குச் செல்லும் பிரதான பாதையில் சுமார் ஐம்பத்தாறு மைல் தொலைவில் உள்ளது. இக்கோவிலுக்கு ஒரு மைல் தூரத்தில் சங்குமான் கண்டி மலை இருக்கிறது. கதிர்காமத்துக்குச் செல்லும் கால் நடை யாத்திரிகர்கள் இங்கு தங்கிச் செல்வது வழக்கம். 1950 ஆம் ஆண்டில் முதலில் இங்கு ஆலயம் எழுப்பப்பட்டது. கருங்கற்களினால் அமைக்கப்பட்ட கோவிலில் 1960 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடந்தது. பின்னர் அர்த்தமண்டபம், மகாமண்டபம், யாளி மண்டபம், ஆகியன அமைக்கப்பட்டு 1979 இல் கும்பாபிஷேகம் நடந்தேறியது. மலையைக் குடைந்து தீர்த்தக்கிணறு அமைக்கப்பட்டிருக்கிறது.

வருடாந்த உற்சவம் ஆடி மாதத்தில் நடைபெற்றுத் தீர்த்தோற்சவத்துடன் முடிவடையும். திருக்கார்த்திகை, தைப்பொங்கல், சிவராத்திரி, சித்திரை வருடப்பிறப்பு, ஆகிய விசேட தினங்களில் விசேஷ பூசைகள் நடைபெறுகின்றன.

மாவட்ட்ம்:- அம்பாறை,
பொத்துவில்.

### சாளம்பையடிப் பிள்ளையார் கோவில்
### இன்ஸ்பெக்ரர் ஏத்தம், பொத்துவில்

மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்திகள் — சிவலிங்கம், பிள்ளையார், நாகதம்பிரான் ஆகியோர். தினமும் உச்சிக் காலப் பூசை நடைபெறும்.

மாவட்டம்:- அம்பாறை,
பொத்துவில்.

### ஆலையடிப் பிள்ளையார் கோவில்
### 3 ஆம் குறிச்சி, குண்டுமடு, பொத்துவில்

இங்கு தினமும் மூன்று காலப் பூசை நடைபெறுகிறது. கேதார கௌரி விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. 1947 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுப் பிரார்த்தனையும் ஞாயிற்றுக்கிழமைகளில் சமய வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- அம்பாறை,
பொத்துவில்.

## உகந்தமலை முருகன் கோவில்
## பொத்துவில்

இது மிகப் பழமையான தலம். வருடாந்த திருவிழா ஆடிப் பூரணையையண்டிக் கதிர்காமத் தீர்த்தத்துடன் நடைபெறும். முதல் மூன்று திருவிழாக்களின் போதும், சுவாமியைத் தாம்பாளத்தில் வைத்துப் பட்டுச் சேலையால் மூடி வீதிவலம் வருகிறார்கள். அப் போது கொண்டு வரப்படுவது வேல் ஒன்றே ஆகும். 4 – 15 ஆம் திருவிழாக்களின் போது திறந்த தேரில் மயூரம், வேல் என்பவற் றுடன் முருகன் வலம் வருவார். வள்ளி அம்மனோ, தெய்வானை அம்மனோ இவ்வீதிவலத்தின்போது பங்குகொள்ளும் வழக்கம் இல்லை. கொடியேற்றம் மற்றைய கோவில்களிற்போல் ஆகம விதி களின்படியின்றி சாதாரண செயல் போலவே இங்கு நடைபெறு கின்றது.

சுவாமி தீர்த்தமாடும் அன்றே கொடி இறக்கப்படும். உகந்தை மலையின் அடிவாரத்தில் பிள்ளையார் கோவிலொன்று அமைக்கப் பட்டுள்ளது. அக்கோவிலின் மலையடிவாரத்தில் தலவிருட்சம் என்று சொல்லப்படும் நாவல் மரம் நிற்கின்றது.

கதிர்காமத்திற்கு நடந்து செல்லும் யாத்திரிகர்கள் யாவரும் இவ்வழியே வந்து தங்கி இம்முருகனின் திருவிழாவைப் பார்த்து வணங்கி, சுனைகளில் நீராடி, பிள்ளையாருக்குப் பொங்கிப் படைத்து அமுது கொடுத்துச் செல்வது வழக்கம்.

மாவட்டம்:- அம்பாறை,
உகனை.


## ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில்
## அம்பாறை

மூலமூர்த்தி – மாணிக்கப் பிள்ளையார். பரிவார மூர்த்திகள் – சிவன், முருகன், வைரவர். மூன்று காலப் பூசை. வருடாந்த உற்சவம் ஆவணித் திங்கள் கொடியேற்றத்துடன் அரம்பமாகிப் பத்துத் தினங்கள் நடைபெற்று தீர்த்த உற்சவத்துடன் முடிவடை யும். 1926 ஆம் ஆண்டில் பிள்ளையார் விக்கிரகம் கண்டு எடுக்கப் பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை மாவட்டக் கோவில் படங்கள்



அம் /திருக்கோயில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயம்



அம் / [illegible] முருகன் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அம் / உகந்தமலையிலுள்ள வள்ளியம்மன் ஆலயத்தின் தோற்றம்

அம் / சங்கமன் கண்டிப் பிள்ளையார் கோவிலில் இயற்கை அழகுடன் காட்சியளிக்கும்
மூலஸ்தான பண்டிகை வேலைப்பாடுகள்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




அம் /சங்கமன் கண்டியில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையார்

அம் /காரைத்தீவிலுள்ள கண்ணகை அம்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம் / அம்பாறைப் பிள்ளையார் ஆலயம்



அம்பாறையில் குளத்திலிருந்து எடுக்கப்பட்ட மிகப் பழமை
வாய்ந்த விக்னேஸ்வரப் பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம் /தம்பிலுவில் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள மூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மொனருகலை மாவட்டம்

மொனருகலை மாவட்டம் கொழும்பிலிருந்து 170 மைல் தூரத்தில் உள்ளது இம் மாவட்டத்துக்கு கொழும்பிலிருந்தும், கண்டியிலிருந்தும், அம்பாறையிலிருந்தும் பேரூந்து வசதிகள் உள்ளன. தனியார் பேரூந்து வசதிகளும் உள்ளன.

இம்மாவட்டத்தில் இலங்கையில் புனித நகர்களுள் ஒன்ருகக் கருதப்படும் கதிர்காமம் உள்ளது. இப்புனித நகரத்திலே அடர்ந்த காடுகளின் மத்தியில் மலையும், வயலும் சூழவுள்ள பிரதேசத்தில் புனித மாணிக்ககங்கை பாயும் இத்திருப்பதியின் கரையில் கதிர்காம கந்தன் வீற்றிருந்து எம் எல்லோருக்கும் அருள் பாலித்த வண்ணம் உள்ளார்.

இப்புண்ணிய திருக்கோவிலை வழிபட்டு இங்கிருந்து பேரூந்தில் பதுளை மாவட்டம் செல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மொனறாகலை.
மொனறாகலை.

ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில்
பாலாறுவ, மொனறாகலை

தினமும் ஆறு காலப் பூசை. கதிர்காமத் தீர்த்தத்தையொட்டி மூன்று தினங்களுக்கு உற்சவம் நடைபெறுகின்றது. இது தவிர விசேட மாதாந்தப் பூசைகளும் உண்டு.

மாவட்டம்:- மொனறாகலை.
மொனறாகலை.

கதிர்காமக் கந்தன் கோவில்
கதிர்காமம்

தென்னிலங்கையின் நடுப்பகுதியில், மலைகளும், காடுகளும் சூழ்ந்துள்ள இடத்தில் மாணிக்க் கங்கை தழுவிச் செல்லும் வனப்புறு திருநகரில் எழுந்தருளியுள்ளார் கதிர்காமக் கந்தன். இக்கந்தப் பெருமான் காவற்றெய்வம் என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு. பிள்ளையார் மலை, வீரபாகு மலை, தெய்வயானை மலை, வள்ளியம்மை மலை ஆகிய மலைகளின் நடுவே சந்திரன், சூரியன், அக்கினி ஆகிய முச்சுடர்களின் சோதி பெற்று உலகுக்கெல்லாம் பேரொளியாய் விளங்குவது கதிரமலை. கதிரமலையில் வள்ளி, தெய்வயானை சமேதராய் எழுந்தருளியுள்ளார் கதிர்காமக் கந்தன் என்று தக்ஷிண கைலாய புராணம் கூறுகிறது. யாழ்ப்பாண வைபவமாலை, மகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்சம் ஆகிய நூல்களில் கதிர்காமம் பற்றிய குறிப்புக்கள் உண்டு. கதிர்காமக் கந்தனின் சந்நிதி தெற்கு நோக்கியும் வள்ளியம்மையின் சந்நிதி வடக்கு நோக்கியும், தெய்வயானை அம்மையின் சந்நிதி கிழக்கு நோக்கியும் அமைந்திருக்கின்றன. வள்ளியம்மையாருக்கு அடிமை பூண்ட முத்துலிங்கசுவாமி சந்நிதி மாணிக்க கங்கையைக் கடந்து வரும் அடியார்களை அன்புடன் உபசரித்து, முருகனிடம் ஆற்றுப்படுத்தும் கருத்துடன் மேற்குத் திசையை நோக்கி அமைந் திருக்கின்றது. அத்தோடு பக்தர்களால் அன்போடு வணங்கப் படும் பிள்ளையார், பெருமாள், வைரவர் ஆகியோருக்கான சந்நிதி களும் இங்கு உண்டு. பௌத்த வழிபாட்டுக்கான கிரி விகாரையும், இஸ்லாமியர்களுக்கான பள்ளிவாசலும் இங்கு இருப்பது நோக்கற் பாலது.

கதிர்காம வேலவருக்குப் பூசை செய்பவர் கப்புறளை என்று அழைக்கப்படுகிறார். இவர்கள் மரபு வழியாக வாயை மஞ்சள் துணியால் கட்டிப் பூசை செய்வார்கள். வள்ளி மணாளனுக்குப் பூசைக் காலத்தில் ஆராத்திப் பெண்கள் ஆரத்தி எடுக்கும் வழக்கம் இங்கு இன்றும் உண்டு. உலகின் பல பாகங்களிலுமிருந்து இவ் வாலயத்திற்கு யாத்திரிகர்கள் நாளாவண்ணம் வந்து கொண்டே யிருக்கின்றனர். ஆட்டக்காவடி, பாற்காவடி, பறவைக்காவடி, கற்பூரக்காவடி போன்றவற்றை இங்கு தினமும் காணக்கூடிய தாக இருக்கும். பேரொளிபடைத்த கதிர்காமக் கந்தன் ஆலயத்தில் பக்தர்கள் ஏற்றும் கற்பூர ஒளியை என்றும் காணலாம். பாற்காவடி ஆட்டக்காவடி, முதலானவையும் தீக்குளிப்பும் இங்கு பக்தர்களால் நேர்த்திக் கடனாக நிறைவேற்றப்படுவனவாகும்.

இவ்வாலயத்தில் வருடாவருடம் நான்கு திருவிழாக்கள் நடை பெற்று வருகின்றன. அவை, சித்திரை வருடப்பிறப்பன்று முதல் திருவிழாவும், ஆனி அல்லது ஆடி மாதத்தில் பந்தற்கால் நடும் திருவிழாவும், மூன்றாவதாக ஆனி அல்லது ஆடி மாதத்தில் பதி னைந்து நாட்களுக்கு நடைபெறும் தீர்த்தோற்சவத்தோடு கூடிய வருடாந்தத் திருவிழாவும், நான்காவதாக கதிர்காமக் கந்தனுக்கே உரித்தான திருக்கார்த்திகை விளக்கீட்டுத் திருவிழாவும் ஆகும். இத்திருவிழாக் காலங்களில் பக்தர்கள் நாட்டின் பல்வேறு பகுதி களிலிருந்தும் அங்கு செல்வார்கள்.

மாணிக்க கங்கைத் தீர்த்தம் மிக அற்புதமானது. பக்தர்களின் நோய்களை அகற்றவல்லது. மாணிக்க கங்கை செல்லக் கதிர்காமத் தைத் தழுவிச் செல்லுகின்றது. செல்லக் கதிர்காமத்தைப் பழைய கதிர்காமம் எனவும் கூறுவர். கதிர்காமத்திலிருந்து சுமார் மூன்று மைல் தூரத்தில் அமைந்திருக்கிறது செல்லக் கதிர்காமம். செல்லக் கதிர்காமத்தில் மாணிக்கப் பிள்ளையார் வீற்றிருந்து அடியார் களுக்கு அருள்பாலிக்கின்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரமலையில் ஏறுமுன் முதலில் பிள்ளையார் மலையிலுள்ள பிள்ளையாரைத் தரிசித்து அவரிடம் அருள்பெற்றுக்கொண்டு பக்தர்கள் கதிரமலைக்கு ஏறுவர். பிள்ளையார் மலையிலிருந்து கதிரமலைக்குச் செல்லும் பாதை செங்குத்தானபடியால் "முருகா, முருகா" என்று கோஷமிட்டுக்கொண்டு மலையேறுவர். அருணகிரிநாத சுவாமிகள், தாயுமான சுவாமிகள் ஆகியோர் கதிர்காமக் கந்தனைப் போற்றிப் பாடியுள்ளார்கள். மற்றும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சுத்தானந்த பாரதியார், நவாலியூர் சோமசுந்தரப்புலவர் சிவன் கருணாலய பாண்டியனார். போன்ற பலரும் கந்தப்பெருமான்பால் பாமாலை பாடியுள்ளார்கள். இலங்கைக்கு விஜயம் செய்யும் யாத்திரிகர்கள் கதிர்காமக் கந்தனைச் சென்று தரிசிக்கத் தவறுவதில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொனருகலை மாவட்டக் கோவில் படங்கள்



கதிர்காமக் கந்தன் ஆலயத்தில் பிள்ளையார் கோவிலிலுள்ள ஓவியம்



கதிர்காமத்தில் தெய்வயானை அம்மன் ஆலயத்தில் உள்ள தெய்வயானை அம்மனின் ஓவியம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கதிர்காமத்தில் உள்ள பழனியாண்டவர் கோவில்




கதிர்காமத்தி[illegible]வன் கோவில்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



செல்லக் கதிர்காமத்திலுள்ள புராதன செல்வக் கதிர்காம ஆலயத்தின் தோற்றம்



கதிர்காமம், வள்ளியம்மன் ஆலயத்திலுள்ள வள்ளியம்மன் ஓவியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம

# பதுளை மாவட்டம்

கொழும்பிலிருந்து 148 மைல் தூரத்திலுள்ளது. கொழும்பிலிருந்தும் கதிர்காமத்திலிருந்தும் பேரூந்தில் பதுளை மாவட்டத்துக்குச் செல்ல முடியும்.

பதுளை மாவட்டத்தில் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார். இக்கோவிலோடு இங்கு முருகன் ஆலயங்களும் அம்பாள் ஆலயங்களும் உள்ளன.

இம்மாவட்டத்திலுள்ள ஆலயங்களை வழிபட்ட பின் நுவரெலியா மாவட்டத்துக்குச் செல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- பதுளை.
பதுளை.

### ஸ்ரீ மாணிக்க விநாயகர், கதிர்வேலாயுத சுவாமி கோவில்
### 14 பஜார் வீதி, பதுளை

மூலமூர்த்தி — வேல். பரிவார மூர்த்திகள் — விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், நவக்கிரகம். நான்கு காலப் பூசை. ஆடிப் பௌர்ணமியன்று ரதோற்சவம் நடைபெறக்கூடியவாறு வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது. சுமார் 100 வருடங்கள் பழமை வாய்ந்த ஆலயம்.

மாவட்டம்:- பதுளை.
பதுளை.

### ஸ்ரீ காளியம்மன் கோவில்
### இம்புள்கொட, பதுளை

தினமும் மூன்று காலப் பூசை. ஆடி மாதத்தில் மகோற்சவம் ஆரம்பமாகிப் பதினைந்து நாட்களுக்குத் திருவிழா நடைபெற்றுத் தேர், தீர்த்தத்துடன் முடிவடையும். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், சுப்பிரமணியர், நவக்கிரகம், பங்குனி உத்தரம், நவராத்திரி, சிவராத்திரி, கந்தசஷ்டி, வருடப்பிறப்பு போன்ற திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

மாவட்டம்:- பதுளை.
பதுளை.

### ஸ்ரீ காளியம்பாள் கோவில்
### ரொக்ஹில், பதுளை

நித்திய பூசை உண்டு. வருடாந்த உற்சவமும், விசேட தினங்களில் விசேட உற்சவமும் நடைபெறுகின்றன. தற்போது ஆலய புனருத்தாரண வேலைகள் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- பதுளை.
ஹல்தும்முல்ல.

**ஸ்ரீ ஆதிவிநாயகர் கோவில்**
**ஹல்தும்முல்லை**

நூறு வருடங்களுக்கு முற்பட்டது. விநாயகர், சுப்பிரமணியர், நவக்கிரகம், வைரவர் ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் நான்கு காலப் பூசை. ஆனியில் கொடியேற்றத்துடன் உற்சவம் ஆரம்பமாகித் தேர் தீர்த்தத்துடன் நிறைவுறும். தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், சித்திரா பௌர்ணமி, வைகாசி விசாகம் ஆகிய தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- பதுளை.
பண்டாரவளை.

**ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்**
**பன்சல வீதி, பண்டாரவளை**

மூலமூர்த்தி — ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர். இவ்விக்கிரகம் இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்டது. பரிவார மூர்த்திகள் — விநாயகர், தண்டாயுதபாணி, மாரியம்மன், நவக்கிரகம், வைரவர். தினமும் நான்கு காலப் பூசை. வைகாசிப் புனர்பூச நட்சத்திரத்தையொட்டி வருடாந்த உற்சவம் நடைபெறுகின்றது. 1937 இல் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 1943 இல் கும்பாபிஷேக விழா நடைபெற்றது. பின்னர் மண்டப வேலைகள் முடிந்ததும் 1973 இல் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

விநாயக சதுர்த்தி, கார்த்திகைத்தீபம், கந்தசஷ்டி, சிவராத்திரி, நவராத்திரி, தைப்பூசம் ஆகிய விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- பதுளை.
பெரகலை, அவ்தமுல்லை.

**ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில்**
**17 பிரதான வீதி, கொஸ்லந்தை**

மூலமூர்த்தி — வேல். பரிவார மூர்த்திகள் — நடேசர், விநாயகர், இடும்பன், நவக்கிரகம், வைரவர். மூன்று காலப் பூசை. கதிர்காம உற்சவத்துடன் கொடியேற்றித் திருவிழா ஆரம்பித்து பதின்நான்கு தினங்களுக்கு நடைபெற்றுவருகிறது. சிவராத்திரி, நவராத்திரி, திருவெம்பாவை, கந்தசஷ்டி ஆகிய விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- பதுளை.
பசறை.

ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
மௌசாக்கொல்லை டிவிஷன், கணவரை குரூப், நமுனுகுல

1942 இல் ஸ்தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி — ஸ்ரீ பாலதண்டாயுதபாணி. பரிவார மூர்த்தி — விநாயகர். தினமும் இரு காலப் பூசை. ஆடி அமாவாசையை அந்தமாகக் கொண்டு வருடாந்த உற்சவம் ஏழு தினங்களுக்கு நடைபெறுகின்றது.

மாவட்டம்:- பதுளை.
பதுளை.

ஸ்ரீ பாலதண்டாயுதபாணி கோவில்
குருக்கடி டிவிஷன், அயிஸ்லபி தோட்டம், பண்டாரவளை

வாரம் இருமுறை (செவ்வாய், வெள்ளி) பூசை நடைபெறும். ஆகஸ்ட் மாதத்தில் வருடாந்த உற்சவம் இடம்பெறும். விசேட நாட்களில் விசேட பூசை வழிபாடுகள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நுவரெலியா மாவட்டம்

கொழும்பிலிருந்து 106 மைல் தொலைவில் உள்ளது. பதுளையில் இருந்தும், கொழும்பிலிருந்தும் பேரூந்து மூலஞ் செல்லலாம். கொழும்பிலிருந்து புகையிரத மூலம் செல்வதானால் நானுஓயா வரை புகையிரத மார்க்கமாகச் சென்று, அங்கிருந்து பேரூந்து மூலம் செல்லமுடியும்.

இம்மாவட்டத்தில் மாணிக்க விநாயகர், அண்மைக் காலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட லங்காதீஸ்வரர் ஆகிய மூர்த்திகள் பிரசித்தி பெற்று விளங்குகின்றனர். இம்மாவட்டத்தில் ஏனைய ஆலயங்களும் சிறப்புற்று விளங்குகின்றன. சீதா எலிய எனும் இடம் சீதையைச் சிறைவைத்த இடம் எனக் கூறுவர். அந்த இடத்தையும், அங்குள்ள சீதை அம்மன் கோவிலையும் நாம் தரிசிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- நுவரெலியா,
நுவரெலியா.

## ஸ்ரீ லங்காதீஸ்வரர் கோவில்
## 82, லேடி மக்கலம் டிறைவ், நுவரெலியா

புனித நர்மதா நதியில் கண்டெடுக்கப்பட்ட சுயம்பு லிங்கத்தை ஸ்ரீ சிவபாலயோகி மகராஜ் அவர்கள் 1978 ஆம் ஆண்டு இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்தார்கள். ஆலயத்தில் கணேசர், பார்வதி விக்கிரகங்களும் உண்டு. தினமும் மூன்று காலப் பூசை. சிவராத்திரி, நவராத்திரி, திருவெம்பாவை போன்ற விசேட காலங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- நுவரெலியா,
நுவரெலியா.

## சீதையம்மன் கோவில்
## நுவரெலியா

நான்கு பக்கமும் அரண்போல் மலைகளால் சூழப்பட்டு வனப்புறு மரங்களின் நடுவே பாய்ந்து ஓடும் நீர்ச்சுனையின் அருகே அமைந்துள்ளது சீதையம்மன் கோவில். சீதா பிராட்டியார் எவ்வகையான சிறையிலிருந்தார் என்ற நிகழ்ச்சியை இவ்வாலயத்துக்கு நாம் சென்றதும் அங்கு காணப்படும் இயற்கை அமைப்பு மூலம் உணர்ந்து கொள்ளமுடிகிறது. இவ்வாலயத்துக்குத் தினந்தோறும் பக்தர்கள் சென்று வழிபட்டு வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- நுவரெலியா,
கினிகத்தேனே.

### ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில்
### பிரதான வீதி, அட்டன்

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — ஸ்ரீ வள்ளி தேவசேனு சமேத சுப்பிரமணியர், நவக்கிரகம், வைரவர். தினமும் மூன்று காலப் பூசை உளது. மாத உற்சவம் மாதச் சதுர்த்திகளில் உண்டு. சித்திரா பௌர்ணமியன்று வருடாந்தப் பெருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. வாரந்தோறும் இலவச பண்ணிசை வகுப்பு நடத்தப்பட்டுவருகிறது.

மாவட்டம்:- நுவரெலியா,
கொட்டகலே.

### ஸ்ரீ முத்து விநாயகர் கோவில்
### வூட்டன் கடைவீதி, கொட்டகலே

தினமும் மூன்று காலப் பூசை. விநாயக சதுர்த்திக்கு அலங்கார உற்சவம். இதர விசேட நாட்கள் விசேட பூசைகள், வழிபாடுகள் உண்டு.

மாவட்டம்:- நுவரெலியா,
கினிகத்தேனே.

### ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
### பிரதான வீதி, ஹட்டன்

மூலவர் — வேல். பரிவார மூர்த்திகள் — விநாயகர், வள்ளிதேவசேனு சமேத சுப்பிரமணியர், வைரவர், நவக்கிரகம். தினமும் மூன்று காலப் பூசை. கந்தசஷ்டியும், திருக்கார்த்திகையும் சிறப்பான விழாத் தினங்களாகும்.

மாவட்டம்:- நுவரெலியா,
நுவரெலியா.

### ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில்
### வட்டக்கொடை, கடைவீதி

தினமும் மூன்று காலப் பூசை. பங்குனி உத்தரத்தையொட்டி வருடாந்தத் திருவிழா நடைபெற்று வருகின்றது. ஆலயத்தில் நவக்கிரகம், வைரவர் ஆகிய மூர்த்திகள் உளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- நுவரெலியா,
இனிகத்தேனே.

ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
இராசாத் தோட்டம், மஸ்கெலியா

1955 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. மாசி மகத்தையொட்டி 15 நாட் திருவிழா நடைபெற்றுவருகிறது. ஆலயத்திலுள்ள பெரும்பாலான மூர்த்திகள் தமிழ் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டவை. திருவெம்பாவை, மகாசிவராத்திரி போன்ற காலங்களில் விசேட பூசை வழிபாடுகள் உண்டு. திருவிழாக் காலங்களில் முத்தமிழ்ப் போட்டி நடத்தப்பட்டுவருகிறது.

மாவட்டம்:- நுவரெலியா,
நுவரெலியா.

ஸ்ரீ பாலமுருகன் கோவில்
9, மெயின் வீதி, கந்தப்பளை

இவ்வாலயத்தில் வாரத்தில் இரு நாட்களுக்குப் பூசை நடைபெறும். விசேட தினங்களில் விசேட பூசையும் உண்டு.

மாவட்டம்:- நுவரெலியா,
நுவரெலியா.

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
ஆவா எலியா, நுவரெலியா

தினமும் இரண்டு காலப் பூசை. சித்திரா பௌர்ணமியன்று திருவிழா நடைபெறுகின்றது. ஆலயத்தில் விநாயகர், சுப்பிரமணியர், நவக்கிரகம், சண்டேஸ்வரி ஆகிய மூர்த்திகள் உளர்.

மாவட்டம்:- நுவரெலியா,
நுவரெலியா.

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
251, மல்லியப்பு, ஹட்டன்

நித்திய பூசை உண்டு. நவராத்திரி விழாவும், திருக்கார்த்திகை விழாவும் வருடாவருடம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- நுவரெலியா,
சங்கிலிப்பாலம்.

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
மேமலேத் தோட்டம், பெரட்டாசி குறூப், றம்பொடை

வாரத்தில் வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் பூசை நடைபெறும். பங்குனியில் வருடாந்தத் திருவிழா. தை, ஆடி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் விசேட பூசைகள் உண்டு.

மாவட்டம்:- நுவரெலியா,
ஹட்டன்.

ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்
தறவளே தோட்டம், கீழ்ப்பிரிவு, டிக்கோயா

இங்கு நித்திய பூசையும், விசேட தினங்களில் விசேட பூசைகளும் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- நுவரெலியா,
நுவரெலியா.

ஸ்ரீ முததுமாரியம்மன் கோவில்
கட்டுமானே, நுவரெலியா

பங்குனி, சித்திரை மாதங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- நுவரெலியா,
கினிகத்தேனே.

ஸ்ரீ முனீஸ்வரன் கோவில்
அலுத்கால, டிக்கோயா

தினமும் மூன்று காலப் பூசைகள் நடைபெறுகின்றன. வருடாந்த உற்சவம் சித்திரா பௌர்ணமியில் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கண்டி மாவட்டம்

கொழும்பிலிருந்து 72 மைல் தொலேவில் உள்ளது. கொழும்பி லிருந்து புகையிரதம், பேரூந்து ஆகியன மூலஞ் செல்லலாம். நுவரெலியாவில் இருந்து பேரூந்துகளில் இம்மாவட்டத்தை அடைய முடியும்.

கண்டி, புராதன ராஜதானியாகும். இங்கு செல்வ விநாயகர் கோவில், குறுஞ்சிக் குமரன் கோவில் ஆகியன பிரபல்யமானவை. பௌத்தர்களின் முக்கிய வழிபாட்டுத் தலமும், வருடாவருடம் கோலாகலமாகப் பெரஹரா என்ற திருவிழா நடைபெறுகின்ற தலமுமான ''தலதா மாளிகை'' இம்மாவட்டத்தின் தலைநகரி லேயே உள்ளமை குறிப்பிடப்பட வேண்டியதொன்று.

இம்மாவட்டத்துத் தலங்களைத் தரிசித்த பின்பு மாத்தளை மாவட் டத்திற்குச் செல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாவட்டம்:- கண்டி,**
**கண்டி.**

**ஶ்ரீ செல்வ விநாயகர் கோவில்**
**10/1, பேராதனை வீதி, கட்டுக்கலை, கண்டி**

மூலமூர்த்தி — பிள்ளையார். சோமசுந்தரேஸ்வரர், மீனாட்சியம்பாள் ஆகிய மூர்த்திகளுக்கு விசேட சந்நிதானம் உண்டு. பரிவார மூர்த்திகள் — சோமாஸ்கந்தர், தக்ஷிணாமூர்த்தி, லிங்கோற்பவர், நடராஜர், மகாவிஷ்ணு, சண்டேஸ்வரர். தினமும் நான்கு காலப் பூசைகள் உண்டு. பங்குனி உத்தரத்தையொட்டி மகோற்சவம் நடைபெறுகிறது. தமிழ்நாடு செல்லும் பயணிகளுக்கும், யாத்திரீகர்களுக்கும் கல்யாண மண்டபத்தில் இடமளித்து, வேண்டிய வசதிகள் செய்து கொடுப்பக்கடுகின்றன. கண்டி அரசர் காலத்திலிருந்து தலதாமாளிகை எசல பெரஹராவுடன் தொடர்புடைய கோவில் இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- கண்டி,
கண்டி.

**ஸ்ரீ செல்வ விநாயகர் கோவில்**
**பாரதெக்க, புசல்லாவ**

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — பாலமுருகன், அம்பாள். தினமும் மூன்று காலப் பூசைகள் நடைபெறுகின்றன. வைகாசிச் சதுர்த்தித் தினத்தில் வருடாந்த உற்சவம் நடைபெறும். மஞ்சள் நீராட்டு விழா உட்பட மொத்தம் ஐந்து நாட்களுக்குத் திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- கண்டி,
பன்விலை.

**ஸ்ரீ கங்கை விநாயகர் கோவில்**
**உளுகங்கை, மடுல்கெல**

மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — இருதேவியருடனும் சுப்பிரமணியர், நவக்கிரகம், வைரவர், நாகதம்பிரான். தினமும் நான்கு காலப் பூசை. பங்குனி உத்தரத்தையொட்டி அலங்கார உற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- கண்டி,
பன்விலை.

**ஸ்ரீ செல்வ விநாயகர் கோவில்**
**பன்விலைநகர், பன்விலை**

எழுந்தருளி மூர்த்தி வெண்கலத்திலானது. தினமும் மூன்று காலப் பூசை. தை மாதச் சுவாதியில் கொடியேறி, 12 ஆம் நாள் தேர், 13 ஆம் நாள் தீர்த்தம், தொடர்ந்து பூங்காவனம் நடைபெறுகின்றன. சைவ சமயப் பரீட்சையும், பரிசு வழங்கலும் வருடா வருடம் இடம்பெறும்.

மாவட்டம்:- கண்டி,
பாத்ததும்பற.

**ஸ்ரீ கண்கண்ட விநாயகர் கோவில்**
**வத்துகாமம்**

நித்திய பூசையோடு ஆவணிச் சதுர்த்தியையொட்டி வருடாந்த உற்சவம் நடைபெற்று சதுர்த்தித் தினத்தில் தேர்த் திருவிழா சிறப்பாக இடம்பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- கண்டி,
கண்டி.

குறிஞ்சிக் குமரன் கோவில்
பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை

மூலமூர்த்தி — சுப்பிரமணியர், தேவியர் சமேதராக மயில் வாகனத்தில் காட்சியளிக்கின்றார். பரிவார மூர்த்திகள் — விநாயகர், இராஜேஸ்வரி, மகாவிஷ்ணு, நடேசர், வைரவர். சிவன் அம்பாளுக்குத் தனி ஆலயங்கள் உண்டு. தினமும் நான்கு காலப் பூசை. தைப்பூசத்தை இறுதியாகக் கொண்டு பத்துத் தின அலங்கார உற்சவம். எல்லா விசேட தினங்களிலும் விசேட பூசைகள், வழிபாடுகள் உண்டு. ''இந்து தர்மம்'' என்னும் சஞ்சிகை வருடத்துக்கு ஒருமுறை வெளியிடப்பட்டுவருகிடது.

மாவட்டம்:- கண்டி.
கண்டி.

ஸ்ரீ கதிரேசன் கோவில்
முருகாமலை, கண்டி

மூலமூர்த்தி — அம்பாள்மார் சகிதம் சுப்பிரமணியர். பரிவார மூர்த்திகள் — விநாயகர், நவக்கிரகங்கள். தினமும் மூன்று காலப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆவணி மூலத்தையொட்டி அலங்கார உற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- கண்டி,
கண்டி.

ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில்
கொத்மலை வீதி, நாவலப்பிட்டி

ஏறக்குறைய நூற்றிமுப்பது ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆலயம் இது. நாட்டுக் கோட்டை நகரத்தாரால் ஸ்தாபிக்கப்பட்ட இந்த ஆலயத்தை அவர்களின் பிரதிநிதிகள் பரிபாலித்து வருகின்றனர். முற்காலத்தில் கதிர்காமம் செல்லும் யாத்திரிகர்கள் இந்த ஆலயத்தில் தங்கிச் செல்வார்கள். மூலஸ்தானத்தில் வேல். பரிவார மூர்த்திகள் — நடராஜர், விநாயகர், விஷ்ணு, இடும்பன். மாதக் கார்த்திகை உட்பட விசேட தினங்களில் விசேட வழிபாடுகள் உண்டு. கந்தசஷ்டிப் பெருவிழா ஒன்பது நாட்களுக்குச் சிறப்பாக நடை நடைபெறும். சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம் 1982 ஜனவரி 22 ஆம் திகதி நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- கண்டி,
கங்கஇகலகோரல.

ஸ்ரீ கதிரேசன் கோவில்
தொளஸ்பாகை கடை வீதி, தொளஸ்பாகை

நித்திய வழிபாட்டுடன் விசேட தினங்களில் விசேட பூசைகளும் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- கண்டி,
பாத்தஹேவாஹெட்ட.

ஸ்ரீ தங்கமலை தண்டாயுதபாணி கோவில்
வாழமலை, அம்பிட்டிய

தினமும் மாலையில் பூசை நடைபெறும். பங்குனி உத்தரத்தை யொட்டித் திருவிழா இடம்பெறும்.

மாவட்டம்:- கண்டி,
பாத்ததும்பற.

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில்
25, மாத்தளை வீதி, வத்துகாமம்

தினமும் இரண்டுகாலப் பூசை நடைபெற்றுவருகின்றது. கந்த சஷ்டி காலங்களில் அபிஷேகம், பூசை, உற்சவங்கள் ஆகியன சிறப்பாக இடம்பெற்றுவருகின்றன.

மாவட்டம்:- கண்டி,
உடபவாத்த.

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
57, மலபார் வீதி, கம்பளை

நூற்றைம்பது ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆலயம் இது. பரிவாரத்தில் பிள்ளையார், விஷ்ணு, சண்டேஸ்வரி, ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் ஐந்து காலப் பூசை. பங்குனி உத்தரத்தை யொட்டி பத்துத் தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெறும். நான்கு நாயன்மார்களினதும் குருபூசை வருடந்தோறும் இடம் பெறும்.

மாவட்டம்:- கண்டி,
பஸ்பாகை கோரளை, உடபுலத்கம.

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
105, கொட்மலி வீதி, நாவலப்பிட்டி

மூலமூர்த்தி — ஸ்ரீ முத்துமாரி அம்பாள். பரிவார மூர்த்திகள் — விநாயகர், சுப்பிரமணியர், தண்டாயுதபாணி, நவக்கிரகம், கண்ணன், வைரவர். தினமும் நான்கு காலப் பூசை. கரகஸ்தாபனம், திருவிழா வருடந்தோறும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- கண்டி,
மெததும்பர.

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்**
**தெல்தெனியா, கண்டி**

மூலமூர்த்தி — ஸ்ரீ முத்துமாரி அம்பாள். பரிவார மூர்த்திகள் — விநாயகர், தண்டாயுதபாணி. தினமும் மூன்று காலப் பூசை. நடைபெறுகிறது. பங்குனித் திங்களில் அலங்கார உற்சவம் நடைபெறும்.

மாவட்டம்:- கண்டி,
கட்டுகஸ்தோட்டை.

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்**
**அளவத்துகொட பஜார், கண்டி**

தினமும் இரு காலப் பூசை. தைப்பொங்கல் தினத்தன்று திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- கண்டி,
பாத்ததும்பற.

**ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்**
**1, நூரத்தன்ன வீதி, வத்துகாமம்**

இரு காலப் பூசை தினமும் நடைபெற்று வருகின்றது. வைகாசி விசாகத்தையொட்டிப் பதினொரு தினங்களுக்கு உற்சவம் நடைபெற்று விசாகத்தன்று தீர்த்தத் திருவிழாவுடன் பருடாந்த உற்சவம் முடிவுறும்.

மாவட்டம்:- கண்டி,
மெததும்பர.


**ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்**
**ஊருகல, தெல்தெனியா**

நித்திய பூசையோடு மாசி மகத்தையொட்டி வருடாந்தத் திருவிழா நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி மாவட்டக் கோவில் படங்கள்



கண்டி /கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத் தோற்றம்




கண்டி /[illegible] ஆலயத்தின் [illegible] தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கண்டியிலுள்ள பழமை வாய்ந்த சிவன் கோவில் (நாத தேவாலயம்)


கண்டியிலுள்ள விஷ்ணு ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கண்டியிலுள்ள பத்தினி தேவாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவலப்பிட்டி கதிரேசன் கோவில்



நாவலப்பிட்டி ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலின் வாயில் நிலையில் உள்ள அழகு மர வேலைப்பாடுகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்




நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலின் உட்புறத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பளை கதிரேசன் ஆலயத்தின் உட்தோற்றம்



கம்பளை கதிரேசன் ஆலயத்தின் வாயில் நிலையில் காணப்படும் மர வேலைப்பாடு
அம்பாறை மாவட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மாத்தளை மாவட்டம்

கொழும்பில் இருந்து 87 மைல் தொலைவில் இம்மாவட்டம் உளது. கொழும்பிலிருந்து பேரூந்து மூலமும் புகையிரத மூலமும் இம்மாவட்டத்திற்குச் செல்ல முடியும். கண்டியில் இருந்து பேரூந்திற் செல்வது சுலபமானது.

இங்கு மாத்தளை, ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் உளது. மலையக மக்கள் யாவரும் வந்து வழிபடும் இடமான ஸ்ரீ முத்து மாரியம்மன் கோவில் தேர்த்திருவிழாவிலே ஐந்து தேர்கள் பவனி வருகின்றன.

இம்மாவட்டத்திலிருந்து குருணாகலுக்கு வருவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மாத்தளை,
மாத்தளை.

ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
சுணங்காமம் பிள்ளையார் கோவில் வீதி, மாத்தளை

தினமும் இரண்டு காலப் பூசை. பங்குனி மாதத்தில் அலங்காரத் திருவிழாவும், இரதோற்சவமும் நடைபெறுகின்றன. அம்பாள், சுப்பிரமணியர், வைரவர் ஆகிய மூர்த்திகளும் உள.

மாவட்டம்:- மாத்தளை,
மாத்தளை.

ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோவில்
உணுகலைத் தோட்டம், மாத்தளை

மூலமூர்த்தி — சுப்பிரமணியர். பரிவார மூர்த்திகள் — முருகன், நாகதம்பிரான், நவக்கிரகம். தினமும் இரு காலப் பூசை. பங்குனி உத்தரத்தன்று தேர்த்திருவிழா நடைபெறக்கூடியவாறு பத்துத் தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது. ஆலயம் 1932 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மாத்தளை,
இறத்தோட்டை.

**ஸ்ரீ செல்வவிநாயகர் கோவில்**
**66, மாத்தளை வீதி, இறத்தோட்டை**

1922 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. சித்திரபுத்திரனர் கதைப்படிப்பு, சித்திரா பௌர்ணமி தினங்களில் நடைபெற்றுவருகிறது. மூலமூர்த்தி — விநாயகர். பரிவார மூர்த்திகள் — முருகன், வைரவர். தினமும் இரு காலப் பூசை. சித்திரா பௌர்ணமியில் தேர்த்திருவிழா நடைபெறக்கூடியவாறு பதினைந்து தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெறும். விசேஷ தினங்களில் விசேஷ பூசை வழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன.

மாவட்டம்:- மாத்தளை,
உக்குவளை.

**ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்**
**உக்குவளை**

1969 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி — வள்ளி தேவயானை சமேத சுப்பிரமணியர். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், வைரவர். விசேட தினங்களில் விசேட பூசை, உற்சவங்கள் நடைபெற்றுவருகின்றன.

மாவட்டம்:- மாத்தளை,
உக்குவளை.

**ஸ்ரீ மாரியம்மன் கோவில்**
**43/1, வரக்காமுனை, உக்குவளை**

125 வருடங்கள் பழமையானது. 1925 ஆம் ஆண்டில் ''ஹிஸ் ரோறே ஹன்யு'' என்ற வெள்ளைக்காரர் கல்லினுல் இக்கோவிலைக் கட்டுவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மாத்தளை,
மாத்தளை.

## ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
## ஆலமரத்துச் சந்தி, திருகோணமலை வீதி, மாத்தளை

தேயிலை, றப்பர், தென்னை, கொக்கோ முதலிய பல தருக்களுடன் சோலையும், மலையும், நதியும், வயலும், வரப்பும், பல சூழ்ந்து வனப்புடன் விளங்குகின்றது மாத்தளை நகரம். இவ்வழகிய திருப்பதியில் ஸ்ரீ முத்துமாரியம்பாள் கோவில் கொண்டெழுந்தருளியுள்ளாள். மலையகத் தமிழர்களின் ஒரு பெருவிழாவாக ஆண்டுதோறும் மாசிமக நட்சத்திரத்தன்று தேர்த்திருவிழா பவனி நடைபெற்றுவருகிறது.

''பத்தினி தெய்யோ'' என்று அம்பாளை அழைக்கும் சிங்கள மக்கள் பெருமளவில் ஆலய ரத உற்சவத்தில் கலந்து கொள்கிறார்கள். இம்முத்துமாரியம்பாளின் வரலாறு 120 ஆண்டுகளுக்கு முற்பட்டது. பன்னகமம் என்று மாத்தளை அழைக்கப்பட்டு வந்த காலத்தையது. இந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் அநுராதபுரம் வழியாக மலைநாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்தப் பிரயாணத்தின்போது காடுகளைக் கடந்தவுடன் முதன் முதலாக அவர்களுக்கு எதிர்ப்பட்ட செழிப்பான ஊர் மாத்தளையே. இப்படி இங்கு வந்து சேர்ந்த மக்கள் அம்பாளுக்கு ஆலயம் எடுத்தனர்.

தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள சமயபுரம் என்னும் பதியில் எழுந்தருளியிருக்கும் மாரியம்பாளுக்கு எப்படி ஆண்டுதோறும் பூசை, தேர்த்திருவிழா நடத்துகிறார்களோ அதே போல் இங்கும் தேர்த்திருவிழா நடைபெற்றுவருகிறது.

இங்கு இப்போது ஐந்து ரதங்கள் உள்ளன. இரதோற்சவ தினத்தன்று ஸ்ரீ முத்துவிநாயகர், ஸ்ரீ வள்ளிதேவயானை சமேத ஸ்ரீ சுப்பிரமணியர், ஸ்ரீ முத்து மீனாட்சி அம்பிகை சமேத சோமசுந்தரேஸ்வர மூர்த்தி, ஸ்ரீ முத்துமாரியம்மன், ஸ்ரீ சண்டேஸ்வரி ஆகிய மூர்த்திகள் பஞ்சரதங்களில் எழுந்தருளுவர்.


1958 ஆம் ஆண்டு தொடக்கம் திருப்பணிகள் காலத்துக்குக் காலம் நடைபெற்று வந்திருக்கின்றன. 1960 ஆம் ஆண்டில் அம்பாளின் மூலகோபுர மகா கும்பாபிஷேகம் நடந்தது. 1963 ஆம் ஆண்டில் ஸ்ரீ முத்து மீனாட்சி சுந்தரேஸ்வரர், சண்டேசுவரி ஆகிய மூர்த்தங்களுக்கு தனித்தனி கோவில்கள் அமைக்கப்பட்டன. 1968 ஆம் ஆண்டு கொடித்தம்பம் ஸ்தாபிக்கப்பட்டது. அந்தக் காலத்தில் இருந்து மகோற்சவமும், தீக்குளித்தலும் இங்கு நடைபெற்று வருகின்றன.

தினமும் ஐந்து காலப் பூசை நடைபெற்றுவருகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளை மாவட்டக் கோவில் படங்கள்




மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்



மாத்தளை ஸ்ரீ [illegible] விக்கிரகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாத்தளை ஸ்ரீ கதிரேசன் கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# குருநாகல் மாவட்டம்

கொழும்புலிருந்து 58 மைல் தொலைவில் உள்ளது. கொழும்பிலிருந்து புகையிரத மூலமும், பேரூந்து மூலமும் செல்ல முடியும்.

இங்கு சுப்பிரமணிய சுவாமி கோவில் உள்ளது. இம்மாவட்டத்திலிருந்து கேகாலை மாவட்டத்திற்குச் செல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- குருநாகல்
குருநாகல்

### ஸ்ரீ செல்வவிநாயகர் கோவில்
### புத்தளம் வீதி, குருநாகல்

மடாலயமாகவிருந்து கோவிலாக வளர்ந்தது. 150 வருடம் பழமையானது. 1973 இல் மூலஸ்தானம் அமைத்கப்பட்டது. விநாயகப் பெருமானேடு பரிவாரத்தில் காளி அம்பாள், துர்க்கை அம்பாள், நவக்கிரகம், வைரவர் ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் இரு காலப் பூசை. ஆவணிச் சதுர்த்தியையொட்டி வருடாந்தத் திருவிழா நடைபெற்றுவருகின்றது.

மாவட்டம்:- குருநாகல்
குருநாகல்

### ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
### 263, செட்டியனை வீதி, குளியாப்பிட்டிய

தினமும் இரண்டு காலப் பூசை நித்திய நைமித்திய பூசைகள் நடைபெற்று வருகின்றன. பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், வைரவர். 1952 இல் திருப்பணி வேலைகள் ஆரம்பமாகி 1963 கும்பாபிஷேகம் நிறைவுற்றது.

மாவட்டம்:- குருநாகல்
குருநாகல்

### ஸ்ரீ கதிரேசன் கோவில்
### குருநாகல்

மூலமூர்த்தி — ஸ்ரீ கதிரேசப்பெருமான். பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், வைரவர், நாகதம்பிரான், இடும்பன். தினமும் மூன்று காலப் பூசை. திருவெம்பாவை, நவராத்திரி போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் உண்டு. தலவிருட்சம் — வில்வம். 1972 இல் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- குருநாகலை,
குருநாகலை.

## ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
## டெய்சி வெளித்தோட்டம், மாவத்துகாமம்

மூலமூர்த்தி — அம்பாள். பரிவார மூர்த்திகள் — விநாயகர், முருகன், மகாவிஷ்ணு. வெள்ளிக்கிழமைதோறும் பூசை நடைபெறும். ஆடி மாதத்தில் வருடாந்தத் திருவிழாவும், நவராத்திரி போன்ற காலங்களில் சிறப்பு வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## கேகாலை மாவட்டம்

கொழும்பிலிருந்து 48 மைல் தொலைவில் உள்ளது. கொழும்பிலிருந்து பேரூந்து மூலம் இம்மாவட்டத்திற்குச் செல்லலாம். இங்கு எழுந்தருளியிருக்கும் சுப்பிரமணிய சுவாமியை நாம் தரிசனஞ் செய்யலாம்.

இம்மாவட்டத்திலிருந்து இரத்தினபுரி மாவட்டத்திற்குச் செல்வோம். கொழும்புக்கு வந்து, இங்கிருந்து இரத்தினபுரிக்குச் செல்வது மிகவும் சுலபமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- கேகாலே,
கேகாலே.

### ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில்
### கேகாலே

*1940* ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி – தேவியருடன் கூடிய சுப்பிரமணியர். பரிவார மூர்த்தி – விநாயகர். தினமும் நான்கு காலப் பூசை. தைப்பூசத்தை ஒட்டி மூன்று தினங்களுக்குத் திருவிழா நடைபெற்றுவருகின்றது. ஆலயத் திருப்பணி வேலைகள் முடிவுற்ற '*1967* ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. வருடப்பிறப்பு, நவராத்திரி, மகாசிவராத்திரி, தைப்பொங்கல், தீபாவளி போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- கேகாலே,
கேகாலே.

### ஸ்ரீ கல்பண்டார தேவஸ்தானம் (ஈழத்துப் பழமுதிர்ச்சோலே)
### அம்பன்பிட்டிய, கேகாலே

மூலமூர்த்தி – முருகன். பரிவார மூர்த்திகள் – சிவன், விநாயகர், முத்துமாரியம்மன், கிருஷ்ணர். கதிர்காம உற்சவ காலங்களில் இங்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன. ஏனைய விசேட காலங்களான தைப்பொங்கல், மாசிமகம், சிவாரத்திரி, நவராத்திரி, பங்குனி உத்தரம், கந்தசஷ்டி, திருவெம்பாவை போன்ற விசேட தினங்களிலும் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- கேகாலை,
கேகாலை.

## ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
## பிரதான வீதி, புவக்பிட்டி

மூலமூர்த்தி — ஸ்ரீ முத்துமாரி அம்மன். பரிவார மூர்த்திகள் — விநாயகர், முருகன், நாகதம்பிரான், வைரவர். தினமும் இரு காலப் பூசை. பங்குனி உத்தரத்தையொட்டி வருடாந்த உற்சவம் நடைபெற்றுவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# இரத்தினபுரி மாவட்டம்

கொழும்பிலிருந்து 65 மைல் தொலைவில் உள்ளது. பேருந்தில் பிரயாணஞ் செய்து இம்மாவட்டத்தை அடைய முடியும்.

பழைய சிவன் ஆலயம் ஒன்று இங்கு உளவு. அத்தோடு ஏனைய தலங்களையும் இங்கு வழிபடலாம்.

இரத்தினபுரியிலிருந்து அம்பாந்தோட்டைக்கு வந்து அங்கிருந்து மாத்தறைக்கு வருவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- இரத்தினபுரி,
இரத்தினபுரி.

சிவன் கோவில்
வறக்காதோட்ட வீதி, இரத்தினபுரி

மூலமூர்த்தி — ஸ்ரீ இரத்தினசபேசர். அம்பாள் பெயர் — ஸ்ரீ திரிபுரசுந்தரி. தினமும் நான்கு காலப் பூசை. ஆலயத்தில் அம்பாள், சுப்பிரமணியர், மகாவிஷ்ணு, வைரவர் ஆகிய மூர்த்திகளுடன் சமயகுரவர் நால்வரும் உளர். இந்துசமய முக்கிய தினங்கள் யாவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

மாவட்டம்:- இரத்தினபுரி,
இம்புல்லே.

மாணிக்கப் பிள்ளையார் கோவில்
அமுப்பிற்றிய, பலாங்கொடை

விசேட காலங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டம்:- இரத்தினபுரி,
இரத்தினபுரி.

ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில்
திருவானைக்கட்டு, இரத்தினபுரி

மூலமூர்த்தி — ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி. பரிவார மூர்த்திகள் — விநாயகர், சிவன், இடும்பன், நவக்கிரகம். தினமும் மூன்று காலப் பூசை உண்டு. தைப்பூசத்தை ஒட்டி வருடாந்தத் திருவிழாக்கள் ஐந்து தினங்களுக்கு நடைபெற்றுவருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- இரத்தினபுரி,
பலாங்கொடை.

**ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்**
**59, பிரதான வீதி, பலாங்கொடை**

இங்கு தினமும் மூன்று காலப் பூசை உண்டு. நவராத்திரி காலத்தில் 10 தினங்களுக்கு உற்சவங்கள் நடைபெறும். இது சுமார் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆலயம்.

மாவட்டம்:- இரத்தினபுரி,
பெல்மதுளை.

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்**
**நீலகாமம், காவத்தை, இரத்தினபுரி**

மூலமூர்த்தி – ஸ்ரீ முத்துமாரி அம்பாள். பரிவார மூர்த்திகள் – விநாயகர், முருகன், வைரவர். தினமும் மூன்று காலப் பூசைகள் உண்டு. வருடாவருடம் அலங்கார உற்சவம் உளது. விசேட தினங்களில் விசேட பூசைகள் உண்டு.

மாவட்டம்:- இரத்தினபுரி,
இரத்தினபுரி.

**ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்**
**மாவனை, இரத்தினபுரி**

தினமும் மூன்று காலப் பூசை உண்டு. மாசி மகத்தையொட்டி பத்துத் தினங்களுக்கு திருவிழா நடைபெறுகிறது. தேர்த்திரு விழாவன்று அம்பாள் நகர் வீதிவலம் வருவார். சமயபாடப் போட்டிப் பரீட்சை வருடாவருடம் நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப் படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மாத்தறை மாவட்டம்

கொழும்பிலிருந்து 100 மைல் தொலேவில் உள்ளது. புகையிரதம், பேரூந்துகளில் இம்மாவட்டத்திற்கு வரமுடியும்.

இங்கு உள்ள தலங்களே வழிபட்ட பின்பு காலிக்கு வருவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- மாத்தறை,
மாத்தறை.

**கதிர்காம யாத்திரிகர் தொண்டர்மட முருகன் கோவில்**
**மாத்தறை**

அண்மைக் காலம்வரை கதிர்காம உற்சவ காலங்களில் வெளியிடங்களில் இருந்துவரும் யாத்திரிகர்களுக்கு இங்கு தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. தற்போது அழிந்த நிலையிலுள்ள இவ்விடத்தில் ஆலய புனர் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மாவட்டம்:- மாத்தறை,
மாத்தறை.

**தெநுவர விஷ்ணு கோவில்**
**மாத்தறை**

தென் இலங்கையில் உள்ள மாத்தறைப் பகுதியில் இந்து மா சமுத்திரத்தை நோக்கியவண்ணம் எழுந்தருளியுள்ளார் தேநுவர ஸ்ரீ மஹாவிஷ்ணு. இங்கு நித்திய வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாலயத்தில், கடற்கரையில் கண்டெடுக்கப்பட்ட சந்திர வட்டக் கல்லினை நாம் இன்றும் காணலாம். விஜயனின் மகுடாபிஷேகம் இங்கு கோலாகலமாக நடைபெற்றதாகக் கர்ண பரம்பரைக் கதை உளது.

இவ்வாலயம் ஒரு பழம்பெரும் சிற்பக் கலைக்கூடமாக மிளிர்வது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தறை மாவட்டக் கோவில் படங்கள்



மாத்தறை தெவிநுவர விஷ்ணு ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தறை தெவிநுவர விஷ்ணு ஆலய மூலஸ்தானத் தோற்றம்

உ

சிவமயம்

## காலி மாவட்டம்

கொழும்பிலிருந்து 72 மைல் தொலைவில் உள்ளது. புகையிரதம், பேரூந்து ஆகியவற்றில் இம்மாவட்டத்திற்கு வரமுடியும்.

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில், கதிரேசன் கோவில், இங்கு மிகவும் பிரபல்யம் வாய்ந்தவை. இவ்வாலயங்களையும், இம்மாவட்டத்தில் உள்ள ஏனைய ஆலயங்களையும் வழிபட்ட பின் களுத்துறை மாவட்டத்திற்கு வருவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- காலி,
காலி.

### ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில்
### 6, பாக் வீதி, களுவல்ல, காலி

பழமைவாய்ந்த இவ்வாலயத்தில் 1877 ஆம் ஆண்டு செய்யப்பட்ட மணி ஒன்று உள்ளது. சித்திரை மாத சஷ்டித் திதியில் கொடியேறி, பத்துத் தினங்களுக்குத் திருவிழா நடைபெற்று பௌர்ணமி தினத்தில் தீர்த்தோற்சவத்துடன் வருடாந்த உற்சவம் முடிவடையும்.

மாவட்டம்:- காலி,
காலி.


### ஸ்ரீ கதிரேசன் கோவில்
### 40, கொழும்பு வீதி, களுவெல்ல, காலி

1790 இல் ஸ்தாபிக்கப்பட்டது. ஆடி மாதம் ஆடி வேல்விழா சிறப்பாக நடைபெறும். நித்திய பூசைகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. இராமாயணச் சம்பவங்களைச் சித்தரிக்கும் சிற்பங்களைக்கொண்ட மூன்றடுக்குக் கோபுரமும் அமைந்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலி மாவட்டக் கோவில் படங்கள்




காலிச் சிவன் கோவில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலிச் சிவன் கோவில் மூலஸ்தானம்



காலி கதிரேசன் கோவிலின் உட்புறத் தோற்றம்



காலி கதிரேசன் கோவிலில் காணப்படும் அழகான மர வேலைப்பாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# களுத்துறை மாவட்டம்

கொழும்பிலிருந்து களுத்துறை மாவட்டம் 28 மைல் தொலை வில் உள்ளது. புகையிரதம், பேரூந்துகளில் இம்மாவட்டத்தை அடையமுடியும்.

களுத்துறையில் சுப்பிரமணிய சுவாமி கோவில் உளது.

இங்கிருந்து கொழும்பு மாவட்டத்திற்கு வருவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- களுத்துறை,
களுத்துறை.

### ஸ்ரீ கந்த சுவாமி கோவில்
### களுத்துறை

ஸ்ரீ வள்ளி தேவசேனு சமேத சுப்பிரமணியப் பெருமானுடன் பரிவார மூர்த்திகளாக விநாயகர், வைரவர் ஆகிய மூர்த்திகளும் உளர். ஆண்டுதோறும் வேல்விழா சிறப்பாகக் கொண்டாடப் படும். அன்றைய தினம் சுப்பிரமணியப் பெருமான் வீதியில் திரு வுலா வருவார். அன்னதானமும் இடம்பெறும். மத வேறுபாடின் றிச் சகல மக்களும் ஆலயத்திற்குச் சென்று வழிபடுவர். விசேட காலங்களில் விசேட வழிபாடுகள் நடைபெறும்.

மாவட்டம்:- களுத்துறை,
களுத்துறை.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### றைகம் தோட்டம், இங்கிரிய

களுத்துறை மாவட்டத்திலுள்ள இங்கிரிய நகரத்துக்கு அரு காமையில் றைகம் என்னும் இடத்தில் அமைந்துள்ள கோவில். 1977 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. மூலமூர்த்தி முத்துமாரியம்பாள். பரிவார மூர்த்திகள் — விநாயகர், பால சுப்பிரமணியர், நவக்கிரகம். மூன்று காலப் பூசை; மாசி மகத் தன்று தீர்த்த உற்சவம் நடைபெறக்கூடியவாறு பன்னிரண்டு நாட்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெற்றுவருகிறது. வெள்ளிக் கிழமைதோறும் கூட்டுப் பிரார்த்தனைகளும், சமயப் பிரசங்கங் களும் நடைபெறுகின்றன. நவராத்திரி, சிவராத்திரி, தைப்பொங் கல், திருவெம்பாவை, மாசிமகம் போன்ற தினங்களில் விசேட பூசைகள் நடைபெற்றுவருகின்றன. மாரியம்மன் கும்மிப் பாடல் களும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கொழும்பு மாவட்டம்

இலங்கையின் தலைநகரான கொழும்பு மாவட்டத்திலுள்ள திருத் தலங்களை வழிபடுவதற்கு எமது யாத்திரையை மேற்கொள்வோம். நாம், களுத்துறை மாவட்டத்திலிருந்து கொழும்பு மாவட்டத் துக்குப் பேரூந்திலும், புகையிரதத்திலும் செல்லலாம்.

கொழும்பு மாவட்டத்தில் ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரம் உள்ளது. முற்றிலும் கருங்கற்சிற்ப வேலைப்பாடுகளைக்கொண்ட சிற்பக் கலைகளின் மேன்மையை எடுத்துக் காட்டும் வகையில் இவ் வாலயம் அமைந்துள்ளது. கதிர்காம உற்சவத்தையொட்டி கொழும்பிலே சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவிலி லிருந்து வெள்ளவத்தைப் பிள்ளையார் கோவிலுக்கு வேல் காவடி, வருடாவருடம் நகர் வீதிவலம் வருகின்றது. அதேபோல செட்டி யார் தெரு கதிரேசன் கோவிலிலிருந்து பம்பலப்பிட்டி கதிரேசன் கோவிலுக்கு ஆடிவேல் ரதபவனி வருடாவருடம் கொழும்பு நகர் வீதிவலம் வருகின்றது. ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் பௌர்ணமி தினத்தில் திருவிளக்கு பூசை அதிசிறப்பாக நடைபெற்றுவருகின்றது. யாழ்ப்பாணத்தார் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலிலும், கொம்பனித்தெரு அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிர மணியசுவாமி கோவிலிலும் சூரசம்ஹார விழா அதிவிமர்சையாக நடைபெற்றுவருகின்றது. குறிப்பாக கொழும்பிலுள்ள எல்லா கோவில்களிலும் இலங்கையிலுள்ள ஏனைய தலங்களைப் போன்று தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி, திருக்கார்த் திகை, திருவெம்பாவை ஆகிய விசேட அபிஷேகம் பூசை ஆகியன இடம்பெற்றுவருகின்றன. இங்குள்ள எல்லாத் தலங்களையும் பேரூந் துகளிற் சென்று வழிபடுவோம்.

கொழும்பு மாவட்டத்திலிருந்து புகையிரதம் அல்லது பேரூந்து மூலம் கம்பஹா மாவட்டஞ் செல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

### ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் கோவில்
### 38, ஸ்ரீ இராமநாதன் வீதி, கொழும்பு 13

இலங்கையிலே முற்றிலும் கருங்கல்லினாலான சிற்ப வேலைப்பாடு களைக் கொண்டு தென்னிந்திய தலங்களைப் போல உள்ள ஒரே யொரு சிவத்தலம் இதுவாகும். ஸ்ரீ பொன்னம்பல முதலியார் அவர்களால் கட்டப்பட்ட இச்சிவத்தலம் அவரது மைந்தன் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களால் தென்னிந்தியச் சிற்பக் கலைஞர்களைக்கொண்டு தற்போதுள்ள நிலைக்குப் புதிதாக நிர் மாணிக்கப்பட்டது.

தினமும் ஆறு காலப் பூசைகள் இங்கு உண்டு. காலையும், மாலையும், பூசைக்குப்பின் நித்தியாக்கினி வளர்க்கப்பட்டு, நித்திய உற்சவமும் நடைபெறுகின்றது. நித்திய உற்சவத்தின்போது சுவாமி அம்பாளோடு சிறிய தேரில் வீற்றிருந்து திருவுலா வரு வார். மாதச் சங்கிராந்தித் தீர்த்தமும், மாதாமாதம் பௌர் ணமி தினத்தில் ஸ்ரீ சக்கர பூசையும், திருவுலாவும் இடம்பெறு கின்றன. நித்தியோற்சவம், மாதோற்சவம், வருடோற்சவம், மஹோற்சவம் ஆகியன சிவாகம முறைப்படி சிறப்புற நடைபெறு வது குறிப்பிடத்தக்கது. பங்குனி உத்தரத்தில் தீர்த்தம் வரக்கூடிய தாகப் பத்துத் தினங்களுக்குத் திருவிழா உளது. அம்பாள் உற்சவம், ஆடிப்பூரத்தை இறுதியாகக்கொண்டு பத்துத் தினங்களுக்கு ஸ்ரீ சக்ரபூசை, லக்ஷார்ச்சனை, திருவுலா ஆகியன வற்றுடன் முடிவுறும். மணவாளக்கோலத்தினமான தைப்பூசத் தினத்தன்று சிவன், அம் பாள் ஆகியோருக்குத் தனித்தனி *1008* சங்காபிஷேகமும், மாலை யில் உற்சவமும் உண்டு. கார்த்திகைக் கடைசிச் சோமாவார தினத்தன்று சிவனுக்கு *1008* சங்காபிஷேகமும், சுவாமி அம் பாள் உற்சவமும் உளது. நடேசர் அபிஷேகங்களில் ஆர்த்திரா உற்சவம் மிகச் சிறப்பானது.

சிறப்பு அம்சமாகக் கந்தசஷ்டியின்போது யாகம் வைத்து உற் சவம், நவராத்திரி காலத்தில் யந்திரபூசை, கொலுபூசை ஆகியன நடைபெறுவது குறிப்பிடக்கூடியன. புரட்டாதிச் சனிக்கிழமை களில் மகாவிஷ்ணு அபிஷேகமும், கடைசிச் சனி, கிருஷ்ண ஜயந்தி, வைகுண்ட ஏகாதசி நாட்களில் மஹாவிஷ்ணு உற்சவமும், இடம் பெறும். வேத சிவாகம முறைகளுக்கமைய நித்திய, நைமித்திய கிரியைகள் இங்கு நடைபெற்றுவருகின்றன. கொழும்பு மாவட்டத் தில் பஞ்சரத உற்சவம் இவ்வாலயத்தில் சிறப்புற இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

## தீவுச் சிவன் கோவில்
## கோவில் வீதி, மருதானை, கொழும்பு 10

இங்கு மூலவர் சிவலிங்கம். அம்பாள் தனி ஆலயத்தில் வீற்றிருக்கின்றார். பிள்ளையார், சுப்பிரமணியர், வைரவர் ஆகிய மூர்த்திகள் இங்கு உளர். செவ்வாய்க்கிழமைகளில் இங்கு வைரவருக்கு விசேட பூசை, வழிபாடு நடைபெற்றுவருகின்றது. விசேட தினங்களில் விசேட பூசைகள் இங்கு இடம்பெற்றுவருகின்றன.

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

## ஸ்ரீமத் அருணாசலேஸ்வரர் கோவில்
## முகத்துவாரம், கொழும்பு

மூலமூர்த்தியாக சிவன் உள்ளார். அம்பாளுக்கான தனிக்கோவில் உளது. பரிவார மூர்த்திகளாக நடேசர், பிள்ளையார், சுப்பிரமணியர், மகாவிஷ்ணு, வைரவர் ஆகிய மூர்த்திகள் உளர். நித்திய பூசை சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. மணவாளக்கோலவிழாவும், வருடாந்த லக்ஷார்ச்சனையும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

### ஸ்ரீ பாலசெல்வ விநாயகர் கோவில்
### 11/9, கோவில் வீதி, கப்பித்தாவத்தை, மருதானை, கொழும்பு 10

இவ்வாலயம் 1702 இல் ஸ்தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி — ஸ்ரீ பாலசெல்வ விநாயகர். பரிவாரத்திலே மகாலக்ஷ்மி, அம்பாள்மார் சகிதம் ஷண்முகர், வைரவர், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் ஆறுகாலப் பூசை உண்டு. சதுர்த்தி, கார்த்திகை, பூரணை ஆகிய நாட்களில் திருவிழா உண்டு. ஆனி மாத அனுஷ நட்சத்திரத்தன்று இறுதிநாட் திருவிழா அமையக்கூடிய வகையில் முதல் 9 நாட்தொடக்கம் அலங்காரத் திருவிழா நடைபெறும்.

கந்தசஷ்டித் திருவிழாவையடுத்து, பிள்ளையார்கதை 21 நாளும் புராணப்படனம், லட்சார்ச்சனை, திருவிழா என்பனவும் இடம் பெறும்.

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

### விநாயகர் கோவில்
### 49/12, மாட் டெரேஸ், தெமட்டகொட, கொழும்பு 09

மூலமூர்த்தி — பிள்ளையார். பரிவார மூர்த்தி — வைரவர். தினமும் காலையில் நித்திய பூசை உண்டு. வெள்ளிக்கிழமைகளிலும், விசேட தினங்களிலும் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

### ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில்
### காலி வீதி, கொழும்பு 04

மூலமூர்த்தி — பிள்ளையார். பிள்ளையார், பழனியாண்டவர், இடும்பன் ஆகிய மூர்த்திகள் பரிவாரத்தில் இங்கு வீற்றிருக்கின்றனர். நித்திய பூசை உளது. விசேட தினங்களில் விசேட வழிபாடுகள் உள்ளன. சம்மாங்கோடு, ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் ''ஆடிவேல் காவடி'' நகர் பவனிவந்து இவ்வாலயத்தில் கொலு வீற்றிருந்து அருள்பாலிப்பது வழக்கம். அக்காலத்தில் விசேட இசை நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருவது குறிப்பிடத் தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

### ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் கோவில்
### முகத்துவாரம், கொழும்பு 15

மூலமூர்த்தி — பிள்ளையார். சிவன், அம்பாளுக்கான தனித்தனி ஆலயங்கள் உள்ளன. நடேசர், பிள்ளையார், சுப்பிரமணியர், சண்முகர், வைரவர் நவக்கிரகம் ஆகிய மூர்த்திகள் இங்கு வீற்றிருக்கின்றனர். நித்திய பூசை உண்டு. மாதச் சதுர்த்தி, ஆவணிச் சதுர்த்தி, மணவாலக்கோல விழா போன்றவை சிறப்பாக நடைபெற்றுவருகின்றன. இவ்வாலயத்தின் பரிவாரத்தில் உள்ள காளி அம்பாள் சமுத்திரத்தைப் பார்த்த வண்ணம் வீற்றிருக்கின்றார். செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் காளிகோவிலைப் பலரும் இன, மத, வேறுபாடின்றி வழிபட்டு வருகின்றனர்.

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

### வரதராஜப் பிள்ளையார் கோவில்
### கொட்டாஞ்சேனை, கொழும்பு 13

மூலமூர்த்தி — பிள்ளையார். சுப்பிரமணியர், வைரவர் ஆகிய மூர்த்திகளும் இங்கு உள்ளனர். நித்திய பூசை நடைபெற்று வருகின்றது. மாதச் சதுர்த்தியும், ஆவணிச் சதுர்த்தியும் மிக விசேடமானவை. மணவாளக் கோலவிழா கோலாகலமாக நடைபெறுகின்றது. வருடாவருடம் லக்ஷார்ச்சனை சிறப்பாக இடம் பெறும். புராணப் படிப்பும் இங்கு வழமையாக உண்டு.

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

### ஸ்ரீ முத்துவிநாயகர் கோவில்
### செட்டியார் தெரு, கொழும்பு 11

மூலமூர்த்தியாக ஸ்ரீ முத்து விநாயகர் வீற்றிருக்கின்றார். சிவன், அம்பாளுக்கான தனிக்கோவில்கள் இங்கு உள்ளன. நடேசர், பிள்ளையார், பஞ்சமுக விநாயகர், சுப்பிரமணியர், வைரவர் நவக்கிரகம் ஆகிய மூர்த்திகளும் இங்கு உளர். நித்தியபூசை ஆறு காலங்களுக்கு உளது. சித்திரை வருடப்பிறப்புக்குத் தேர் பவனி வரக் கூடிய வகையில் முதற் பத்துத் தினங்களுக்கும் மகோற்சவம் நடைபெறுகின்றது. வருடாந்தம் லக்ஷார்ச்சனை சிறப்பாக உள்ளது. மாதச் சதுர்த்தி, பிரதோஷம் போன்றவையும் இங்கு முக்கிய தினங்கள் ஆகும். கடலிலிருந்து எடுக்கப்பட்ட விநாயகர் ஆதலின் முத்து விநாயகர் என அழைக்கப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

## ஸ்ரீ தம்பையா சத்திர விநாயகர் கோவில்
### கொட்டாஞ்சேனை, கொழும்பு 13

மூலமூர்த்தி — பிள்ளையார். நடேசர், பிள்ளையார், சுப்பிரமணியர், மகாவிஷ்ணு, வைரவர் ஆகிய மூர்த்திகள் இங்கு உளர். தல விருட்சம் வன்னி. நித்திய பூசை சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. ஆவணிச சதுர்த்தியில் சுவாமி வீதிவலம் வருவார்.

மாவட்டம்:- கொழும்பு,
நுகேகொட.

## பிள்ளையார் கோவில்
### நுகேகொட

இவ்வாலயத்தில் நித்திய பூசைகள் உண்டு. விசேட தினங்களில் விசேட பூசையும் உளது.

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

## கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
### கியூ வீதி, கொழும்பு 2

மூலமூர்த்தி — வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியர். இங்கு பிள்ளையார், ஸ்ரீ நடராஜர், மகாவிஷ்ணு, சனீஸ்வரன், நவக்கிரகம், சூரியன், வைரவர் ஆகிய மூர்த்திகளுக்குத் தனித்தனி கோயில்கள் உள்ளன. தினமும் ஆறு காலப் பூசை நடைபெறும் இவ்வாலயத்தில், பங்குனி அனுஷத்தில் வருடாந்தத் திருவிழாவும் நடைபெறும். கந்தசஷ்டி, சூரன்போர் மிகதும் சிறப்பான முறையில் இங்கு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. சிவாரத்திரி, நவராத்திரி, பிள்ளையார் கதைப்படிப்பு, திருவெம்பாவை, வைகுண்ட ஏகாதசி, முதலிய விசேட தினங்களில் சிறப்பாகத் திருவிழாக்கள் நடைபெற்றுவருகின்றன. இவ்வாலயத்தில் நாயன்மார்கள், ஆறுமுகநாவலர் ஆகியோரின் குரு பூசைத் தினங்களை கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கம் சிறப்பாகக் கொண்டாடுமுகமாக எழுத்துப்போட்டி, பேச்சுப் போட்டிகளை நடத்திப் பரிசுகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கத்தாகு.ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

## பம்பலப்பிட்டி, ஸ்ரீ கதிரேசன் கோவில்
## பம்பலப்பிட்டிச் சந்தி, கொழும்பு 4

இங்கு மூர்த்தியாகப் பிள்ளையார் உள்ளார். இவ்வாலயத்திலுள்ள இடும்பன் மூர்த்திக்குப் பலர் நேர்த்திக்கடன் செய்து அவற்றை நிறைவேற்றி வருகின்றனர். நித்திய பூசை சிறப்பாக நடைபெறுகின்றது. விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் உண்டு. ஆடிவேல் விழாவில் செட்டியார் தெரு முருகன் ஒன்றை விட்டு ஒரு வருடம் இங்கு மூன்று தினங்களுக்குக் கொலு வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பது வழக்கம். இசை நிகழ்ச்சிகள் அந்நாட்களில் சிறப்பாக நடைபெறும். இன, மொழி வேறுபாடின்றி சகல மக்களும் இவ்விழாவிற்கு வருகைதருவர்.

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

## ஸ்ரீ கதிரேசன் கோவில்
## கொழும்பு 4

பிள்ளையார் மூலவராக விளங்குகிறார். சிவன், அம்மன், நாகதம்பிரான், இடும்பன், நவக்கிரகம் ஆகிய மூர்த்திகள் இங்கு உளர். நித்திய பூசை உண்டு. செட்டியார் தெரு முருகன், ஆடிவேல் விழாவில் ஒன்றைவிட்டு ஒரு வருடம் இங்கு கொலு வீற்றிருந்து அருள் பாலிப்பது வழக்கம். இசை நிகழ்ச்சிகள் அந்நாட்களில் சிறப்பாக இடம்பெறும். இன, மொழி வேறுபாடின்றிச் சகல மக்களும் இவ்விழாவிற்குச் சமூகமளிப்பர்.

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

## ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
## பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 12

நித்திய பூசை சிறப்புற நடைபெற்றுவருகின்றது. வருடாந்த உற்சவம் கோலாகலமாக வருடந்தோறும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இங்கு பிள்ளையார், தேவியருடன் சுப்பிரமணியர், தேவியருடன் ஆறுமுகசுவாமி, வைரவர் ஆகிய மூர்த்திகள் வீற்றிருக்கின்றனர். கந்தபுராணப் படனம் இங்கு நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

### யாழ்ப்பாணத்தார், ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவில்
### ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 11

மூலமூர்த்தி — வேல். அம்பாள், பிள்ளையார், சுப்பிரமணியர், சண்முகர், நவக்கிரகம், வைரவர் ஆகிய மூர்த்திகள் உளர். அலங்கார உற்சவம் பத்துத் தினங்களுக்கு வருடாவருடம் நடைபெற்று வருகின்றது. லக்ஷார்ச்சனையும் வருடாவருடம் இடம்பெற்று வருகின்றது. நித்திய பூசை ஆறு காலங்களுக்குண்டு. கந்தசஷ்டி காலத்தில் திருக்கல்யாணம் சிறப்பாக நடைபெறுகின்றது.

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

### சம்மாங்கோடு, ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில்
### முதலாம் குறுக்குத் தெரு, கொழும்பு 11

மூலமூர்த்தி — ஸ்ரீ சுப்பிரமணியர். சிவன், அம்பாள், பிள்ளையார், சுப்பிரமணியர், வைரவர் ஆகிய மூர்த்திகள் இங்கு வீற்றிருக்கின்றனர். ஆடி வேலையொட்டி ''வேல் காவடி'' இவ்வாலயத்திலிருந்து நகர் பவனி வருவது சிறப்பாகவிருக்கும். நித்திய பூசை ஆறு காலங்களுக்கு உண்டு. சண்முகார்ச்சனை இங்கு சிறப்பானது, பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி, கந்தசஷ்டி, மார்கழித் திருவெம்பாவை, போன்ற தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

### ஸ்ரீ கதிரேசன் கோவில் (புதியது)
### செட்டியார் தெரு, கொழும்பு 11

மூலமூர்த்தி — சுப்பிரமணியர். நித்திய பூசை சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. மாதக் கார்த்திகைத் தினங்களில் விசேட பூசை, வழிபாடுகள் உள்ளன. ஆடிவேல் விழாவில் இவ்வாலயத்தின் வேல் ஒன்றைவிட்ட ஒரு வருடத்திற்குக் கோலாகலமாக நகர் பவனி வருவது குறிப்பிடத்தக்கது.

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

### ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் (பழையது)
### செட்டியார் தெரு, கொழும்பு 11

மூலமூர்த்தி — சுப்பிரமணியர். நித்திய பூசை உளது. விசேட வழிபாடுகள் உண்டு. ஆடிவேலின்போது ஒன்றைவிட்ட ஒரு வருடம் இவ்வாலயத்தின் வேல் கோலாகலமாக நகர் பவனி வருவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு,

## ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
## ஜிந்துப்பிட்டி, கொழும்பு 11

300 ஆண்டுகளுக்கு முன் திருச்செந்தூரில் இருந்து மூலமூர்த்தி கொண்டு வரப்பட்டு, சிந்து பாடுவதில் வல்லவரான ஒரு தென்னிந்தியப் பெரியாரால் ஸ்தாபிக்கப்பட்டது. பரிவாரத்தில் சிவன், அம்பாள், நடராஜர், விநாயகர், ஆறுமுகசுவாமி, நவக்கிரகம் வைரவர் ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் ஆறு காலப் பூசை நடைபெறுகின்றது. வைகாசி விசாகத்தை அந்தமாகக்கொண்டு முதற் பத்துத் தினங்களும் மகோற்சவம் நடைபெறுகின்றது. கந்தசஷ்டி உற்சவ காலத்தில் திருச்செந்தூர்ப் புராணம் படிக்கப் படுவதுடன், சூரசம்ஹாரம் சிறப்பாக நடைபெறும். மாத விழாவாகப் பௌர்ணமியில் 108 திருவிளக்குப் பூசை மங்கையரால் செய்யப்படுவது அதிசிறப்பானது. இராஜகோபுரம் 5 மாடங்களைக் கொண்டது. ஒவ்வொரு ஞாயிறுதோறும் கூட்டுப் பிரார்த்தனையும் மார்கழி 30 நாளும் அதிகாலையில் நடைபஜனையும் இடம்பெறும். ஆர்த்திரா தரிசனத்தன்று அபிஷேகம் நிறைவேறியதும் கோதர்சனம் பன்னெடுங்காலமாக நடைபெற்றுவருகிறது.

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

## திருச்செந்தூர் முருகன் கோவில்
## 190/1, ஞானவிமல வீதி, தெமட்டகொட, கொழும்பு 09

நித்திய பூசைகள் நடைபெறுகின்றன. அலங்கார உற்சவம், இரத பவனி, அன்னதானம் ஆகியனவும் உண்டு.

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

## ஸ்ரீ திருமுருகன் கோவில்
## டொறிங்டன் அவனியூ, கொழும்பு 07

ஆலயத்தில் மூலமூர்த்தியோடு பரிவாரத்தில் விநாயகர், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகளும் உளர். தினமும் இரு காலப் பூசை. விசேட தினங்களில் விசேட பூசைகள் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

### ஸ்ரீ ஞானவைரவர் கோவில்
### 19, சங்கமித்த மாவத்தை, கொட்டாஞ்சேனை, கொழும்பு 13

மூலமூர்த்தி — திரிசூலம். நித்திய பூசை உளது. செவ்வாய்க் கிழமைகளில் விசேட பூசை உண்டு. தைப்பொங்கல், வருடப் பிறப்பு, தீபாவளி, நவராத்திரி ஆகிய தினங்களில் விசேட பொங்கல், வழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன.

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

### ஞான வைரவர் கோவில்
### கிராண்ட்பாஸ், கொழும்பு 14

இங்கு நித்திய பூசை உண்டு. இராஜராஜேஸ்வரி அம்பாளும், ஐயப்ப சுவாமியும் இங்கு பரிவாரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனர். விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன.

மாவட்டம்:- கொழும்பு,
மத்திய கொழும்பு.

### இலங்கை, மாகாளியம்மன் கோவில்
### 38/35, இரட்ணம் வீதி, கொழும்பு 13

மூலமூர்த்தியோடு பரிவார மூர்த்திகளாக சிவலிங்கம், விநாயகர், வைரவர், இடும்பன், நாகேஸ்வரி ஆகியோர் உளர். தினமும் இரு காலப் பூசை உண்டு. மாசி மகத்திலும், நவராத்திரியிலும் விசேட பூசை, உற்சவம் ஆகியன உண்டு.

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

### ஸ்ரீ வீரமஹா காளியம்மன் கோவில்
### 36, ஸ்ரீ இராமநாதன் வீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பு 13

17 ஆம் நூற்றுண்டுக் காலத்தையது. மூலமூர்த்தியோடு, பரிவார மூர்த்திகளாக பிள்ளையார், வேல்முருகன், காத்தவராயன், சண்டேஸ்வரி ஆகியோர் உளர். தினமும் மூன்று காலப் பூசை உண்டு. நவராத்திரி தினங்களில் அபிஷேகம், விசேட பூசைகள், கொலு பூசை ஆகியன நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.

ஸ்ரீ முத்துமாரிஅம்மன் கோவில்
கொட்டாஞ்சேனை, கொழும்பு 13

மூலமூர்த்தியாக ஸ்ரீ முத்துமாரிஅம்மன் எழுந்தருளியுள்ளார். பிள்ளையார், சுப்பிரமணியர், மகாவிஷ்ணு, நதக்கிரகம், வைரவர் ஆகிய மூர்த்திகளும் இங்கு வீற்றிருக்கின்றனர். நித்திய பூசை சிறப்பாக நடைபெறும். செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் விசேட அபிஷேகங்கள் உண்டு.

இவ்வாலயத்தில் உள்ள காளிஅம்மன் மிக அற்புதமானது. இன, மத வேறுபாடின்றி இங்கு பலரும் சென்று வழிபடுகின்றனர். வைகுண்ட ஏகாதசியையொட்டி ஸ்ரீ மகாவிக்ஷ்ணுவுக்கும் காளி அம்மனுக்கும் வருடாவருடம் லக்ஷசார்ச்சனை நடைபெற்று வருகின்றது.

மாவட்டம்:- கொழும்பு,
கொழும்பு.


ஸ்ரீ துர்க்கை அம்மன் கோவில்
86/10, தட்டாரத் தெரு ஒழுங்கை, கொழும்பு 12

மூலவர் — துர்க்கையம்மன். பரிவார மூர்த்திகள் — விநாயகர், வைரவர். நித்திய பூசை உண்டு. விசேட தினங்களில் விசேட பூசைகள் உண்டு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு மாவட்டக் கோவில் படங்கள்




கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் ஆலயத்தின் இராஜகோபுரம்




கொழும்பு ஸ்ரீ [illegible] கோவில் அம்பாள் இராஜகோபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் கோவிலில் எழுந்தருளியுள்ள மூலமூர்த்தி




கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் ஆலயத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ சிவகாமி சௌந்தரி அம்பாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் கோவிலில் காணப்படும் அழகுச் சிற்பம்
பசு தனது பாலினால் சிவலிங்கத்துக்கு அபிஷேகஞ் செய்யும் காட்சி




கொழும்பு ஸ்ரீ அருணாசலேசர் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் நடராஜரும்,
அம்பாளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு கப்பித்தாவத்தை ஸ்ரீ பால விநாயகர் ஆலய ஸ்தூபி




கொழும்பு கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலயத்திலுள்ள லக்ஷ்மி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு செட்டியார் தெரு ஸ்ரீ முத்து விநாயகர் கோவில்




கொழும்பு கொட்டாஞ்சேனை வரதராஜப் பிள்ளையார் கோவிலில் எழுந்தருளியுள்ள மூலமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு பேலியகொட பிள்ளையார் கோவில்



கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் இராஜகோபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலின் அழகான பண்டிகை வேலைப்பாடு




கொழும்பு ஸ்ரீ [illegible] ள்ள ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி
[illegible] ராஜகோபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு செட்டியார் தெரு பழைய கதிரேசன் கோவிலின் கோபுரத் தோற்றம்

கொழும்பு செட்டியார் தெரு புதிய கதிரேசன் கோவிலின் கோபுர அமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில்
காணப்படும் தேவியருடன் கூடிய ஆறுமுகசுவாமி

கொழும்பு சம்மாங்கோடு கதிர்வேலாயுதசுவாமி கோவிலின் இராஜகோபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்


கொழும்பு பம்பலப்பிட்டி, பழைய கதிரேசன் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு ஸ்ரீ ராமநாதன் வீதியில் அமைந்திருக்கும் வீரமாகாளி அம்பாள்



கொழும்பு /கொட்டாஞ்சேனை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் எழுந்தருளியுள்ள
ஸ்ரீ முத்துமாரியம்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## கம்பஹா மாவட்டம்

கொழும்பிலிருந்து 20 மைல் தூரத்தில் இம்மாவட்டம் உளது. கொழும்பிலிருந்து புகையிரதம், பேரூந்து ஆகியனவற்றில் இம் மாவட்டத்தை அடையலாம்.

இம்மாவட்டத்தில் முருகன் ஆலயம் பிரபல்யமடைந்து விளங்கு கின்றது. இம்மாவட்டத்திலிருந்து புத்தளம் மாவட்டத்திற்குப் பேரூந்து மூலஞ் செல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்;- கம்பஹா,
கம்பஹா.

ஸ்ரீ பால சுப்பிரமணிய சுவாமி கோவில்
தொழுநோய் வைத்தியசாலை, ஹெந்தலை, வத்தளை

ஆலயத்தில் ஸ்ரீ பாலசுப்பிரமணியப் பெருமானும், விநாயகப் பெருமானும், வீற்றிருக்கின்றனர். நித்திய பூசை உண்டு. வருடாந்த அபிஷேகம் சிறப்பாக நடைபெறும். இவ்வாலயம் கொழும்பு விவேகானந்த சபையினரால் பரிபாலிக்கப்படுகின்றது.

மாவட்டம்:- கம்பஹா,
கம்பஹா.

ஸ்ரீ முத்துக்குமரன் கோவில்
614, புகையிரத நிலைய வீதி, உணுப்பிட்டி, வத்தளை

மூலமூர்த்தி – வேல். பரிவார மூர்த்திகள் – விநாயகர், நடராஜர், அம்பாள், வைரவர், நவக்கிரகம். தினமும் இரு காலப் பூசை. உண்டு. விசேட தினங்களில் விசேட பூசைகள் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# புத்தளம் மாவட்டம்

எமது ''இலங்கைத் தல யாத்திரையின்'' நிறைவு கட்டத்திற்கு வந்துள்ளோம்.

கொழும்பிலிருந்து புத்தளம் மாவட்டம் 82 மைல் தூரம் ஆகும். இப்பகுதியில் முத்துக் குளிப்பதிற் பெயர்போன சிலாபம் நகர் உளது. இந்த நகரிலேயே முனீஸ்வரம் எனும் புண்ணிய இந்து, பௌத்த மதத்தினர் அனைவரும் ஆகஸ்ட் மாத உற்சவத்திலே தனித்தனி உபயஞ் செய்யும் சிறப்பு இக்கோவிலிலே உளது.

திருக்கேதீஸ்வரம் முதல் முனீஸ்வரம்வரை இலங்கையிலுள்ள தலங்களைத் தரிசித்துப் பிரணவ வடிவில் வலம் வந்தோம்.

முனீஸ்வரத்திலே, மன நிறைவுடனும், மகிழ்ச்சியுடனும் எமது இலங்கைத் தல யாத்திரையை நிறைவாக்கிக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- புத்தளம்,
புத்தளம்.

## ஸ்ரீ முன்னேஸ்வரம் கோவில்
### சிலாபம்

இலங்கையில் பழம் பெருமைகள் மண்டிக் கிடக்கும் சிறப்பு வாய்ந்த சிவத்தலங்களுள் ஒன்று ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்திர மாகும். இந்த ஆலயத்திலுள்ள மூலமூர்த்தியின் பெயர் முன்னை நாதப் பெருமான். அம்பிகையின் பெயர் வடிகாம்பிகாதேவி.

சிலாப நகருக்குக் கிழக்குத் திசையில் ஒரு மைல் தொலைவில் இந்த ஆலயம் அமைந்திருக்கிறது. ஆலயத்தைச் சூழ தென்னை மரங்களும், நெல் வயல்களும் உள்ளன.

ஈழ நாட்டின் முக்கியமான கோவில்களைப் பற்றிய விளக்கங் களைக் கூறும் ''கோகில சந்தேய'' (குயில் விடுதூது) என்னும் சிங்கள இலக்கிய நூல், முன்னேஸ்வரம் கோவில் மிகவும் முக்கிய மானதொன்றென விளக்குகின்றது. ஒன்பதாம் பராக்கிரமபாகு மன்னன் (கி.பி. 1509 – 1528) இக்கோயிலுக்கு மானியமாகச் சில கிராமங்களை அளித்து அதை உறுதிப்படுத்தும் வகையில் செப் புப் பட்டயமும் எழுதிக் கொடுத்துள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆலயம் பற்றிய இதிஹாச புராண வரலாறுகளும், கர்ண பரம்பரைக் கதைகளும் பல உள. இராமபிரான் இராவணனைச் சம்ஹாரம் செய்தபோது பிரம்மஹத்திதோஷம் நீங்க இத்தலத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசை செய்தார் எனத் தக்ஷண கைலாச மகாத்மியம் கூறுகிறது. ஒரு சமயம் விளையாடிக் கொண்டிருந்த ஒரு சிறுமி அதிசயிக்கத் தக்கவாறு தங்கமயமானதொரு சிறு விக்கிரகமாக மாறியதாகவும் அந்த விக்கிரகமே இன்றும் உள்ளே வைத்துப் பூசை செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது.

குளக்கோட்டு மன்னன், பழம் பெருமைகளை இழந்து சிதைந்த நிலையிலிருந்து இத்திருக்கோவிலைச் சீர்திருத்தித் திருப்பணிகளைத் குறைவறச் செய்வித்து மகாகும்பாபிஷேகம் செய்வித்தான்.

ஆலயம் தொடர்பான கல்வெட்டுச் சாசனங்கள் இன்றும் காணப் படுகின்றன. கோயிலின் முன்புறமாகத் திருக்குளம் உள்ளது. அரச மரம் தலவிருட்சமாக போற்றப்பட்டு வருகின்றது.

ஆலயத்தில் உயரமான பழைய கற்குத்து விளக்குகள் இன்றும் கரணப்படுகின்றன. தினமும் ஆறு காலப் பூசைகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் ஸ்ரீ சக்ர பூசை சிறப்பாக நடைபெறும். சிவசக்தி ஐக்கிய ரூபமாகவுள்ள ஸ்ரீ சக்கரத்தினை (மேரு யந்திரத்தினை) இங்கு காணலாம்.

முன்னேஸ்வர ஆலயத்தில் வருடாந்தத் திருவிழா இருபத்தேழு தினங்கள் நடைபெறும். ஆவணி மாதப் பௌர்ணமியன்று தீர்த்தோற்சவம் நடைபெறும். கடைசி ஆறு தினங்களும் மிக முக்கியமான திருவிழாக்கள்.

சிவனடியார் திருவிழாவன்று மாலையில் தீ மிதிப்பு வைபவம் நடைபெறும். அறுபத்துமூன்று சிவனடியார்களின் எழுந்தருளி விக்கிரகங்கள் கலையழகு ததும்ப ஆலயத்தில் காட்சி அளிக்கின்றன. இங்கு மகோற்சவம் இந்த க்ஷேத்திரத்திற்கே உரித்தான பாரம்பரிய முறைப்படி நடைபெற்று வருகின்றது. மாசி மகத்தை இறுதியாகக் கொண்டு பத்து நாட்கள் நடைபெறும். பிரும்மோத்சவம் ஆகம முறைப்படி நடைபெற்றுவருகிறது.

முன்னேஸ்வரம் கோவிலில் புரட்டாசி மாதத்தில் வரும் சாரதா நவராத்திரியும், பங்குனி மாதத்தில் வரும் வசந்த நவராத்திரியும் மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்படுகின்றன. வசந்த நவராத்திரியின்போது சண்டிஹோமமும் நடைபெற்று வருகின்றது. முனீஸ்வரத்தில் நவராத்திரி விழாக்கள் மிகப்பிரபல்யம் வாய்ந்தவை.

தை மாதப் பூச நட்சத்திரத்தை இறுதி நாளாகக் கொண்டு 16 நாட்களுக்கு லட்சார்ச்சனை நடைபெறும். மகாகும்பாபிஷேகம் 1963 ஆம் ஆண்டு நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலைச் சுற்றி நான்கு பெரிய மடங்கள் அமைந்திருக்கின்றன. முன்னேஸ்வர ஆலயத்தில் நித்திய நைமித்திய கிரியைகள் ஆகம முறைப்படி சாஸ்திர ரீதியாக நடைபெற்று வருகின்றன. இன. மத வேறுபாடின்றி சகல மக்களும் இங்கு சென்று வழிபாடாற்றுவர்.

மாவட்டம்:- புத்தளம்,
புத்தளம்.

ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
மன்னார் வீதி, புத்தளம்

200 வருடங்களுக்கு முற்பட்ட ஆலயம் இது. கருங்கல்லில் செதுக்கப்பட்ட ஒரு பெரிய விளக்கு இப்பொழுதும் இருக்கிறது. சுற்றளவு சுமார் ஆறு அடி. தலவிருட்சம் — அரசமரம். பிள்ளையார் கதை, நவராத்திரி, திருவெம்பாவை போன்ற காலங்களில் விசேட பூசை வழிபாடுகள் உண்டு. தினமும் மூன்று காலப் பூசை. பரிவார மூர்த்திகள் — வைரவர், மாரியம்பாள்.

மாவட்டம்:- புத்தளம்,
புத்தளம்.

ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
செம்பட்டை, மதுரங்குளி, புத்தளம்

தினமும் இரண்டு காலப் பூசை. பரிவார மூர்த்தி — நாக தம்பிரான்.

மாவட்டம்:- புத்தளம்,
புத்தளம்.

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில்
கொழும்பு புத்தளம் வீதி, முந்தல்

தினமும் இரண்டு காலப் பூசை. மூலமூர்த்தி — விநாயகர், மாரியம்மன், வைரவர்.

மாவட்டம்:- புத்தளம்,
புத்தளம்.

ஸ்ரீ வேல்முருகன் கோவில்
பிரதான வீதி, கல்பிட்டி

நித்திய பூசை நடைபெற்றுவருகின்றது. 13.07.81 இல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- புத்தளம்,
புத்தளம்.

**உப்புக்குளத்தடி ஐயனார் கோவில்**
**உப்புக்குளம், உடப்பு, சிலாபம்**

சுமார் நூறு வருடங்களுக்கு முற்பட்டது. பூரணை புட்கலை யுடன் கூடிய ஐயனார் இங்கு எழுந்தருளியுள்ளார். தினமும் இரு காலப் பூசை, பங்குனி உத்தரத்தையொட்டிப் பத்துத் தினங் களுக்கு வருடாந்தத் திருவிழா நடைபெற்றுவருகிறது.

மாவட்டம்:- புத்தளம்,
புத்தளம்,

**ஸ்ரீ வைரவர் கோவில்**
**புளிச்சாக்குளம், சின்ன உடப்பு, சிலாபம்**

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட வைரவர் விக்கிரகம் இங்குள்ளது. தினமும் இரு காலப் பூசை. ஆடி உடப்புத் திருவிழா வின்போது திருவிழா நடைபெறும்.

மாவட்டம்:- புத்தளம்,
புத்தளம்.

**ஸ்ரீ முத்துமாரியம்பாள் கோவில்**
**புளிச்சான்குளம், உடப்பு, சிலாபம்**

நித்திய பூசையுடன், நவராத்திரி, பங்குனி உத்தர காலங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன. ஐப்பசி, பங்குனி மாதங்களில் பூசை நடைபெறுகிறது.

மாவட்டம்:- புத்தளம்,
புத்தளம்.

**ஸ்ரீ மாரியம்மன் கோவில்**
**ஆண்டிமுனை, உடப்பு, சிலாபம்**

தினமும் இரு காலப் பூசை. சைமன் காசிச் செட்டியின் வர லாற்றுப் புத்தகத்தில் ஆலய வரலாறு இடம்பெற்றிருக்கிறது. கிராமியக் கும்மி, ஊஞ்சல், காவியம், எச்சரிக்கை போன்ற பாடல் கள் உண்டு. மாசிமகம், நவராத்திரி போன்ற விழாக் காலங்களில் விசேட வழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- புத்தளம்,
புத்தளம்,

### ஸ்ரீ காளியம்மன் கோவில்
### தென்உடப்பு, உடப்பு

உடப்பு அரசாங்க மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன் பாகவும், கடற்கரையின் கிழக்குப்பகுதி ஓரமாகவும் அமைந்துள் ளது. செவ்வாய், வெள்ளி நாட்களில் பூசை நடைபெற்றுவரு கின்றது. புரட்டாதி மாதத்தில் நடைபெறுகிறது. கிராமியக் கும்மி, ஊஞ்சல் காவியம், எச்சரிக்கை போன்ற பாடல்கள் ஆல யத்திற்கு உண்டு.

மாவட்டம்:- புத்தளம்,
புத்தளம்.

### ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
### குசலே, பங்கதெனியா

குசலேக் கிராமத்தில் குளக்கரையில் அமைந்துள்ள பழமையான கோவில். 1952 ஆம் ஆண்டு புதிதாகக் கட்டப்பட்டுக் கும்பாபி ஷேகம் செய்யப்பட்டது. வைகாசி விசாகம், சிவராத்திரி, சித்திரா பௌர்ணமி போன்ற காலங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடை பெறுகின்றன. பரிவார மூர்த்திகள் — பிள்ளையார், முருகன், வைரவர். மூலஸ்தானத்தையும், மண்டபங்களையும் கொண்ட கோவில்.

மாவட்டம்:- புத்தளம்,
புத்தளம்.

### ஸ்ரீ திரௌபதை அம்பாள் கோவில்
### முந்தல்

மூன்று காலப் பூசை நடைபெற்றுவருகிறது. வருடாந்தத் திருவி விழா ஆனி அமாவாசை தொடக்கம் பதினெட்டுத் தினங்களுக்கு பாரதப்போர் நிகழ்ச்சியோடு நடைபெற்றுவருகிறது. பதினெட் டாம் நாள் அம்பாள் சபத முடிப்போடு அடியார்களின் தீ மிதிப்பு நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம்:- புத்தளம்,
புத்தளம்.


## ஸ்ரீ பார்த்தசாரதி கோவில்
## (திரௌபதை அம்மன் கோவில்)
## தென்உடப்பு, உடப்பு

உடப்பு கிராமச் சங்கக் காரியாலயத்துக்கு அருகில் உள்ளது. தினமும் இரண்டு காலப் பூசை. ஸ்ரீ பார்த்தசாரதி, ருக்மணி, சத்தியபாமா, திரௌபதாதேவி, விநாயகர், முருகன் ஆகிய மூர்த்திகள் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றார்கள். ஆலய வரலாறு சைமன் காசிச் செட்டியின் வரலாற்றுப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றது. தமிழக இராமநாதபுர, இராமேஸ்வர பூர்வீக மக்களுடன் தொடர்பான சமய வரலாற்றுக் குறிப்புக்கள் உண்டெனக் கூறப்படுகிறது. ஆலயத்திற்குரிய கிராமியக் கும்மி, ஊஞ்சல், காவியம், எச்சரிக்கை போன்ற பாடல்கள் உண்டு. தீ மிதிப்பு விழா வருடாந்தம் ஆடி மாதத்தில் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. கொடியேற்ற விழாவிலிருந்து பதினெட்டு நாள் திருவிழா நடைபெறுகையில் மகாபாரதக் கதை படிக்கப்பட்டு, அவ்வக் காட்சிகள் செயல் முறையிலும் காண்பிக்கப்படும். மார்கழி மாத திருவெம்பாவை விழாவும் சிறப்பாக நடைபெற்றுவருகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தளம் மாவட்டக் கோவில் படங்கள்




முனீஸ்வரம் ஸ்ரீ முன்னைநாத சுவாமி அம்பாள் கோவிலின் பண்டிகை வேலைப்
பாடமைந்த அழகுத் தோற்றம்




முனீஸ்வரம் ஸ்ரீ முன்னைநாத சுவாமி ஆலயத்தில் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட
நடராஜரும், அம்பாளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முனீஸ்வரம் ஆலயத்தில் காணப்படும் ஒரு கேடகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கேதீஸ்வர ஆலயக் கோபுரம்.

திருக்கேதீஸ்வர ஆலயத்திலுள்ள சோமஸ்கந்த மூர்த்தி.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ் / தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோவில்

யாழ் / நல்லூர் கந்தசுவாமி கோவில் உள் மண்டபமும், கர்ப்பக்கிரகமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்/வல்வெட்டித்துறைச்சிவன் கோவிலின் இராஜ கோபுரமும், மணிக்கூட்டுக் கோபுரமும்.




யாழ்/வண்ணார்பண்ணை ஸ்ரீ வரதராஜப் பெருமான் கோவிலில் வீற்றிருக்கும் ஸ்ரீ வேணு கோபால மூர்த்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்/பருத்தித்துறை
வல்லிபுரக் கோவில்
மூலஸ்தான மூர்த்தியா
விளங்கும் சக்கர
ஆழ்வார்.


யாழ்/பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில்-அனந்த சயன மூர்த்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் வெளித்தோற்றம்.




திருகோணமலை திரு
பத்திரகாளி அம்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கதிர்காம முருகன் கோவில்

கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் உட்புறத் தோற்றம். ஆடும் மயில் மீது வள்ளி – தெய்வானை அம்மை சமேதராய் சேவற் கொடியோடும் வேலுடனும் ஆறுமுகசாமி அமர்ந்திருந்து அருள்பாலிக்கும் காட்சியை திரையில் காணலாம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




கதிர்காமத்திலுள்ள, முருகன், பிள்ளையார், விஷ்ணு, ஆலயங்கள்.




செல்வக் கதிர்காமத்திலுள்ள ஆதி விநாயகர் விக்கிரகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலிச் சிவன் கோவில் நடராஜ மூர்த்தியும், அம்பாளும்.

கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வர சுவாமி கோவிலின் கொடித் தம்பத் தோற்றமும் கற்றூண்களிற் காணப்படும் சிற்பவேலைப்பாடுகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு ஸ்ரீ அருணாசலேஸ்வரர் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் அனந்த சயன மூர்த்தி.

கொழும்பு கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலய மூலவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு செட்டியார் தெரு ஸ்ரீ முத்து விநாயகர் கோயில்--கடலிலிருந்து எடுக்கப்பட்ட ஸ்ரீ முத்து விநாயகர்.

கொழும்பு/ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் இராஜகோபுரமும், பிள்ளையார் கோபுரமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முனீஸ்வரம், சோமாஸ்கந்தமூர்த்தி, வடிவாம்பிகாதேவி.

நாவலப்பிட்டி ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவில் மூர்த்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்டி / கட்டுக்கலை ஸ்ரீ
செல்வ விநாயகர்
ஆலயக் கோபுரம்.

மாத்தளை, ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் காணப்படும் அழகான சிற்பங்கள்.
சரஸ்வதி, துர்க்கை, லக்ஷ்மி.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அம்/பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத் தோற்றம்.

அம்/காரைதீவு கண்ணகை அம்மன் கோவில்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட் / ஆனைப்பந்திப் பிள்ளையார் கோவிலின் மூலஸ்தான ஸ்தூபி.


மட் / ஆனைப்பந்திப் பதியில் எழுந்தருளி இருக்கும் பிள்ளையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்/மாமாங்கேஸ்வரர் ஆலயம்.



மட்/மண்டூர், கந்த
சுவாமி கோவிலின்
உட்தோற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட் / கொக்கட் டிச்சோலை, தான்தோன் றீஸ்வர ஆலய நந்தி.

இலங்கைக் கோவில்களில் மூர்த்தி அலங்காரத்துக்கு உபயோகிக்கப்படும் திருவாபரணங்களுட் சில.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org